137

குடும்ப ஜெப மஞ்சரி

A BOOK OF FAMILY WORSHIP

7-OCT 1936
MADRAS
453



THE CHRISTIAN LITERATURE SOCIETY
FOR INDIA
Madras Allahabad Colombo
1936

Price 10 As.] [1 E. 1 M.

குடும்ப ஜெப மஞ்சரி

A BOOK OF FAMILY WORSHIP

BY

G. VETHANAYAGAM JOB

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7-OCT 1936
MADRAS

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

MADRAS ALLAHABAD COLOMBO

1936

பதிப்புரை

கிறிஸ்தவ நூற்பதிப்புச் சங்கத்தார் இந்நூலிலுள்ள ஜெபங்களை எழுதியவர்களுக்கும், அவற்றை இதற்கு முன்னர் வெளியிட்டுள்ளவர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளார். அடியிற் குறிக்கப்பட்டுள்ள சங்கங்களுக்கும், பெரியாருக்கும் இச் சங்கத்தாரின் மனமார்ந்த நன்றி உரியதாகும்.

சர்ச் கில்டு
சர்ச் மிஷனெரி சங்கம்
நிஸ்பெற் கம்பெனி
கெகன்பால் கம்பெனி
கிறிஸ்தவ கல்வி அபிவிருத்தி சங்கம்
பரி. யோவான் சுவிசேஷகன் சங்கம்
உவெல்ஸ் கார்ட்னர் கம்பெனி
மாக்மில்லன் கம்பெனி
கனம் இ. எப். பென்சன் அவர்கள்
டாக்டர் ஆர்ச்சர்ட் அவர்கள்

யாதேனும் பதிப்புரிமைபற்றிக் கூறப்படாது விடப்பட்டிருப்பினும், பதிப்பாளர்கள் தயை செய்து அதனைப் பொறுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அத்தகையன அறிவிக்கப்படின், அடுத்த பதிப்பில் வேண்டுவன செய்யப்படும்.

468
242.2

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7-OCT 1938
MADRAS

முகவுரை

குடும்ப ஆராதனையின் விசேஷத்தையும், அதை ஒழுங்காகவும் ஊக்கமாகவும் அனுசரிப்பதால் விளையும் ஆத்மீக நன்மைகளையும் குறித்து வற்புறுத்திக் கூற அவசியமில்லை. இல்லறத்தின் சிறப்பாய் விளங்கும் இந்நற்கருமத்தை பயன்படுமாறு நடாத்துவது எளிதல்ல வென்றும், குடும்ப ஆராதனையில் உபயோகிக்கத்தக்க ஓர் சிறு புத்தகம் தேவையென்றும் கருதி, கிறிஸ்தவ பிரசுர சங்கத்தார் குடும்ப ஜெப மஞ்சரியை எழுத என்னை ஆக்ஞாபித்தனர். இதனை யோர் அரிய சிலாக்கியமெனப் பாவிக்கிறேன். எம்பெருமான் இயேசு பகவானைப் பூஜிக்கும் தமிழ் மக்கள் ஜெப மஞ்சரியின் வார்த்தைகளைக் கருத்தாய்ப் படித்துச் சிந்தைசெய்வதால், தம்முட் பொங்கும் பக்தி விசுவாசத்தை வர்த்திக்கச் செய்துகொள்ளுவரென்றும் நம்புகிறேன்.

தொன்றுதொட்டு கிறிஸ்து சபைகள் வழங்கிவந்தவையும், பல பக்தர்களின் உள்ளங்களிலிருந்து நறுமணத் தூபம்போல் எழும்பியவையுமான ஜெபங்களிற் சில ஆங்காங்கு பாவிக்கப்பட்டுள்ளன. இதனுல் சபைகள் பலவாயிருப்பினும், கிறிஸ்துவினடியார் யாவரையும் இணைப்பது நாம் அவர்பாற்கொள்ளும் பக்தியே என்பது நிரூபணமாகின்றது. குடும்ப ஆராதனையில் செய்யப்படும் ஜெபங்கள் விசாலமான நோக்கமுடையனவாகவும், பரிந்து மன்றுடும் வேண்டுதல்களாகவும் இருக்கவேண்டுமென்றெண்ணி, 27 பொருட்களின்பேரில் ஸ்தோத்திரங்களும் விண்ணப்பங்களும் எழுதப்பட்டுள்ளன. ஆத்ம வளர்ச்சிக்குத் தியானமும் இன்றியமையாததாக இருப்பதால், விசுவாசம், சந்தோஷம் என்னும் பொருட்களின்மேல் தியானங்களும் இருக்கின்றன.

ஆராதனையில் அமர்ந்திருக்கும் யாவரும் ஜெபத்தில் கவனஞ் செலுத்துவதற்கும், ஆராதனையில் பங்கு பெற்றுக்கொள்வதற்கும், மாறி மாறி உச்சரிக்கும் ஜெபங்கள் அதிக அனுகூலமாயிருக்கின்றன வென்பது அனுபவத்தில் காணக்கிடக்கிறபடியால், அம்முறையே ஜெப மஞ்சரியில் பெரிதும் கையாளப்பட்டிருக்கிறது. தவிர, இது தனித்தியானத்திற்கும் உதவக்கூடியதாயிருக்கிறது. இக்காரணங்கள் பற்றி, குடும்பத்தில் வாசிக்கத்தெரிந்த ஒவ்வொருவரும், மஞ்சரியின் ஒரு தனிப்பிரதி வைத்துக்கொள்ளல் அவசியம்.

மஞ்சரியிலுள்ள ஜெபங்களை வரிசைக்கிரமமாகப் படிக்க அவசிய மில்லை. சந்தர்ப்பத்திற்கேற்க, பொருள் அட்டவணையிலிருந்து தலைவர் விரும்பும் பொருளைத் தெரிந்துகொள்ளலாம். மாலை ஆரா தனையை மட்டும் ஒழுங்காக நடத்திவரும் வீடுகளில், காலைக்கென்று எழுதப்பட்டிருக்கும் பாகத்தையும் உபயோகிப்பதால், ஒரே பொரு ளைப்பற்றிய இரண்டு சிறிது வித்தியாசமான பிரார்த்தனைகள் கிடைக்கும்.

ஜெபங்களில் ஒன்றாகிலும் நீண்ட ஜெபமல்ல. ஒன்றையாவது அவசரப்படாமல் படிப்பதற்கு ஏழு நிமிஷத்திற்குமேல் செல்லாது. ஆகையால், தலைவர் சுயேச்சையாக ஒரு சுருக்க ஜெபத்தைச் செய்ய வும், அல்லவென்றால் ஒரு காலை ஜெபத்தையாவது, ஒரு மாலை ஜெபத்தையாவது, ஒன்றாம் அநுபந்தத்திலிருந்து ஒரு விசேஷ ஜெபத்தையாவது, ஒரு தினத்திற்கென்று எழுதப்பட்டுள்ள பிரார்த் தனைக் கொடியோடு சேர்த்துக்கொள்ளவும் போதிய நேரம் இருக் கிறது. பிரார்த்தனையின் இறுதியில், யாவரும் கர்த்தருடைய ஜெபத் தைச் சொன்னபின், தலைவர் இரண்டாம் அநுபந்தத்திலிருக்கும் ஆசீர்வாதங்களிலொன்றைக் கூறி ஆராதனையை முடிக்கலாம்.

ஏட்டிலுள்ள ஜெபங்களைக் கையாளுவதில் ஒரு பிரதிகூலம் ஏற்படும். கருத்திற்கொள்ளாது, உதட்டால் மட்டும் ஜெபத்தை உச் சரிப்பதே அந்தப் பிரதிகூலம். ஆதலால், கிளிப்பிள்ளைப் பாடம் போல் ஜெபங்களைப் பரபரவென்று வாசிப்பதை அறவே அகற்றி, தலைவரும் மற்ற யாவரும் தத்தம் பகுதிகளைக் கவனமாகவும் நிதான மாகவும் வாசிப்பது அதிக அவசியம்.

குறிப்பு: தலைவர் வாசிக்கும் வாக்கியப் பகுதிகள் சாதாரண அச் செழுத்திலும், மற்றவர்கள் உச்சரிக்கும் அனுசாரிதம் எடுப்பான அச் செழுத்திலும் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

செங்கல்பட்டு
1936

G. V. J.

பொருளடக்கம்

வாரம் 1

			பக்கம்
ஞாயிறு	குடும்பத்திற்காக	காலை ...	1
,,	,,	மாலை ...	2
திங்கள்	சர்வதேச கிறிஸ்தவ சங்கத்திற்காக	காலை ...	4
,,	,,	மாலை ...	5
செவ்வாய்	மிஷனெரி சங்கங்களுக்காக	காலை ...	7
,,	,,	மாலை ...	8
புதன்	நம் தாய்நாட்டிற்காக	காலை ...	10
,,	,,	மாலை ...	12
வியாழன்	ஏழைகளுக்காக	காலை ...	15
,,	,,	மாலை ...	17
வெள்ளி	திருப்திக்காக	காலை ...	18
,,	,,	மாலை ...	20
சனி	பிழை உணர்ந்தோதல்	காலை ...	23
,,	,,	மாலை ...	25

வாரம் 2

ஞாயிறு	குழந்தைகளுக்காக	காலை ...	28
,,	,,	மாலை ...	30
திங்கள்	உள்நாட்டு மிஷன்களுக்காக	காலை ...	32
,,	ஆத்தும ஆதாயச் சேவைக்காக	மாலை ...	34
செவ்வாய்	தெய்வ வாஞ்சைக்காக	காலை ...	36
,,	,,	மாலை ...	38
புதன்	தலைவர்களுக்காக	காலை ...	40
,,	,,	மாலை ...	42

வாரம் 2

			பக்கம்
வியாழன்	நமது சபைக்காக	காலை	... 44
,,	,,	மாலை	... 47
வெள்ளி	சமாதானத்திற்காக	காலை	... 50
,,	,,	மாலை	... 53
சனி	விசுவாசத்திற்காக	காலை	... 56
,,	,,	மாலை	... 59

வாரம் 3

ஞாயிறு	பொதுவான ஸ்தோத்திரங்கள்	காலை	... 62
,,	பொதுவான ஜெபங்கள்	மாலை	... 65
திங்கள்	தாய்மாருக்காக	காலை	... 68
,,	,,	மாலை	... 70
செவ்வாய்	உன்னத நோக்கத்திற்காக	காலை	... 73
,,	,,	மாலை	... 75
புதன்	துயரப்படுவோருக்காக	காலை	... 78
,,	,,	மாலை	... 82
வியாழன்	தெய்வ நடத்துதலுக்காக	காலை	... 85
,,	,,	மாலை	... 88
வெள்ளி	கிறிஸ்துசபையின் ஐக்கியத்திற்காக	காலை	... 91
,,	,,	மாலை	... 94
சனி	யூதர், மகமதியருக்காக	காலை	... 97
,,	,,	மாலை	... 100

வாரம் 4

ஞாயிறு	வெற்றியடைந்த திருச்சபைக்காக	காலை	... 102
,,	,,	மாலை	... 105
திங்கள்	சந்தோஷத்திற்காக	காலை	... 107
,,	,,	மாலை	... 110

வாரம் 4

			பக்கம்
செவ்வாய்	தெய்வசித்தத்திற்கு அமைந்தொழுக	காலை	... 112
,,	,,	மாலை	... 115
புதன்	பொதுவான ஸ்தோத்திரங்களும் ஜெபங்களும்	காலை	... 118
,,	,,	மாலை	... 121
வியாழன்	தற்பிரதிஷ்டை	காலை	... 124
,,	,,	மாலை	... 128
வெள்ளி	கிறிஸ்துவின் வருகைக்காக	காலை	... 131
,,	,,	மாலை	... 134
சனி	தினசரி ஜெபங்கள்	காலை	... 137
,,	நவயுகம்	மாலை	... 140

காலை ஜெபங்கள் ... 1, 15, 78, 85, 124, 132
மாலை ஜெபங்கள் 21, 42, 49, 67, 82, 94, 107, 128, 135
மரித்தோரை நினைத்து 3, 151
குடும்பத் தலைவரின் விசேஷ ஜெபம் 30
பிணியாளிக்காக 81, 147
பிரிந்திருக்கும் நண்பர் உறவினருக்காக ... 99
கைதிகளுக்காக 84
தெய்வப் பிரசன்னத்திற்காக 68
கிறிஸ்துவின் வழித்துணைக்காக 71
பாவ மன்னிப்புக்காக 71, 127
ஓய்வுநாளுக்கு ஆயத்தம் 28

அநுபந்தம் 1. விசேஷ சம்பவங்கள் 143-153
2. ஆசீர்வாதங்கள் 153
ஸ்தோத்திரங்கள் 154

குடும்ப ஆராதனை

வாரம் 1

ஞாயிறு காலை

எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது! உம்முடைய மகத்துவத்தை வானங்களுக்கு மேலாக வைத்தீர்.

எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது. சங். 8[1],[9].

அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெறப் பாத்திரராயிருக்கிறார்.

சிங்காசனத்தில் வீற்றிருக்கும் பிதாவுக்கும் ஆட்டுக்குட்டியான குமாரனுக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாகட்டும். ஆமென். வெளி. 5[12,13].

காலை ஜெபம்

தேவனே, அதிகாலையில் உதித்திருக்கும் சூரிய கிரணங்களால் சகல ஜீவ பிராணிகளுக்கும் சந்தோஷத்தையும் சுகத்தையும் தந்தீர். உமது அடியாராகிய நாங்கள் குளிர்ந்த உள்ளத்தோடும், தெளிந்த சிந்தையோடும் உமக்குச் சாற்றிய துதியை ஏற்றுக்கொள்ளும். உமது முகத்தின் பிரகாசத்தால் எங்கள் உள்ளத்தை உயிர்ப்பியும். உமது ஆவியின் பெலத்தால், இன்று நீர் எங்களுக்குத் தரும் வேலை யாவையும் ஊக்கமாகச் செய்ய உதவிபுரியும். உமது கிருபையால் எங்களைத் தாங்கி, இன்று எங்களுக்கு நேரிடும் துன்பங்களை எங்களை விட்டு அகற்றும். **ஆமென்.**

குடும்பத்திற்காக

*சர்வ வல்லவரும் அனாதி நித்தியருமான தெய்வமே, உமது பிரசன்னத்தால் இந்த வீட்டிலுள்ள சிறியோர் பெரியோர் யாவரையும் காத்தருளும். இதனால் நீரே இந்தக் குடும்பத்தின் தாரகமும், தலைவருமென்பது புலப்படுமாறு, கிறிஸ்துவினிமித்தம் எங்கள் விண்ணப்பத்திற்குச் செவிகொடும். **ஆமென்.**

---

* Gelasian Sacramentary

*கர்த்தருடைய வல்லமை எங்களை வழி நடத்த வேண்டும்.

கர்த்தருடைய பராக்கிரமம் எங்களைப் பாதுகாக்க வேண்டும்.

கர்த்தருடைய ஞானம் எங்களுக்குப் புத்திபுகட்ட வேண்டும்.

கர்த்தருடைய கரம் எங்களைத் தாங்க வேண்டும்.

கர்த்தருடைய வழியில் எங்கள் பாதங்கள் செல்ல வேண்டும்.

கர்த்தருடைய கேடகம் எங்களுக்கு மறைவிடமாயிருக்க வேண்டும்.

கர்த்தருடைய தூதர் சேனை தீயோனின் கண்ணிகளினின்றும், உலக சோதனைகளினின்றும் எங்களை விலக்கி இரட்சிக்க வேண்டும். ஆமென்.

கிறிஸ்துவே, எங்களோடிரும்.

கிறிஸ்துவே, எங்களுக்கு முன்செல்லும்.

கிறிஸ்துவே, எங்கள் இதயகமலத்தில் வீற்றிரும்.

கிறிஸ்துவே, எங்கள் அதிகாரியாயிரும்.

ஆ, கர்த்தாவே, உமது இரட்சிப்பில் ஓர் பங்கு இன்றைக்கும் என்றைக்கும் எங்களுக்குக் கிடைக்க வேண்டும். ஆமென்.

வாரம் 1

ஞாயிறு **மாலை**

கர்த்தாவே, எங்கள் முழு இருதயத்தோடும் உம்மைத் துதிப்போம்.

உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்போம்.

உம்மில் மகிழ்ந்து களிகூறுவோம்.

உன்னதமானவரே, உமது நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவோம். சங். 9[1,2].

குடும்பத்திற்காக

†பரம பிதாவே, இக்குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினுள்ளத்திலும் உமது சுத்த சுபஆவியைப் பரிபூரணமாய்ப் பொழிந்தருளும். நாங்கள் ஒவ்வொருவரும் நன்மையே செய்யும் கருவிகளாக உமது கரத்திற்கு உதவக்கடவோம். எங்கள் உள்ளங்களைச் சுத்திகரியும். எங்கள் சரீரங்களையும், சித்தங்களையும் உறுதிப்படுத்தும். ஒருவரை ஒருவர் நேசிக்கும் நேசத்தால் எங்கள் இருதயங்களை நிரப்பியருளும். பெருமையாவது, மனமேட்டிமையாவது, பொறாமையாவது, வாக்குவாத

* St. Patrick † Church Guild

மாவது, எங்கள் ஐக்கியத்தையும் அன்பையும் கெடுக்காதிருக்கட்டும். நாங்கள் ஊக்கமும் உண்மையும், ஞானமும் முன்னறிவும் உள்ளவர்களாய், ஒருவர் குற்றத்தை ஒருவர் தாங்கவும், மனவருத்தம் உண்டாக்கக் கூடிய யாவற்றையும் அகற்றி விடவும் துணை செய்யும். உமது பரிசுத்த சமாதானம் எங்களுக்குள் தங்கி, எங்கள் சோதனைகளையும் துன்பங்களையும் இலகுவாக்கி, எங்கள் அலுவல்களில் எங்களுக்கு உற்சாகத்தைத் தந்து, நாங்கள் முடிவு பரியந்தம் உமக்கு உண்மையுள்ளவர்களாய்ப் பிழைக்க பலம் தரவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

*தேவனே, இந்த வீட்டையும் இதிலுள்ள யாவரையும் ஆசீர்வதியும்.

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு முதலிய உமது தாசர்களின் குடும்பங்களை ஆசீர்வதித்த கர்த்தாவே, எங்களையும் ஆசீர்வதியும்.

இவ்வீட்டில் உமது தூதர்களி லொருவர் தங்க வேண்டுமென்று,

உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம், தயவுள்ள கர்த்தாவே.

இதில் ஒருமித்து வசிக்கும் உமது அடியாருக்கு வானசீர்வாதமாகிய பனி நிரம்பக் கிடைக்க வேண்டுமென்று,

உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம், தயவுள்ள கர்த்தாவே.

உமது பக்ஷத்தினால் நாங்கள் சமாதானமும், அமைதியும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று,

உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம், தயவுள்ள கர்த்தாவே.

எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவினிமித்தம் இவ்விண்ணப்பத்திற்கு உமது செவியைச் சாய்த்துக் கேட்டருள வேண்டுமென்று,

உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம், தயவுள்ள கர்த்தாவே.

ஆமேன்.

மோக்ஷ லோகத்திலிருக்கும் இனத்தவரை நினைத்து

தேவனே, தங்கள் ஓட்டத்தை முடித்து, விசுவாசத்தைக் காத்துக் கொண்டதால் நித்திய ஜீவ கிரீடத்தைப் பெற்றிருக்கும் எங்கள் அன்புக்குரியோர் யாவருக்காகவும் உம்மைத் துதிக்கிறோம். சரீரப் பிரகாரமாக அவர்கள் எங்களைவிட்டுப் பிரிந்திருப்பினும், அன்பிலும், அனுதாபத்திலும், உம்மைச் சேவிப்பதிலும் அவர்களும் நாங்களும் இணைபிரியாதிருக்கக் கூடுமென்ற நம்பிக்கைக்காக உம்மைத் துதிக்கிறோம். அவர்கள் இருக்கும் உமது சமூகம் எங்களுக்கு முன்

* Gelasian Sacramentary

னிலும் அதிக சமீபமாகத் தோன்றுகிறது. இக்குடும்பத்தின் நிலை யான வீடும் உமது சமூகமேயென்று உணர்கிறோம். ஆதலால் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், எம்மீது அன்புகூர்ந்து நித்திய ஆறுதலையும் நல்ல நம்பிக்கையையும் கிருபையாய் எமக்குக் கொடுத்திருக்கிற எமது பிதாவாகிய தேவனும் எம் இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் எம்மை ஸ்திரப்படுத்தவேண்டும். II தெச. 2^{16}. ஆமென்.

வாரம் 1

திங்கள் **காலை**

தேவனே, சீயோனில் உமக்காகத் துதியானது காத்திருக்கிறது; பொருத்தனை உமக்குச் செலுத்தப்படும்.

ஜெபத்தைக் கேட்கிறவரே, மாம்சமான யாவும் உம்மிடத்தில் வரும். சங். 65^{1,2}.

பரலோகத்தில் திரள்கூட்டம் ஆரவாரித்து, "அல்லேலூயா, இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது," என்றார்கள்.

"அல்லேலூயா, எல்லாம் வல்ல தேவனாகிய இறைவன் அரசாளுகின்றார். நாம் சந்தோஷித்துக் களிகூர்ந்து, அவரையே அர்ச்சிக்கக்கடவோம்," என்ற பெருவெள்ளத்தின் இரைச்சல் போன்றதும், பலத்த இடிமுழக்கம் போன்றதுமான சத்தம் விண்ணுலகில் தொனித்தது. வெளி. 19^{1,6,7}.

சர்வதேச கிறிஸ்தவ சங்கத்திற்காக

*தயவுள்ள தந்தாய், உமது குமாரனின் அவதார புண்ணியத்தின் மேல் நீர் அஸ்திபாரப்படுத்தியிருக்கும் திவ்வியத் திருச்சபையின் வாழ்வுக்காக உம்மை நோக்கி மன்றாடுகின்றோம்.

சகல சத்தியத்தினாலும், எல்லா சமாதானத்தினாலும் அதை நிரப்பியருளும். அதன் கறைகளைக் கழுவும்; அதில் காணப்படும் தப்பிதங்களை அகற்றும்; அதின் மூடபக்தியைக் கண்டித்து, மெய்பக்தி அதனுள் ஓங்கச்செய்யும். அது கண்டிருக்கும் சத்தியங்களில் அதை உறுதிப்படுத்தும். அதன் குறைகளை நிறைவாக்கி, அதன் பிரிவினைகளை அகற்றி, ஒற்றுமையும் ஐக்கியமும் விர்த்தியடையச் செய்யும். இஸ்ரவேலின் பரிசுத்தரே, இயேசு கிறிஸ்துவினிமித்தம் எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும். ஆமென்.

---

* Archbishop Laud

திருச்சபையாகிய உமது நவ அரணுக்கு முக்கிய மூலைக்கல்லாகிய கிறிஸ்துவே, இலௌகீகப் பாசங்களினின்றும் தீயோனின் அக்கினி யாஸ்திரங்களினின்றும் அதைக் காத்தருளும். ஆமேன்.

ஜீவனுள்ள கற்பாறையாகிய கிறிஸ்துவே, உம்மிலிருந்து வெட்டி யெடுக்கப்பட்ட திருச்சபைக்கு நியாயத்தையும், நீதியையும், உண்மை யையும் காக்கத்தக்க திடனைத் தாரும். ஆமேன்.

அது உமது சரீரமாதலால், நாங்கள் அதை என்றும் பரிசுத்தமாய் வைத்திருக்க எங்களுக்கு நற்புத்தி புகட்டும். ஆமேன்.

அது உமது குடும்பமாதலால், அதன் அன்னியோன்யத்தைச் சிதைத்துக்கொண்டிருக்கும் ஜாதி குலம் அந்தஸ்துகளால் உண்டா கும் பிரிவினைகளை அடியோடு வெட்டியகற்றும். ஆமேன்.

அது உமது மந்தையாதலால், பசும்புல்லாகிய வேத வசனத்தா லும், அமர்ந்த தண்ணீராகிய ஆவியின் பிரசன்னத்தாலும் அதைப் போஷித்தருளும். ஆமேன்.

அது உமது திராக்ஷைத் தோட்டமாதலால், விசுவாசம், நம்பிக்கை, அன்பு முதலிய நறுங்கனிகளால் அதை அலங்கரியும். ஆமேன்.

வாரம் 1

திங்கள் — மாலை

கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம், பர்வதங் களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்படும்; எல்லா ஜாதியாரும் அதற்கு ஓடிவருவார்கள்.

திரளான ஜனங்கள் புறப்பட்டுவந்து, "நாம் கர்த்தரின் பர்வதத் திற்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார்; நாம் அவர் பாதைகளில் நடப்போம்," என்பார்கள்.

(எல்லாரும்)

ஏனெனில், சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். ஏசா. $2^{2,3}$.

சர்வதேச கிறிஸ்தவ சங்கத்திற்காக

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபாகிய பக்தர்களின் தேவனே, உமது ஜனமாகிய இஸ்ரவேலின் சிட்சையாகிய களத்தில் உதித்த உமது திருச்சபைக்காக,

உம்மை ஸ்தோத்திரிக்கிறேம்.

தொல்லை நிறைந்த உலக வாழ்க்கையின் மத்தியில், உமது சபையை எங்கள் ஆத்துமன் இளைப்பாறத்தக்க ஒதுக்கிடமாக வைத்ததற்காக,

உம்மை ஸ்தோத்திரிக்கிறேம்.

அதன் கிருபையின் யத்தனங்களுக்காகவும், பரிசுத்த சாக்கிரமெந்துகளுக்காகவும்,

உம்மை ஸ்தோத்திரிக்கிறேம்.

அதன் மூலமாய் எங்களுக்கும், உலகத்தார் யாவருக்கும் நீர் புகட்டும் அறிவுக்காகவும், கொடுக்கும் எச்சரிப்புக்காகவும்,

உம்மை ஸ்தோத்திரிக்கிறேம்.

திருச்சபையின் வாழ்வுக்கென்று தம் மனை, பொருள், சுகம், ஜீவன் யாவற்றையும் துறந்த பக்தர் யாவருக்காகவும்,

உம்மை ஸ்தோத்திரிக்கிறேம்.

அப்போஸ்தலர், இரத்த சாக்ஷிகள், உத்தம போதகர், உண்மையுள்ள சபையார் யாவருக்காகவும்,

உம்மை ஸ்தோத்திரிக்கிறேம். ஆமேன்.

அதன் பிரிவினைகளும், வாக்குவாதங்களும் ஒழிய வேண்டுமென்று,

உம்மை மன்றடுகிறேம், தயவுள்ள கர்த்தாவே.

உலக ஞானத்தால் அதன் போதனை மாறுபட்டிருப்பது ஒழிய வேண்டுமென்று,

உம்மை மன்றடுகிறேம், தயவுள்ள கர்த்தாவே.

பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், உமது நடுத்தீர்ப்பைக் குறித்தும் அது மாந்தரைக் கண்டித்துணர்த்தக்கூடாமல் நின்ற காலம் சீக்கிரம் முடிவடைய வேண்டுமென்று,

உம்மை மன்றடுகிறேம், தயவுள்ள கர்த்தாவே.

யுத்தப் பிரியரையும், வேலையாட்களின் கூலியைக் குறைத்து ஊதியம் தேடும் உலோபிகளையும் திருச்சபை கண்டிக்க வேண்டுமென்று,

உம்மை மன்றாடுகிறோம், தயவுள்ள கர்த்தாவே.

ஜாதி குலப் பெருமையால் சகோதரத்துவத்தை மறுப்பவரைத் திருச்சபை எச்சரிக்க வேண்டுமென்று,

உம்மை மன்றாடுகிறோம், தயவுள்ள கர்த்தாவே.

குடிவெறியையும், மாம்ச இச்சையையும் திருச்சபை எதிர்த்துத் தகர்க்க வேண்டுமென்று,

உம்மை மன்றாடுகிறோம், தயவுள்ள கர்த்தாவே.

அனாதைப் பிள்ளைகளுக்கும், விதவைகளுக்கும் திருச்சபை ஓர் சிறந்த தாரகமாக வேண்டுமென்று,

உம்மை மன்றாடுகிறோம், தயவுள்ள கர்த்தாவே.

அறிவுக்கும், அன்பிற்கும், நேர்மைக்கும், ஒழுக்கத்திற்கும், பரஸ்பர சிநேகத்திற்கும், பரமன் மகிமைக்கும் திருச்சபை உறைவிடமாயிருக்க வேண்டுமென்று,

உம்மை மன்றாடுகிறோம், தயவுள்ள கர்த்தாவே. ஆமேன்.

வாரம் 1

செவ்வாய் **காலை**

நீதிமான்களே, கர்த்தருக்குள் களிகூருங்கள்.

கர்த்தரைத் துதிப்பது செம்மையானவர்களுக்குத் தகும்.

நம்முடைய ஆத்துமம் கர்த்தருக்குக் காத்திருக்கிறது;

அவரே நமக்குத் துணையும் கேடகமுமானவர். சங். $33^{1,20}$.

உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதிப்பேன் சங். 22^{22}.

பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்; பாவிகள் மனந்திரும்பி உம்மை அண்டிப் பற்றிக்கொள்வார்கள். சங். 51^{13}.

மிஷனெரி சங்கங்களுக்காக

கர்த்தாவே உமது தொண்டர்களாகிய பவுல், பேதுரு, யோவான் முதலிய அப்போஸ்தலர்கள் செய்த சுவிசேஷப் பிரபல்ய ஊழியத்திற்காக,

நாங்கள் உம்மைத் துதிக்கிறோம், நல்ல தேவனே.

அசிசியூர் பிரான்ஸிஸ் சன்யாசியும், டாமினிக், லயோலா முதலிய பக்தரும் செய்த சிறந்த ஜீவியத்திற்காகவும், ஸ்தாபித்த சுவிசேஷ சங்கங்களுக்காகவும்,

நாங்கள் உம்மைத் துதிக்கிறேம், நல்ல தேவனே.

எங்கள் தேசத்திற்கு உமது சுவிசேஷத்தின் திவ்ய வெளிச்சத்தைக் கொண்டுவந்த அப்போஸ்தலனுகிய தோமாவும், சவரியார், கேரி, சீகன்பால்க், ஸ்வார்ட்ஸ் முதலான உமது ஊழியரும் காட்டிய ஊக்கத்திற்காகவும், எடுத்த முயற்சிகளுக்காகவும்,

நாங்கள் உம்மைத் துதிக்கிறேம், நல்ல தேவனே.

இப்பொழுதும் எங்கள் மத்தியில் சுயத் தியாகத்தோடும், விடா முயற்சியோடும் சுவிசேஷ அபிவிர்த்திக்கென்று உழைத்துவரும் சகல உத்தம மிஷனெரிமாருக்காகவும்,

நாங்கள் உம்மைத் துதிக்கிறேம், நல்ல தேவனே.

எங்களையும் பல தெய்வ வணக்கத்திலிருந்தும், மூடபக்தியிலிருந்தும் இரக்ஷித்து, உமது சத்தியத்தின் வெளிச்சத்திற்குள் கொண்டு வந்ததற்காக,

நாங்கள் உம்மைத் துதிக்கிறேம், நல்ல தேவனே. ஆமேன்.

*உலகத்தில் வசிக்கும் சகல ஜாதியாரையும் ஒரே இரத்தத்தால் உண்டாக்கி, தூரத்திலிருப்பவர்களுக்கும் சமீபத்திலிருப்பவர்களுக்கும் சமாதானத்தைக் கட்டளையிட உமது திவ்விய குமாரனை அனுப்பிய தேவனே, சகல ஜாதியாரும் உம்மை ஊக்கமாகத் தேடிக் கண்டு களிப்புற தயை புரியும். "மாமிசமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்," என்று நீர் கூறிய வாக்கு நிறைவேறும் நாள் அதிசீக்கிரம் வர வேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் மூலமாய் மன்றாடுகிறோம், பரம பிதாவே. ஆமேன்.

வாரம் 1

செவ்வாய் — மாலை

நாங்கள் கேட்டதும் அறிந்ததுமான நற்செய்தியைப் பறை சாற்றுவோம்.

எங்கள் பிதாக்கள் எங்களுக்கு அறிவித்த நற்செய்தியை யாவருக்கும் கூறுவோம்.

அதைப் பாலகருக்கும் மறைக்கமாட்டோம்.

---

* Bishop Cotton of Calcutta

வரப்போகும் சந்ததிக்கும் கர்த்தருடைய துதிகளை அறிவிப்போம்.

கர்த்தருடைய வல்லமையையும், அவருடைய அற்புதச் செயல்களையும் பின்வரும் சந்ததியாகிய பாலகருக்குக் கூறுவோம்.

அவர்கள் தேவன் ஒருவரையே தம் தாரகமாகக்கொண்டு, அவருடைய அற்புதச் செயல்களை மறவாமல், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள இவ்வாறு செய்வோம். *சங்.* **78^{3,4,7}.**

மிஷனேரி சங்கங்களுக்காக

மாந்தரின் சரீரப்பிணியையும் தீர்த்த பரம பண்டிதராகிய கிறிஸ்துவே, மிஷனெரி சங்கங்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் வைத்திய சாலைகளை ஆசீர்வதியும்.

அவைகள் பிணியால் நலியும் மாந்தருக்கும், பாலகருக்கும் உமது பெருங்கருணையைக் காட்டட்டும்.

எங்கள் மனத்தைப் பற்றிய அஞ்ஞான அந்தகாரத்தை ஒழிக்க வந்த நீதியின் சூரியனே, மிஷனெரி சங்கங்களின் பாடசாலைகளை ஆசீர்வதியும்.

அவைகளிலிருந்து தோன்றும் உமது உபதேசத்தின் ஞானச் சுடர், சகலவித பொய் உபதேசங்களையும் கோள்கைகளையும் பாலியருடைய மனத்திலிருந்து அகற்றவேண்டுமென்று பிரார்த்திக்கிறேம். ஆமென்.

செல்வத்தையும், சுகத்தையும் துறந்தும், ஆணவத்தையும், தற்புகழ்ச்சியையும் ஒழிக்கக்கூடாமலிருக்கும் உமது ஊழியரை,

தடுத்தாட்கொள்ளும், தயவுள்ள கர்த்தாவே.

பணத்தையும், பிழைப்பையுமே நாடி உமது ஊழியத்தை ஏற்றுக்கொண்டு, முகஸ்துதி, பொருளாசை, மாய பக்தியால் தங்கள் ஆத்ம வாழ்வையும், உமது இராஜ்யத்தின் முன்னேற்றத்தையும் பாழாக்கிக் கொண்டிருக்கும் சுவிசேஷ ஊழியரை,

கண்டித்துணர்த்தும், தயவுள்ள கர்த்தாவே.

உமது உக்கிராணத்தை மேன்மையான நோக்கத்தோடு ஏற்றுக்கொண்டு, உம்மை உண்மையாய்ச் சேவிக்க விரும்பும் உம் ஊழியர் யாவரையும் உமது பிரசன்னத்தின் வல்லமையால் இடைக்கட்ட வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம், தயவுள்ள கர்த்தாவே.

மிஷனெரி சங்கங்களும், சுதேச சபைகளும் ஒன்றையொன்று கனப்படுத்தி, உமது இராஜ்யத்தை நாலு தேசங்களிலும் நிலை நாட்ட வேண்டுமென்ற ஏக இலக்கையே கண்ணும் கருத்துமாய் நாட அவர்களைத் தூண்ட வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றுடுகிறேம், தயவுள்ள கர்த்தாவே.

இந்தச் சங்கங்களை உமது ஞானத்தால் ஆட்கொண்டு நடத்த வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றுடுகிறேம், தயவுள்ள கர்த்தாவே.

இவைகளுக்கு வேண்டிய பண உதவியைக் கொடுக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றுடுகிறேம், தயவுள்ள கர்த்தாவே.

இவைகளுக்கு அறிவிலும், ஒழுக்கத்திலும், பக்தியிலும், பரஸ்பர சிநேகத்திலும் தேறிய உகந்த ஊழியரை நீரே தேர்ந்து அனுப்ப வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றுடுகிறேம், தயவுள்ள கர்த்தாவே.

உமது அடியாராகிய நாங்கள் எங்களால் இயன்ற உதவியை இச் சங்கங்களுக்குச் செய்ய எங்களுக்குக் குன்றாத உற்சாகத்தைத் தர வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றுடுகிறேம், தயவுள்ள கர்த்தாவே. ஆமென்.

வாரம் 1

புதன் **காலை**

கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்;

அவர் துதி எப்பொழுதும் என் வாயிலிருக்கும்.

என்னேடுகூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்;

நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோம். சங். 34^{1-3}.

கர்த்தர் ராஜரிகம் பண்ணுகிறார்;

ஆதலால் உலகம் களிகொள்ளட்டும்; தீவுக்கூட்டங்கள் சந்தோஷப்படட்டும்.

கர்த்தர் ராஜரிகம் பண்ணுகிறார்,

ஜனங்கள் பயந்து நடுங்கட்டும்;

அவர் கேருபீன்களின் நடுவில் வீற்றிருக்கிறார்,

பூமி திகில்கொண்டு அசையட்டும். சங். 97[1]; 99[1].

நம் தாய் நாட்டிற்காக

இராஜாதி ராஜனே, மாந்தரனைவரையும் ஒரே குடையின்கீழ் வைத்துக் காக்கும் கொற்றவா! எங்கள் முன்னோர் பிழைத்து மரித்த எங்கள் சுயதேசமாகிய பாரதமாதாவுக்காக உம்மை நோக்கிக் கெஞ்சும் பொழுது உமது செவியைச் சாய்த்து எங்கள் ஜெபத்தைக் கேட்க வேண்டுமென்று, எங்கள் மத்தியஸ்தராகிய கிறிஸ்து பெருமானின் திரு நாமத்தால் கேட்டுக்கொள்ளுகிறோம். ஆமென்.

எங்கள் தேசத்தின் உயர்ந்த மலைகளுக்காகவும், அகன்ற நதிகளுக்காகவும், ஒப்பற்ற வனப்புக்காகவும், அழகிய பசுமைக்காகவும்,

உம்மைத் துதிக்கிறோம், சிருஷ்டி கர்த்தனே.

எங்கள் தேசத்தின் புராதன நாகரீகத்திற்காகவும், ஆழ்ந்த தெய்வ பக்திக்காகவும்,

உம்மைத் துதிக்கிறோம், பரிசுத்த பிதாவே.

எங்கள் தேசத்தில் தோன்றிய அறிஞர், குணசீலர், பக்தர், அருந் தவத்தோர் யாவருக்காகவும்,

உம்மைத் துதிக்கிறோம், பரிசுத்த பிதாவே.

பல்லாயிரம் ஆண்டுகளாய் எங்கள் தேசத்தை உயர்விலும் தாழ்விலும், சுயாதீனத்திலும் அடிமைத்தனத்திலும் தாங்கி பராமரித்த தெய்வமே,

உள்ளன்புடன் உம்மை அஞ்சலிக்கின்றோம்.

எங்கள் தேச மக்களுக்குள் உண்டாகிவரும் ஒற்றுமைக்காகவும், சுயாதீன நாட்டத்திற்காகவும், சீர்திருத்த முயற்சிகளுக்காகவும்,

உள்ளன்புடன் உம்மை அஞ்சலிக்கின்றோம்.

எங்கள் தேசத்தின் முன்னேற்றத்திற்குத் தடைகளாயிருக்கும் அறிவீனமும், ஜாதிப்பிரிவினையும், குடிவெறியும், பொய்மதக் கொள்கைகளும் சீக்கிரம் ஒழிய வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம், தயை மிகும் தெய்வமே.

கைத்தொழிற் சாலைகளிலும், காப்பித்தோட்டங்களிலும், நன்செய் புன்செய்களிலும் வேலைசெய்யும் ஏழைமக்களுக்குப் போதிய உணவும் உடையும் கிடைக்காதபடி செய்யும் பணக்காரரின் தன்னயம் ஒழிய வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், தயை மிகும் தெய்வமே.

இப்பொழுது எங்களுக்கு நீர் அதிகாரிகளாக வைத்திருக்கும் ஆங்கில துரைத்தனத்தார் நீதியாயும் நேர்மையாயும் அரசுபுரிய அவர்களை நீர் ஆட்கொண்டு நடத்த வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், தயை மிகும் தெய்வமே.

அட்டதரித்திரம் பிடித்த இந்த நாட்டின் வறுமையை நீக்குவது, நீர் அவர்களுக்குக் கொடுத்திருக்கும் முக்கிய கடமையென்பதையுணர்ந்து, தேச பரிபாலனம் செய்ய அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், தயை மிகும் தெய்வமே.

உள்நாட்டுக் கலகங்களுக்கும், கொலைபாதகங்களுக்கும் எங்கள் தேசத்தை விலக்கி இரட்சிக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், தயை மிகும் தெய்வமே.

சமுத்திரம் ஜலத்தினல் நிறைந்திருப்பதுபோல், எங்கள் தேசம் உம்மைக் கண்டு வழிபடத்தக்க மெய்யறிவால் நிறைந்திருக்கும் நற்காலம் துரிதமாய் வர வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், தயை மிகும் தெய்வமே. ஆமென்.

வாரம் 1

புதன் **மாலை**

பூமியின் குடிகளே, நீங்கள் எல்லாரும் தேவனுக்கு முன்பாக கெம்பீரமாய்ப் பாடுங்கள்.

அவர் நாமத்தின் மகத்துவத்தைக் கீர்த்தனம் பண்ணி, அவருடைய துதியின் மகிமையைக் கொண்டாடுங்கள். சங். $66^{1,2}$.

கர்த்தருடைய சிங்காசனம் பரலோகத்திலிருக்கிறது;

அவருடைய கண்கள் மனுபுத்திரரைப் பார்க்கின்றன. சங். 11^{4}.

கர்த்தரைத் தனக்குத் தெய்வமாகக்கொண்ட தேசம் பாக்கியமுள்ளது;

அவர் தமக்குச் சொந்தமாக்கிக்கொண்ட ஜனசமுதாயம் பாக்கியமுள்ளது. ஆமென். சங். 33[12].

நம் தாய் நாட்டிற்காக

தேவனே எங்கள் தேசத்தின்மேல் கிருபையாயிரும்.

கிறிஸ்துவே, எங்கள் தேசமக்கள் யாவரையும் ஆசீர்வதியும்.

தேவனே, எங்கள் அதிபதிகளையும் தேசத்தலைவரையும் ஆசீர்வதியும்.

கிறிஸ்துவே, அவர்கள் யாவரையும் உமக்கு உத்தமத் தொண்டூழியர்களாக்கியருளும். ஆமென்.

எங்கள் ஹிந்து முஸ்லிம் சகோதரர் செய்து வரும் சகல பரோபகாரச் சேவைக்காகவும்,

உம்மைத் துதிக்கிறோம், அன்புள்ள பிதாவே.

பெண்கல்வி அபிவிர்த்திக்காகவும், தீண்டா ஜாதியாரில் காணப்படும் தேர்ச்சிக்காகவும்,

உம்மைத் துதிக்கிறோம், அன்புள்ள பிதாவே.

உயர்ந்த ஜாதியார் தாழ்ந்தோரைக் கனப்படுத்தி உயர்த்த முன்வந்திருப்பதற்காக,

உம்மைத் துதிக்கிறோம், அன்புள்ள பிதாவே.

சிசு விவாகம், தேவதாசிகளின் ஆலயச்சேவை, வேசித்தனம், சூதாட்டம், குடிவெறி முதலிய தீமைகளை ஒழிக்க வேண்டுமென்ற வாஞ்சை எங்கள் தேசத்தில் பெருகி வருவதற்காக,

உம்மைத் துதிக்கிறோம், அன்புள்ள பிதாவே.

இங்கு உமது உத்தம தாசர்கள் ஸ்தாபித்த சத்திய சபை வருஷத்திற்கு வருஷம் செழித்தோங்கி வருவதற்காகவும், அதன் வெளிச்சத்தால் புறமதச் சகோதரரும் மனத் தெளிவடைந்து வருவதற்காகவும்,

உம்மைத் துதிக்கிறோம், அன்புள்ள பிதாவே.

எல்லா நற்கிரியைகளுக்கும், எல்லாச் சிறந்த நோக்கங்களுக்கும் உறைவிடமாகிய உண்மைப்பொருளே, உயர்சுடரே, எங்கள் துதியை ஏற்றுக்கொள்ளும். ஆமென்.

எங்கள் தேச வாலிபரும் வாலிபப்பெண்களும் சிற்றின்பம், உல்லாசம், களியாட்டு, மாமிச இச்சையாகிய பேய்களுக்கு அடிமைகளாகாமல் தப்பிக்கொள்ள வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

புராதன மதக்கொள்கைகளும் ஒழுக்கங்களும் கேள்விக்கிடமாகிக் கொண்டிருக்கும் இக்காலத்தில், நாஸ்தீகமல்ல, ஏக மெய்ப்பொருளாகிய உம்மையும், நீர் உலகுக்குத் தூதுவிடுத்த உமது குமாரனையும் அறிவதே நித்திய ஜீவனைத் தரத்தக்கதென்பதை எங்கள் தேசத்தார் கண்டுகொள்ள வேண்டுமென்று,

உம்மை கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

எங்கள் தேசத்தின் விதவைகள், திக்கற்ற பாலகர், குஷ்டரோகிகள், பஞ்சத்தினாலும் கொள்ளைநோயினாலும் வருந்துமவர்கள் யாவரையும் உமது காருண்யத்தால் தாங்கி ஆதரிக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

இலங்கை, மலேயா, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளிலிருக்கும் இந்திய மக்களை அவ்வத்தேச அதிகாரிகள் நீதியாய் அரசாள வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

ஹிந்து முஸ்லிம் சகோதரருக்குள் அடிக்கடி எழும்பும் விவாதங்களும், அவைகளால் நேரிடும் உயிர்ச்சேதமும், பொருள் நஷ்டமும் ஒழியவும்; இவ்விரு திறத்தாருக்குள்ளும் தாங்கள் பாரதமாதாவென்னும் ஒரே தாயின் பிள்ளைகளென்ற உள்ளான உத்தம உணர்ச்சி பெருகவும் வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

குடிகளுக்கும் அதிகாரிகளுக்கும் உள்ள சந்தேகங்களும், அனுதாபமின்மையும் நீங்கி சமாதானமும் செல்வமும் ஓங்கவேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

தேவனே, பூமியில் உம்முடைய வழியும் எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சண்யமும் விளங்கும்படி, எங்கள் தேசத்தாருக்கு இரங்கி அவர்களை ஆசீர்வதித்து, உமது முகத்தை அவர்கள் மேல் பிரகாசிக்கப்பண்ண வேண்டுமென்று, (சங். 67[1,2].) எங்கள் இறைவன் இயேசு பெருமானின் திருநாமத்தால் வேண்டிக் கொள்ளுகிறோம். **ஆமென்.**

வாரம் 1

வியாழன் **காலை**

நம்முடைய பெலனாகிய தேவனைக் கெம்பீரமாய்ப் பாடி;

யாக்கோபின் தேவனை ஆர்ப்பரிப்போம். *சங்.* 81[1].

உம்முடைய ஜனங்களும் உம்முடைய மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நாங்கள் உம்மை என்றென்றைக்கும் புகழுவோம்.

தலைமுறை தலைமுறையாக உமது துதியைச் சொல்லி வருவோம். *சங்.* 79[13].

சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர்.

நெருக்கமுண்டாகும் காலங்களில் அவரே அவனுக்குத் தஞ்சமானவர்.

கர்த்தாவே, உம்மைத் தேடுகிறவர்களை நீர் கை விடுவதில்லை.

ஆதலால் உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள். *சங்.* 9[9,10].

காலை ஜெபம்

தேவனே, உமது பிரமாணங்களே எம்மனத்திற்கு ஒளியாயிருப்பதால், இரவைக் கடந்து விழித்த எங்கள் மனம் உம்மை நோக்கி நிற்கிறது. உமது நீதியையும், கற்பனைகளையும், தீர்மானங்களையும் எங்களுக்குப் போதியும். ஆன்மாவை நசித்துக் கொல்லும் பாவத்தில் நாங்கள் தூங்காதபடி எங்கள் மனக்கண்கள் விழிப்பாயிருக்கச் செய்யும். சகல இருளையும் எங்கள் மனத்தினின்றகற்றும் நீதியின் சூரியனாகிய கிறிஸ்து பெருமானே, எங்கள் உள்ளத்தில் உதியும். எல்லா அவதூறிலிருந்தும் உமது பவித்திர ஆத்துமனால் எங்களை முத்திரித்துக் காத்தருளும். சமாதான வழியில் எங்கள் பாதங்களை நடத்தும். நாங்கள் சாயங்காலத்தில் எங்கள் அந்திப்பலியைச் செலுத்துமாறு, இந்த அருணோதயத்தையும் நாளையும் சந்தோஷமாய் எதிர்நோக்கக் கடாக்ஷியுமென்று, இயேசு கிறிஸ்துவின் மூலமாய்க் கெஞ்சிக் கேட்கிறோம். ஆமென்.

ஏழைகளுக்காக

ஏரோதின் அரண்மனையை அகற்றி, பெத்லகேமின் சத்திரத்தில் பிறந்து, ஒரு எளிய தச்சன் வீட்டில் வளர்ந்த இயேசு மகிபரே,

தரித்திரரை இரட்சியும்.

தந்தையரை இழந்த அநாதைகளின் தந்தையும், தலைவரை யிழந்த விதவைகளுக்குத் தாரகமுமென்று போற்றப்படும் யேகோவாவே,

தரித்திரரை இரட்சியும்.

"தரித்திரராகிய நீங்கள் பாக்கியவான்கள்; பரலோக இராஜ்யம் உங்களுடையது," என்று திருவாய் மலர்ந்துரைத்த கிறிஸ்துவே,

தரித்திரரை இரட்சியும்.

தரித்திரர் தங்கள் சோம்பலினாலும், கவலையின்மையினாலும், குடிவெறி சூதாட்டம் முதலிய துர்ப்பழக்கங்களினாலும் தங்களை இன்னும் கொடிய தரித்திரத்தில் ஆழ்த்திக்கொள்ளாதபடி அவர்களுக்குப் போதிய அறிவைத் தர வேண்டுமென்று,

உம்மை மன்றாடுகிறேம், தெய்வமே.

உடுக்க உடையும், உண்ண உணவும், வசிக்க வீடுமில்லாமல் துன்பப்படுமவர்களுக்கு உதவி செய்யும் யாவரையும் நிரம்ப ஆசீர்வதிக்க வேண்டுமென்று,

உம்மை மன்றாடுகிறேம், தெய்வமே.

துரைத்தனத்தாரும், தனவான்களும் ஏழைகளைப் பராமரிப்பது தம்மேல் விழுந்த பிரதான கடனென்றுணர்ந்து, தங்கள் காரியங்களை நிர்வகிக்க அவர்களுக்கு நற்புத்தி புகட்ட வேண்டுமென்று,

உம்மை மன்றாடுகிறேம், தெய்வமே.

வேலையாட்களின் கூலியைக் குறைத்து ஊதியம் திரட்டும் முறையை அனுசரித்து நிற்கும் தொழிற்சாலைகளையும், வியாபார ஸ்தலங்களையும் சீர்திருத்த வேண்டுமென்று,

உம்மை மன்றாடுகிறேம், தெய்வமே.

சிறு பிள்ளைகளையும், கர்ப்ப ஸ்திரீகளையும் வேலை வாங்கும் கொடுமையும், அடிமை வியாபாரத்தின் நிஷ்ரேமும் ஒழிய வேண்டுமென்று,

உம்மை மன்றாடுகிறேம், தெய்வமே.

சுகவீனமான மலைப்பிரதேசங்களிலும், சுரங்கங்களிலும், சமுத்திரத்தின் ஆழத்திலும் வயிற்றுப் பிழைப்புக்காக வேலை செய்து வரும் தொழிலாளர்மேல் நீர் விசேஷ கருணை கொள்ள வேண்டுமென்று,

உம்மை மன்றாடுகிறேம், தெய்வமே.

உம்மை நேசிக்க விரும்பும் நாங்களும் உம் சகோதரராகிய எளியவரிடம் உண்மையான அனுதாபங் கொண்டவர்களாயிருக்க உமது அருளால் எங்கள் உள்ளங்களை நிரப்ப வேண்டுமென்று,

உம்மை மன்றாடுகிறேம், கிறிஸ்து பெருமானே. ஆமேன்.

வாரம் 1

வியாழன் **மாலை**

பலவான்களே கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் சாற்றுங்கள்;

கர்த்தர் ஒருவருக்கே சாற்றுங்கள்.

அவருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள்;

அழகாய் விளங்கும் பரிசுத்த ஜீவியத்தால் அவரைப் பூஜியுங்கள்.

கர்த்தருடைய சத்தம் ஜலப்பிரவாகத்தின்மேல் தொனிக்கிறது;

கர்த்தருடைய சத்தம் வனாந்தரத்தை அதிரப்பண்ணுகிறது.

கர்த்தர் என்றென்றைக்கும் இராஜாவாக வீற்றிருக்கின்றார்.

கர்த்தர் தமது ஜனத்தைப் பலப்படுத்துவார்;

கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, ஆசீர்வதிப்பார்.

சங். 29.

ஏழைகளுக்காக

"என் சகோதரராகிய எளியவர்களில் மிகச் சிறியவனான ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்," என்று கல்லும் கரையத்தக்கதாக இன்மொழி பகர்ந்த அன்பின் கடலேயாகிய எம்பெருமானே, எங்கள் உதவியைத் தேடிவரும் எளியவர் ஒவ்வொருவரும் உமது உருவைத் தரித்து நிற்பதாக எங்கள் மனக்கண்கள் காணக் கிருபை செய்யும். நீர் தரித்திரரை நேசித்ததுபோல் நாங்கள் நேசிக்கவும், நீர் அவர்களுக்குப் பரிந்து உதவியதுபோல், நாங்களும் உமது தயவால் பெற்றிருக்கும் நன்மைகளை அவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கவும் எங்களுக்குக் கற்பியும். சிறிதும் யோசியாமல், நாங்கள் எளியவர்களை அவமதித்துத் தூஷித்து அவர்களுக்குச் செய்ய வேண்டிய உதவியைச் செய்யாமல் விட்டதாகிய பெருங் குற்றத்தை எங்களுக்குத் தயவாக மன்னியும். உமது நாமத்தினிமித்தம் இந்த மன்றாடலுக்குச் செவிகொடும், கிறிஸ்து பெருமானே. ஆமேன்.

கல்வியறிவும் நாகரீகமுமற்ற பல பூர்வீக ஜாதியார் அறிவும், மெய் பக்தியும், மிதமான செல்வமுமடைந்து வாழக் கிருபை செய்ய வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், பரமபிதாவே.

அமெரிக்காவிலுள்ள நீக்ரோ ஜாதியாரை உமது பிள்ளைகளென்று எண்ணி, அவர்களுக்கு நியாயமாய்க் கிடைக்கவேண்டிய சுயாதீனத்தையும் நாட்டு உரிமையையும் வெள்ளைக்காரரான அமெரிக்கர் கொடுக்கத்தக்கதாக அவர்கள் உள்ளத்தை விசாலமாக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், பரமபிதாவே.

அமெரிக்க இந்தியரும், ஆப்பிரிக்கா ஆஸ்திரேலிய முதலிய நாடுகளின் ஆதிக்குடிகளும் தம் தேச சுதந்தரத்தை இழந்து வருந்தும்போது, அவர்களுடைய பெருமூச்சு உமது செவிக்கு வந்து எட்ட வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், பரமபிதாவே.

இந்த தேசங்களில் குடியேறியிருக்கும் மேல் நாட்டார் தத்தம் சுயலாபத்தையே தேடுவதை யொழித்து, பூர்வ குடிகளுக்கு நன்மை செய்யும்படி அவர்களுடைய உள்ளத்தைப் பரஸ்பர சிநேகத்தால் நிரப்ப வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், பரமபிதாவே.

எளியோரையும், சாமர்த்தியத்தில் குறைந்தவர்களையும் ஏமாற்றித் தேடிக்கொள்ளும் செல்வசுகம் யாவும், உமது பார்வைக்கு அருவருப்பாயிருக்கின்றனவென்பதை யாவரும் உணர்ந்து பிழைக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், பரமபிதாவே.

தன்னயத்தையும், அனுதாபமின்மையையும், சகோதர சிநேகத்தைச் சிதைக்கும் பண ஆசையையும் எங்கள் உள்ளத்திலும் நினைவிலுமிருந்து வேரோடு பிடுங்கிச் சுட்டெரிக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், பரமபிதாவே. ஆமேன்.

வாரம் 1

வெள்ளி — காலை

ஆண்டவரை எந்நாளும் ஸ்தோத்திரிப்போம்.

நம்மேல் பாரஞ் சுமத்தினாலும், நம்மை இரட்சிக்கிற கர்த்தர் அவரே. சங். 68[19].

எங்கள் இருதயம் ஜீவனுள்ள தேவனை நோக்கி கெம்பீர சத்தமிடுகிறது.

எங்கள் மாம்சமும் ஜீவனுள்ள தேவனை நோக்கி கெம்பீர சத்தமிடுகிறது.

எங்கள் இராஜாவும் எங்கள் தேவனுமாகிய கர்த்தாவே, உம்முடைய பீடங்கள் அண்டை அடைக்கலான் குருவிக்கு வீடு கிடைத்ததே.

தகைவிலான் குருவிக்குத் தன் குஞ்சுகளை வைக்கக் கூடும் கிடைத்ததே.

உம்முடைய வீட்டில் வாசம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்;

அவர்கள் எப்பொழுதும் உம்மைத் துதித்துக்கொண்டிருப்பார்கள். சேலா. *சங்.* 84[2-4].

திருப்திக்காக

போதுமென்ற மனதுடனே கூடிய தெய்வபக்தியே மிகுந்த ஆதாயம்.

இதை அங்கீகரிக்கிறேம், கிறிஸ்துவே.

பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது.

இதை அங்கீகரிக்கிறேம், எங்கள் சற்குருவே.

உணவும் உடையும் கிடைத்தால் போதுமென்றிருக்கக் கடவோம்.

அப்படியே இருக்க முயற்சிப்போம், குருநாதா.

அந்தந்த நாளுக்கு அதனதன் பாடு போதும்.

ஆம் ஆண்டவரே, போதும், போதும்.

கேவல மனிதராகிய நீங்கள், உங்கள் பிள்ளைகளுக்கு நன்மையானவைகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, உங்கள் பரமபிதா தம்மிடம் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?

ஆம் ஆண்டவரே, எங்கள் அவிசுவாசத்தை நீக்கியருளும். ஆமென்.

நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, ஜோதிகளின் பிதாவிடமிருந்து வருகிறபடியால், (*யாக்.* 1[17].)

உம்மை ஸ்தோத்திரிக்கிறேம், தயவுள்ள கர்த்தாவே.

எல்லாருக்கும் கர்த்தராகிய நீர், உம்மைத் தொழுதுகொள்ளும் யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருப்பதால், (*ரோம.* 10[12].)

உம்மை ஸ்தோத்திரிக்கிறேம், தயவுள்ள கர்த்தாவே.

தேவனே, உம்முடைய ஐசுவரியத்திலிருந்து எங்கள் குறைவை யெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நீர் நிறைவாக்குவீர் என்ற நம்பிக்கைக்காக, (பிலி. 4^{19}.)

உம்மை ஸ்தோத்திரிக்கிறேம், தயவுள்ள கர்த்தாவே.

கருணை வள்ளலே, எங்களைப் படைத்து இந்நாள்வரை உடை உணவு அளித்துக் காத்துவரும் தேவனே, அடியாராகிய நாங்கள் உம் திருக்கரங்களிடம் பெற்ற நன்மை பெரிது! பெரிது!! எங்கள் பாத்திராபாத்திரத்தை நோக்காது, நன்றி கேடராகிய எங்கள் அவசரத்தையே கருதி, எங்கள் உடலுக்கும் ஆத்துமனுக்கும் தேவையான நன்மைகளை தேவரீர் கொடுத்து வந்திருக்க, நாங்கள் திருப்தியற்றவர்களாயிருப்பது குற்றமென்றே உணருகிறோம். நீர் இலவசமாய்க் கொடுக்கும் சுத்த ஆகாயமும், குளிர்ந்த ஜலமும், தேகசுகமும், பெற்றோர், பிள்ளைகள், உறவினர், நண்பர் பாராட்டும் அன்பும் தேவரீர் எங்களிடம் கொண்டிருக்கும் மாறாக் கருணையின் சின்னங்களாயிருக்கின்றன வென்றுணர்ந்து நன்றி செலுத்துகிறோம். பரம இராஜாவின் புதல்வராக அழைக்கப்பட்டிருக்கும் நாங்கள் உதவாத உலகப் பொருட்களை நாடி ஏமாந்தவர்களாய் மதிகெட்டு அலைவதேனோ? அரச குமாரருக்கு இருக்கவேண்டிய பூரண திருப்தியாலும், மங்காத களிப்பினலும் எங்கள் உள்ளங்களை நிரப்ப வேண்டுமென்று, எங்கள் மீட்பரும் மூத்த சகோதரருமாகிய உமது குமாரனின் திருநாமத்தை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், தயவுள்ள தேவனே. ஆமேன்.

வாரம் 1

வெள்ளி — மாலை

யேகோவா பெரியவர்.

அவர் மிகவும் புகழப்படத்தக்கவர்.

அவருடைய மகத்துவம் ஆராய்ச்சிக்கு எட்டாததாயிருக்கிறது.

ஒரு தலைமுறை வருந் தலைமுறைக்கு உமது செயல்களின் புகழைக் கூறும்.

உமது அதிசயமான செயல்களைத் தியானிப்போம்.

உமது மகத்துவத்தை நாங்கள் பிரஸ்தாபிப்போம்.

ஜனங்கள் உமது அளவற்ற தயாளத்தை நினைத்துப் பேசுவார்கள்.

உமது நீதியை கெம்பீரித்துப் பாடுவார்கள். சங். 145^{3-7}.

மாலை ஜெபம்

*எங்கள் நல்ல தேவனே, பகலின் வெய்யிலுக்கும் உழைப்புக்கும் பின், இரவின் குளிர்ச்சியும் இளைப்பாறுதலும் வரவேண்டுமென்று வகுத்தவர் நீரே. தொய்ந்த எங்கள் சரீரங்களுக்கு நீர் தந்திருக்கும் இந்த இரவின் இளைப்பாறுதலுக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். அவ்வாறே நீர் ஒவ்வொரு நாளும் தயவாக அளிக்கும் சகல நன்மைகளுக்காகவும் நாங்கள் உமக்கு நன்றியுள்ளவர்களாய்ப் பிழைக்கக் கிருபைசெய்யும். ஆமென்.

†எங்கள் இரட்சகரே, இந்த இரவில் விழித்திருப்பவர்களோடும், கண்ணீர் விடுமவர்களோடும் நீர் தங்கியிரும்.

நித்திரை செய்பவர்களைக் காக்க உமது தூதரை அனுப்பும்.

வியாதிப் படுக்கையிலிருக்கும் உமது பிள்ளைகளைப் பரிகரியும்.

உடலிளைப்பும், மனச்சலிப்பும் உற்றவர்களுக்கு இளைப்பாறுதல் கொடும்.

மரித்துப்போகும் உமது பிள்ளைகளை ஆசீர்வதித்து ஏற்றுக்கொள்ளும்.

துன்பப்படும் உமது பிள்ளைகளை ஆற்றித் தேற்றும்.

நிர்ப்பந்த நிலைமையிலிருக்கும் உமது பிள்ளைகள்மேல் மனதுருகும்.

சந்தோஷமாயிருக்கும் உமது பிள்ளைகளைத் தீமையினின்று காத்தருளும்.

உமது அன்பின் பெருக்கால் யாவரையும் இரட்சியும், கிறிஸ்துவே. ஆமென்.

திருப்திக்காக

தேவனே, உலக மக்களுக்குத் தானியமும் திராட்ச ரசமும் பெருகியிருக்கும் காலத்தின் சந்தோஷத்தைப் பார்க்கிலும் அதிக சந்தோஷத்தால் எங்களை நீர் நிரப்பியிருக்கிறீர். சங். 4⁷.

யேகோவாவே, எங்கள் இருதயத்தைச் சந்தோஷத்தினால் நிரப்பியிருக்கிறீர்.

எங்கள் வாயை நன்மையினால் திருப்தியாக்குகிறவர் நீரே. சங். 103⁵.

---

* Mozarabic Liturgy † St. Augustine

உமது இரட்சிப்பாகிய நீரூற்றிலிருந்து மகிழ்ச்சியோடே ஜீவ தண்ணீரை மோண்டுகொள்ளுவோம். ஏசா. 12^{3}.

ஓ தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லோரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்.

ஜீவ தண்ணீராகிய, கிறிஸ்துவே உம்மிடம் வருகிறேம்.

அப்பமில்லாததற்காக நீங்கள் பணத்தைச் செலவழிப்பதேன்?

ஜீவ அப்பமாகிய கிறிஸ்துவே, எங்களைப் போஷியும்.

திருப்தி தரக்கூடாத உலகப் பொருட்களுக்காக நீங்கள் உங்கள் பிரயாசத்தைச் செலவழிப்பதேன்?

பரலோகத்திலே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கும்படி கற்பித்த எங்கள் குருதேசிகரே, நாங்கள் அவ்விதம் நடக்க எங்களுக்குப் பெலன் தருக.

ஆண்டவரே, நாங்கள் உமக்குக் கவனமாய்ச் செவிகொடுத்து, நலமானதைச் சாப்பிடுவோம்.

அப்பொழுது எங்கள் ஆத்துமம் கொழுப்பான பதார்த்தத்தினுல் மகிழ்ச்சியுறும்.

உம் சொற்கேட்டு உம்மிடம் வருவோம்.

அப்பொழுது எங்கள் ஆத்துமம் பிழைக்கும். ஏசா. 55^{1-3}.

பராபரக்கண்ணி

(எல்லாரும்)

எத்திக்கும் தானுகி என்னிதயத்தே ஊறித்
தித்திக்கு மானந்தத் தேனே, பராபரமே.

ஆழித் துரும்பெனவே அங்குமிங்கும் உன்அடிமை
பாழில் திரிவதென்ன பாவம் பராபரமே.

எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி
ஏழை நெஞ்சம்,
புண்ணுகச் செய்ததினிப் போதும் பராபரமே.

ஓயாதோ என்கவலே, உள்ளே ஆனந்த வெள்ளம்
பாயாதோ ஐயா, பகராய்! பராபரமே.

நெஞ்சமே கோயில், நினைவே சுகந்தம், அன்பே
மஞ்சள் நீர், பூசைகொள்ள வாராய், பராபரமே.

இயேசு பெருமானே, உமது உத்தம ஊழியரும் எங்கள் குருக்களில் சிரேஷ்டருமான பவுல் பகர்ந்த சாட்சியைச் சிந்திக்கின்றோம். அவர், ''நான் எந்த நிலைமையிலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும். எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும், பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும், குறைபடவும் போதிக்கப்பட்டேன். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு,'' எனக் கூறினர். இப்படி அவர் கூறியதின் காரணம், அவர் உமதுபேரில் கொண்டிருந்த சந்தேகமற்ற நம்பிக்கையே என்று உணருகிறோம். நாங்களும் இவ்வாறு மனப்பூர்வமாய்க் களிப்புடன் அறிக்கையிடும்படி, எங்கள் பக்தி விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும். ஆமேன்.

நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்து நமது விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்திவிட்டோம். ஆதலால், எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் நமது இருதயங்களையும் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள் காத்துக்கொள்ளும். ஆமேன். பிலி $4^{6,7}$.

வாரம் 1

சனி **காலை**

கர்த்தரின் கிருபைகளை என்றென்றைக்கும் பாடுவேன்.

கர்த்தரின் உண்மையைத் தலைமுறை தலைமுறையாக என் வாயினால் அறிவிப்பேன்.

கர்த்தாவே, வானங்கள் உம்முடைய அதிசயங்களைத் துதிக்கும்.

உத்தமர் சபையில் உமது உண்மை விளங்கும்.

தேவரீர், சமுத்திரத்தின் பெருமையை ஆளுகிறவர் நீர்.

அதன் அலைகளையும் அடக்குகிறவர் நீர். சங். $89^{1,5,9}$.

கர்த்தர் அருளிய வேதம் குறைவற்றது.

அது ஆத்துமத்தை மாற்றிப் பிறக்கச் செய்யும்.

கர்த்தருடைய சாட்சி சத்தியம்.

அது பேதையை ஞானியாக்கும்.

கர்த்தருடைய தீர்ப்பு நீதியானது.

அது இருதயத்திற்கு சந்தோஷத்தைத் தரும்.

கர்த்தருடைய கற்பனை தூய்மையானது.

அது கண்களைத் தெளிவாக்கும்.

கர்த்தருக்குப் பயப்படும் பயம் சுத்தமானது.

அது என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். சங். 19^{7-9}.

பிழை உணர்ந்தோதல்

சுத்த பரிசுத்த தெய்வமே,

எங்கள்மேல் கிருபையாயிரும்.

உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்த்த தேவாட்டுக் குட்டியே,

எங்கள்மேல் கிருபையாயிரும்.

தெய்வ சமுகத்தைவிட்டு வழி தப்பியலையும் ஆத்துமங்களைத் தேடி இரட்சிக்கவந்த கிறிஸ்துவே,

எங்களை இரட்சியும்.

அறிந்தும் அறியாமலும், அகவஞ்சத் துணிவாலும் நாங்கள் செய்த குற்றங்களை எங்களுக்கு உணர்த்திக் காட்ட வேண்டுமென்று,

உம்மை மன்றடுகிறோம், திவ்ய ஆவியே.

தன்னயத்தாலும், பொறாமையினாலும் பிறர் படும் துன்பத்தைக் கண்டு உருகாதிருக்கும் எங்கள் கல்லான இருதயத்தை மென்மையான இருதயமாக்க வேண்டுமென்று,

உம்மை மன்றடுகிறோம், திவ்ய ஆவியே.

எங்களுக்குப் பிரியமில்லாதவர்கள் கஷ்டப்படுவதைக் கேட்டு சந்தோஷப்படத் துணியும் கொடிய நெஞ்சை அடக்க வேண்டுமென்று,

உம்மை மன்றடுகிறோம், திவ்ய ஆவியே.

எங்கள் அயலாரைப்பற்றித் தீதான மொழிகளைக் கேட்க விரும்பும் செவிகளையும், அவர்களைத் தூற்றித் திரிய விரைந்து எழும்பும் நாவையும் அடக்க வேண்டுமென்று,

உம்மை மன்றடுகிறோம், திவ்ய ஆவியே.

அசுத்தமான காக்ஷிகளைக் காண விரும்பும் கண்களையும், மாமிச இச்சையால் எழும்பும் துர்எண்ணங்களை எண்ணும் மனத்தையும் சுத்திகரிக்க வேண்டுமென்று,

உம்மை மன்றடுகிறோம், திவ்ய ஆவியே.

பழிக்குப் பழிவாங்க விரும்பும் வீண் வைராக்கியத்தால் வெறி கொண்டலையும் உள்ளத்தை உமது அன்பின் பாசத்தால் இறுகக் கட்ட வேண்டுமென்று,

உம்மை மன்றாடுகிறேம், திவ்ய ஆவியே.

எங்களுக்கு நெருங்கின உறவினர் செய்யும் குற்றங்களையும் பொறுக்கக் கூடாமலிருக்கும் மதிகெட்ட சிந்தையை மாற்ற வேண்டுமென்று,

உம்மை மன்றாடுகிறேம், திவ்ய ஆவியே. ஆமேன்.

இவ்விதமாக உமது தூய ஆவியால் நாங்கள் அடக்கி ஆளப்பட்டு, உண்மையுள்ளவை, பெருந்தகைமை வாய்ந்தவை, நீதியானவை, தூய்மையானவை, விரும்பத்தக்க அழகுடையவை, நற்கீர்த்திக்குரியவை எவையோ அவற்றையும், சகல குணசீலத்தையும், புண்ணியத்தையுமே சிந்திக்கும் சீர்பொருந்திய மனத்தை எங்களுக்குத் தந்து உதவ வேண்டுமென்று, சுகுண சம்பன்னராகிய கிறிஸ்து பெருமானை முன்னிட்டு கெஞ்சிக் கேட்கிறோம், பரம பிதாவே. ஆமேன். பிலி. 4^{8}.

வாரம் 1

சனி **மாலை**

என் இருதயம் நல்ல விசேஷத்தால் பொங்குகிறது.

இராஜாதி ராஜரான கிறிஸ்துபிரானைப் போற்றிப் பாடிய கவியைச் சொல்லுவேன்.

மனுப்புத்திரர் யாவரிலும் நீர் மகா சவுந்தரியமுள்ளவர்.

உம் உதடுகளில் அருள் பொழிகிறது.

நீர் மகா மகத்துவமாய் ஜெயம் பெற்றோங்குக.

நீர் மகா மகத்துவமாய்ப் பவனி வருக.

ஏனெனில், சத்தியமும் சாந்தமும் நீதியும் உமது ஆளுகையின் இலக்ஷணங்களாயிருக்கின்றன.

உமது சிம்மாசனம் பெயராத சிம்மாசனம்.

உமது செங்கோல் நீதியை நிலைநாட்டும் சரியான செங்கோல்.

அல்லேலூயா!

என் மனமாகிய மணமகளே, கேள்.

உன் செவியைச் சாய்த்து கேட்பதைச் சிந்தித்துப் பார்.

உன் உறவினராகிய ஆசாபாசங்களை மறந்துவிடு.

உன் பெற்றோராகிய சிற்றின்ப வாஞ்சையையும், பாவத்தையும் வெறுத்துவிடு.

அப்பொழுது உன் மணவாளனான கிறிஸ்தரசன் உன் அழகை அதிகமாய் விரும்புவார்.

அவர் உன் கர்த்தர்; அவரையே தியானித்து பணிந்துகொள்.

சங். 45.

பிழை உணர்ந்தோதல்

எங்கள் குலநலம், செல்வம், கல்வி, சாமர்த்தியம் முதலானவை மிகச் சிறியனவேயாயினும், எங்கள் சுயநீதி பழங்கதையேயாயினும் இவற்றை நினைத்து மமதைகொள்ளும் மதியீனம் எங்களுக்குள் இருப்பதை நினைத்து,

தெய்வமே, நாங்கள் மனங் கசிந்து துக்கிக்கிறேம்.

சண்டை, வாக்குவாதம், கோபம், வெடுவெடுப்பு, பிடிவாதம், சகியாமையாகிய தீயகுணங்களுக்கு வேராயிருக்கும் பெருமை இன்னும் எங்கள் உள்ளத்தில் குடிகொண்டிருப்பதை நினைத்து,

சாந்தப் பிரபுவே, மனங் கசிந்து துக்கிக்கிறேம்.

புறங்கூறல், பிறருக்கு அபகீர்த்தியான கதைகளைக் கேட்டு மகிழ்தல், பாவசோதனையில் சிக்கிக்கொண்ட நிர்ப்பாக்கியரை இகழ்தல் ஆகிய அன்பற்ற குணங்கள் எங்களில் காணப்படுவதை நினைத்து,

அன்பின் பெருக்கே, மனங் கசிந்து துக்கிக்கிறேம்.

அசுத்தம், வேசித்தனம், காமவிகாரம், குடிவெறி, கொலை முதலிய பெரும் பாதகங்களுக்கு எங்களை விலக்கி இரட்சிக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறேம், பரிசுத்த பிதாவே.

கர்த்தாவே, எங்களைக் கோபமாய்க் கடிந்துகொள்ளாதிரும்.

தேவனே, உக்கிரமாக எங்களைத் தண்டியாதிரும்.

எவரும் அணுகாத வெளிச்சத்தில் வாசமாயிருக்கும் ஞான விளக்கே,

எங்கள் மனத்தைக் கம்மியிருக்கும் அஞ்ஞான இருளை அகற்றிவிடும்.

ஆயக்காரர் பாவிகளின் சிநேகிதரே,

எங்களையும் சிநேகித்து இரட்சியும்.

பேதலித்த சீமோனைப் பேணி முகம் பார்த்த கிறிஸ்து பெருமானே,

பாவிகளென்று உணர்ந்து தயங்கும், எங்களையும் கடைக்கண்ணால் பாரும்.

உமது ஞாயமான கோபத்தினால், எங்கள் மாம்சத்தில் ஆரோக்கியமில்லை,

எங்கள் பாவத்தினால் எங்கள் எலும்புகளில் சௌக்கியமில்லை. சங். 38^{3}.

தேவனே, உமது கிருபையின்படி எங்களுக்கு இரங்கும்.

உமது மிகுந்த இரக்கங்களின்படி எங்கள் மீறுதல்கள் நீங்க எங்களைச் சுத்திகரியும்.

உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எங்களுக்குத் தந்து,

உற்சாகமான ஆவி எங்களைத் தாங்கும்படி செய்யும்.

சங். 51^{1-12}. ஆமேன்.

உங்கள் பாவங்கள் செவேலென்றிருந்தாலும் அவை பனித்திவலையைப்போல் வெண்மையாகும். ஏசா. 1^{18}.

நமது பாவங்களை மன்னித்து, எல்லா அநீதத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு தேவன் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார். 1 யோ. 1^{9}.

அல்லேலூயா, தேவனுக்கு ஸ்தோத்திரம்!

(எல்லோரும்)

எங்கள் கன்மலையும் மீட்பருமாகிய கர்த்தாவே எங்கள் வாயின் வார்த்தைகளும், இருதயத்தின் தியானமும், உமது பார்வைக்கு இப்பொழுதும் எப்பொழுதும் உகந்தவையாயிருக்கட்டும். சங். 19^{14}.

ஆமேன்.

வாரம் 2

ஞாயிறு காலை

சேனைகளின் தேவனே, உமது வாசஸ்தலம் எவ்வளவு இன்ப முள்ளதாயிருக்கிறது.

எங்கள் ஆத்துமம் கர்த்தருடைய ஆலயப் பிராகாரங்களின் மேல் மிகுந்த வாஞ்சைகொண்டிருக்கிறது. சங். 84$^{1-2}$.

ஓ, தெய்வமே ஜனங்கள் உம்மைத் துதிக்கவேண்டும்.

எல்லா ஜனங்களும் உம்மைத் துதிக்கவேண்டும்.

அப்பொழுது பூமி தன் பலனைத்தரும்; யேகோவா எங்கள் குல தெய்வம், எங்களை ஆசீர்வதிப்பார்.

பூமியின் எண் திசைகளும் அவருக்குப் பயந்து அடங்கியிருக் கும். சங். 67$^{5-7}$.

ஓய்வுநாளுக்கு ஆயத்தம்

*சிருஷ்டி கர்த்தனே, ஆறு நாட்களாக வானத்தையும் பூமியை யும், அவற்றிலுள்ள யாவற்றையும் படைப்பதில் நீர் ஊக்கஞ்செலுத்தி, ஏழாம் நாள் இளைப்பாறச் சித்தங்கொண்டீர். உமது கரத்தின் கிரி யைகளாகிய நாங்களும் இளைப்பாறுவது அவசியமென்றறிந்து அதற் கென்று இன்னுளைத் திட்டஞ் செய்தீர்; ஸ்தோத்திரம். நாங்கள் எங் கள் கவலைகளையும் விசாரங்களையும் மறந்து, உம்மை உமது பரிசுத்த ஆலயத்தில் தொழுதுகொள்ள ஆயத்தப்படுத்திக் கொள்ளுவோம். இன்று நாங்கள் அனுசரிக்கும் ஓய்வும், ஓதலும் உமது நித்திய இராஜ் யத்தின் இடையரு ஓய்வுக்கும், இளைப்புண்டாக்காத சேவைக்கும் முன்னடையாளமும் ஆயத்தமுமாயிருக்கட்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் எங்களுக்கிரங்கும். ஆமேன்.

குழந்தைகளுக்காக

இதோ பிள்ளைகள் கடவுளிடமிருந்து வரும் சுதந்தரம்.

பாலகருடைய வாயிலிருந்து பிறக்கும் துதியால், தேவரீர் உமது துதியைப் பூரணப்படுத்தச் சித்தங்கொண்டீர். மத். 21^{16}.

*Archbishop Benson

தாவீதின் மைந்தனே, மகத்துவ இளவரசே, கன்னிமரியின் பாலகனாக மாட்டுத்தொழுவத்தில் தோன்றச் சித்தங்கொண்ட மகானுபாவா,

உமக்கு மகிமை பெருகவேண்டும்.

நாசரேத்தூரில் பெற்றோருக்கு அமைந்து வளர்ந்த உத்தம பாலகா, பிள்ளைகள்யாவரும் தத்தம் பெற்றோர் சொற்கேட்டு நடக்கக் கிருபை செய்ய வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம்.

தேவாலயத்தில் வேத வசனங்களை ஆவலோடு கேட்டுக் கற்ற திருக்குமாரா, பிள்ளைகள் யாவரும் வேதவசனத்தில் பிரீதி கொண்டு, அதைத் தியானிக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம்.

பால கிறிஸ்துவே, எல்லாப் பிள்ளைகளும் உம்மைப்போலவே வளர்ந்து ஆவியில் பெலன்கொண்டு ஞானத்தினால் நிறைந்து தெய்வ கிருபையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம்.

"சிறு பிள்ளைகள் என்னிடம் வர இடங்கொடுங்கள், அவர்களைத் தடை செய்யாதீர்கள்," என்று சொன்ன பாலகர் நேசனே, பெற்றோருக்கும், மூத்த சகோதரர் சகோதரிகளுக்கும், பிள்ளைகளை உம்மிடம் அழைத்துவரும் வழியைப் போதிக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம்.

"இந்தச்சிறியரிலொருவனைத் தீவினைக்கு உட்படுத்துபவன் எவனோ அவன் பிறவாதிருந்தால் நலமாயிருக்கும்," என்று கடுமையாக எச்சரித்த பரம சற்குருவே, பாலகரின் களங்கமற்ற உள்ளத்தில், நாங்கள் எங்கள் பேச்சினாலாவது, நடக்கையினாலாவது, தூண்டுதலினாலாவது, பொல்லாத முன் மாதிரியினாலாவது பாவங்களை விதைத்துவிடாதபடி அதிக ஜாக்கிரதையாக எங்களைக் காத்துக்கொள்ள எங்களுக்கு அறிவைத் தர வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம்.

வெறியர் வீட்டிலும் வேசிகள் குகையிலும் சிக்கி, தங்கள் சரீரங்களையும் ஆத்துமங்களையும் கறைப்படுத்திக்கொண்டிருக்கும் கதியற்ற பாலகரைச் சிறை மீட்டு இரட்சிக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம், சேனைகளின் தேவனே.

வறுமையினிமித்தம் உணவும் உடையுமில்லாமல் தெருத்திண்ணைகளில் தூங்கி, சிட்சித்துப் பராமரிப்பாரில்லாமல் கெட்டலேயும் மேய்ப்பனற்ற ஆட்டுக்குட்டிகளே உமது தோள்மேற் சுமந்து புகலிடம் சேர்க்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், எங்கள் நல்ல மேய்ப்பரே. ஆமென்.

குடும்பத் தலேவரின் விசேஷ ஜெபம்

ஓ, இஸ்ரவேலின் மேய்ப்பரே, இக்குடும்பத்தின் தலேவனுயிருக்கும் உத்தரவாதத்தைப் பெற்ற நானும் என் வீட்டாரும் கர்த்தராகிய உம்மையே என்றும் சேவிக்கத்தக்கதாக, (யோசு. 24[15].) நீர் எனக்கும் என் பிதாக்களுக்கும் செய்த நன்மைகள் யாவையும், கொடுத்த சிக்ஷைகளேயும், எங்களே இதுவரை நடத்திவந்த விந்தையையும், என் பிள்ளேகளுக்கும் பிள்ளேகளின் பிள்ளேகளுக்கும் அறிவிக்க நான் மறவாதிருக்கவேண்டும். உபா. 4[9,10].

ஆமென்.

வாரம் 2

ஞாயிறு **மாலே**

யேகோவாவே, தேவர்களுக்குள் உமக்கு நிகரானவர் எவருமில்லே.

உமது கிரியைகளுக்கு ஒப்பான கிரியைகளுமில்லே.

தெய்வமே, உமது சிருஷ்டிகளாகிய சகல ஜாதியாரும் வந்து உம்மைப் பணிந்துகொள்ளுவார்கள்.

அவர்கள் உமது நாமத்தை மகிமைப் படுத்துவார்கள்.

தேவரீர் மகத்துவமுள்ளவரும், அதிசயங்களேச் செய்கிறவருமாயிருக்கிறீர்.

நீர் ஒருவரே தெய்வம்; உம்மையன்றி வேறு தெய்வமில்லே.

சங். 86[8–10].

குழந்தைகளுக்காக

உமது களங்கமற்ற குழந்தைப் பருவத்தை நினேத்து,

உம்மைப் போற்றுகிறேம், இயேசுவே.

நீர் கடவுளின் வலபாரிசத்திலிருக்கும் மகிமையைப் பொருட் படுத்தாது, ஈன மாந்தராகிய எம்மைத் தேடிவந்து, மரியம்மாள் மடியி லூர்ந்த உமது எல்லையற்ற கருணையை நினைத்து,

உம்மைப் போற்றுகிறேம், இயேசுவே.

பாலகரை நேசித்து அவர்களுக்கு உமது நித்திய இராஜ்யத்தின் உரிமையைக் கொடுத்ததை நினைத்து,

உம்மைப் போற்றுகிறேம், இயேசுவே.

நிர்மல மனமும், நிறைந்த பாசமும், இடையரு மகிழ்வும், ஓய் வில்லாக் களிப்பும் உடைய குழந்தைகளை வீடுகளில் விளக்குகளாகத் தந்ததற்காக,

எம் பரமபிதாவே, உமக்கு நன்றி செலுத்துகிறேம்.

பாலகரின் துணையற்ற நிலைமையால் எங்களுள்ளங்களில் அனுதாப மும் அன்பும் சுரக்கச் செய்வதற்காக,

எம் பரமபிதாவே, உமக்கு நன்றி செலுத்துகிறேம். ஆமென்.

*எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, உமது பரிசுத்த பாலியத் தையும், நீர் பாலகரிடம் காட்டிய அபிமானத்தையும் நினைத்து, எங்கள் தேசத்தின் குழந்தைகளைக் காத்தருளும். அவர்களுடைய உள்ளங்கள் என்றும் சூது வாதற்ற பால்போன்ற உள்ளங்களாகவே இருக்கட்டும். அவர்கள் பொல்லாத வழிகளில் தவறிச்செல்ல நேரிடும்போது அவர் களைத் தடுத்து இரட்சியும். வழிதப்பியலையும் சிறுவர் சிறுமிகளைத் தேடி உம்மந்தையில் சேர்த்துக்கொள்ளும். அவர்கள் உம்மை நேசிக் கும் நேசத்திலும், உம்மிடம் கொள்ளும் பக்தியிலும் தேர்ச்சியடைவ தற்குத் தடையாயிருக்கும் யாவற்றையும் நீக்கியருளும். அநாதியாய், சாகா ஜீவியாய் இருந்து, செங்கோலோச்சும் ஏகதெய்வமே, எங்கள் ஜெபத்தைக்கேளும். ஆமென்.

எங்கள் அறியாமையினாலும் பாவத்தினாலும், சிசுக்கள் துன்ப மடையாதிருக்கவும், அவர்களுடைய அருமையான பிராணன் அழியா திருக்கவும் வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக்கேட்கிறேம், தயவுள்ள தேவனே.

தாய் தந்தையராயிருக்கும் அரிய சிலாக்கியத்தைப் பெற்றவர்க ளுக்கு அன்போடுமட்டுமல்ல அறிவோடும் பிள்ளைகளை வளர்க்கத்தக்க விவேகத்தைக் கொடுக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம், தயவுள்ள தேவனே.

---

* Mr. S. Gladstone

சிசுபரிபாலனத்தில் தங்கள் காலத்தையும் பிரயாசத்தையும் திறமையையும் செலவிடும் வைத்தியர், மருத்துவப் பெண்கள் முதலானோரை ஆசீர்வதிக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள தேவனே.

அன்னையின் முத்தமாகிய அமுதையுண்டதற்குக் கைம்மாருக தம் பாலகரை முத்தமிட விரும்பியும், அப்பாக்கியம் கிட்டாது வருந்தும் யாவருக்கும் திக்கற்ற பாலகரை நேசித்துப் பராமரிப்பதால் தம் ஆவலைத் தீர்த்துக்கொள்ள வழிகாட்ட வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள தேவனே.

முற்காலத்தில் மாந்தர் பாலகருக்குச் செய்து வந்த தீமைகளை தயவாய்ப் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள தேவனே.

இக்காலத்திலும் தரித்திரத்தாலும், பண ஆசையினாலும், பிள்ளைகளுக்கு நேரிடும் இன்னல்களை ஒழிக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள தேவனே.

நாங்கள் யாவரும் பிள்ளைகளை மிகுந்த பட்சத்தோடு பேணத் துணைபுரிய வேண்டுமென்று,

உம்மை கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள தேவனே.

பாலரின் அற்ப ஜீவனுக்குள் மறைந்துகிடக்கும் தெய்வீக சக்தியை நாங்கள் கண்டு கண்ணியப்படுத்துமாறு எங்கள் மனக்கண்களைத் திறக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள தேவனே.

இப்பொழுது உமது சமுகத்தில் கை கூப்பி ஜெபிக்கும் எங்கள் அருமருந்தன்ன குழந்தைகளையும் ஆசீர்வதித்து, உமது நேர்மையும் இன்பமுமான வழிகளிலே அவர்கள் பாதங்களை நடத்த வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள தேவனே.

ஆமென்.

வாரம் 2

திங்கள் — காலை

நமது இரட்சணியக் கன்மலையைக் கீர்த்தனம் பண்ணுவோம், வாருங்கள்.

துதிகளுடன் அவர் சந்நிதி முன்வந்து, சங்கீதங்களால் ஆர்ப்பரிப்போம். சங். 95:1,2.

தெய்வமே, நீதியும் நியாயமும் உமது சிங்காசனத்தின் ஆதாரம்;
கிருபையும் சத்தியமும் உமக்குமுன் சென்று ஒலிக்கும்.

அந்த கெம்பீர சத்தத்தை அறிந்த ஜனங்கள் பாக்கியம் பெற்ற வர்கள்.

அவர்கள் உம் திருமுக ஒளியில் நடப்பார்கள்.

அவர்கள் உமது நாமத்தை நாளெல்லாம் கொண்டாடுவார்கள்.

அவர்கள் உமது நீதியால் உயர்ந்திருப்பார்கள். சங். 89^{14-16}.

உள் நாட்டு மிஷன்களுக்காக

தேற்றுங்கள், என் ஜனத்தைத் தேற்றுங்கள். எருசலேமுடன் பட்சமாய்ப் பேசி அதின் போர் முடிந்ததென்றும், அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்றென்றும் கூறுங்கள். ஏசா. 40^{1-2}.

கிறிஸ்து பெருமானே, நெரிந்த நாணலை முறியாமலும், மங்கி எரியும் திரியை அவியாமலும் காக்கும் தீனதயாளு நீரே. உமது தொண்டரில் அநேகர் இவ்வித காருண்யம் கொண்டிருப்பதை நினைத்து,

உம்மை உள்ளன்புடன், போற்றுகிறேம்.

இரக்ஷண்ய சேனை முதலிய சங்கங்கள் சோரம்போன பெண்களை யும், குடிவெறிக்கு அடிமையான பேதையரையும் தேடி இரட்சிக்க முயன்று வருவதை நினைத்து,

உம்மை உள்ளன்புடன், போற்றுகிறேம்.

அம்முயற்சியால் உமது திருவடிச்சரணம் புகுந்து, தம்போன்ற பலவீனரைத் தாங்கிவரும் சீரடைந்த அனேக ஸ்திரீ புருஷருக்காக,

உம்மை உள்ளன்புடன், போற்றுகிறேம்.

அறிவின் மயக்கத்தாலும், சன்மார்க்கப் போதனைகளின் குழப்பத் தாலும் விசுவாசத்தை இழந்து விட்ட உமது பிள்ளைகளை உமது வீடா கிய திருச்சபைக்குள் திரும்பச் சேர்க்க எழுதப்படும் நூல்களுக்காக வும், செய்யப்படும் பிரசங்கங்களுக்காகவும், சினேகமேறையான சம் பாஷணைகளுக்காகவும்,

உம்மை உள்ளன்புடன், போற்றுகிறேம்.

இந்திய சபையின் சுவிசேஷ சங்கங்களாகிய இந்திய மிஷனெரி சங்கத்திற்காகவும், பாரத கிறிஸ்தவ சேவக சங்கத்திற்காகவும், கொங்க நாட்டு மிஷனுக்காகவும், நிர்மல் மிஷனுக்காகவும்,

உம்மை உள்ளன்புடன், போற்றுகிறேம். ஆமேன்.

எங்கள் கர்த்தராகிய தேவனே, உமது நன்மைத் தன்மையையும், வல்லமையையும் அறிவிக்கும் சாக்ஷிகளை நீர் அனுப்பாத இடமும், காலமும் இருந்ததில்லை. இப்பொழுது உமது சிறந்த நாமத்தை தேசத்தார், அரசர், இஸ்ரவேலின் மக்கள், மற்றும் யாவருக்கும் முன்பாக உயர்த்திக் கூறத்தக்க உத்தம உபதேசகரை நீரே தெரிந்தனுப்ப வேண்டும். உமது பரிசுத்த ஆத்துமனுல் அவர்களைப் பிரத்தியேகப் படுத்தி, கஷ்டத்தைச் சகிக்கவும், மாமிசத்தை மேற்கொள்ளவும், உமது திருவுளச் சித்தத்தைக் குன்றுத ஊக்கத்துடன் நிறைவேற்றவும் அவர்களுக்குக் கிருபை செய்யும். உமது சத்தியத்தால் அவர்களை இடைக்கட்டும். உமது வசனம் அவர்கள் உள்ளங்களில் கொழுந்துவிட்டு எரியட்டும். விசுவாசமென்னும் கேடகத்தை அவர்களுக்குத் தரிப்பியும். நீர் வருமளவும், அவர்கள் விழிப்போடு உமது சேவையைச் செய்யவும், இறுதியில் பூரிப்பென்னும் கிரீடத்தை அணிந்தவர்களாய் தங்கள் கர்த்தருடைய சந்தோஷத்திற்குட் செல்லவும் அவர்களுக்கு வரம் தர வேண்டுமென்று, உம்மை மன்றுடுகிறேம், கிறிஸ்துவே. பிதாவோடும் பரிசுத்த ஆவியானவரோடும் உமக்கு எல்லா மகிமையும் மேன்மையும் சதாகாலங்களாய்ப் பெருகக்கடவது. ஆமேன்.

தேவனே, எங்கள் சுய நீதியைப் பாராமல், நீர் எங்கள் உள்ளத்தில் செய்திருக்கும் இரட்சிப்பின் கிரியையே பாரும். அபாத்திரராகிய நாங்களும் உம்மைப் பின்பற்றிச்செல்லவும், மனிதரைப் பிடிக்கிறவர்களாகவும் வேண்டுமென்று சித்தங்கொண்டீர். இந்த மேலான நோக்கத்தை நிறைவேற்றத்தக்க திறமையை நீர் எங்களுக்கு அளிக்க வேண்டுமென்று எங்கள் அருள்நாதர் கிறிஸ்து இயேசுவை முன்னிட்டு மன்றுடுகிறேம். ஆமேன்.

வாரம் 2

திங்கள் **மாலை**

யேகோவாவே, நீரே எங்கள் தேவன்.

உம்மை மேன்மைப்படுத்தி, உமது நாமத்தைத் துதிப்போம்.

உமது பூர்வ ஆலோசனைகள் சத்தியமுள்ளவை.

அவை உறுதியுமானவை.

சீயோன் என்னும் சுவிசேஷகியே, நீ உயர்ந்தபர்வதத்தில் ஏறி, யூதாப்பட்டணங்களை நோக்கி, இதோ! உங்கள் தேவன், என்று கூறு.

யேகோவாவாகிய ஆண்டவர் திடகாத்திரராக எழுந்தருளுவார்.

அவர் தமது பலத்த கரத்தால் அரசாளுவார்;

இதோ, அவர் அளிக்கும் பலன் அவரோடு வருகிறது.

மேய்ப்பனைப்போல் தன் ஜனமாகிய மந்தையை மேய்ப்பார்;

அவர் ஆட்டுக்குட்டிகளைத் தம் கரங்களால் சேர்த்து, மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார். ஏசா. 40^{9-11}.

ஆத்தும ஆதாயச் சேவைக்காக

எங்கள் நல்ல தேவனே, நீர் உமது பிள்ளைகளாகிய மாந்தர்மீது கொண்டிருக்கும் மிகுந்த கரிசனையை நினைத்து,

உம்மைத் தலைவணங்கிப் போற்றுகிறேம்.

உமது சொற்கேளாது கெட்டலையும் மாந்தரைத் தேடிக் காக்க உமது ஏக புதல்வனையும் உலகுக்கீந்த உமது அளவற்ற அன்பை நினைத்து,

உம்மைத் தலைவணங்கிப் போற்றுகிறேம்.

அவ்வன்பின் ஓர் சிறு பொறி உமது தாசர் உள்ளத்திலும் புகுந்து, பாவச்சேற்றில் கிடப்பவரைத் தூக்கி எடுக்கவும், காமவெறியிலும் களியாட்டின் கண்ணியிலும் பட்டவர்களை விடுவித்துக் காக்கவும் அவர்களை ஏவி வருவதை நினைத்து,

உம்மைத் தலைவணங்கிப் போற்றுகிறேம்.

தூர்த்தனரையும், சிற்றின்பப் பிரியரையும் எச்சரித்துணர்த்தும் சகல யத்தனங்களுக்காகவும்,

உம்மைத் தலைவணங்கிப் போற்றுகிறேம்.

ஒரு பாவியை உம்முன் இழுத்துக்கொண்டு வந்த உணர்வற்ற மற்ற பாவிகளை நீர் எச்சரித்ததுபோல், எங்களை எச்சரிக்க வேண்டுமென்று,

கெஞ்சிக் கேட்கிறேம், எங்கள் நேச இயேசுவே.

பிறன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுக்க எத்தனிக்குமுன், உன் கண்ணிலிருக்கும் உத்திரத்தை எடுத்துப்போடென்று நீர் கற்பித்ததை நாங்கள் மறவாதிருக்க வேண்டுமென்று,

கெஞ்சிக் கேட்கிறேம், எங்கள் நேச இயேசுவே.

நீதிபரரே, நீர் அடித்தவனை துன்பப்படுத்தி, நீர் காயப்படுத்தினவனை நோகப் பேசத்தூண்டிவிடும் அன்பற்ற சுபாவத்தை எங்களிலிருந்து எடுத்துப்போட வேண்டுமென்று,

கெஞ்சிக் கேட்கிறேம், எங்கள் நேச இயேசுவே.

கெட்டலையும் நிர்ப்பாக்கியரை இரட்சிக்க உமது உத்தமத் தொண்டர் எடுத்துக்கொள்ளும் எல்லா முயற்சிகளையும் வாய்க்கப் பண்ண வேண்டுமென்று,

கெஞ்சிக் கேட்கிறோம், எங்கள் நேச இயேசுவே.

அவற்றின் மூலமாய் உமது இராஜ்யம் நிலை பெறவும், நீர் உமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியடையவும் வேண்டுமென்று,

கெஞ்சிக் கேட்கிறோம், எங்கள் நேச இயேசுவே.

மனந் திரும்பும் ஒரு பாவியினிமித்தம் மோட்சலோகத்தில் உண்டாகும் மிகுந்த சந்தோஷத்தில் எங்களுக்கும் ஓர் பங்கு தர வேண்டுமென்று,

கெஞ்சிக் கேட்கிறோம், எங்கள் நேச இயேசுவே.

உமது பிள்ளைகளென்று அழைக்கப்படும் யாவரும் ஒருவரோடொருவர் அன்பாக சத்தியத்தைப் பேசி, ஒருவரையொருவர் எச்சரித்து, கைதாங்கி, புத்தி சொல்லி, ஏகோபித்து உமது கிருபாசனத்திற்கு வழி நடந்து செல்லத் துணைபுரிய வேண்டுமென்று,

கெஞ்சிக் கேட்கிறோம், எங்கள் நேச இயேசுவே.

இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த நாங்களும், கறைதிரை அற்றவர்களாய் உமது சன்னிதானம் வந்து சேருமளவும், ஏகசிந்தையோடும் நிறைந்த தாபந்தத்தோடும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லி, எச்சரித்து, ஜீவ பாதையிற் செல்லக் கிருபைபுரிய வேண்டுமென்று, இரட்சக பெருமானின் அரும் பாடுகளின் புண்ணியத்தை முன்வைத்து கெஞ்சி மன்றாடுகிறோம், தயவுள்ள தெய்வமே. ஆமென்.

வாரம் 2

செவ்வாய் காலை

எல்லாம் வல்ல இறைவனே, தேவரீருடைய கிரியைகள் எத்துணை மகத்துவமும் ஆச்சரியமுமானவை.

புண்ணிய புருஷரின் கோனே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவை.

தேவனே யாவரே உமக்கு பயப்படாமலிருப்பார்?

தெய்வமே எவரேனும் உமது திவ்விய நாமத்தை மகிமைப் படுத்தாமலிருக்க முடியுமோ?

தேவரீர் ஒருவரே சுத்த பரிசுத்தர்.

எல்லா ஜாதியினரும் உம்மை நாடிவருவார்கள்.

யாவரும் உமது திருவடிகளைத் தொழுவார்கள்.

ஏனென்றால், உமது செயல்களனைத்தும் நீதியானவை என்பது வெளிப்படையாயிற்று. வெளி. $15^{3,4}$.

தெய்வ வாஞ்சைக்காக

மானானது நீரோடையை விரும்பிக் கதறுமாப்போல், தெய்வமே எங்கள் ஆத்துமம் உம்மை வாஞ்சித்துக் கதறட்டும்.

தணியா வாஞ்சையால் தூண்டப்பட்டு, நாங்கள் உம்மை ஊக்கத்தோடு தேட வேண்டும்.

தேடும் நாங்கள் உம் திருமுக தரிசனங் கண்டு ஆனந்தங் கொள்ள வேண்டும்.

உமது தரிசனம் எங்களுக்குக் கிடைத்துவிட்டால், உம்மை விரும்பாதிருக்கவும் முடியுமோ? எம் ஆத்தும நாயகராகிய உம்மிடம் காதல் கொள்ளுவோமாகில், பாவத்தையும் பாரமான யாவற்றையும் உதறிவிட்டு உம் திருவடிக் கரும்பை ருசிக்க ஓடிவராதிருப்போமோ? தாயினும் தயை மிகுந்த தெய்வமே, இரும்பைக் காந்தம் இழுப்பது போல் எங்களை இழுத்து, உமது இணையடிகளோடு பிணைத்துவிட வேண்டுமென்று கெஞ்சுகிறோம். ஆமேன்.

கர்த்தரே என் வெளிச்சமும், என் இரட்சிப்புமாகின்றார்.

கர்த்தரே என் ஜீவனின் பெலனாகின்றார்.

கர்த்தரிடமிருந்து நான் பெறவிரும்புவது ஒன்றே ஒன்று.

அஃதொன்றையே தேடுகிறேன்.

தெய்வத்தின் வசீகர சொருபத்தைக் காணவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படி என் ஜீவகாலமெல்லாம் அங்கு தங்கியிருக்கவும் விரும்புகிறேன்.

அஃதொன்றையே நான் நாடுகிறேன். சங். 27^{1-3}.

எங்கள் பிராணநேயா, ஆத்மநாதா, எங்கள் உயிருக்குயிரும் சுவாசத்திற்குச் சுவாசமுமாய் இருக்கும் மெய்ப்பொருளே, எங்கள் கண்களின் ஒளியும், மனத்தின் தெளிவும் நீரே. நாங்கள் உம்மை விட்டுப் பிரிந்து நிற்போமாகில், உலகின் அநித்திய இன்பங்களும் கண்கவர் இச்சையும் வாழ்க்கையின் பெருமையும் எங்களைப் பட்சித்துவிடுமென்பதற்கு ஐயமில்லை. ஆதலால், "உன்னைவிட்டெனைப் பிரிக்கும் மேன்

மைகளுதவாது; என்னை உன்னிலே இணைக்குந்தாழ்வுகளே வேணும்," என்றிருக்க எங்களுக்குக் கற்பியும். ஆமேன்.

சிலர் தங்கள் இரதங்களையும், குதிரைகளையும் நம்பித் துணிகின்றார்கள்.

நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தையே நம்பித் துணிகின்றோம்.

அவர்கள் முறியடிக்கப்பட்டு விழுந்தார்கள்.

நாங்களோ எழுந்து நிமிர்ந்து நிற்போம். சங். $20^{7,8}$. **அல்லேலூயா!**

*தெய்வமே, நீர் உமது அன்பால் நிரப்பாவிட்டால், எல்லா உள்ளங்களும் வெறுமையாகவே இருக்குமென்றும், உம்மை நாடாத ஆசையெல்லாம் வீண்ஆசையாகவே முடியுமென்றும் எங்களுக்கு என்றும் அறிவுறுத்துவீர். உமது காருண்ய கடாட்சத்தால் நாங்கள் உம்மை நாடிக் கண்டுகளிக்கக் கிருபை புரியும். அதனால் நாங்கள் உம்முடையவர்களும், தேவரீர் எம்முடையவராகவும் என்றென்றும் இருக்க வேண்டுமென்று உம்மைப் பிரார்த்திக்கிறோம், பரம்பொருளே. ஆமேன்.

வாரம் 2

செவ்வாய் மாலை

என் திருமுக தரிசனத்தை நாடுங்கள் என்று தேவரீர் சொன்ன பொழுது,

உம் திருமுக தரிசனத்தையே நாடுவேன், என்று என் உள்ளம் தேவரீருக்குப் பதிலுரைத்தது. சங் 27^{8}.

தேவனை நோக்கி என் ஆத்துமம் அமர்ந்து காத்திருக்கிறது;

அவரிடமிருந்துதான் எனக்கு இரட்சிப்பு கிடைக்கும்.

தேவரீர் ஒருவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர்;

நான் அதிகமாய் அசைக்கப்படுவதில்லை.

என் உள்ளமே தேவன் ஒருவருக்கே காத்திரு;

நான் எதிர்பார்க்கும் நன்மை அவரால் பலிக்கும்.

ஜனங்களே எக்காலமும் கர்த்தரை நம்புங்கள்;

அவர்பால் உங்கள் இருதயங்களை ஊற்றிவிடுங்கள். சங். 62.

---

* Acts of Devotion

தேய்வ வாஞ்சைக்காக

ஜெபம்பண்ணுவோம்:—

இயேசு பெருமானே, நாங்கள் யாரிடத்தில் போவோம்?

நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்திலன்றே இருக்கின்றன. யோவா. 6[68].

மாருக்காருண்ய பூரணனே, நாங்கள் உம்மை மறந்து, இனத்தையும் தனத்தையும் துணையாகத் தேடி ஏமாந்துபோனது எத்தனைதரம்? அவற்றை ஊன்றுகோலாகக்கொண்டு செல்கையில், அவை நாணலைப் போல் முறிந்து, எங்கள் கைகளையும் காயப்படுத்தியது எத்தனைதரம்? பெற்றார் உற்றார் பெண்டீர் மக்கள் மற்றெவரும் சதமல்ல என்பதை உணர்ந்தோம். தவிர இவர்களால் நாங்கள் அடைந்து அனுபவிக்கும் சகல பாக்கியங்களும் உமது சகவாசத்தால் விளையும் பேரின்பத்தின் நிழலே என்பதையும் நாங்கள் சில வேளைகளில் கண்டுணருகிறோம்.

உம்மையடைந்து உம் திருமுக அருளைப் பெற்றுக்கொள்ளும் வரை, எங்கள் ஆத்துமம் வேலைவாய்த் துரும்புபோல் நிலையற்றலையும் என்றும் அறிகின்றோம். ஆதலால் எங்கள் ஆத்ம தாகத்தைத் தீர்க்கும் ஜீவதண்ணீராகிய கிறிஸ்தரசே, நீர் உம் பிதாவிலும், உம் பிதா உம்மிலுமிருப்பதுபோல், நீர் எம்மிலும் நாங்கள் உம்மிலும் இருக்கத்தக்கதாக, எங்கள் இருதயங்களில் வந்து குடிகொள்ள வேண்டுமென்று, உமது பெரிதான இரக்கங்களை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

*கிறிஸ்துவினால் நான் தெய்வ பலத்தோடு இணைக்கப்படுகிறேன்.

கிறிஸ்துவின் மூலமாக சகலத்தையும் உணர்ந்து சகல குற்றங்களையும் பொறுத்துக்கொள்ளும் அன்பில் ஆழ்ந்து விடுகிறேன்.

கிறிஸ்துவின் கிருபையால் புத்திக் கெட்டாத் தெய்வசமாதானத்தைச் சுதந்தரிக்கிறேன்.

கிறிஸ்துவினிடமிருந்து நிகரற்ற ஆத்மசக்தியைப் பெறுகிறேன்.

கிறிஸ்துவினிடமிருந்து அதைரியம் பயம் சங்கடம் முதலிய இடையூறுகளை மேற்கொள்ளும் திடன் அடைகிறேன்.

கிறிஸ்துவைப் பார்த்து, அவருடைய பரோபகாரச் சேவையில் ஈடுபடுகிறேன்.

---

*Acts of Devotion

கிறிஸ்துவுக்குள் அவருடைய பரிபூரண ஜீவனில் லயித்துப்போகிறேன்.

கிறிஸ்துவினருளால், அவருடைய பொறையும் புனிதமும் புத்தியும் திருப்தியும் ஆனந்தமும் எனதாகி விடுகின்றன. அல்லேலூயா, ஆமென்.

(எல்லாரும்)

பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்! சேனைகளின் கர்த்தரே, நீர் பரிசுத்தர். வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்திருக்கின்றன. ஓ தெய்வமே, உமக்கு மகிமை பெருகட்டும். ஆமென்.

வாரம் 2

புதன் **காலை**

என் தேவனே, கர்த்தாதி கர்த்தனே, உம்மை உயர்த்தி, உம் நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் துதிப்பேன்.

அநுதினமும் உம்மை ஸ்தோத்திரித்து, எப்பொழுதும் என்றென்றைக்கும் உமது நாமத்தைத் துதிப்பேன். சங். 145[1,2].

யேகோவா ராஜரிகம்பண்ணுகிறார்!

ஆகையால் பூமி அசையாதபடி உறுதிப்பட்டிருக்கும்.

வானங்கள் மகிழ்ந்து, பூமி பூரிப்பாகி, சமுத்திரமும் அதின் நிறைவும் முழங்கட்டும்.

வயல்வெளியும் அதிலுள்ள யாவும் களிகூரட்டும்; காட்டுவிருட்சங்களெல்லாம் கர்த்தருக்குமுன் கெம்பீரிக்கட்டும்.

யேகோவா வருகின்றார்; அவர் பூமியை நியாயந் தீர்க்க வருகின்றார்!

யேகோவா பூமியை நீதியாயும், ஜனங்களை நேர்மையாயும் நியாயந் தீர்ப்பார். சங். 96[10-13].

யேகோவா பெரியவர்!

அவர் மிகவும் போற்றப்படத் தக்கவருமா யிருக்கின்றார்.

தலைவர்களுக்காக

ஜெபம்பண்ணுவோம்:—

*கிறிஸ்து பெருமான் ஒருவரே உங்கள் எஜமான்.

நீங்கள் யாவரும் சகோதரர்.

மானிடவர்க்கம் எல்லாம் ஒன்றே என்ற எண்ணம் எங்கும் தோன்ற வேண்டுமென்று,

உம்மைப் பிரார்த்திக்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

வர்ணம் அந்தஸ்து முதலான புறம்பான இலக்ஷணங்களால் மனிதரைக் கணித்து கண்ணியப்படுத்துவது போய், யாவரையும் உமது மக்களென்று மதித்துப் பாராட்டும் நல்லெண்ணம் தோன்ற வேண்டுமென்று,

உம்மைப் பிரார்த்திக்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

பெண்பாலாரைத் தாயென்றும் தமக்கையென்றும் போற்றிப் பராமரிக்கும் சுத்த வீரம் ஆண்மக்களுக்குள் குடிகொண்டிருக்க வேண்டுமென்று,

உம்மைப் பிரார்த்திக்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

கடமையைச் செய்வதில் சந்தோஷமும், பரோபகாரச் சேவையில் உற்சாகமும், எளியவர்பால் அன்பும் உதாரத்துவமும் பெருக வேண்டுமென்று,

உம்மைப் பிரார்த்திக்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

இல்லறம் ஓங்கவும், நகரங்களிலும் கிராமங்களிலும் சுகம் செல்வம் சீர் எல்லாம் பொங்கவும், உலகமெங்கும் உமது நித்திய சிம்மாசனத்தின் பிரகாசம் ஜொலிக்கவும் வேண்டுமென்று,

உம்மைப் பிரார்த்திக்கிறோம், தயவுள்ள கர்த்தாவே. ஆமென்.

†எல்லாம் வல்ல இறையே, எங்கள் நாட்டிற்கும் உலகின் மற்றெல்லா நாடுகளுக்கும் உமது நித்திய இராஜ்யத்தின் நீதிப்பிரமாணங்களில் கற்றுத்தேறிய அதிபதிகளையும் தேசத்தலைவரையும் தந்துதவும். சட்டங்களை ஏற்படுத்தும் யாவருக்கும் ஞானத்தையும் நேர்மையான நோக்கத்தையும் கொடுத்தருளும். அவர்கள் சுயநலத்தையும் கட்சிப் பிரிவினைகளையும் அகற்றி, தேசத்தின் நன்மையையும் உலகத்தின் சகோதரத்துவ ஒற்றுமையையுமே விடாமுயற்சியோடு தேட அருள்

---

* Acts of Devotion † Acts of Devotion

புரியும். கட்சிப்பிரிவினை, ஜாதிமத துவேஷம், பரிதானம், நியாயக் கேடு முதலிய கேடுகளை எங்கள் தேசத்தைவிட்டு அகற்றும். வீண் பெருமையாலும் பொருளாசையாலும் அந்நிய நாடுகளைக் கைப்பற்ற வேண்டுமென்ற நோக்கத்தாலும், எங்கள் தேசத்தார் அகங்கரித் தெழுந்து அநியாயங்கள் செய்யாதபடி அவர்களை அடக்கி ஆட்கொள்ள வேண்டுமென்று, மேதினியின் ஏகச் சக்ராதிபதியும் மாந்தரனைவருக் கும் ஒரே பிதாவுமாகிய உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். இதனால் உமக்கு கனமும் மகிமையும் இன்றும் என்றும் பெருக வேண்டுமென்று ஜெபிக்கிறோம். ஆமேன்.

வாரம் 2

புதன் **மாலை**

அல்லேலூயா கர்த்தருக்குப் புதிய பாட்டைப் பாடுங்கள்;

பக்தர் சபையில் அவர் துதி விளங்கட்டும்.

இஸ்ரவேலர் தம்மைப் படைத்தவரில் மகிழக்கடவர்.

சீயோன் குமாரர் தம் இராஜாவில் களிகூரக்கடவர்.

யேகோவா தமது ஜனத்தின்மீது கருணைகொண்டிருக்கின்றார்.

சாந்த குணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அவர் அலங்கரிப் பார். *சங். 149*$^{1-5}$.

மாலை ஜெபம்

தெய்வமே, நாங்கள் எங்கள் நினைவையும் புலன்களையும் ஒருமுகப் படுத்தி ஏகமனத்தினராய்த் துதிக்கவும், இன்று உமது திருக்கரங்களி லிருந்து பெற்ற நன்மைகளுக்காக உமக்கு நன்றிசெலுத்தவும் துணைபுரி வீர். இந்த இரவில் எங்கள் க்ஷேமலாபம் யாவற்றையும் உமது ஆளு கைக்கு ஒப்புக்கொடுக்கிறோம். எங்கள் சரீரத்திற்கும் மனத்திற்கும் ஆத்துமத்திற்கும் தீங்கிழைக்கும் சத்துருக்களின் பயத்திற்குத் தப்பி, பிதாவுடைவான உமது அன்பில் அடைக்கலம் புகுந்தோம். இகபரம் இரண்டிலும் உமது திவ்ய சமுகத்தைத் தவிர சமாதானம் நிறைந்த இடம் வேறு இல்லாததால், உமது சமுகத்தின் இளைப்பாறுதலை நாடு கின்றோம். விழிப்பிலும் தூக்கத்திலும் நாங்கள் உமக்கு உகந்த பிள் ளைகளாய்க் காணப்படக் கிருபை புரியும். உமது பார்வைக்கு நன்மை யாகத் தோன்றுவது எதுவோ அதையே எங்களுக்குத் தந்து எங்களை இரட்சியும். இயேசு கிறிஸ்துவினிமித்தம் எங்கள் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு எங்களைத் தடுத்தாட்கொள்ளும், கருணாநிதியே. ஆமேன்.

தலைவர்களுக்காக

பண்டைநாள் முதற்கொண்டு இந்நாள்வரை பற்பல தேசங்களில் ஒழுக்கமும், நீதியான சட்டங்களும், நேர்மையான துரைத்தனமும் நிலைபெற வேண்டுமென்று திடகாத்திரத்தோடு முயன்றுவந்த தலைவர் களுக்காகவும் சீர்திருத்தக்காரருக்காகவும்,

தேவனே, உம்மை உள்ளமுவக்க வந்திக்கிறேம்.

அடிமை வியாபாரத்தையும், சிறைச்சாலையின் கொடுமைகளையும் ஒழித்து, பொதுஜன சுதந்தரத்தை மட்டுப்படுத்திய அரசாங்க முறை களை மாற்றிய வீரர் யாவருக்காகவும்,

தேவனே, உம்மை உள்ளமுவக்க வந்திக்கிறேம்.

ஜனங்களுடைய சுகத்திற்கும் செல்வத்திற்கும் அவசியமான பல இயற்கையின் சக்திகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று, மெய்வருத் தம் பாராது உழைத்துவந்த சாஸ்திர நிபுணர் பிரயாணிகள் முத லான யாவருக்காகவும்,

தேவனே, உம்மை உள்ளமுவக்க வந்திக்கிறேம்.

எங்கள் தேசத்திலும் மற்றெல்லாத் தேசங்களிலும் குடிகளின் சுகத்தைப் பேண நியமிக்கப்பட்டிருக்கும் வைத்தியர் ஊதியத்திற் கென்று வேலை செய்யாமல், பிணியாளிகளிடம் அன்பு கொண்டுய்யக் கிருபை யளிக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், பிதாவே.

தேசத்தாரின் எண்ணங்களையும் நோக்கங்களையும் பற்றி நடத்தும் திறமை வாய்ந்த நூலாசிரியர், பத்திர்ாதிபர், உபதேசகர் முதலானோர் உண்மையையும் தர்மத்தையுமே மக்களுக்குப் புகட்ட அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், பிதாவே.

மாந்தர் குணங்களையும் ஆசைகளையும் மாற்றிக்கொண்டிருக்கும் தேசத்தலைவர், முதன் முதல் தத்தம் குணத்தை உமது சித்தத்திற்கு ஒருப்படுத்தி, பின்பு தம் சகோதரரைச் சான்றோராக்க முயல அவர் களுடைய திறமையை ஆட்கொண்டு நடத்த வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், பிதாவே.

தேசத்தின் வியாபாரத்தை நடத்திக்கொண்டிருக்கும் வர்த்தகர் யதார்த்தத்தை கைநெகிழவிடாமலும், மற்ற தேசத்தாருடைய வர்த்த கத்தைக் கெடுக்காமலும் இருக்க அவர்களுக்கு நற்புத்தி புகட்டவேண்டு மென்று,

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், பிதாவே.

பெரிய தொழிற்சாலைகளை நடத்திவரும் முதலாளிகள் பணத்தைப் பெருக்கும் வழிவகைகளைத் தேடிக்கொண்டிருக்கையில், மனிதருக்கு நிலையான சந்தோஷத்தையும் சுகத்தையும் தரத்தக்க ஆத்மீக நன்மைகளைக் கெடுத்துவிடாதிருக்கும்படி அவர்கள் மனக்கண்களைத் தெளிவாக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம், பிதாவே, ஆமென்.

*கர்த்தாவே, அரசர் அதிபதிகள் தேசத்தலைவர் யாவருக்கும் தேக சுகத்தையும் சமாதானத்தையும் கட்டளையிடும். உம்மிடமிருந்து அவர்கள் பெற்றிருக்கும் உத்தரவாதத்தைச் சரிவர நிறைவேற்ற அவர்களுக்குக் கற்பித்தருளும். நீரே மனிதருக்குக் கனமும் மேன்மையும் அதிகாரமும் கொடுக்கிறீர். ஆதலால் உமது பார்வைக்கு நலமாகத்தோன்றும் வழிகளில் அவர்களை நடத்தும். சமாதானத்தோடும், பொறுமையோடும், தெய்வ பயத்தோடும் அவர்கள் தேச பரிபாலனம் செய்வதால் உமது தயவைச் சம்பாதித்துக்கொள்ளத்தக்கதாக, அவர்களுடைய ஆலோசனைகளை நீர் திருத்திப் பூர்த்தியாக்க வேண்டுமென்று மன்றாடுகிறோம். இந்த நன்மைகளையும் இவற்றிற்கு மேலான நன்மைகளையும் செய்யச் சித்தமாயிருக்கும் தேவரீர் உமக்கே மகிமையும் கீர்த்தியும் மேன்மையும் தலைமுறை தலைமுறையாக என்றென்றைக்கும் பெருகட்டும். ஆமென்.

வாரம் 2

வியாழன் **காலை**

நீ தேவனோடு பழகி சமாதானமாயிரு.

அதனால் உனக்கு நன்மை உண்டாகும்.

அவர் வாயினின்று பிறந்த வேதப் பிரமாணத்தை ஏற்றுக்கொண்டு, அவர் வார்த்தைகளை உன் இருதயத்தில் எழுதிக்கொள்.

அப்பொழுது எல்லாம் வல்ல இறைவனே உனக்கு சொக்க வெள்ளியும் பசும்பொன்னுமாயிருப்பார்.

நீ எல்லாம் வல்ல இறைவனிடம் ஈடுபட்டு மாற்றிப் பிறந்திடில் புதிய ஆக்கமுறுவாய்.

நீ அவரை நோக்கி விண்ணப்பம்பண்ண அவர் உனக்குச் செவி கொடுப்பார். யோபு. 22[21-25].

---

* St. Clement

உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார்; உங்கள்மேல் மனதுருகும்படி அவர் எழுந்து வருவார்.

கர்த்தர் நீதியை நிலைநாட்டும் தேவன்; அவருக்காகக் காத்திருக்கும் அனைவரும் பாக்கியவான்கள்.

உன் போதகர்கள் இனி ஒருபோதும் மறைந்திருக்கமாட்டார்கள்.

"இதுவே வழி; இவ்வழியே நடமின்," என்று சொல்லுவோர் சத்தம் உங்கள் காதுகளில் எப்பொழுதும் தொனித்துக்கொண்டிருக்கும். ஏசா. 30[18-21].

நமது சபைக்காக

*நல்ல நம்பிக்கைக்கு ஆதாரமும், பக்தருக்குத் தீபமும், மீட்கப்பட்ட கூட்டத்தின் பிரகாசமும், உலகின் ஞான விளக்குமாயிருக்கும் தேவனே! நாங்கள் ஊக்கமாக ஜெபிக்கவும், எந்த வேளையிலும் துதியென்னும் தூபவர்க்கத்தால் உம்மை அர்ச்சித்து மகிமைப்படுத்தவும் எங்களுக்குக் கற்பியும். இயேசு கிறிஸ்துவினிமித்தம் எங்கள் ஜெபத்தைக் கேளும். ஆமேன்.

இந்த ஊரில் உமது திருச்சபைக்கு அஸ்திபாரம் கட்டிய உமது மெய்த்தொண்டர்..................யாவருக்காகவும்,

உமக்கு நன்றி செலுத்துகிறோம், சபா நாயகமே.

இந்தச் சபையின் முதல் அங்கத்தினராக வந்த...........உமது பிள்ளைகள் உபத்திரவத்தில் பொறுமையாகவும், ஜெபத்தில் உறுதியாகவும், எதிர் நோக்கும் நம்பிக்கையில் சந்தோஷமாகவும் இருந்ததற்காக,

உமக்கு நன்றி செலுத்துகிறோம், சபா நாயகமே.

இச்சபையின் தேர்ச்சிக்கென்று விடாமுயற்சியாக உத்தம தெய்வ பணிவிடையைச் செய்து வந்த போதகர்மார்...........எல்லாருக்காகவும், அவர்களுக்கு உதவிபுரிந்த சபையின் மூப்பர்களுக்காகவும்,

உமக்கு நன்றி செலுத்துகிறோம், சபா நாயகமே.

இந்தச் சபையின் மூலமாக இவ்வூரிலும் சுற்றுக் கிராமங்களிலும் செய்யப்பட்டு வந்த சுவிசேஷப் பிரசங்கத்திற்காகவும், அதனால் உமது மந்தையின் மேய்ச்சலுக்குக் கொண்டுவரப்பட்ட ஜனங்களுக்காகவும்,

உமக்கு நன்றி செலுத்துகிறோம், சபா நாயகமாகிய இயேசு கிறிஸ்துவே. ஆமேன்.

---

* Gelasian Sacramentary

கர்த்தாவே எங்கள் போதகரை ஆசீர்வதித்து, அவரை உமது ஆவியின் சகல நல்வரங்களாலும் இடைக்கட்டும்.

கிறிஸ்துவே, அவர் குடும்பத்தை ஆசீர்வதித்து, அதன் அங்கங்கள் யாவரும் உமக்கு உத்தம சீடராயிருக்கக் கிருபை புரியும்.

கர்த்தாவே, சபையின் மூப்பருக்கு அறிவையும் ஆழ்ந்த பக்தியையும் உமது ஆலயத்தைப்பற்றிய வைராக்கியத்தையும் கொடுத்தருளும்.

கிறிஸ்துவே, சபையாராகிய எங்கள் யாவரையும் ஆசீர்வதித்து, நாங்கள் உமது திருவசனத்தைக் கேட்கிறவர்களாக மட்டுமல்ல அதன்படி நடக்கிறவர்களாகவும் இருக்கக் கிருபை செய்யும். ஆமேன்.

கட்சிப்பிரிவினையினின்றும், வாக்கு வாதத்தினின்றும், புறங்கூறுதலினின்றும்,

நல்ல தேவனே, இச்சபையை விடுவித்துக் காப்பாற்றும்.

குடிவெறியினின்றும், விபசாரத்தினின்றும், பொய் களவு முதலிய தீவினைகளினின்றும்,

நல்ல தேவனே, இச்சபையை விடுவித்துக் காப்பாற்றும்.

விசுவாசக் குறைச்சலினின்றும், விபரீதக் கொள்கைகளினின்றும், அன்புதாழ்ச்சியினின்றும்,

நல்ல தேவனே, இச்சபையை விடுவித்துக் காப்பாற்றும்.

இச்சபையானது விதவைகளை ஆதரிக்கவும், அனாதைப் பிள்ளைகளைக் காப்பாற்றவும், பிணியாளிகளைப் பேணவும் இதற்குத் துணை புரிய வேண்டுமென்று,

இறைஞ்சி மன்றுடுகிறேம், கிறிஸ்து பெருமானே.

எங்கள் சபையின் வாலிபர் கானல் மாயையாகிய சிற்றின்பங்களைத் தேடி அலையாதபடி, உமது ஆலயத்தின் ஆராதனையில் திருப்தி தரும் ஆத்ம போஜனத்தையும், அதன் சேவையில் சந்தோஷத்தையும் கண்டடைய வேண்டுமென்று,

இறைஞ்சி மன்றுடுகிறேம், கிறிஸ்து பெருமானே.

எங்கள் சபையின் குழந்தைகள் தெய்வகிருபையிலும் மனுஷர் தயவிலும் வளர்ந்துவர வேண்டுமென்று,

இறைஞ்சி மன்றுடுகிறேம், கிறிஸ்து பெருமானே.

எங்கள் சபையின் முதியோருக்கு உம்மோடு நீண்ட சகவாசம் செய்வதால் வரும் சமாதானத்தையும் முகமலர்ச்சியையும் தர வேண்டு மென்று,

இறைஞ்சி மன்றாடுகிறோம், கிறிஸ்து பெருமானே. ஆமென்.

*ஒளிக்கும் உண்மைக்கு ஊற்றாய் நிற்கும் தெய்வமே, உமது திருக்குமாரன் உபதேசித்த நித்திய உபதேசமே உலகிற்குச் சமாதான வழியைக் காட்டும் உத்தம உபதேசமாக இன்றும் விளங்குகிறதென் பதை எங்கள் சபை கண்டு கடைப்பிடித்து ஒழுகத்தக்கதாக, அதற் குப் புதிய தரிசனத்தையும் புதிய அன்பையும் அறிவையும் தந்து வழி நடத்த வேண்டுமென்று, சகலத்தையும் புதுப்பிக்கும் எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவினிமித்தம் கேட்டுக்கொள்ளுகிறோம், தயை மிகுந்த பரம தந்தையே. ஆமென்.

வாரம் 2

வியாழன் **மாலை**

யேகோவாவைத் துதியுங்கள்; எம் கடவுளைக் கீர்த்தனம் பண்ணு வது சாலவும் நன்று.

ஈசனைத் துதிப்பது இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது.

யேகோவா எருசலேமைக் கட்டுகின்றார்;

துரத்துண்ட இஸ்ரவேலரைக் கூட்டிச் சேர்க்கின்றார்.

அவர் சாந்த குணமுள்ளவர்களை உயர்த்துகின்றார்.

துன்மார்க்கரையோ தரைமட்டும் தாழ்த்துகின்றார். சங். 147$^{1-6}$.

பக்தர் குழாங்கள் தேவரீருக்கு மிகவும் பயப்படுகின்றன.

உம்மைச் சூழ்ந்து நிற்கும் அனைவரும் உமக்கு அஞ்சுகின் றார்கள்.

தேவனாகிய கர்த்தாவே, உம்மைப்போல் வல்லமையுள்ளவர் யாவர்?

தேவனாகிய கர்த்தாவே உமது சத்தியம் உம்மைச் சூழ்ந்திருக் கிறது. சங். 89^{7,8}.

---

* Acts of Devotion

நமது சபைக்காக

*எங்கள் இரட்சிப்பின் ஆதாரமாகிய தேவனே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

உலகின் எண் திசைகளிலுமுள்ள மாந்தர் நம்பியிருக்கும் நம்பிக்கையின் உறைபதியே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

உமது வல்லமையால் எங்கள் சபையை அசையாக் கன்மலையைப் போல் உறுதிப்படுத்தும்.

உமது கிருபையால் எங்கள் சபையை ஒப்பற்ற சற்குணங்களின் உறைவிடமாக்கும்.

உன்னத ஆத்மீக நன்மைகளை நாடும் வாஞ்சையை எழுப்புபவர் தேவரீர் ஒருவரே.

சாத்மீக சக்தியாகிய சிகரத்திற்கு எங்களை நடத்தக்கூடியவரும் நீர் ஒருவரே.

ஆதலால் இங்கு உமது அளவற்ற தயவால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சபையாகிய சிறு மந்தையை விசுவாசத்தில் தேர்ச்சியடையச் செய்ய வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றுடுகிறேம், சபாநாயகமாகிய கிறிஸ்து பெருமானே.

அது உம்மை நம்பும் நம்பிக்கையின் ஆர்வத்தால் அமர்ந்து காத்திருக்க அதற்குக் கிருபை செய்ய வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றுடுகிறேம், தேற்றரவாளராகிய பரிசுத்த ஆத்துமனே.

அது உமது அளவற்ற அன்பைப் பரிபூரணமாகப் பெற்று, நீதியிலும் நேர்மையிலும் பரோபகாரச் சேவையிலும் நாளொருவண்ணம் வளர்ந்தோங்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றுடுகிறேம், பிதாவாகிய தேவனே. ஆமேன்.

கர்த்தாவே எங்கள் சபையைக் கிருபையுடன் விசாரித்து, உமது ஒப்பில்லா ஆசீர்வாதத்தால் அதை நிரப்பும். எங்கள் போதகரும் சபையின் மூப்பரும் உத்தமராய்ப் பிழைக்கவும், ஞானமாய்ச் சபையின் முன்னேற்றத்திற்கானவைகளைச் செய்யவும், குன்ரு ஊக்கத்துடன் நெறிதப்பித் தடுமாறும் உமது பலவீனப் பிள்ளைகளைச் சீர்

---

* Mozarabic Liturgy

படுத்தவும் அவர்களுக்கு உமது வல்ல ஆவியைத் தந்துதவும். உமது அடியாராகிய நாங்கள் அறிந்தும் அறியாமலும் செய்த எல்லா அபரா தங்களேயும் தயவாய்ப் பொறுத்தருளும். நாங்கள் பக்தியிலும் நம்பிக் கையிலும் வளர்ந்தோங்கக் கிருபை புரியும். சபையார் யாவரும் ஏக சிந்தையோடு உமது திருவுளச் சித்தத்தை நிறைவேற்றவும், உமது புகழை இந்த ஊரிலுள்ள யாவருக்கும் பிரஸ்தாபிக்கவும் அவர்களே உமது திவ்ய ஆவியால் ஆட்கொண்டு ஆசீர்வதிக்க வேண்டுமென்று, எங்கள் எஜமானரும் மீட்பருமாகிய கிறிஸ்து இயேசுவின் திருப்புண் ணியங்களே முன்னிட்டு உம்மைக் கெஞ்சி மன்ருடுகிறேம், தயவுள்ள பிதாவே. ஆமேன்.

மாலே ஜெபம்

*தேவனே இன்றிரவு நாங்கள் எங்களே உமது கரங்களில் ஒப்புக் கொடுக்கிறேம். கிறிஸ்துவினிமித்தம் உங்களுக்குச் சமாதானம் என்று நீர் கூறுவீராகில், நாங்கள் நிசமாகவே சமாதானத்தோடு படுத்து நித்திரை செய்வோம். நாங்கள் கடைசியாக நினைப்பது உமது மாருக் காருண்யமாக இருக்கட்டும். நாங்கள் விழிக்கும்போது உமது புனித ஆத்துமனைவர் எங்கள் மனத்தில் நல்ல எண்ணங்களே எழுப்பிவிடவேண்டும். கருணைப் பிரவாகத்தால் நாங்கள் நினைப் பதற்கும் கேட்பதற்கும் அதிகமாகவே எங்களுக்கு நன்மை செய்யக் காத்து நிற்கும் பரம தந்தையே, எங்கள் விண்ணப்பத்தைக் கேட் டருளும். ஆமேன்.

†கர்த்தாவே, நாங்கள் பிழைத்திருக்கும்வரை உமக்குப் பயந்துய்ய வேண்டும்.

கிறிஸ்துவே, நாங்கள் மரிக்கும்போது உமது தயவைப் பெற்ற வர்களாக மரிக்க வேண்டும்.

கர்த்தாவே நாங்கள் உமது சமாதானத்தில் இளேப்பாற வேண்டும்.

கிறிஸ்துவே நாங்கள் உமது அற்புத பலத்தைப் பெற்றவர் களாக் உயிர்த்தெழும்ப வேண்டும்.

கர்த்தாவே, நாங்கள் உமது மகிமையை அணிந்தவர்களாக, உமது பரம இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்.

தேவனே, கிறிஸ்து பெருமானின் புண்ணியங்களே முன்னிட்டு இந்தப் பாக்கியங்களே உம்மிடம் கேட்டுக்கொள்ளுகின்றேம். ஆமேன்.

* Rev. Fielding Ould † Archbishop Laud

வாரம் 2

வெள்ளி **காலை**

இதோ தேவன் தமது வல்லமையில் மேம்பட்டிருக்கிறார்.

அவரைப்போல் ஞானோபதேசம் போதிப்பவர் யார்?

இதோ தேவன் மகத்துவமுள்ளவர்; நாம் அவரை அறிந்துகொள்ள முடியாது.

மேகங்களின் பரவுதலையும், அவருடைய கூடாரத்திலிருந்து எழும்பும் குமுறலையும் எவரேனும் அறிய முடியுமோ?

அதன்மேல் தமது மின்னலின் ஒளியை விரிக்கிறார்.

சமுத்திரத்தின் ஆழங்களை நிரப்புகிறார்.

அவைகளால் மாந்தரை சிக்ஷிக்கிறவரும், ஆகாரம் கொடுத்து இரக்ஷிக்கிறவருமாயிருக்கிறார். யோபு. $36^{22, 26, 29-31}$.

சமாதானத்திற்காக

சமாதானத்தைக் கூறவும், இரட்சிப்பு வந்ததென்று பிரசித்தப் படுத்தவும், உன் தேவன் இராஜரிகம் பண்ணுகிறார் என்று பறைசாற் றவும் வரும் தூதுவனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எத்துணை அழகாய்த் தோன்றுகின்றன. எசா. 52^{7}.

சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்.

சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திர ரென்னப்படுவார்கள்.

ஜெபம்பண்ணுவோம்:—

நாங்கள் யாவரோடும் எக்காலத்தும் இயன்றமட்டும் சமாதான மாக வாழவேண்டுமென்று கற்பித்த சாந்தப் பிரபுவாகிய இயேசுவே, கடந்த காலங்களில் நாங்கள் எங்கள் பிடிவாத மமதையால் அயலா ரோடும் சுற்றத்தாரோடும் சமாதானமாகப் பிழைக்காதிருந்த குற்றத்தை உமக்கு முன்பாக வெட்கத்தோடு அறிக்கையிடுகிறோம். நீர் எங்களைப் புழுதிமட்டும் தாழ்த்தி, உமது சமுகத்தில் நாங்கள் நாயினும் கடை யானோ ரென்றுணரச்செய்யும். எங்கள் விரோதங்களையும் வைராக் கியங்களையும் எரித்துச் சாம்பலாக்கக் கூடிய தூய ஆவியின் அக் கினியை எங்கள் உள்ளங்களில் மூட்டும். நாங்கள் எங்கள் அயலா

ரோடு ஒப்புரவாவதற்கென்று எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் சித்திபெறச்செய்யும். ஆமேன்.

உமது சாயலில் உருவாக்கப்பட்ட மனிதர் ஒருவரோடொருவர் முரண்பட்டு, ஒருவரை யொருவர் அழித்து நாசப்படுத்திக்கொண்டு வருவதை நினைத்து,

வெட்கமும் துக்கமு மடைகிறோம், தெய்வமே.

செல்வமும் அறிவும் பெருகப்பெருக, உலகத்தில் யுத்த ஆயுதங்களும் முறைகளும் திடுக்கிடத்தக்க கொரேத்தில் அதிகரித்து வருவதை நினைத்து,

பிரமித்துத் தயங்குகின்றோம், தெய்வமே.

வலுத்த ஜாதியார் இளைத்த ஜாதியாரின் தேசங்களையும் சுதந்தரத்தையும் கைப்பற்றிக் கொண்டிருப்பதை நினைத்து,

மிகவும் வருந்துகின்றோம், தெய்வமே.

கொலைகளையும் அநியாய வியாஜ்ஜியங்களையும் நினைத்து,

வெட்கமறுகின்றோம், தெய்வமே.

கணவனுக்கும் மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும், சகோதரருக்குள்ளும் சுற்றத்தாருக்குள்ளும் அன்புக்குப் பதிலாக பகையும், சமாதானத்திற்குப் பதிலாக சண்டைகளும் அடிக்கடி காணப்படுவதை நினைத்து,

வெட்கமறுகின்றோம், தெய்வமே.

என்றபோதிலும் தேவரீர் குடும்பங்கள் ஜாதிகள் தேசங்களுக்குள் சமாதானத்தை நிலைநாட்ட ஓய்வின்றி முயன்று வருகிறீர் என்பதற்கு பற்பல அடையாளங்கள் காணப்படுவதால்,

உம்மைத் துதிக்கிறோம், சாந்தப் பிரபுவே.

கடந்த சில வருஷங்களாக உலகில் சமாதானம் நிலைகொண்டிருக்க வேண்டுமென்ற வாஞ்சை அதிபதிகளுக்குள்ளும் குடிகளுக்குள்ளும் பெருகிக்கொண்டு வருவதற்காக,

உம்மைத் துதிக்கிறோம், சாந்தப் பிரபுவே.

பெரிய யுத்தத்திற்குப்பின், லீக் அவ் நேஷன்ஸ் என்னும் அகில சமாதான சங்கத்தின் முயற்சியால் பல தரம் தேசங்கள் தமக்குள் உண்டான வியவகாரங்களைச் சமாதானமாக முடிவு செய்துகொண்டதை நினைத்து,

உம்மைத் துதிக்கிறோம், சாந்தப் பிரபுவே.

ஜாதிகளுக்குள்ளும் தேசங்களுக்குள்ளும் இன்னும் குடிகொண்டிருக்கும் அவநம்பிக்கையையும், ஒருவரைப்பற்றி ஒருவர் கொண்டிருக்கும் அச்சத்தையும் ஒழித்து,

எங்கள் காலத்தில் சமாதானத்தை நிலைநாட்டும், கர்த்தாவே.

தகாத நோக்கங்களையும், அநீதியான இராஜதந்திரங்களையும், சண்டைக்குக் காரணமாயிருக்கும் யாவற்றையும் ஒழித்து,

எங்கள் காலத்தில் சமாதானத்தை நிலைநாட்டும், கர்த்தாவே.

யுத்தப் பிரியரையும், மரண ஆயுதங்களைச் செய்து விற்பதால் ஊதியம் தேடி வருமவரையும் சிதறடித்து, சமாதானம் பண்ணுகிறவர்களைப் பலப்படுத்துவதால்,

எங்கள் காலத்தில் சமாதானத்தை நிலைநாட்டும், கர்த்தாவே.

வறிஞர் தொழிலாளர் தாழ்ந்த ஜாதியாராகிய உமது பிள்ளைகளுக்குச் செய்யப்படும் அநியாயங்களை ஒழித்து,

எங்கள் காலத்தில் சமாதானத்தை நிலைநாட்டும், கர்த்தாவே.

நானு தேசத்தாரும் ஒத்துழைப்பதால் மட்டுமே உலக க்ஷேமத்தையும் தத்தம் க்ஷேமத்தையும் தேடிக் கொள்ளலாமென்ற சத்தியத்தை யாவருக்கும் விளங்கக் காட்டுவதால்,

எங்கள் காலத்தில் சமாதானத்தை நிலைநாட்டும், கர்த்தாவே.

தம் சுதந்தரத்தை இழந்து, வலுத்த ஜாதியாரால் கொள்ளையாடப்படும் இளைத்த ஜாதியாரைச் சிறைமீட்டு உயர்த்துவதால்,

எங்கள் காலத்தில் சமாதானத்தை நிலைநாட்டும், கர்த்தாவே.

பிரித்தானியா, அமெரிக்கா, ஜப்பான் முதலிய பெரிய தேசங்களை உமது பயத்திலும், உமது மக்களை நேசிக்கும் நேசத்திலும் நடக்கும் தேசீயக் குடும்பங்களாக விளங்கச் செய்வதால்,

எங்கள் காலத்தில் சமாதானத்தை நிலைநாட்டும், கர்த்தாவே.

அவர்களுக்கு நீர் கொடுத்திருக்கும் செல்வத்தையும் செல்வாக்கையும் ஒருங்கு சேர்த்து, உலகமெங்கும் நீடிய சமாதானத்தை நிலைநாட்ட அவர்களுக்குக் கற்பிப்பதால்,

எங்கள் காலத்தில் சமாதானத்தை நிலைநாட்டும், கர்த்தாவே.

ஆமென்.

*தெய்வமே, எங்கள் ஏகச் சக்ரவர்த்தியே, மனுமக்கள் யாவரும் ஒரே குடும்பத்தின் மக்கள் என்ற நல்லெண்ணத்தை ஒவ்வொரு தேசத்திற்கும் ஊட்டியருளும். அதனுல் பரஸ்பர சிநேகமும், பெண்பாலாரைக் கண்ணியப்படுத்தும் சுத்த வீரமும், தாழ்ந்தவரைக் கைகொடுத்து உயர்த்தும் உதாரத்துவமும், ஐக்கியமும், அன்பும் நிலத்தைப் பசுமையாக்கும் பனிபோல் உலகமெங்கும் சொரியட்டும். அப்பொழுதுதான் அன்பற்று நிலை குலைந்திருக்கும் எங்கள் வீடுகள் உறுதிப்படும்; பாழாய்க் கிடக்கும் பட்டணங்கள் திரும்பக் கட்டப்படும்; யுத்தங்களினுலும் யுத்த முயற்சிகளினுலும் கருத்து ஒளிமங்கிக்கிடக்கும் உலகமானது வானலோகத்தில் சதாகாலமாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் உமது சீரிய சிம்மாசனத்தின் ஜோதியால் பிரகாசமடையும். ஆதலால் எங்கள் காலத்தில் சமாதானத்தை நிலைநிறுத்தி, எங்கள் கலக்கங்களையும் திகில்களையும் நீக்க வேண்டுமென்று இயேசு பெருமானின் பாடுகளின் நிமித்தம் உம்மை மன்ருடுகிருேம், கர்த்தாவே. ஆமென்.

வாரம் 2

வெள்ளி **மாலை**

கர்த்தராகிய தேவன் விளம்புவதைக் கேட்பேன்.

அவர் தம் ஜனங்களுக்கும், உத்தமர் யாவருக்கும் சமாதானம் கூறுவார்.

அவர்கள் மதிகேட்டுக்குத் திரும்பாதிருக்கவேண்டும்.

நமது தேசத்தில் மகிமை தங்கும்படி, கர்த்தருடைய இரட்சிப்பு அவருக்குப் பயந்தவர்களுக்குச் சமீபமாயிருக்கிறது.

கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும்.

நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்.

சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும்.

நீதி வானத்திலிருந்து தாழப் பார்க்கும்.

கர்த்தர் நன்மையானதைத் தருவார். சங். 85^{8-12}.

* Acts of Devotion

சமாதானத்திற்காக

அந்க்ஷணமே பரம சேனையின் திரள் தூதனுடன் தோன்றி உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாகவேண்டும் என்று சொல்லித் தேவனைத் துதித்தார்கள். லூக். 2[13,14].

ஜெபம்பண்ணுவோம்:—

*எங்கள் அடைக்கலமாயிருக்கும் கர்த்தாவே, வாழ்நாளிலும் சாங்காலத்தும் உம்மைத்தவிர வேறு அடைக்கலத்தை நாங்கள் தேடாதிருக்க எங்களுக்கு அறிவுறுத்தும். மனிதர் எங்களை எரிச்சல் மூட்டாமலும், நாங்கள் வாக்குவாதங்களில் பிரவேசியாமலும் இருக்க எங்களை உமது சன்னிதானத்தில் மறைத்துக் காத்துக்கொள்ளும். எங்களுக்கு சாந்தத்தையும் மனத்தாழ்மையையும் நீடிய பொறுமையையும் ஈந்து, நாங்கள் சமாதானத்தைத் தேடியடைந்து, அதைக் காத்துக்கொள்ளக் கிருபைபுரிய வேண்டுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம், எம் குருபரனே. ஆமென்.

கர்த்தாவே, நாங்கள் அநியாயமாகவேனும் நியாயமாகவேனும் செய்த வாக்குவாதங்களையும் சண்டைகளையும் நினைத்து,

வெட்கமுற்று வருந்துகிறோம், ஐயா.

எங்கள் அயலாருக்குள் நேர்ந்த வியவகாரங்களில் நாங்கள் சமாதானத்துக் கானவற்றைத் தேடாமல், கலகத்தை மூட்டிவிட்டதாகிய குற்றத்தை உணர்ந்து,

வெட்கமுற்று வருந்துகிறோம், ஐயா.

குடும்பங்களிலும் சபைகளிலும் ஜாதிகளுக்குள்ளும் தேசங்களுக்குள்ளும் இன்னும் பிரிவினைகளும் குரோதங்களும் வாதங்களும் இருப்பதை நினைத்து,

வெட்கமுற்று வருந்துகிறோம், ஐயா.

பிரிவினைகளாலும், கலகங்களாலும், யுத்தங்களாலும் நொறுக்குண்ட சிநேக பாந்தங்களையும், நேர்ந்த காயங்கள் கொலைகளையும், இடிந்துபோன நகரங்களையும், குலைந்துபோன குடும்பங்களையும், கதியை இழந்த விதவைகள் அநாதைகளையும் நினைத்து,

எங்கள் இரட்சிப்பின் தேவனே, சதாகாலமும் எங்கள்மேல் கோபமாயிருப்பீரோ?

---

* C. G. Rossetti

தலைமுறை தலைமுறையாக உமது கோபத்தை நீடித்திருக்கப் பண்ணுவீரோ?

உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்து உய்யும்படி எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்க மாட்டீரோ?

கர்த்தாவே உமது கிருபையை எங்களுக்குக் காண்பித்து, உமது இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும். ஆமேன். சங். 85[5-7].

தேச எல்லையைக் கடந்து, உலகமெங்கும் வியாபித்திருக்கும் தொழிலாளர் சங்கம், கிறிஸ்தவ மாணவர் சங்கம், சாரண இயக்கம் முதலிய பொதுநலக் கூட்டங்களுக்காக,

உம்மைப் போற்றுகிறேம், பரமபிதாவே.

தொழிலாளரின் க்ஷேமத்தைத் தேடுவதிலும், அடிமை வியாபாரம், பெண்களை வேசித்தனத்திற்கென்று வாங்கிவிற்கும் கொடுமை, அபின் வியாபாரத்தால் விளையும் தீமை முதலியவற்றை நீக்கும் முயற்சியிலும், அநேக அரசாங்கத்தார் லீக் அவ் நேஷன்ஸ் மூலமாக ஒத்துழைத்து வருவதற்காக,

உம்மைப் போற்றுகிறேம், பரமபிதாவே.

இச்சங்கங்கள் மூலமாகவும், சாஸ்திர விசாரணையின் மூலமாகவும், விசேஷமாகக் கிறிஸ்தவ சபையின் மூலமாகவும் இக்காலத்தில் முன்னில்லாத ஒற்றுமையும் ஐக்கியமும் தோன்றியிருப்பதற்காக,

உம்மைப் போற்றுகிறேம், பரமபிதாவே.

மாந்தர் யாவரும் உமது பிள்ளைகளென்றும், அவர்கள் ஒருமித்து வாழ வேண்டுமென்பதே உமது திருவுளச் சித்தமென்றும் சகல ஜனங்களும் நம்ப வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றுடுகிறேம், எங்கள் தெய்வமே.

மனிதருள்ளங்களில் ஆழமாக வேர் ஊன்றியிருக்கும் தன்னயத்தாலும் பொருமையினலும் விளையும் விரோதங்களைத் தகர்த்து ஒழிக்கத்தக்க விசேஷ ஆற்றலை லீக் அவ் நேஷன்ஸ் சங்கத்திற்கும் உமது திருச் சபைக்கும் கொடுக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றுடுகிறேம், எங்கள் தெய்வமே.

தொழிலாளரின் தாழ்வும், சுயாதீனத்தை இழந்து நிற்கும் பற்பல தேசத்தாரின் சுயராஜ்ய நாட்டமும் கலகத்திற்கும் இரத்தஞ் சிந்துதலுக்கும் ஜனங்களை ஏவி விடாதபடி தடுக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றுடுகிறேம், எங்கள் தெய்வமே.

பிறருக்கு இயலுரிமையாயிருக்கும் சுயாதீனத்தையும் சுகவாழ்வையும் கவர்ந்து நிற்கும் முதலாளிகளும் பலத்த ஜாதியாரும் தொழிலாளருக்கும் அந்நிய ஆட்சிக்குட்பட்டிருக்கும் தேசத்தாருக்கும் நீதி செய்யும் நன்னுள் துரிதமாக வர வேண்டுமென்று,

உம்மைக் கேஞ்சி மன்றுடுகிறேம், எங்கள் தேய்வமே.

இக்காலத்தின் ஜனசமுதாயக் கஷ்டங்கள்யாவும் நிவிர்த்தியாகத் தக்கதாக, வர்த்தகம் தேசபரிபாலனம் அயல் நாட்டு வியவகாரமனைத்தும் கிறிஸ்து பெருமான் உபதேசித்த ஒப்பற்ற மலைப்பிரசங்கப் பிரமாணங்களின்படி நிருவப்படும் நன்னுள் துரிதமாக வர வேண்டுமென்று,

உம்மைக் கேஞ்சி மன்றுடுகிறேம், எங்கள் தேய்வமே.

ருஷியா தேசத்தின் பொது உரிமைப் பிரமாணத்தினுலும் மற்ற நவீன அரசாங்க முறைகளினுலுமல்ல, சாந்த குணத்தினுலும் சமாதான வாஞ்சையினுலும் தெய்வபக்தியினுலுமே உலகிற்கு இரட்சிப்பு வருமென்பதை மாந்தரெல்லோருக்கும் வெளிப்படுத்த வேண்டுமென்று,

சாந்தப் பிரபுவேன்ற உயர் நாமம் பேற்றிருக்கும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினிமித்தம் உம்மைக் கேஞ்சி மன்றுடுகிறேம், எங்கள் நல்ல தேய்வமே. ஆமேன்.

வாரம் 2

சனி **காலை**

கர்த்தர் எம் மேய்ப்பரா யிருக்கிறுர்.

ஆதலால் நாம் தாழ்ச்சி யடைவதில்லை.

அவர் நம்மைப் பசும்புற் களத்தில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்த் துறைக்கு நடத்திச் செல்லுகின்றுர்.

அவர் நோந்த இருதயத்தைத் தேற்றி, நீதியின் பாதையில் நம்மை நடத்துகிறர்.

நாம் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் துன்பம் விளையுமோ வென்றஞ்சிச் சிறிதும் கலங்கோம்.

ஏனெனில் தேய்வம் நம்மோடிருக்கின்றர்; அவர் திருக்கரம் நம்மைத் தேற்றும். சங். 23^{1-5}.

பயப்படாதே சிறு மந்தையே, பரம இராஜ்யத்தை உனக்குக் கொடுக்க உன் பிதாவாகிய தேவன் மிகுமகிழ்ச்சியாகக் காத்திருக்கிறுர். லூக். 12^{32}.

விசுவாசத்திற்காக

தெய்வத்தைப் பற்றும் விசுவாசத்தால் நமது உள்ளமும் ஆத்தும மும் கவலையை ஒழித்து ஒருமுகப்பட்டிருக்கட்டும். ஆமேன்.

ஆபத்பாந்தவராம் எம் பராபரன் நமக்கு அளித்திருக்கும் உறுதி மொழிகளைச் சிந்திப்போம்:—

பயப்படாதே! நான் உன்னை இரட்சித்து, என் பெயரை உனக் குச் சூட்டி, உன்னை எனக்குச் சொந்தமாக்கிக்கொண்டேன்.

அல்லேலூயா!

நீ பயப்படாதே! நான் உன் பக்கத்திலிருக்கிறேன்.

அல்லேலூயா!

கலங்காதே! நானே உன் தெய்வம்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குத் துணைபுரிந்து என் நீதியான வலக்கரத்தால் உன்னைத் தாங்குவேன்.

தெய்வமே, தைரியமூட்டும் இச்சிறந்த வாக்குத்தத்தங்களை எங் களில் நிறைவேற்றும். அல்லேலூயா, ஆமேன்.

நமது இரட்சகராகிய கிறிஸ்துபிரான் கொடுத்திருக்கும் உறுதி வாக்கைச் சிந்திப்போம்:—

வருந்தி யுழைத்துப் பாரஞ் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

கிறிஸ்துவே, உம்மிடம் வருகிறோம்; எங்களுக்கு இளைப்பாறுதல் கொடும்.

கர்த்தரை மகிமைப்படுத்தி அவர் உயர் நாமத்தை என்னாளும் ஏற் றித் துதிப்போம்.

பிதாவாகிய தேவனுக்கு நமோ! குமாரனுகிய தேவனுக்கு நமோ! புனித ஆத்துமனுகிய தேவனுக்கு நமோ, நம!

ஆண்டவரே நாங்கள் பிறந்த நாள்முதல் இந்நாள்வரைக்கும் எங் களை உமது உள்ளங்கையில் வைத்துக் காத்துவந்த காருண்யத்தை நினைத்து,

உள்ளன்புடன் உம்மைப் பணிந்து கொள்ளுகின்றோம்.

எங்களுக்கு நேர்ந்த துன்பங்களைத் தவிர்த்து, கண்ணீருக்குப் பின் களிப்பையும், அங்கலாய்ப்புக்குப் பின் ஆறுதலையும் நீர் எங்களுக் குத் தந்த தயையை நினைத்து,

உள்ளன்புடன் உம்மைப் பணிந்து கொள்ளுகின்றோம்.

வியாதிப்படுக்கையிலிருந்த எங்களை (உமது பிள்ளையாகிய......) குணப்படுத்தி எழுப்பிய பரம பண்டிதராகிய கிறிஸ்துவே,

உள்ளன்புடன் உம்மைப் பணிந்து கொள்ளுகின்றோம்.

எங்களை மேற்கொள்ள இருந்த பாவசோதனையினின்று தடுத்து இரட்சித்தவரும், எம்மனத்திற் குடிகொண்டிருப்பவருமான பரிசுத்த ஆத்துமனே,

உள்ளன்புடன் உம்மைப் பணிந்து கொள்ளுகின்றோம்.

எங்கள் புல்லறிவிற்கு நலமாகத் தோன்றிய சில இலௌகீக நன்மைகளை நாங்கள் கேட்டும் நீர் கொடாதிருந்த உமது விசேஷ கருணையை நினைத்து,

உள்ளன்புடன் உம்மைப் பணிந்து கொள்ளுகின்றோம்.

அறிவின்மையால் நாங்கள் கேளாதுவிட்ட அநேக பரம நன்மைகளைக் கொடுத்து, எங்களை அற்புதமாக வழி நடத்திவரும் பரம பிதாவே,

உள்ளன்புடன் உம்மைப் பணிந்து கொள்ளுகின்றோம்.

ஆதலால் நாங்கள் புசிப்பதும் குடிப்பதும் எது என்று உயிரைக் குறித்த அநாவசியமான கவலை கொள்ளாதிருக்க வேண்டும்.

எங்கள் விசுவாசத்தைப் பெருகச்செய்யும், கிறிஸ்துவே.

நாங்கள் உடுப்பது எது என்று உடலைக்குறித்த கவலையும் கொள்ளாதிருக்கவேண்டும்.

எங்கள் விசுவாசத்தைப் பெருகச்செய்யும், கிறிஸ்துவே.

பஞ்சத்திலும் பிணியிலும் பகைவர் வஞ்சகத்திலும் மாணத்திலும் கூட உமது கரம் எங்களைத் தாங்குமென்று நாங்கள் உறுதியாக நம்பி, எதற்கும் அஞ்சாது பிழைக்கக் கிருபை செய்ய வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றாடுகின்றோம், தயவுள்ள தேவனே. ஆமேன்.

*தேவனே நாங்கள் உம்மை விசுவாசிக்கிறோம்; எங்கள் அவிசுவாசத்தை நீக்கிவிடும். நாங்கள் உம்மை நேசிக்கிறோம்; என்றாலும் நாங்கள் விரும்புவதற்கேற்க முழுமனதோடும் நேசிக்க முடியாதவர்களாயிருக்கிறோம். உமது கூட்டுறவை நாடுகிறோம்; என்றாலும் எங்கள் முழுபலத்தோடும் அதை நாடுகிறதில்லை. உம்மிடம் சரணம் புகுந்தோம்; என்றாலும் எங்கள் கலக்கம் பூரணமாக ஒழியவில்லை. குறைவாயிருக்கும் எங்கள் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் நேசத்தையும் நீர் தள்ளிவிடாது, அவற்றை நிறைவாக்கி உமது ஆசீர்வாதத்திற்காகக் காத்திருக்கும் அடியாரைக் கடைக்கண்ணால் பார்க்க வேண்டுமென்று, கிறிஸ்து இயேசுவினிமித்தம் கெஞ்சி அபயமடைகின்றோம், கர்த்தாவே. ஆமேன்.

---

* Acts of Devotion

வாரம் 2

சனி **மாலை**

கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்; அவர் கிருபை என்றும் நிலையான கிருபை.

அவர் கிருபை என்றும் நிலையான கிருபை யென்று இஸ்ரவேலர் சொல்லட்டும்.

அவர் கிருபை என்றும் நிலையான கிருபை யென்று ஆரோனின் குடும்பத்தார் சொல்லட்டும்.

அவர் கிருபை என்றும் நிலையான கிருபை யென்று கர்த்தருக்கு பயப்படும் யாவரும் சொல்லட்டும். *சங்.* 118^{1-4}.

அவர் கிருபை என்றும் நிலையான கிருபை யென்று நாமும் சொல்லக் கடவோம்.

நமக்கு ஒத்தாசைவரும் பர்வதங்களுக்கு நேராக நம் கண்களை ஏரெடுக்கக்கடவோம்.

வானத்தையும் பூமியையும் படைத்த சிருஷ்டி கர்த்தனிடமிருந்து நமக்கு ஒத்தாசை வரும்.

நமது காலைத் தள்ளாட விடார்.

நம்மைக் காக்கும் தேவன் உறங்கார். *சங்.* 121^{1-6}.

விசுவாசத்திற்காக

தேவனே நீர் ஒருவரே எங்கள் தாரகமும் தஞ்சமும் ஆபத்துக் காலத்தில் அநுகூலமான சகாயருமானவரென்று நம்பி, நாங்கள் உம்மை மாறகடப்பிடியாய்ப் பிடித்துக்கொள்ள எங்களுக்குக் கற்பியும். நாங்கள் உம்மை விசுவாசிக்கிறோம்; எங்கள் அவிசுவாசத்தை ஒழித்தருளும், தெய்வமே. ஆமென்.

இயேசு பகவான் கூறிய தைரிய வாக்கைச் சிந்தை செய்வோம்:—

உங்கள் தலை மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது; ஆதலால் அஞ்சவேண்டாம். மத். 10^{30}.

உங்கள் இருதயம் கலங்காதிருக்கவேண்டும். தேவனில் நம்பிக்கை வையுங்கள். என்னிலும் நம்பிக்கைவையுங்கள். யோவா. 14^{1}.

மெய்விசுவாசத்தால் வரும் தைரியத்தை எங்களுக்குத் கொடுத்தருளும், கிறிஸ்துவே.

நமது நாதரின் பிரிய சீடரான யோவான் சொல்லுவதையும் சிந்தை செய்வோம்:—

அன்பில் பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும். பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவனல்லன். 1 யோவா. 4^{18}.

பயத்தைப் புறம்பே தள்ளும் பூரண அன்பைத் தந்து எங்களை மகிழச்செய்யும், இயேசுவே.

வறுமைக்குப் பயப்படும் நாம் கர்த்தர் சொல்வதைக் கேட்போம்:—

ஆகாயத்துப் பட்சிகளை கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார். அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களல்லவா? மத். 6^{26}.

கர்த்தாவே, அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்குக் கொடுத்துதவும்.

வியாதிக்கு அஞ்சும் நாம் கர்த்தர் சொல்வதைக் கேட்போம்:—

சரீரத்தைக் கொல்லுகிறவர்களுக்கு அஞ்சவேண்டாம்; ஆத்துமனைக் கொல்லும் வல்லமை அவர்களுக்கில்லையே. சரீரத்தையும் ஆத்துமனையும் நரகிலிட்டு அழிக்க வல்ல தேவனுக்கே பயப்படுங்கள். மத். 10^{28}.

கர்த்தாவே, உம்மை நேசிக்கும் எங்களுக்கு யாவும் நன்மையாகவே முடியுமென்று அறிவுறுத்தும்.

அயலாரின் பகைக்குப் பயப்படுகிற நாம் கர்த்தர் சொல்வதைக் கேட்போம்:—

என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளை உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களா யிருப்பீர்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். மத். $5^{11,12}$.

கர்த்தாவே, உம் நிமித்தம் வரும் நிந்தையை நாங்கள் மனமகிழ்ச்சியோடு சகிக்க எங்களுக்குக் கற்பித்தருளும்.

பாவசோதனையால் பயமுறுத்தப்படும் நாம் பவுல் அப்போஸ்தலர் சொன்ன வசனங்களை நினைப்போம்:—

கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவ சோதனையை அறியவும் கூடாத சவம்போலிருக்கும்; ஆத்துமன் நீதியைச்செய்ய உயிர்

கொண்டிருக்கும். (ரோம. 8^{10}.) மரணத்தின் விஷக்கொடுக்கா யிருப்பது பாவம். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக நமக்குப் பாவத்தின்மேல் ஜெயங் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். 1 கொரி. 15^{57}.

ஆண்டவரே, நாங்கள் எங்கள் பலத்திலல்ல உமது ஆவியின் வல்லமையில் ஊன்றி நிற்க எங்களுக்குக் கிருபை செய்யும்.

அப்போஸ்தலனுகிய யோவான் சொல்வதையும் கேட்போம்:—

தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கும் ஆத்தும சக்தி. 1 யோவா. 5^{4}.

அல்லேலூயா! உலகம் மாமிசம் பைசாசமாகிய மூன்று சத்துருக்களையும் எதிர்த்து முறியடிக்கும் விசுவாசம் எங்களுக்கும் உரியதாயிருப்பதால், கர்த்தாவே, உம்மைப் போற்றுகின்றோம்.

மரணத்திற்குப் பயந்து நடுங்கும் நாம் கர்த்தர் சொல்வதைக் கேட்போம்:—

நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னில் விசுவாசங்கொண்டவன் மரித்தாலும் பிழைப்பான். யோவா. 11^{25}.

அப்போஸ்தலனுகிய பவுல் சொல்வதையும் கேட்போம்:—

அழியும் சடலம் அழிவின்மையையும், சாகும் சடலம் சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, "மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது! மரணமே, உன் விஷக்கொடுக் கெங்கே, பாதாளமே, உன் ஜெயமெங்கே?" என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறித்தீரும். 1 கொரி. 15^{51-55}.

கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம். பிலி. 1^{21}.

அல்லேலூயா! மரணத்தை மேற்கொண்டு உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு நமோ!

எம் பிராணநாதா, இந்த இரவிலும்கூட நீர் எங்களை உம் திவ்ய சமுகத்திற்கு அழைத்துக்கொள்ளச் சித்தங்கொள்வீராகில், நீர் எங்களுக்குக் கொடுத்திருக்கும் வேலை, பொறுப்பு, குடும்ப பாரம், எங்கள் அன்புக்குரியோரைப்பற்றிய கவலை முதலிய எல்லா விசாரங்களையும் உமதுபேரில் சாட்டிவிட்டு, நாங்கள் சமாதானத்தோடு மரிக்க எங்களுக்கு உமது பெரிதான கருணையைக் கொடுத்தருளும். சமாதான மரணமாகிய பெருஞ் சிலாக்கியத்திற்கு நாங்கள் அருகராகும்படி, கைகளில் சுத்தமுள்ளவர்களும், இருதயத்தில் மாசில்லாதவர்களுமாய், எங்கள் உள்ளத்தை மாயைக்கு ஒப்புக்கொடாமல் பிழைக்கத் துணை செய்யும். விசுவாசத்தை துவக்குகிறவரும் பூரணப்படுத்துகிறவருமாகிய கிறிஸ்து இரக்ஷகரே, எங்கள் விண்ணப்பத்திற்குச் செவி கொடும். ஆமேன்.

வாரம் 3

ஞாயிறு **காலை**

கர்த்தர் பெரியவர்! நம்முடைய திவ்ய க்ஷேத்திரத்தில் அவரைத் துதிப்போம்.

கர்த்தர் பெரியவர்! அவருடைய பரிசுத்த பர்வதத்தில் அவரைத் துதிப்போம்.

தேவனே, உமது ஆலயத்தின் நடுவிலிருந்து உமது கிருபையைச் சிந்தித்துக்கொண்டிருக்கிறோம்.

தேவனே, உமது நாமம் விளங்குகிறதுபோல், உமது புகழ்ச்சியும் பூமியின் கடைமுனைமட்டும் விளங்குகின்றது.

உமது வலதுகரம் நீதியால் நிறைந்திருக்கிறது.

தேவன், சதாகாலமும் எங்கள் தேவனாகவே இருப்பார்.

எங்கள் தேவன் மரணபரியந்தம் எங்களை நடத்துவார். சங். 48[1,9,10,14].

*பொதுவான ஸ்தோத்திரங்கள்

இந்த நாளுக்காகவும், சூரியனின் கெம்பீரத்திற்காகவும் அனலுக்காகவும், பகலின் உழைப்புக்காகவும்,

தேவனுடைய அளவற்ற ஞானத்தைப் போற்றுகிறோம்.

ஜீவ பிராணிகளுக்கு உணவளிக்கும் பூமிக்காகவும், அதன் குன்றுகள் பள்ளத்தாக்குகளுக்காகவும், அவற்றின் வனப்புக்காகவும், அவற்றில் மலரும் அழகிய மலர்களுக்காகவும்,

தேவனுடைய அளவற்ற ஞானத்தைப் போற்றுகிறோம்.

பிராணனுக்கு ஆதாரமாகவிருக்கும் ஜலத்தைக் கொடுத்துத் திரும்பவும் வாங்கிக்கொள்ளும் சமுத்திரத்திற்காகவும், வியக்கத்தக்க அதன் அமைதிக்காகவும், பிரமிக்கச்செய்யும் அதன் கொந்தளிப்புக்காகவும்,

தேவனுடைய அளவற்ற ஞானத்தைப் போற்றுகிறோம்.

உணவுக்காகவும், அதை உண்டு உடலை வளர்க்க கடவுள் ஏற்படுத்திய வழிவகைகளுக்காகவும் அவருக்கு நன்றிசொல்லி, பெருந்தீனியை

---

* Acts of Devotion

விலக்கவும் உள்ளதைப் பகிர்ந்துண்ணுவதில் சந்தோஷப்படவும் கற்றுக்கொள்ளக்கடவோம்.

தேவனுடைய அளவற்ற ஞானத்தைப் போற்றுகிறோம்.

மழை வெயில் வாடையினின்று மட்டுமல்ல, துன்பும் கவலை பாவசோதனையினின்றும் நம்மைக் காக்கும் புகலிடமாகிய வீட்டிற்காக,

தேவனுடைய அளவற்ற ஞானத்தைப் போற்றுகிறோம்.

நமது உடலை அலங்கரித்துக் காக்கும் உடைக்காக,

தேவனுடைய அளவற்ற ஞானத்தைப் போற்றுகிறோம்.

உடைக்குச் செலவிடும் பணம் டாம்பீகத்திற்கும் பெருமைக்கும் அல்ல, சுகத்திற்கும் உற்சாகத்திற்குமே ஏற்ற மிதமான செலவாயிருக்கவும், போதிய உணவும் உடையும் கொண்டு சுகித்திருக்கும் நாம் நமது ஏழைச் சகோதரர் யாவருக்கும் இச்சுகங்கள் கிடைக்கும்படி ஊக்கமாக முயன்றுவரவும் தேவன் நமக்குக் கற்பிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கக்கடவோம்.

கர்த்தாவே, நன்றி மறவாததும் பரோபகாரம் நிறைந்ததுமான சிந்தையை எமக்கருளுவீர். ஆமென்.

நம்மைப்பெற்றுப் பேணி வளர்த்துவரும் நமது பெற்றோருக்காக தேவனை மகிமைப்படுத்துவோம். தேவன் அவர்களுடைய உழைப்பை ஆசீர்வதித்து, அவர்களை என்றும் வழிநடத்துவார்.

பரம பிதாவே, உத்தம தாய் தந்தையருக்காக உம்மை மகிமைப்படுத்துகிறோம்.

கொடையிற் சிறந்த கொடையாகும் பிள்ளைகளுக்காக தேவனை மகிமைப்படுத்துவது நமது கடமையாம். அவர்கள் தத்தம் வீட்டிற்கும் உலகிற்கும் இன்பச் சுடர்களை வீசும் சிறு தீபங்களாய் விளங்கும்படி, தெய்வ பயத்திலும் சகல நற்குண நற்செய்கையிலும் வளர்ந்துவர கர்த்தர் கிருபைபுரியக் கோருவோம்.

பாலரின் நேசராக விளங்கிய கிறிஸ்துவே, குழந்தைகளுக்காக உம்மை மகிமைப்படுத்துகிறேம்.

நமது சந்தோஷத்தில் மகிழ்ந்து, நமது துக்கத்தில் ஆறுதல் சொல்லி, நமது விசாரங்களை இலகுவாக்கும் உத்தம நண்பருக்காகக் கர்த்தரைப் போற்றக்கடவோம். அவர்களுக்கு நாம் என்றும் நன்றியுள்ளவர்களா யிருக்கக்கடவோம்.

தேவனே, உத்தம நட்புக்காக உம்மை மகிமைப்படுத்துகிறேம்.

சரீரத்தையும் மனத்தையும் புதுப்பித்துக் களிப்பூட்டும் சுகத்திற்காகவும், இரத்த ஓட்டத்தைத் துரிதப்படுத்தி களைப்பை நீக்கி உற்சாகம் கொடுக்கும் கேலி விளையாட்டுக்காகவும், வாழ்க்கைக்கு ருசியைக் கொடுத்துத் திறமையை இரட்டிப்பாக்கும் குதூகலத்திற்காகவும் தேவனை மகிமைப்படுத்துவோம். நமது நகைப்பினுல் பிறரைப் புண்படுத்தாமல், நமது முகமலர்ச்சியால் யாவரையும் உற்சாகப்படுத்த கர்த்தர் நமக்குத் துணைசெய்ய வேண்டும்.

தேவனே தேக சுகத்தாலும் உள்ளக்கிளர்ச்சியாலும் உண்டாகும் நன்மைகளுக்காக உம்மை மகிமைப்படுத்துகிறேம்.

துன்பமாகிய மூடுபனிக்குள் மறைந்துறையும் தெய்வ நேசத்திற்காகவும், நித்திய ஜீவனைப்பெற்று அவர் சமுகத்தில் என்றும் அவரைச் சேவிப்போமென்ற நம்பிக்கைக்காகவும், நாம் தேவனைப் பெரிதும் துதிப்போம்.

உயிர்த்தெழுதலின் முதற் கனியான கிறிஸ்துவே, உம்மை மகிமைப்படுத்துகிறேம்.

அவருக்கும் பிதாவாகிய தேவனுக்கும் தூய ஆத்துமணுகிய தேவனுக்கும் இன்றும் என்றும் யுகாந்த காலம்வரை மகிமைபெருகட்டும். ஆமேன்.

ஜெபம்பண்ணுவோம்:—

உம்மைப் போற்றி வழிபடும் பக்தருக்கு பரலோக வாழ்விற்கடுத்த தரிசனங்களையும் கனவுகளையும் காண்பிக்கும் கர்த்தாவே, எங்கள் உள்ளங்களில் எழும்பும் பரிசுத்த விருப்பங்களையும் சிறந்த நோக்கங்களையும் நினைவிலிருந்து கிரியையாக மாற்றத்தக்க தைரியத்தையும் விடாமுயற்சியையும் எங்களுக்குக் கட்டளையிட வேண்டுமென்று உம்மைக் கெஞ்சி மன்ருடுகிறேம். இந்த நோக்கங்கள் வானலோக வேட்டை நாய்கள்போல் எங்களைத் தொடரும்போது, அவைகளுக்குத் தப்பி ஓடுவது கூடாதென்றும், நாங்கள் அவைகளை நிறைவேற்றுமட்டும் நீர் எங்களைச் சும்மா விடுவதில்லையென்றும் எங்களுக்கு உணர்த்தியருளும். பரிசுத்த நோக்கங்களின் பொலிவை எங்களுக்குக் காட்டி, அவைகளால் எங்கள் உள்ளங்களைக் கவர்ந்துகொள்ளும். அநித்திய சிற்றின்பங்களை உண்டும் பசி தீராதிருக்கும் எங்கள் ஆன்மாக்களை நாங்கள் உன்னத நோக்கங்களால் போஷித்துக்கொள்ளத் தக்க புத்தியை எங்களுக்கு நீர் தரவேண்டும். உமது நாம மகிமைக்கென்றே இவ்விண்ணப்பங்களைக் கேட்டிரங்கும், சுத்த பரிசுத்த வஸ்துவாகிய தேவ்னே. ஆமேன்.

மகா உன்னதத்திலிருக்கும் தேவனுடைய இரக்கமும் பக்ஷாதாபமும், பரிசுத்த பாதுகாவலும் பிணியாளிகள் துயரப்படுவோர் பாவக் கண்ணியில் பட்டுத் தவிப்போர் யாவருக்கும், நமக்கும், நாம் நேசிக்கும் அனைவருக்கும் இன்றும் என்றும் கிடைக்கவேண்டும். ஆமென்.

வாரம் 3

ஞாயிறு **மாலை**

சமுத்திரத்தில் யாத்திரை செய்பவர்களே, சமுத்திரத்தின் பிராணிகளே; தீவுகளே, தீவின் குடிகளே,

கர்த்தருக்குப் புதிய பாட்டைப் பாடுங்கள்.

பூமியின் துருவங்களி லிருப்பவர்களே,

அவருக்கு ஸ்தோத்திர கீதம் பாடுங்கள்.

வனாந்தரமும் அதின் ஊர்களும், மலைகளில் குடியிருக்கிறவர்களும் உரத்த சத்தமிட்டுப் பாடட்டும்.

அவர்கள் பர்வதங்களின் கொடுமுடியிலிருந்து கெம்பீரித்து ஆர்ப்பரிக்கட்டும்.

கர்த்தர் பராக்கிரமசாலியைப்போல் புறப்பட்டு, யுத்த வீரனைப்போல் வைராக்கியம் மூண்டு கர்ச்சித்துத் தம்முடைய சத்துருக்களை மேற்கொள்ளுவார்.

அவர் நெரிந்த நாணலை முறியாமலும் மங்கி யெரிகிற திரியை அணையாமலும், நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார். அல்லேலூயா. ஏசா. **42**$^{10-13,3}$.

போதுவான ஜெபங்கள்

துதி செலுத்துவோம்:—

*தேவனே, நீர் பரிசுத்தர்.

சர்வ வல்லவரே, நீர் பரிசுத்தர்.

நித்திய வஸ்துவே, நீர் பரிசுத்தர்.

எங்களுக்காகச் சிலுவையில் மரித்தவரே, எங்கள்மேல் கிருபைகொள்ளும்.

---

* Jacobite Litany

கர்த்தாவே, எங்கள் வணக்கத்தையும் பிரார்த்தனையையும் கேட்டருளும். ஆமென்.

*உலகில் தோன்றும் உமது அதிசய வசீகரத்திற்காகவும், மனிதர் நுட்பமாண உண்மைகளைக் கண்டுபிடிக்கவும் அற்புதமான யந்திரங்களைச் செய்யவும் தக்கதாக அவர்களுக்குள் இருந்து கிரியைசெய்யும் உமது ஞானத்திற்காகவும், நீர் எங்கள்பேரில் கொண்டிருக்கும் அன்புக்காகவும், உமது சன்னிதானத்தை அணுகி ஜெபிக்கும் சிலாக்கியத்திற்காகவும், நீர் எங்கள் ஜெபத்தை ஏற்றருள்வதற்காகவும்,

உமக்கு நன்றி செலுத்துகிறோம், தெய்வமே.

உமது திருச்சபையில் தோன்றியிருக்கும் நவ ஜீவனுக்காகவும், உலகின் கஷ்டமும் அநீதியும் சீக்கிரம் நீங்குமென்ற நம்பிக்கைக்காகவும், நீர் உமது மகிமையில் உலகின்கண் மறுபடியும் தோன்றி உமது சத்திய இராஜ்யத்தை நிலைநாட்டுவீரென்ற எதிர்நோக்குக்காகவும்,

உமக்கு நன்றி செலுத்துகிறோம், தெய்வமே.

உம்மைப் பற்றும் விசுவாசத்தோடு மரித்த உமது அடியாருக்காகவும், அவர்கள் வைத்துச் சென்றிருக்கும் முன்மாதிரிக்காகவும், அவர்களோடு நாங்களும் உமது சமுகத்தில் கூடுவோமென்ற நம்பிக்கைக்காகவும்,

உமக்கு நன்றி செலுத்துகிறோம், தெய்வமே.

சூரியன் உதிக்கும் திசையிலிருந்து அஸ்தமிக்கும் திசைமட்டுமுள்ள சகல ஜாதியினரும் உரத்த சத்தத்தோடும் பூரண மகிழ்ச்சியோடும் உம்மைப் போற்றி,

ஓ தெய்வமே, சர்வத்தையும் இரட்சிக்கும் பிராணபதியே, உமக்கு மகிமை எக்காலமும் பெருகட்டும் என்று சொல்லக்கடவர். ஆமென்.

ஜெபம்பண்ணுவோம்:—

†பாவப்பற்றுள்ள மனம், வேசித்தனத்திற்கடுத்த எண்ணம், காம உணர்வு, கறைப்பட்ட ஆசை, அன்பற்ற நினைவு, பாவமான கனவு, துடுக்கான பேச்சு, வீண்வார்த்தை, கோபம், குரோதம், அநியாயம், பிடிவாதம், இன்னும் இவைபோன்ற பாவக் கறைகளிலிருந்து,

நல்ல தேவனே, எங்களை இரட்சித்துக் காப்பாற்றியருள்க.

---

* Acts of Devotion † Jacobite Litany

பொய்யர், அக்கிரமக்காரர், மறைந்துகிடக்கும் கண்ணிகள், உலகச்சிற்றின்பம், சடுதிமரணம், கொள்ளைநோய், பஞ்சம், பஞ்சம், பற்கடிப்பு, அவியாநெருப்பு, சாகாப்புழு, பயம், அமைதியின்மை, யுத்தம், கலகம், மற்றும் இவைபோன்ற விபத்துகளிலிருந்தும், உம்மை விட்டெமைப் பிரிக்கும் சகல காரியங்களிலிருந்தும்,

நல்ல தேவனே, எங்களை இரட்சித்துக் காப்பாற்றியருள்க.

*உண்மையும் நேர்மையுமானவற்றை விட்டுவிலகி, சோம்பலுக்கும் பாவத்திற்கும் நாங்கள் இடங்கொடுக்கும் போதும், வீண்செலவு செய்து கடன்படவோ திருடவோ ஏவப்படும் போதும்,

நல்ல தேவனே, எங்களருகிலிருந்து எங்களை இரட்சித்துக் காப்பாற்றியருள்க.

நாங்கள் யாவற்றிலும் உமது மகிமையைக் காணவும், உலகின் எல்லாச் சத்தங்களைப்பார்க்கிலும் உமது சத்தத்தைத் தெளிவாகக் கேட்டு அதன்படி நடக்கவும், சந்தோஷத்தில் மட்டுமல்ல துக்கத்திலும் உமது சகவாசத்தை அடைந்துகொள்ளவும் தக்கோர்களாகும்படி நீர் எங்கள் ஜீவனுக்கு ஜீவனாகத் துலங்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், நல்ல தேவனே. ஆமென்.

மாலை ஜெபம்

†தேவனே உமது கிருபையின் செட்டைகளில் எங்களைப் பொதிந்து காத்தருளும். உமது கருணையினிமித்தம் ஜெபத்தைக் கேட்டிரங்குகிறவரே, எங்கள் விண்ணப்பத்திற்குச் செவிகொடும். கிறிஸ்துவே, மேன்மையுள்ள இராஜனே, இந்தச் சாயங்காலத்தை சமாதானத்தாலும் இந்த இரவை உமது கிருபையாலும் நிரப்பும். எங்கள் கண்கள் உம்மை நோக்குகின்றன. எங்கள் பாவக்கடன்களை எங்களுக்கு மன்னித்து, இம்மையிலும் மறுமையிலும் உமது கிருபையால் எங்களைத் தாங்கும். உமது இரக்கம் எங்களைக் காக்கட்டும். உமது காருண்யம் எங்கள்மேல் உதிக்கட்டும். உமது சிலுவை எங்களைத் தீயோனுக்கும் அவன் சேனைக்கும் விலக்கி மீட்கட்டும். எங்கள் வாழ்நாளெல்லாம் உமது கரம் எங்கள்மேல் இருக்கட்டும். உமது சமாதானம் எங்களை ஆண்டுகொள்ளட்டும்.

உம்மிடம் தங்கள் ஜெபங்களை ஏறெடுக்கும் யாவருக்கும் அபயங் கூறி, அவர்களை அரவணைத்துக் காக்க வேண்டுமென்று, மரியம்மாளின் செல்வப் புதல்வனாகிய இயேசு கிறிஸ்துவே, உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம். ஆமென்.

---

* Acts of Devotion † Jacobite Litany

வாரம் 3

திங்கள் **காலை**

தேவனே, வானங்களுக்கு மேலாக உயர்ந்தருளும்.

உமது மகிமை உலகமழுவதிலும் உயர்ந்திருக்கட்டும்.

தேவனே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது; நான் உமக்குக் கீர்த்தனம் பாடி, உம்மைப் போற்றுவேன்.

என் மகத்துவமே எழுந்திரு; வீணையே சுரமண்டலமே விழியுங்கள்: நான் அதிகாலையில் விழித்துக்கொள்ளுவேன்.

ஆண்டவரே, ஜனங்களின் மத்தியில் உம்மைத் துதிப்பேன்.

ஜாதிகளின் மத்தியில் உம்மைக் கொண்டாடுவேன்.

உமது கிருபை வானபரியந்தம் எட்டுகிறது.

உமது சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தம் எட்டுகிறது.

தேவனே, வானங்களுக்கு மேலாக உயர்ந்தருளும்.

உமது மகிமை உலகமழுவதிலும் உயர்ந்திருக்கட்டும். சங். **57**[5, 7-11].

தேய்வப் பிரசன்னத்திற்காக

*சர்வ வியாபியாய், சராசர வஸ்துக்களனைத்திலும் பிரசன்னராயிருக்கும் பரம்பொருளே, உமது அளவற்ற அன்பினால் எங்களை இன்று உமது பக்கத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று, அத்தியந்த பணிவுடன் உம்மை மன்றாடுகிறோம். நாங்கள் எதை நினைத்தாலும், எதைச் செய்தாலும் நீர் எங்களைத் தாபந்தத்தோடு கவனித்துக்கொண்டிருக்கிறீர் என்பதை நாங்கள் மறவாதிருக்க வேண்டும். உமக்குப் பிரியமான கிரியைகள், விருப்பங்கள், எண்ணங்கள் எவை என்று நாங்கள் அறிந்துகொள்ளத்தக்க ஞானத்தை எங்களுக்குக் கொடும். அவற்றையே நாங்கள் விரும்பவும் செய்யவும் எங்களுக்கு உமது ஆவியின் பலத்தைத் தர வேண்டுமென்று, கிறிஸ்துவினிமித்தம் உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயைமிகும் தந்தையே. ஆமேன்.

தாய்மாருக்காக

மெய்வருத்தம் பாராமல், சலிப்படையாமல் இரவும் பகலும் முட்டையின்மேல் படுத்து அவயங்காக்கும் பக்ஷிகளின் பொறுமைக்காக,

சிருஷ்டி கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறோம்.

---

* Mozarabic Liturgy

உலகம் உருவாகுமுன், ஆழத்தை இருள் மூடிக்கொண்டிருந்த பொழுது, உமது ஆத்துமனுனவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்ததால் எங்கள் கண்கள் காணும் இவ்வதிசய வுலகமும் வானமும் தோன்றியதென்பதை நினைத்து,

சிருஷ்டி கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேம்.

தெய்வச்சாயல் எங்களில் உருவாகுமட்டும் பாவ இருள் மூடியிருக்கும் எங்களிதயங்களின் மேல் அசைவாடிக் கொண்டிருக்கும் பரிசுத்த ஆத்துமனே,

உம்மைத் துதிக்கிறேம்.

கோழி தன் குஞ்சுகளேத் தன் செட்டைகளுக்குள் கூட்டிச் சேர்த்துக் கொள்ளுவது போல் உம் திருநகராகிய எருசலேமையும், உமது சொந்த ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரரையும் கூட்டிச் சேர்க்க முயன்ற காருண்யவள்ளலாகிய கிறிஸ்துவே, உமது தேசாபிமானத்தையும் அன்பையும் நினைத்து,

கிறிஸ்து பெருமானே, உம்மைத் துதிக்கிறேம்.

துன்பவேளையிலும், சோதனை நாளிலும், தேவரீர் எங்களேத் தீங்கணுகாவண்ணம் அரவணைத்துக் காத்ததை நினைத்து,

பரிசுத்த பிதாவே, உம்மைத் துதிக்கிறேம்.

பக்ஷிகளிலும், விலங்குகளிலும் காலாகாலத்தில் தோன்றி பின் மறைந்துபோகும் ஓர் இயற்கைப் பாசத்தை மரணத்தினும் வலியதும் நிலைவரமுமான அன்பாகப் பெருக்கித் தாய்மாரின் உள்ளத்தில் நீர் புகுத்தியிருக்கும் விந்தையை நினைத்து,

அன்பின் கடலே, உம்மைத் துதிக்கிறேம்.

எங்கள் தாயின் பாசமொன்றே சுயநலமற்ற பாசமென்றும், அதை எங்களொவ்வொருவருக்கும் கொடுத்தது நீர் எங்கள்பேரில் கொண்டிருக்கும் கரிசனையின் அறிகுறியென்று முணர்ந்து, அன்பைப் பெருக்கி யெமதாருயிரைக் காக்க வந்த இன்பப் பெருக்கே, இறையே, பராபரமே,

உம்மைத் துதிக்கிறேம்.

தாய்மாரின் மெய்வருத்தத்தையும் சிரமத்தையும் நீக்கி அவர்களுக்கு தேக சுகத்தையும் மனக் களிப்பையும் தர வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம், தயவுள்ள தெய்வமே.

தரித்திரத்தினுலோ, அல்லது கணவரை இழந்ததாலோ வீட்டு வேலையோடுகூட வெளியிலும் பாடுபட்டு பிள்ளைகளைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் தாய்மாருக்கு நீர் உமது கிருபையை விசேஷமாகக் கொடுக்கவேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள தேய்வமே.

அவர்கள் தங்கள் பிள்ளைகளின் தேகவளர்ச்சியையும் நற்குணத் தேர்ச்சியையும் கண்டு, சிரமத்தை மறந்து சந்தோஷப்படத் தக்கதாக, பிள்ளைகளை ஆசீர்வதித்து வழிநடத்த வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள தேய்வமே.

கர்ப்ப ஸ்திரீகளையும், பிரசவ வேதனையி லிருக்கிறவர்களையும் நீர் தாங்கிப் பராமரிக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள தேய்வமே.

பிரசவ ஆஸ்பத்திரிகளிலும், சிசு பரிபாலன ஸ்தலங்களிலும் வேலை செய்து வரும் வைத்தியர் மருத்துவர் யாவருக்கும் அநுதாபத்தையும் ஊக்கத்தையும் தர வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள தேய்வமே.

தாயின் அன்பையும் அரவணைப்பையும் இழந்து, மாற்றுந்தாயின் அ ன ல ற் ற பாதுகாப்பிலிருக்கும் பிள்ளைகளைத் தேற்றவேண்டு மென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள தேய்வமே.

தம் பிள்ளைகளை மனுஷர் தயவிற்கும் தெய்வ கிருபைக்கும் பாத்திரராக வளர்க்கும்படி, தாய்மார் திரிகரண சுத்தராய் ஜீவிக்கக் கிருபை செய்ய வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள தேய்வமே.

ஆமேன்

வாரம் 3

திங்கள் மாலை

தேவனே, நீர் என் தேவன். வறண்டதும் விடாயுற்றதுமான உலக வாழ்வில் என் ஆத்துமம் உம்மேல் தாகமாயிருக்கிறது.

என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது.

உமது திவ்ய க்ஷேத்திரத்தில் உம்மைக் காண விரும்பினேன்.

உமது வல்லமையையும் மகிமையையும் அங்கு கண்டு மகிழ்ந் தேன்.

ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது.

என் படுக்கையின்மேல் நான் உம்மை நினைக்கிறேன்.

இரவில், சாமநேரத்தில் உம்மைத் தியானிக்கிறேன்.

அதனால் இனிய பதார்த்தங்களை உண்டாற்போல் என் ஆத்துமம் திருப்தியாகும். சங். 63[1-6].

பாவ மன்னிப்புக்காக

*கிறிஸ்து இரட்சகரே, எல்லாம் வல்ல இறையே, எங்கள் பாவங்களையும், எங்கள் உறவினர் பாவங்களையும் தயவாகப் பொறுத்தருள வேண்டுமென்று மெய்யான விசார முற்றோராய் உம்மை இரந்து மன்றாடுகிறோம். நாங்கள் யார் யாருக்காக ஜெபிக்க விரும்புகிறோமோ அவர்கள் குற்றங்களையும் தயவாக மன்னியும். உமது தொண்டர் யாவருக்கும் பாவ நிவாரணம் அவசியமாயிருப்பதால், எங்கள் யாவரையும் சுத்திகரித்து மீட்டுக்கொள்ளும். உமக்கே மகிமையும் கனமும் பெருகும் வண்ணம் எங்களைத் தீமைக்கு விலக்கி, நீதியின் பாதையில் நடத்தி, இறுதியில் நித்திய பேரின்பத்தால் மகிழ்ச்சியாக்க வேண்டுமென்று உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், கிருபாநிதியே, எங்கள் நல்ல தெய்வமே. ஆமேன்.

கிறிஸ்துவின் வழித்துணைக்காக

†எம் குருபரனே, இயேசுநாதா, பரம கானானை நோக்கி உலக வாழ்க்கையாகிய நெருக்கமான வழியில் சென்றுகொண்டிருக்கும் எங்களுக்கு வழித்தோழராக நீர் எம்மோடு செல்ல வேண்டும். நாங்கள் உம் திருமுக வெளிச்சத்தினால் தர்ம நெறியில் நேரே செல்லத் துணை புரியும். வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கும் கிறிஸ்துவே, நீர் எம் சிந்தையில் பிரகாசித்துக்கொண்டிருப்பின், உலகத்தின் இருளுக்குள் நாங்கள் அலைய மாட்டோம். ஆதலால் வாழ்க்கைத் துணைவராய் என்றும் எங்களோடு செல்ல வேண்டுமென்று உமது நாமத்தினிமித்தம் கேட்கிறோம், கிறிஸ்தரசே. ஆமேன்.

தாய்மாருக்காக

ஒன்றை யொன்று பக்ஷித்து உடல் வளர்க்கும் தன்மையுள்ள பிராணிகளுக்குள், தாய்ப்பிராணி யொன்றிற்கே தன் சுகத்தைப் பார்க்கிலும் சிசுவின் சுகத்தைத் தேடத்தக்க பரோபகார உணர்வைத் தந்த தேவனே,

உமது ஞானத்தை எண்ணி, உம்மைப் போற்றுகிறோம்.

---

* Gregorian Sacramentary † Mozarabic Liturgy

இந்த இயற்கைச் சுபாவத்தையே அஸ்திபாரமாகக் கொண்டு, நீதியையும் நேர்மையையும் பரோபகாரத்தையும் அன்பையும் மனிதருக்குள் நிலைநாட்டிய தேவனே,

உமது ஞானத்தை எண்ணி, உம்மைப் போற்றுகிறோம்.

இந்த ஆத்மீகத் தேர்ச்சியின் சிகரமாக உமது ஒரே செல்வப் புதல்வனை உலகுக் கீந்த அன்பின் பிதாவே,

உமது ஞானத்தை எண்ணி, உம்மைப் போற்றுகிறோம்.

அவர் உலகிலிருந்த நாட்களில் நீர் தாயினும் தயைமிகுந்த தெய்வமென்பதை எங்களுக்கு வாக்காலும் கிரியையாலும் தெளிவாக வெளிப்படுத்தியிருப்பதற்காக,

தேவனே, உம்மைத் துதிக்கிறோம்.

தாயின் அரவணைப்பும் பாசமும் சுயத் தியாகமும் கிறிஸ்துவின் சிலுவையிலிருந்து வழிந்தோடிய தெய்வ அன்பின் பிரதிபிம்பங்களாய் இருப்பதை நினைத்து,

தேவனே, உம்மைத் துதிக்கிறோம்.

சாமுவேலுக்காக ஜெபித்து, அவனை உமது ஊழியத்திற்கென்று பிரதிஷ்டை செய்த அன்னாளின் பக்தியை நினைத்து,

தேவனே, உம்மைத் துதிக்கிறோம்.

எங்கள் இரட்சகர் இயேசு பெருமானை ஈன்றெடுத்த மரியம்மாளின் விசுவாசத்தையும் சுயத்தியாகத்தையும், அவர்கள் தாய்மாருக்கு வைத்திருக்கும் சிறந்த முன்மாதிரியையும் நினைத்து,

தேவனே, உம்மைத் துதிக்கிறோம். ஆமென்.

அன்னை மரியம்மாளின் இருதயத்தை ஊடுருவத் தைத்த பட்டயம் நாங்கள் செய்த பாவங்களே என்றுணர்ந்து,

மனங் கசிந்து வருந்துகிறோம், பரிசுத்த தெய்வமே.

எங்கள் அருமைத்தாயார் பாராட்டும் அன்பிற்கு ஈடாக எங்கள் கவலையீனம், கடுஞ்சொல், கீழ்ப்படியாமை முதலிய துர்ச்செயல்களால் அவர்களுக்குத் துக்கத்தைக் கொடுத்திருப்பதை நினைத்து,

மனங் கசிந்து வருந்துகிறோம், பரிசுத்த தெய்வமே.

தமது மதிகேட்டினாலும் துன்மார்க்கத்தினாலும் தாய்மாரின் நெஞ்சைப் பிளக்கும் பட்டயங்களைச் சிந்தனையின்றிக் கையாடிக்கொண்டிருக்கும் பிள்ளைகளைச் சீர்ப்படுத்த வேண்டுமென்று,

உம்மிடம் பரிந்து மன்றாடுகிறோம், தயவுள்ள கர்த்தாவே.

தாய்மார் யாவருக்கும் தத்தம் வீட்டில் பூரண சுதந்தரமும், குறை வற்ற செல்வாக்கும், அவர்களைச் சந்தோஷப்படுத்தக் கூடிய அன்பும் எப்பொழுதும் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம், தயவுள்ள கர்த்தாவே ஆமேன்.

எங்கள் நல்ல தேவனே உமது பெரிதான கிருபையால் எங்களுக்கு நீர் தந்திருக்கும் எங்கள் அருமைத் தாயாருக்காக உமக்கு மனமார்ந்த நன்றி படைக்கிறேம். எங்கள் அன்னைக்குப் பலத்தையும் சுகத்தையும் ஞானத்தையும் தீர்க்காயுளையும் தந்து, அவர்கள் எங்களுக்கு நெடுநாள் துணையாயிருக்கவும், நாங்கள் அவர்களை என்றும் நேசித்து கனப்படுத்தி அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் கிருபை செய்ய வேண்டுமென்று, இல்லற வாழ்க்கையைப் பன்முறை சிறப்பித்த கிறிஸ்து பெருமானை முன்னிட்டு கேட்டுக்கொள்ளுகிறேம், தயவுள்ள கர்த்தாவே. ஆமேன்.

வாரம் 3

செவ்வாய் — காலை

பூர்வகாலந் தொட்டு யேகோவாவே எங்கள் அரசராயிருக்கின்றார்.

அவர் உலகின்கண் இரட்சிப்பின் கிரியைகளை நடத்திவருகின்றார்.

தேவரீர், உமது வல்லமையால் சமுத்திரத்தைப் பிளந்தீர்.

திமிங்கிலத்தின் தலையை நொறுக்கினீர்.

பகலும் உம்முடையது; இரவும் உம்முடையது.

தேவரீர், ஒளியையும் சூரியனையும் படைத்தீர்.

உமது காட்டுப்புறுவின் ஆத்துமனைத் துன்மார்க்கருடைய சதியாலோசனைக்கு ஒப்புக்கொடாதிரும்.

உமது ஏழை மக்களின் கூட்டத்தை என்றும் மறவாதிரும்.

தேவனே எழுந்தருளும்; உமது நியாயத்திற்காக நீரே வழக்காடும். ஆமேன். சங். 74[12-16,19,22].

உன்னத நோக்கத்திற்காக

*உமது ஜீவசுவாச ஸ்பரிசத்தால் புதுமேனி கொடுத்து உலகை மிளிரச் செய்யும் தேவனே,

எங்கள் உள்ளத்தில் நிலைவரமான சிந்தையைப் புதுப்பியும்.

---

* Acts of Devotion

ஓ கர்த்தாவே, ஜீவனைக் கொடுப்பவரே, கிறிஸ்துவின் சிந்தை போல் எங்கள் சிந்தையும் விளங்க அவருடைய போதனையை எங்களுக்கு நினைப்பூட்டும்.

பரிசுத்த ஆத்மனே, எங்களை உயிர்ப்பியும்.

சத்திய ஆத்மனே, பயமென்னும் விலங்கை முறித்து, தெய்வத்தின் மக்களுக்குரிய மேன்மையான சுயாதீனத்தை எங்களுக்குத்தாரும். அதனால் நாங்கள் தேவனுடைய புத்திரரும் கிறிஸ்துவுடன் பங்காளிகளுமாயிருக்கிறோமென்பதை ஐயமற உணர்ந்துகொள்ள வேண்டும்.

பரிசுத்த ஆத்மனே, எங்களை உயிர்ப்பியும்.

நம்மை உயிர்ப்பிக்கும் நித்திய பவித்திர ஆத்மனை வந்திப்போம்.

நம்மைப் பலப்படுத்தும் தேற்றரவாளனுகிய புனித ஆத்மனுக்கு நமோ, நம!

நீங்கள் உலகிற்கு ஒளியாயிருக்கிறீர்களென்று பகர்ந்த கிறிஸ்து பெருமானே, சுகத்தையும் கனத்தையும் வேறெந்த அநித்தியப்பொருட்களையும் நாடுவதைவிட்டு, எங்கள் சகோதரரைப் பரிசுத்தத்திலும் அன்பிலும் வளர்ந்தோங்கச் செய்வதொன்றையே நாங்கள் அல்லும் பகலும் நாட எங்களுக்குத் துணைசெய்ய வேண்டுமென்று,

உம்மை மன்றுடுகிறோம்.

நீங்கள் உலகிற்கு உப்பாயிருக்கிறீர்களென்று பகர்ந்த கிறிஸ்து பெருமானே, உலக ஆசைகளால் உடலையும் இருதயத்தையும் கறைப்படுத்திக்கொண்டு இருப்பவர்களைக் கைப்பிடித்து நன்னெறியில் நடத்தும் சக்தியை நாங்கள் விரும்ப எங்களுக்குக் கற்பிக்க வேண்டுமென்று,

உம்மை மன்றுடுகிறோம்.

உடை உணவு சுகம் முதலியவற்றைப் பிரதானமாகவும், நற்குண நற்செய்கைகளை இரண்டாவதாகவும் தேடும் மதியீனத்தை ஒழித்து, முதல் முதல் உமது இராஜ்யத்தையும் அதன் நீதியையுமே தேட எங்களுக்குக் கற்பித்த குரு தேசிகரே, இந்த உன்னத நோக்கத்தை நாங்கள் எங்கள் ஜீவியத்தின் இலக்காக வைத்துக்கொள்ள அறிவுறுத்த வேண்டுமென்று,

உம்மை மன்றுடுகிறோம்.

நல்லோர்மேலும் தீயோர்மேலும் சூரியனை உதிக்கப்பண்ணி, உத்தமருக்கும் அதமருக்கும் மழையை வருஷிக்கும் தயாளமுள்ள தேவனே, சத்துரு மித்திரன் என்ற வித்தியாசமின்றி யாவருக்கும் நன்மை செய்யத்தக்க அளவற்ற அன்பை எங்களுக்குத் தர வேண்டுமென்று,

உம்மை மன்றுடுகிறோம்.

எங்கள் தேசத்திலும் மற்றெல்லாத் தேசங்களிலும் நிலேயான சமாதானமும், போதிய செல்வமும், சரீர சுகமும், இருதய சுத்தமும் பெருக விரும்பி நாங்கள் அதற்கென்று ஏற்ற முயற்சியெடுக்க எங்களுக்குப் பெலன் தர வேண்டுமென்று,

உம்மை மன்றுடுகிறேம்.

சாரத்தை இழந்த உப்பைப் போலவும், மூடிவைக்கப்பட்ட விளக்கைப் போலவும் நாங்கள் பயன்படா ஜீவியம் செய்யாதபடி, எங்களே உமது பரிசுத்த வைராக்கியத்தால் நிரப்ப வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம், கிறிஸ்து பெருமானே. ஆமேன்.

எல்லாம் வல்ல கடவுளே, மாந்தர் உள்ளங்களேயெல்லாம் ஆராய்ந்தறிகின்றவரே, நீர் அறியாத ஆசைகளும், உமக்கு மறைவான இரகசியங்களும் இல்லே. ஆதலால் எங்களே ஆராய்ந்து, எங்கள் இருதயங்களே அறிந்துகொள்ளும்; எங்களேச் சோதித்து, எங்கள் சிந்தனேகளே அறிந்துகொள்ளும். வேதனேயுண்டாக்கும் வழி எங்களில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே எங்களே நடத்தும். சங். $139^{23,24}$. ஆமேன்.

வாரம் 3

செவ்வாய் — மாலே

இதோ, தேவன் வல்லமையுள்ளவர்.

அவர் ஒருவரையும் அலக்ஷியம் பண்ணுர்.

தேவன் பலமும் ஞானமும் மிகுந்தவர்.

அவர் எளியோருக்கு நியாயத்தைச் செய்கின்றூர்.

இதோ யேகோவா பெரியவர்; நாம் அவரை அறிந்துகொள்ள முடியாது.

அவருடைய ஆயுளின் இலக்கத்தை ஆராய்ந்து கண்டுகொள்ளவும் முடியாது. யோபு. $36^{5,6,26}$.

யேகோவாவின் பரிசுத்த நாமத்தில் மேன்மைபாராட்டக் கடவோம்.

யேகோவாவைத் தேடுகிறவர்களின் இருதயம் மகிழட்டும்.

தேவனேயும், அவருடைய வல்லமையையும் நாடுவோம்.

அவர் சமுகத்தை நித்தமும் தேடுவோம். சங். $105^{3,4}$.

உன்னத நோக்கத்திற்காக

நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்தது உண்மையென்றால், அவர் வீற்றிருக்கும் தேவனுடைய வலது பாரிசத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். கொலோ. 3[1].

“உங்கள் பரமபிதா பூரண சற்குணராயிருப்பதுபோல் நீங்களும் பூரண சற்குணராய் இருங்கள்,” என்று வற்புறுத்திக் கற்பித்த இயேசு மகிபரே, இந்தக் கற்பனை கைக்கொள்ளக்கூடாத கற்பனை என்றெண்ணி, அதை அலக்ஷியம் பண்ணியதாகிய குற்றத்தை எங்களுக்கு மன்னியும். எங்கள் உள்ளங்களின் கறைகளையும் பலவீனத்தையும் பார்த்து அதைரியப்படுகிறோம். இது எங்களாலாகும் காரியமல்ல. தெய்வ குமாரனாகிய உம்மைப்பற்றும் விசுவாசத்தினாலும் அறிவினாலும், பாவ ஜென்மிகளாகிய நாங்களும் நீர் அடைந்திருக்கும் ஆத்மீக வளர்ச்சிக்கொத்த வளர்ச்சியடைந்து பூரண சத்புருஷராகலாமென்று விசுவாசிக்கிறோம். (எபே. 4[11].) கிறிஸ்துவில் தோன்றிய குறைவற்ற மாண்பைப் பெற விரும்புகிறோம். ஆதலால் ஒவ்வொரு நாளும் நாங்கள் செய்யவேண்டிய நற்கருமங்களை எங்களுக்குத் தெளிவாகக் காட்டி, அதைச் செய்யத்தக்க ஆத்ம சக்தியையும் தந்தருளும். அதைரியம் சோம்பல் வெட்கமாகிய இடையூறுகளுக்கஞ்சி, நீர் வரையறுத்திருக்கும் நன்னெறியினின்று வழுவிப் போகாதபடி எங்களைத் தடுத்தாட்கொள்ள வேண்டுமென்று எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவினிமித்தம், கெஞ்சிக் கேட்கிறோம், பரமபிதாவே. ஆமேன்.

பரலோகத்தில் உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள். மத். 6[20].

கர்த்தாவே, எங்கள்மீது இரக்கமுற்று, இப்பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்களிதயத்தை ஏவியருளும்.

உங்களிலொருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினால் கடினப்பட்டுப்போகாதபடி நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள். எபி. 3[13].

கர்த்தாவே, எங்கள்மீது இரக்கமுற்று, இப்பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்களிதயத்தை ஏவியருளும்.

தீமைக்குத் தீமையைச் செய்யாமல் யாவருக்கும் நன்மையைச் செய்ய நாடுங்கள்.

கர்த்தாவே, எங்கள்மீது இரக்கமுற்று, இப்பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்களிதயத்தை ஏவியருளும்.

எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள், இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், எல்லாவற்றிலும் தேவனுக்கு நன்றிசெலுத்துங்கள்.

கர்த்தாவே, எங்கள்மீது இரக்கமுற்று, இப்பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்களிதயத்தை ஏவியருளும்.

நன்மை செய்யத் தூண்டிவிடும் ஆத்மத்தணலை அவித்துப் போடாதிருங்கள். 1 தெச. 5^{15-22}.

கர்த்தாவே, எங்கள்மீது இரக்கமுற்று, இப்பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்களிதயத்தை ஏவியருளும்.

பிசாசின் தந்திரங்களை எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, நீங்கள் சத்தியமென்னும் இடைக்கச்சை, நீதியென்னும் மார்புக்கவசம், சமாதான சுவிசேஷத்தைப் பிரசுரிக்கக் கொள்ளும் ஆர்வமென்னும் பாதரட்சை, விசுவாசம் என்னும் கேடகம், இரட்சிப்பென்னும் தலைச்சீரா, தேவ வசனமென்னும் ஆத்மீகப் பட்டயம் ஆகிய தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொள்ளுங்கள். எபே. $6^{11,14-18}$.

கர்த்தாவே, எங்கள்மீது இரக்கமுற்று, இப்பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்களிதயத்தை ஏவியருளும்.

கிறிஸ்து உங்களை நேசிப்பதுபோல், நீங்கள் ஒருவரையொருவர் நேசித்து, ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கொள்ளுவதால், கிறிஸ்துவினுடைய புதிய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். கலா. 6^2.

கர்த்தாவே, எங்கள்மீது இரக்கமுற்று, இந்த பிரமாணங்களை எல்லாம் எங்கள் இருதயத்தில் பதித்தருள வேண்டுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

*பரமபிதாவே, வெள்ளியையும் பொன்னையும் பிரக்கியாதியையும் கனத்தையும் உலக சந்தோஷங்களையும் நாங்கள் உம்மிடம் கேட்கவில்லை. உமது இராஜ்யத்தையும் அதன் நீதியையும் தேடும் கிருபைவரமொன்றையே கேட்கிறோம். பின்பு உமது திருவுளச் சித்தம்போல், எங்கள் சரீரத்திற்கு அவசியமான நன்மைகளை நீர் கூடக் கொடுத்தால் போதும். இதோ இந்த வாஞ்சை உமது பார்வைக்குப் பிரீதியாயிருக்கட்டும். இதைப் பூர்த்தியாக்கும். கிறிஸ்துவின் திருநாமத்தைச் சொல்லி இந்த விண்ணப்பத்தைக் ஏறெடுக்கின்றோம்.

---

* St. Augustine

அவர் எங்கள் மத்தியஸ்தரும் மீட்பருமாக உமது வலபாரிசம் நிற்கின்ருர். நாங்கள் உம்மைத் தேடும்படி அவரைக்கொண்டு நீர் எங்களைத் தேடினீர். வார்த்தையாகிய அவர் மூலமாகவே நீர் யாவற்றையும் சிருஷ்டித்தீர். உமது ஒரே செல்வப் புதல்வராகிய அவர் நிமித்தம் எங்களுக்குப் புத்திர சுவிகாரம் அளித்தீர். அவரில் அறிவின் ஐசுவரியங்களும் ஞானத்தின் ஐசுவரியங்களும் புதைந்து கிடக்கின்றன. அவருக்கும் தேவரீருக்கும் பவித்திர ஆத்துமனுக்கும் எல்லா மகிமையும் கனமும் துதியும் இன்றும் என்றும் பெருகட்டும். ஆமேன்.

வாரம் 3

புதன் **காலை**

என் போக்கைக் கர்த்தர் கவனிக்கிறதில்லை யென்றும், என் நியாயம் அவருக்கு எட்டவில்லை யென்றும் நீ சொல்வதேன்?

சர்வத்தையும் சிருஷ்டித்த கர்த்தர் சோர்ந்து போவதுமில்லை, இளைப்படைவதுமில்லை.

இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ?

அவருடைய ஞானத்தை ஆராய்ந்து முடியாது.

சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலனளித்து, சக்தியற்றவனுக்குச் சக்தியைப் பெருகப்பண்ணுகிருர்.

இளைஞர் இளைப்படைவார்கள், வாலிபர் சோர்ந்துபோவார்கள்.

கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புது பெலனடைந்து கழுகுகளைப்போல் செட்டையடித்து எழும்புவார்கள்.

அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள்; நடந்தாலும் சோர்ந்துபோகார்கள். *ஏசா.* 40²⁸⁻³¹.

காலை ஜெபம்

*கடந்த இரவில் கிடைத்த சுகநித்திரைக்காகவும் இளைப்பாறுதலுக்காகவும், இந்த நாளை நீர் எங்களுக்கு இலவசமாகக் கொடுத்திருப்பதற்காகவும், இன்று நாங்கள் உமக்குப் பிரியமான கிரியைகளைச் செய்யச் சமயம் கிடைத்திருப்பதற்காகவும், தேவனே உமக்கு மன

---

* Acts of Devotion

மார்ந்த நன்றி சொல்லுகிறோம். உம்மைச் சேவிப்பதே மெய்ச்சுயாதீனமாதலால், இன்று நாங்கள் உம்மைச் சேவிக்கவும், சாயங்காலத்தில் மறுபடியும் நாங்கள் உம்மைத் துதிக்கவும் கிருபை செய்ய வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்க் கெஞ்சி மன்றாடுகிறோம், பரமபிதாவே. ஆமேன்.

துயரப்படுவோருக்காக

*மாறாக் காருண்ய கடவுளே, நொறுங்குண்ட இருதயத்தை நீர் புறக்கணியீர். துயரப்படுகிறவர்களுடைய ஏங்கலை நீர் அலக்ஷியம் செய்யீர். எங்களை அழுத்தித் துன்புறுத்தும் விக்கினங்களில் சிக்கிக்கொண்டு உம்மை நோக்கிக் கதறும்போது நீர் செவிசாய்த்து எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும். பிசாசின் தந்திரமும் மனிதர் பகையும் சரீரப் பிணியும் இழைக்கும் சகல துன்பங்களும் உமது காருண்யப் பராமரிப்பென்னும் சுடர்பட்டுச் சிதறிப்போக வேண்டும்.

எழுந்தருளும் இயேசு சுவாமி, உமது நாமத்தினிமித்தம் எங்களை இரட்சியும்.

ஓ தெய்வமே, எங்கள் பிதாக்களின் காலத்திலும் அதற்கு முன்பும் நீர் எத்தனையோ அற்புதக் கிரியைகளைச் செய்து, துன்புற்றுத் தயங்கிய உமது பிள்ளைகளைக் காத்தீர் என்று எங்கள் பிதாக்கள் சொல்ல நாங்கள் காதாரக் கேட்டிருக்கிறோம். ஆதலால்,

எழுந்தருளும் இயேசு சுவாமி, உமது நாமத்தினிமித்தம் எங்களை இரட்சியும்.

நேசமேய்ப்பரே, தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமல், பயங்கரமும் காண்போர் மனத்தை உருகச் செய்வதுமான கோரணிகளைச் செய்து, தங்கள் சரீரத்திற்குத் தாங்களே தீங்கு செய்துகொள்ளும் பைத்தியக்காரருக்கு இரங்கும்.

அவர்கள் துன்பத்தைக்கண்டு, அவர்களுக்கு இரங்கும், கர்த்தாவே.

நன்மைசெய்யத் தீமையும், சிநேகித்தவிடத்து விரோதமும் விளைந்ததினால் மனமுடைந்து போயிருக்கிறவர்களுக்கு இரங்கும்.

அவர்கள் துன்பத்தைக்கண்டு, அவர்களுக்கு இரங்கும், கர்த்தாவே.

---

* Acts of Devotion

அநியாயமாகக் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள், பணநஷ்டம், கடன், பிழைப்புக்கு வழியில்லாதிருத்தல் ஆகிய நிர்ப்பந்தங்களினிமித்தம் கலக்கமும் திகிலும் கொண்டிருப்பவர்கள்—இவர்களுக்கு இரங்கும்.

அவர்கள் துன்பத்தைக்கண்டு, அவர்களுக்கு இரங்கும், கர்த்தாவே.

க்ஷயரோகம் குஷ்டரோகம் முதலிய நீடித்த தீராவியாதிகளினால் பீடிக்கப்பட்டு, தைரியத்தை யிழந்து, துன்பத்தைச் சகிக்கக்கூடாமல் தவிக்கும் உமது அடியாருக்கு இரங்கும்.

அவர்கள் துன்பத்தைக்கண்டு, அவர்களுக்கு இரங்கும், கர்த்தாவே.

சிறையிலும் வியாதிப் படுக்கையிலும் அடைபட்டு, தேகத்திற்கும் மனத்திற்கும் உற்சாகம் தரும் வேலை விளையாட்டுகளுக்காக ஏக்கங் கொண்டிருக்கும் யாவருக்கும் இரங்கும்.

அவர்கள் துன்பத்தைக்கண்டு, அவர்களுக்கு இரங்கும், கர்த்தாவே. ஆமென்.

*கிறிஸ்து பெருமானே, இரக்க உருக்கமாய் எங்கள் துன்பங்களைக் கவனியும்.

உமது மிகுந்த கிருபையால் உமது பிள்ளைகளின் பாவங்களை மன்னியும்.

கிருபையாக எங்கள் ஜெபங்களைக் கேளும்.

ஓ தாவீதின் குமாரனே, எங்கள்மீது கிருபையாயிரும்.

ஓ கிறிஸ்துவே, இப்பொழுதும் எப்பொழுதும் எங்கள் மன்றாட்டைக்கேட்டு, எங்களைக் காக்க தயை மிகுத்திரும்.

கிறிஸ்துவே கிருபையாயிரும்; கர்த்தராகிய கிறிஸ்துவே கிருபையாயிரும்.

ஓ கர்த்தாவே, உமது காருண்யமென்னும் பனியை எங்கள்மேல் ஊற்றியருளும்.

ஏனெனில் நாங்கள் உம்மையே நம்பியிருக்கிறோம். ஆமென்.

---

* Acts of Devotion

குடும்பத்தில் வியாதியாயிருப்பவருக்காக

*இதோ கர்த்தாவே, நீர் நேசிக்கும் உமது பிள்ளை வியாதிப்படுக்கையிலிருக்கிறான் (ள்). நீர் வந்து உமது அற்புதக் கரத்தால் அவனை (ளை)த் தொடும். அப்பொழுது அவன் பிழைப்பான். ஜீவாதிபதியே, எங்கள் அன்புக்குரிய...............னை நீர் கண்ணோக்கும். அவனுக்குப் புது பெலன் தந்து அவனைக் குணமாக்கும்.

சரீரம் பலவீனப்பட்டிருக்கும் இவ்வேளையில் உமது ஆவியின் திடப்படுத்தலையும் உமது அன்பின் பலத்தையும் அவனுக்குக் கொடுத்தருளும். உம்மை நேசிப்போருக்கு நேரிடும் சுகதுக்கங்கள் யாவும் நன்மையாகவே முடியுமாதலால், அவனுடைய விசுவாசத்தை உறுதிப்படுத்தி, உமது கருணையை அவன் உள்ளத்திலே பொழிந்து, இந்த சுகவீனத்தின் மூலமாக அவன் உம்மை அறிகிற அறிவிலும் உம்மை நேசிக்கும் நேசத்திலும் பெலன்கொண்டெழும்பக் கிருபை செய்யும்.

நாங்கள் எங்கள் கரிசனையினால் மட்டுமல்ல, விசுவாசத்தினாலும் தைரியத்தினாலும் அவனுக்குத் தைரியமூட்டத் துணைசெய்யும். சிகிச்சைசெய்யும் வைத்தியரின் திறமையும் மருந்துகளின் சக்தியும் உமது கிருபையின் சின்னங்களாகமட்டுமே இருப்பதால், உமது கிருபையையே நம்பி, எங்கள் கவலையை ஸ்தோத்திரத்தோடுகூடிய ஜெபத்தினால் உமக்கு ஏறெடுத்து விட்டோம். எங்களுக்கிரங்கிக் கிருபைபுரியும், அன்புள்ள பரமபிதாவே. ஆமென்.

ஜெபம்பண்ணுவோம்:—

†எல்லாம் வல்ல இறையே! இத்தருணத்தில் நாங்கள் ஒன்றுகூடி எங்கள் விண்ணப்பங்களை உமக்கு ஏறெடுக்கக் கிருபைசெய்தீர். எங்கே இரண்டு மூன்றுபேர் உமது நாமத்தில் கூடியிருக்கிறார்களோ, அங்கே நீர் எழுந்தருளி அவர்கள் ஜெபங்களைக் கேட்போமென்று வாக்களித்திருக்கிறீர். உமது எல்லையற்ற ஞானத்தில் எது உசிதமென்று காணப்படுகிறதோ, அதற்கேற்க எங்கள் மன்றாடல்களுக்குப் பதிலளித்து உமது வாக்கை எங்களுக்கு நிறைவேற்றும். இம்மையில் உமது சத்தியத்தை அறியும் அறிவையும், மறுமையில் நித்திய ஜீவனையும் தந்து எங்களை ஆசீர்வதியும், காருண்யக் கடவுளே.

ஆமென்.

---

* Bishop Carpenter † Acts of Devotion

வாரம் 3

புதன் **மாலே**

எங்கள் அன்புள்ள மேய்ப்பரே!

சேவிகொடும்.

இஸ்ரவேலரை ஆட்டுமந்தையைப்போல் நடத்தினவரே!

சேவிகொடும்.

கேருபீன்கள் மத்தியில் வாசமாயிருப்பவரே!

சுடர் வீசிப் பிரகாசியும்.

தேவனே, எங்களேச் சிறைமீட்டுத் திருப்பி உமது முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்.

அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்.

உமது கரத்தால் எங்களே அணைத்துக்கொள்ளும்.

அப்பொழுது நாங்கள் பின்வாங்கமாட்டோம்.

சங். $80^{1,3,18}$.

ஆண்டவரே நீர் நல்லவர்; நீர் அடியார் செய்யும் பிழைகளேப் பொறுக்கிறவர்.

உம்மை நோக்கிக் கூப்பிடும் யாவர்மேலும் கிருபை மிகுந்தவர்.

உம்மை நம்பியிருக்கும் அடியாராகிய எங்களே இரட்சியும்.

உமது அடியாருடைய ஆத்துமத்தை மகிழ்ச்சியாக்கும்.

சங். $86^{5,2,4}$.

மாலே ஜெபம்

*கிருபை மிகுந்த தெய்வமே, இந்த இரவில் எங்களோடு தங்கி நாங்கள் மெய்மறந்து தூங்கும் வேளேயில் எங்களேத் தீங்கணுகாமல் காத்துக்கொள்ளும். நிலேயற்ற உலகத்தின் மாறுதல்களினுலும் எதிர்பாராத சம்பவங்களாலும் சோர்ந்துபோயிருக்கும் எங்கள் மனம் நேற்றும் இன்றும் என்றும் மாருத உமது பூரண சாந்த நிலேயில் இளேப்பாறுதல் கண்டடைய வேண்டும். நித்திய கிறிஸ்துவாகிய எங்கள் கர்த்தரினிமித்தம் எங்கள் ஜெபத்தைக் கேட்டிரங்கும், தேவனே. ஆமென்.

---

* Acts of Devotion

துயரப்படுவோருக்காக

பெற்ருேரும் உற்ருேரும் வைத்தியரும் பிணியாளிகளுக்குக் காட்டும் கரிசனைக்காக,

தயைமிகும் தந்தாய், நமஸ்காரம்.

ஆபத்திலிருப்பவர், காயப்பட்டோர், வெள்ளம், நெருப்பு, பூகம்பம் முதலிய விபத்துக்களால் வீடுவாசலை இழந்து கஷ்டப்படுவோர் ஆகிய துயருற்றவர்களுக்கு ஜனங்கள் உற்சாகமாய்ச் செய்துவரும் உதவிக்காக,

தயைமிகும் தந்தாய், நமஸ்காரம்.

பஞ்சத்திலும் கொள்ளைநோயிலும் ஜனங்கள் காட்டும் தைரியத்திற்காகவும், ஒருவருக் கொருவர் செய்யும் உதவிக்காகவும்,

தயைமிகும் தந்தாய், நமஸ்காரம்.

சிறைச்சாலையி லிருப்பவரைச் சீர்ப்படுத்தவும், கொலைத் தீர்ப்புக்காகக் காத்திருப்பவர்கட்கு ஆறுதலளிக்கவும், குற்றஞ்செய்த பாலியருக்குப் படிப்பும் தொழிலும் நல்லொழுக்கமும் கற்பிக்கவும் கையாளப்படும் எல்லா நல்ல முயற்சிகளுக்காகவும்,

தயைமிகும் தந்தாய், நமஸ்காரம். ஆமேன்.

பரமபண்டிதராகிய கிறிஸ்துவே!

பிணியாளிகள்மீது கிருபைகூர்ந்து இரங்கும்.

பிறவிக் குருடனுக் கிரங்கிப் பார்வை யளித்துதவிய தாவீதின் குமாரனே,

அந்தகருக்கிரங்கி, கண்வைத்தியர் செய்யும் சிகிச்சைகளைப் பலிதப்படுத்தும்.

திமிர்வாதக்காரனின் பாவத்தை மன்னித்து, அவனைத் தன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடக்கச்செய்த பாவநாசகரே,

எங்கள் பாவத்தினுல் விளையும் கொடிய வியாதிகளிலிருந்து எங்களையும், விசேஷமாகத் தீங்கறியாத பாலகரையும், காத்து இரட்சியும்.

உமது அங்கியை விசுவாசத்தோடு தொட்ட ஓர் அணங்குக்கு அவளைப் பல்லாண்டுகளாய் வாதித்துவந்த கொடிய வியாதியிலிருந்து இமைப்பொழுதில் ஆரோக்கியமளித்த தெய்வகுமாரனே!

நீண்ட வியாதியிலகப்பட்டு மனஞ் சோர்ந்திருக்கும் யாவருக்கும், உம்மைப் பற்றும்படியான விசுவாசத்தை ஊட்டி, சுகத்தையும் சந்தோஷத்தையும் கொடுத்தருளும்.

கர்த்தாவே என்னைக் குணமாக்கும், அப்பொழுது குணமாவேன்; என்னைக் காப்பாற்றும், அப்பொழுது நான் பிழைப்பேன்.

தேவரீர் ஒருவரே என் வணக்கத்திற்குப் பாத்திரர். எரே. 17[14].

அல்லேலூயா, ஆமேன்.

ஜெபம்பண்ணுவோம்:—

எங்கள் நல்ல தேவனே உமது அதிசய சிருஷ்டியின் அழகைக் குலைப்பது எங்கள் பாவமென்றே உணருகிறோம். நாங்கள் யாவரும் எப்பொழுதும் இன்புற்று வாழ வேண்டுமென்பதே உமது விருப்பமாயிருக்க, எங்கள் சோம்பலினாலும் அசுத்தத்தினாலும் ஒழுங்கற்ற ஜீவியத்தினாலும் அநேகவித பாவங்களாலும் நாங்களே எங்களுக்கு வினையைத் தேடிக்கொள்ளும் மதியீனராயிருக்கிறோம். ஆதலால் நாங்கள் தனித் தனியாகவும் கூட்டமாகவும் அனுசரிக்க வேண்டிய சுகாதார முறைகளையும் நேர்மையான ஜீவியத்தையும் கைநெகிழவிடாமலிருக்க எங்களுக்குப் புத்தி புகட்டும். சாஸ்திரத் தேர்ச்சியால் பிணிகளைப் போக்கும் வழிவகைகளை உமது பிள்ளைகளுக்கு நீர் வெளிப்படுத்தி வருவதோடு கூட, ஆதித் திருச் சபைக்கு நீர் அளித்திருந்த வரங்களி லொன்றாகிய பிணிதீர்க்கும் வரத்தையும் உமது பிள்ளைகளிற் சிலருக்குத் தந்து, அதனால் நீர் மாந்தருக்குள் நற்செயல்கள் செய்ய இன்றும்காத்திருக்கிறீரென்ற உண்மையை யாவருக்கும் எளிதில் புலப்படுத்தும். கிறிஸ்து பெருமானின் திருமுகத்தைப் பார்த்து இந்த வேண்டுதல்களுக்குச் செவிசாய்த்தருளும், தெய்வமே. **ஆமேன்.**

கைதிகளுக்காக

*கிறிஸ்து பெருமானே, ஆடுகளின் உத்தம மேய்ப்பரே! நீர் உமது மந்தையும் மேய்ச்சலின் ஆடுகளுமாகிய எங்களில் காணமற் போனதைத்தேடி, ஊனப் பட்டதைக் காயங்கட்டி, நசல் கொண்டதை குணமாக்குகின்றீர். சிறையிலிருக்கும் கைதிகளைக் கடைக்கண்பாரும். அவர்களை நன்னெறியிற் செலுத்த முயலும் யாவருக்கும் அறிவையும் அனுதாபத்தையும் கொடும். அறநெறி விலகி யலையும் உமது பிள்ளைகள் தங்கள் இரட்சிப்புக்கு அவசியமான உமது சத்தியவசனத்தைக் கேட்கும்படி அவர்கள் செவியைத் திறந்தருளும். அதனால் சீரடைந்து நவஜீவியம் செய்யத் தீர்மானிக்கும் யாவருக்கும் உமது கிருபையைத் தந்து, அவர்கள் கடைசிமட்டும் உத்தமராகப் பிழைக்கத் துணை செய்ய வேண்டுமென்று உமது நாம மகிமைக்கென்றே உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம், தெய்வமே. **ஆமேன்.**

---

* Guild of Saints Paul and Silas

வாரம் 3

வியாழன் **காலை**

ஆண்டவரே, தேவரீர் தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு அடைக்கலமானீர்.

பர்வதங்கள் தோன்று முன்னும் பூமி உருவாகு முன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்.

நீர் மனுஷரை நிர்த்தூளியாக்கி, மனுப்புத்திரரே திரும்புங்கள் என்கிறீர்.

உமக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக் கழிந்த ஒரு நாள் போலவும், இரவின் ஒரு சாமம் போலவும் இருக்கிறது.

உமது கோபத்தின் அகோரத்தை அறிந்தவன் யார்?

உமக்குப் பயப்படும்படி உமது உக்கிரத்தின் கொடுமையைக் கண்டவன் யார்?

ஆண்டவரே நாங்கள் எங்கள் மனத்தை ஞானத்திற் செலுத்தும் படி, எங்கள் நாட்களை எண்ணிக் கணக்கிட்டுக்கொள்ள எங்களுக்குக் கற்பியும். ஆமென். சங். 90[1,4,11,12].

காலை ஸ்தோத்திரம்

*எங்களை இரட்சிக்கும் தேவனாகிய கர்த்தாவே, நீர் செய்வதெல்லாம் எங்கள் நன்மைக்கென்றே செய்வதால், உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்கள் ஆத்தும நேசரே, நாங்கள் உம் திருமுகத்தையே என்றும் நோக்கி நிற்கிறோம். சென்ற இரவில் எங்களை இளைப்பாற்றி, இப்பொழுது எங்களை எழுப்பி, உமது உன்னத நாமத்தைப் பூஜிக்கச் சேர்த்தது உமது கிருபையே. நாங்கள் உம்மை ஊக்கத்தோடும் உண்மையோடும் வந்திக்க அருகராகவேண்டும். நாங்கள் இடைவிடாது உம்மை நோக்கி ஜெபிக்கவும், பயத்தோடும் நடுக்கத்தோடும் எங்கள் இரட்சிப்பைத் தேடிக்கொள்ளவும் எங்களுக்குக் கிருபைபுரிய வேண்டுமென்று, கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் மூலமாகக் கேட்டுக்கொள்ளுகிறோம், பிதாவே. ஆமென்.

---

* Eastern Church Liturgy

தெய்வ நடத்துதலுக்காக

*தேவனே, நான் உம்மை நம்புவேன், உம்மை நேசிப்பேன், உம்மையே ஆராதிப்பேன்.

என் முழு இருதயத்தோடும் முழு மனதோடும் முழு ஆத்துமனேடும் முழு பலத்தோடும் உம்மை நேசிப்பேன்.

நான் உம்மைத் தொழுதுகொள்ளுவேன், உமக்கு நன்றி செலுத்துவேன், உம்மையே நம்பிப் பிழைப்பேன்.

தேவனே, நான் உம்மை நோக்கி அபயமிடுவேன், உமது திருநாமத்தையும் திருவசனத்தையும் கனப்படுத்துவேன், உமது நடத்துதலுக்குக் கீழடங்கி உம்மையே சேவிப்பேன்.

தேவனே, உமது அருட்பிரசன்னம் ஊட்டும் ஆத்மபலத்தால் இப்படிச் செய்வேனென்று துணிந்துள்ளேன். ஆதலால் நீர் துணை செய்யும், நல்ல கர்த்தாவே. ஆமேன்.

உமது அதிசய ஞானத்தால் நடத்தப்பட்டு, உலகம் தரக்கூடாத சமாதானத்தைப் பெற்றிருந்த பக்தர் யாவருக்காகவும்,

தேவனே, உம்மைத் துதிக்கிறேம்.

உமது அதிசய ஞானத்தால் நடத்தப்பட்டு, உமது நாம மகிமைக்கும் மாந்தர் ஈடேற்றத்திற்கும் அனுகூலமாய்ப் பிழைத்த உம் தொண்டர் யாவருக்காகவும்,

தேவனே, உம்மைத் துதிக்கிறேம்.

நீர் அழைத்தபோது இனம் ஜனம் யாவற்றையும் துறந்து, தத்தம் சிலுவையைச் சுமந்துகொண்டு, அநுதினமும் உம் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் சென்ற பக்த சிரோமணிகள் யாவருக்காகவும்,

தேவனே, உம்மைத் துதிக்கிறேம்.

உமது கரம் சுயத்தியாகத்திற்கும் குரூர மரணத்திற்கும் நடத்திச் சென்றபோதும் உம்மிடம் தாம் கொண்ட பக்தி சிறிதும் குன்றவிடாமல் காத்துக்கொண்ட இரத்தச் சாக்ஷிகளுக்காக,

தேவனே, உம்மைத் துதிக்கிறேம். ஆமேன்.

சாந்த குணமுள்ளவர்களுக்குத் தேவன் தமது வழியைப் போதித்து, அவர்களை நேர்மையான வழியில் நடத்துகிறார்.

ஆதலால் ஆண்டவரே, எங்களைச் சாந்த குணமுள்ளவர்களாக்கும்.

---

* Acts of Devotion

கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடமிருக்கிறது; அவர்களுக்குத் தமது உடன்படிக்கையைத் தெரிவிக்கிறார். சங். 25[9,14].

ஆதலால் ஆண்டவரே, நாங்கள் உமக்குப் பயந்து பிழைக்கக் கிருபைபுரியும்.

அந்தகாரத்திலும் மரண இருளிலு மிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தர உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயமே!

எழும்பி, எங்கள் பாதையில் பிரகாசியும்.

எங்கள் கால்களைச் சமாதான வழியில் நடத்த உன்னதத்திலிருந்து தோன்றிய நீதியின் சூரியனே! லூக். 1[78,79].

எங்களைச் சந்தித்து, ஜீவபாதையில் நடத்தும்.

நாங்கள் கையிட்டுக்கொண்ட கருமங்களில் சித்தியடைவதற் கென்று அனுஷ்டானிக்கும் முறைகளில் சுயநலமும் பொருளாசை யும் புகுந்துகொண்டு எங்களை ஏமாற்றும்பொழுது,

எங்களைத் தடுத்தாட்கொள்ளும், தயவுள்ள கர்த்தாவே.

எங்களுக்குத் தீமை செய்பவர்களைக் குறித்து நினைக்கும்போதும், அவர்களுக்கு என்ன செய்யலாமென்று யோசிக்கும்போதும், கோபம் சகியாமை பழிவாங்குதலாகிய அன்பற்ற சுபாவங்கள் எழும்பி எங்கள் கால்களைத் தடுமாறச் செய்யும்பொழுது,

எங்களைத் தடுத்தாட்கொள்ளும், தயவுள்ள கர்த்தாவே.

மிகச் சிக்கலான வியாபாரமுறை, மத அனுசாரம், பொதுஜன ஒழுக்கம் இவைகளில் நாங்கள் உமது சித்தம் என்னவென்று அறிந்து கொள்ளக்கூடாமற் கலங்கும்பொழுதும், கடினமான உமது கற்பனை களின்படி நடக்க பயந்து உலக மக்களோடு இணங்கிப்போக விரும்பும் பொழுதும்,

எங்களைத் தடுத்தாட்கொள்ளும், தயவுள்ள கர்த்தாவே.

நாங்கள் எவருடைய சிநேகத்தைத் தேட வேண்டுமென்றும், எவ ருடைய ஆலோசனையைக் கேட்க வேண்டுமென்றும், எப்பொழுது எப்படித் தீமையைக் கண்டிக்க வேண்டுமென்றும் தோன்றாமல் நின்று திகைக்கும்பொழுது,

எங்களைத் தடுத்தாட்கொள்ளும், தயவுள்ள கர்த்தாவே. ஆமேன்.

*அரூபியாய் சிரஞ்சீவியாய் மெய்ப்பொருளாயுள்ள அமரர் கோனே, உமது வீரபக்தரின் உத்தம ஜீவியத்தை எங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டலாகவும் மாதிரியாகவும் நீர் வைத்திருக்கிறீர். அவர்கள் அநுபவித்த ஆத்ம சாந்தியே நாங்கள் அழைக்கப்பட்டிருக்கும் உன்னத அழைப்பின் நம்பிக்கை ஒருபோதும் அவமாகாதென்று உறுதி பகருகின்றது. மேகம்போன்ற இத்தனை திரளான சாக்ஷிகள் எங்களைச் சூழ்ந்திருப்பதால், நீர் நியமித்த ஓட்டத்தில் பொறுமையாக ஓடவும், அவர்களோடு நாங்களும் வாடாத ஜீவ கிரீடத்தைப் பெற்றுக் கொள்ளவும் அருள்புரிய வேண்டுமென்று, எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய்க் கெஞ்சி மன்றாடுகிறோம், தெய்வமே. ஆமேன்.

வாரம் 3

வியாழன் **மாலை**

கர்த்தருக்குப் புதிய பாட்டைப் பாடுவேன்.

பூமியின் குடிகளே எல்லாரும் கர்த்தரைப் பாடுங்கள்.

மகிமையும் கனமும் அவர் சமுகத்திலிருக்கின்றன; வல்லமையும் மகத்துவமும் அவர் பரிசுத்த ஸ்தலத்திலிருக்கின்றன. சங். $96^{1,6}$.

இரக்கத்தையும் நியாயத்தையும் குறித்துப் பாடுவேன்.

கர்த்தாவே, உம்மைக் கீதங்களால் அஞ்சலிப்பேன்.

உத்தமமான வழியிலே விவேகமாய் நடப்பேன்.

என் வீட்டில் சுத்த இருதயமுள்ளவனாய் நடந்துகொள்ளுவேன்.

தேவரீர், எப்பொழுது என்னிடம் வருவீர்? சங். $101^{1,2}$.

நீரே சதாகாலமும் எமது தேவனாயிருக்கிறீர்.

மரண பரியந்தம் எம்மை நடத்துகிறவரும் நீரே! சங். 48^{14}.

தெய்வ நடத்துதலுக்காக

†கர்த்தாவே உமது அமரிக்கை எங்கள் நடுவிலும், உமது சமாதானம் எங்கள் நெஞ்சத்திலும் குடிகொண்டிருக்கச் செய்யும். எங்கள் வாய் உமது சத்தியத்தைப் பேசவேண்டும். உமது சிலுவை எங்களை நடத்தி இரக்ஷிக்கும் ஆத்தும காவலனாக இருக்கவேண்டும். அபாத்திர

---

* Acts of Devotion † Nestorian Liturgy

ராகிய எங்களுக்கு நீர் வாக்களித்திருக்கும் புத்திர சுவிகாரம் தரும் துணிவால் உமது சமுகத்தை அணுகிவந்தோம். ஜெபமாகிய பரிசுத்த தூபவர்க்கத்தை உமக்குச் செலுத்த எங்களை யோக்கியராக்க வேண்டுமென்று, கிறிஸ்து பெருமானின் மூலமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம், பரமபிதாவே. ஆமென்.

கர்த்தரோடு நாம் நிலைகொண்டு வசிக்கப்போகும் நித்திய சாம்ராஜ்யத்தில் இருளின் அந்தகாரம் கிடையாது. இங்கும் அவரைப் பின்பற்றுவோமாகில் இருளில் நடவாமல் ஜீவ ஒளியில் நடப்போம்.

தேவனே, உமது சமாதானத்தை எங்களுக்கு இப்பொழுதும் எப்பொழுதும் கொடுத்துதவும்.

பிறந்தநாள்முதல் இதுவரை எங்களைப் பராமரித்ததோடு, பலதரம் எங்களுக்கு உமது திருவுளச் சித்தத்தை வெளிப்படுத்தி எங்களை நடத்தி வந்திருப்பதற்காக,

இஸ்ரவேலின் மேய்ப்பரே, உம்மை போற்றுகிறேம்.

தொன்றுதொட்டு உம்மை நோக்கிக் கூப்பிட்ட உமது பிள்ளைகள் யாவரையும் இலௌகிகப் போராட்டத்திலும் மரண இருளின் பள்ளத்தாக்கிலும் கைப்பிடித்து நடத்திய உமது கருணையை நினைத்து,

இஸ்ரவேலின் மேய்ப்பரே, உம்மை போற்றுகிறேம்.

உமது சித்தமே எமது பாக்கியமென்றும், உமக்குக் கீழ்ப்படிவதே நாங்கள் செய்யத்தக்க மெய்யான பூஜையென்றும் நாங்கள் உணராதிருந்ததை நினைத்து,

மனங் கசிந்து துக்கிக்கிறேம், தெய்வமே.

வேதவசனமும், பெரியோரும், மனச்சாட்சியும் எங்களுக்குக் காட்டிய நல்வழியிற் செல்லாமல், உமது பரிசுத்த ஆத்துமனைத் துக்கப்படுத்தியதை நினைத்து,

மனங் கசிந்து துக்கிக்கிறேம், தெய்வமே.

நானே உன்னைக் கண்பார்த்து என்றும் வழி நடத்துவேனென்று வாக்களித்த தேவனே,

உமது வாக்கை எங்களிடம் நிறைவேற்றும்.

நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேனென்று திருவாய் மலர்ந்த அருட்கோனே,

நாங்கள் உமது வழியிற் செல்லும்படி, உமது ஜீவனுல் எங்களைப் புது சிருஷ்டிகளாக்கி, உமது சத்தியத்தால் எங்கள் சிந்தைகளைத் தெளிவாக்கும்.

நாங்கள் கேட்பது இன்னதென்று அறியாத பேதையர்.

எங்களுக்கு நன்மை பயப்பது எதுவென்றும் உணராத மந்த புத்தியுள்ளோர்.

கிறிஸ்தரசே, நீரே எங்களுக்காக உம் பிதாவோடு பரிந்து மன்றாடும்.

உமக்கு நலமாகத் தோன்றுவது எதுவோ அதையே எங்களுக்குக் கொடும்.

*நாங்கள் உலக வாழ்க்கையில் ஏது சபலமென்று சந்தேகிக்கும் போதும், கடமையைச் செய்யவேண்டுமென்ற வாஞ்சை எங்களில் குன்றும்போதும், சிற்றின்ப நாட்டம் எங்களை மேற்கொள்ளும் போதும், துன்பமும் தோல்வியுமடைந்து வருந்தும்போதும், உழைப்பிலும் ஓய்விலும், தாழ்விலும் வாழ்விலும், இளமையிலும் முதுமையிலும், மரணவேளையிலும்,

நல்ல தேவனே, எங்களோடிருந்து, எங்களை நடத்திக் காத்தருள்வீர். ஆமென்.

உமது சித்தத்தைச் செய்ய விரும்பினும் தம் சுய சித்தத்திற்கிணங்குகிறவர்கள், பரிசுத்த ஜீவியம் செய்ய விரும்பினும் மாமிச இச்சையால்மேற்கொள்ளப்படுமவர், ஜெபிக்கத்தெரியாது திகைப்பவர், எதிர்மாறான எண்ணங்களால் அலைசடிப்படும் சபலசித்தமுடையவர், தம் ஜீவிய ஓட்டத்தில் தகைத்துப்போனவர், வேறெக் காரணத்தாலும் உம்மைப் பின்பற்றக்கூடாதவர் ஆகிய பலவீனர் யாவரையும் உமது காருண்ய ஆட்சிக்கு ஒப்புக்கொடுக்கிறோம். நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்களென்று போதித்த எம்மெய்க் குருவே, இவர்களுள்ளங்களில் தோன்றும் நல்ல வாஞ்சைகள் அற்பமாயிருப்பினும் அவற்றை ஸ்திரப்படுத்தி, அவர்களையும் எங்களையும் உமது கரத்தால் பிடித்து நித்திய வழியிலே நடத்த வேண்டுமென்று, உம்மைக் கெஞ்சிப் பிரார்த்திக்கிறோம். **ஆமென்.**

(கண்ணிகள்)

"அப்பா சர்வஞ்ஞ நாதா நட்பா யருகிருந்தால், எப்போதேனு மஞ்சுவேனோ—சதி நிறைந்த இப்பாரில் நொந் தழுவேனோ?

அம்போதிமேல் நடந்த போன் பாதம் தஞ்சமென்றே, நம்பாத பேதை நான் ஐயா—துன்பக் கடலில் தம்பமுன் சேங்கரமையா.

---

* Acts of Devotion

பாலனைக் கைப்பிடித் தென்னாளும் நடத்துமன்னே, போலயெனை நடத்தையா—உன் கரத்தை என்னாலே பற்ற யேலாதையா.

வேறிங் கெனக்குதவி யாரு முண்டாவரேனில், கூறித் தொலைத் தகற்றுமேன்—உனைத் தினமும் மாறி நானே னலட்டுவேன்?

இன்றுமெனைக் கைவிட்டுப் பொன்று நரகிலிட்டுக், கொன்றுலும் உன்னை நாடுவேன்—அங்குமிருந்து மன்றாடி என்றும் பாடுவேன்.” ஆமென்.

வாரம் 3

வெள்ளி

காலை

என் ஆத்துமமே கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி.

என் ஆத்துமமே கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.

அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கினார்.

அல்லேலூயா!

அவர் உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டினார்.

அல்லேலூயா!

கர்த்தர் வானங்களில் தம் சிம்மாசனத்தை ஸ்தாபித்தார்.

அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது.

கர்த்தரின் சாம்ராஜ்யத்திற்குள் வசித்துவரும் சர்வ சிருஷ்டிகளும் அவரை ஸ்தோத்திரிக்கட்டும்.

என் ஆத்துமமே நீயும் கர்த்தரை ஸ்தோத்திரி. சங். 103^1-4^, 19, 22.

கிறிஸ்து சபையின் ஐக்கியத்திற்காக

பிதாவாகிய தேவனுக்கும் குமாரனாகிய கிறிஸ்துவுக்கும் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆத்துமனுக்கும் நமோ, நம!

கிறிஸ்து பெருமானே உலகமெங்குமுள்ள பரிசுத்த பொதுச் சபைக்காக உம்மை நோக்கி மன்றாடுகின்றோம். எங்கெங்கே உம் தொழும்பர் கூடி உம்மைப் பூஜிக்கின்றார்களோ, அங்கெல்லாம் சபா

நாயகராக நீர் எழுந்தருளி ஆசீர்வதிக்கின்றீர் என்பதை கிறிஸ்தவர்களி லொருவரும் மறந்து போகாதிருக்கக் கிருபை செய்யும். பெருமை, சகி யாமை, பரிசுத்த ஆத்துமனின் கிரியைத் தத்தம் குழுவிற்குப் புறம்பே காண மன்மற்றிருக்கச் செய்யும் முரட்டாட்டம் முதலிய தீமைகளின்று கிளைச்சபைகள் யாவற்றையும் தடுத்துக் காத்தருளும், சபாநாயகரே. ஆமென்.

அபிப்பிராய பேதத்தால் எங்களோடு ஒருமித்து உம்மை ஆராதிக் கக்கூடாதிருப்பினும், உமது திருநாமத்தைத் தரித்துக்கொண்டு உம்மையே தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு வழிபடும் சோதர ரிடம் நாங்கள் பொறுமையைக் கையாடவும், அவரிடம் காணப்படும் குறைகளை மறந்து குணத்தைப் போற்றவும் எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், நல்ல கர்த்தாவே.

அவமானம் வெட்கம் மற்றும் பல பாதகங்களினின்றும்; அநீதிக் குக் கைகொடுத்து, அக்கிரமத்திற்கு இணங்கிப் போவதினின்றும்; நிலையற்ற ஜீவியம், அபிப்பிராய பேதங்கள் தெளிவற்ற போதனையினால் நேரிடும் தடுமாற்றம் முதலிய விக்கினங்களினின்றும் திருச்சபையைத் தடுத்து இரட்சிக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், நல்ல கர்த்தாவே.

திருச்சபை உலகிற்கு ஒளியாய் இலங்கவும், மலையின்மேல் கட் டப்பட்ட பட்டணத்தைப்போல் அலங்காரமாய்த் தோன்றவும் வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், நல்ல கர்த்தாவே.

சுவிசேஷத்தைச் சகல மனிதருக்கும் அறிவித்து, ஆத்ம சுயா தீனத்தைத் தரும் உமது சத்தியத்தை நிலைநாட்டி, பாவத்தை வெறுத் துச் சீர்பெற விரும்பும் யாவரையும் நீர் மன்னிக்கக் காத்திருக்கிறீ ரென்று கூறி, நெறி தவறி அலைபவரைத் தேடவும், பேயின் அடிமைக ளாயிருப்பவரைச் சிறைமீட்டு இரட்சிக்கவும் குன்றா ஆர்வத்தோடு முயற்சி செய்வதில் பிரிந்து நிற்கும் சபைகள் ஒற்றுமைப்பட வேண்டு மென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், நல்ல கர்த்தாவே.

ஆழ்ந்த மகிழ்ச்சியாய் உம்மை ஆராதிப்பதிலும், நன்மை செய்ய நாடும் யாவருக்கும் கைக்கொடுத்து உதவுவதிலும், எந்நிலையிலிருக்கும் யாவரையும் அநுதாபத்தோடு கவனிப்பதிலும், தரித்திரருக்கும் ஒடுக்

கப்படுபவருக்கும் துணை நிற்பதிலும், கிறிஸ்தவ சபைகள் ஒற்றுமைப் பட வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம், நல்ல கர்த்தாவே.

உமது சிருஷ்டியில் தோன்றும் வியக்கத்தக்க உமது மகிமைக்காகவும், மனிதர் உமது ஞானத்தால் நடத்தப்பட்டுச் செய்திருக்கும் அற்புதங்களுக்காகவும், திருச்சபையைப்பற்றி மாந்தர் கொண்டிருக்கும் அபிமானத்திற்காகவும், உமது இராஜ்யத்தின் பிரமாணங்களால் உலக வியவகாரங்களைத் தீர்ப்புச் செய்வதில் பிரிவினைகளை மறந்து, கிறிஸ்துவினடியார் யாவரும் ஒருமனப்பட் டிருப்பதற்காகவும்,

கர்த்தாவே உம்மைப் போற்றி, உமது பரிசுத்த நாமத்தை வாழ்த்துகிறேம்.

பரம இராஜ்யமும் அதன் நீதியும் சிறிது சிறிதாக உலகிற்குப் புதிய எண்ணங்களையும் புதிய ஜீவனையும் கொடுத்துவருவதற்காகவும், கடுகு விதையைப்போலிருக்கும் இந்த இயக்கம் வளர்ந்தோங்கும் பொழுது உண்டாகக் கூடிய சிலாக்கிய பாக்கியங்களுக்காகவும், இவ்வியக்கத்திற்கு அநுகூலமாக இருந்த உமது உத்தம தொண்டர் யாவருக்காகவும், அவர்களால் ஏற்படும் பரிசுத்தவான்களின் ஐக்கியத்திற்காகவும்,

கர்த்தாவே உம்மைப் போற்றி, உமது பரிசுத்த நாமத்தை வாழ்த்துகிறேம். ஆமேன்.

*தந்தையாகிய தெய்வமே, நன்மைக்கெல்லாம் மேலான நன்மையே, அழகிலெல்லாம் சிறந்த அழகே, அமைதிக்கும் ஒற்றுமைக்கும் சமாதானத்திற்கும் உறைவிடமான பரமாத்மனே நமோ! உமது திவ்விய சொரூபத்தை நாங்கள் ஒரு சிறிதேனும் பெறத்தக்கதாக, எங்களையும் எங்கள் சபைகளையும் பிரித்துச் சிதைக்கும் யாவற்றையும் அகற்றிவிட்டு, சிநேகத்தால் எங்களை ஒருமைப்படுத்தும். நீர் யாவற்றையும் கடந்து நிற்பதுபோல், நாங்களும் கீழ்த்தரமான உண்மைகளைப் பிடித்துச் சாதிப்பதைக் கடந்து, இணக்கத்தினலும் அநுதாபத்தினலும் ஆவியின் ஒருமைப் பாட்டை நாடக் கிருபைசெய்யும். யாவற்றையும் சமரசப்படுத்தும் உமது சமாதானத்தாலும், உமது திருக்குமாரனின் கருணையாலும் இவ்விண்ணப்பத்திற்குச் செவி சாய்த்திடும், தேவனே. ஆமேன்.

---

* St. Dionysius

வாரம் 3

வெள்ளி **மாலை**

அல்லேலூயா கர்த்தரைத் துதியுங்கள்.

அவர் நல்லவர், அவர் கிருபை என்றும் நிலையான கிருபை.

கர்த்தருடைய வல்லமையான செய்கைகளைச் சொல்லுங்கள்.

அவருடைய துதியை யாவரும் பிரஸ்தாபப்படுத்துங்கள்.

கர்த்தாவே நீர் தெரிந் தெடுத்தவர்களின் வாழ்வைக்கண்டு, உமது ஜனமான சபையின் மகிழ்ச்சியில் மகிழ்ந்து, உமது சுதந்தரமாகிய பக்தர் குழாமோடு மேன்மைபாராட்ட விரும்புகிறேன்.

கர்த்தாவே, உம்முடைய ஜனங்களிடம் நீர் காட்டும் கிருபையை என்மீதும் பாராட்டி, உமது இரட்சிப்பை எனக்கு அளிக்கும்படி என்னைச் சந்தியும்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் முக்காலத்தும் ஸ்தோத்திரிக்கப்படத் தக்கவர்.

ஜனங்களெல்லாரும் ஆமேன், அல்லேலூயா! என்று ஆர்ப்பரிக்கட்டும். சங். $106^{1-5,48}$.

மாலை ஜெபம்

*இளைப்புண்டாக்கும் பகலை இரவென்னும் திரையால் மறைத்து, எங்களுக்கு இளைப்பாறும் நேரத்தைத் திட்டஞ்செய்த நல்லதேவனே, பரம சமாதானத்தால் எங்களைப் போர்த்திவிடும். எங்கள் வேலைத் தொல்லைகள் யாவற்றையும் எங்கள் தோள்களிலும் மனங்களிலுமிருந்து எடுத்து நீரே சுமந்துகொள்ளும். அப்பொழுது நாங்கள் சுகநித்திரை யடைந்து இளைப்பாறுவோம். பலவீனராகிய நாங்கள் உமது அளவற்ற பலத்தில் சார்ந்து, நாளைக்கு நீர் எங்களுக்குக் கொடுக்கும் கடமைகளைச் செய்யவும், நேரிடும் துயரங்களைத் தாங்கவும், உத்தரவாதங்களைச் சுமக்கவும் புதிய பலத்தைப் பெற்றுக் கொள்ளுவோம். உம் அன்புக்குரியவர்களுக்கு நித்திரையளித்துத் தேற்றும் தேவனே, கிறிஸ்து இயேசுவினிமித்தம் எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும். **ஆமேன்.**

---

* Acts of Devotion

கிறிஸ்து சபையின் ஐக்கியத்திற்காக

திருச்சபையின் மூலைக்கல்லும் அஸ்திபாரமுமாயிருக்கும் கிறிஸ்து பெருமானே,

உமது சபையை ஆசீர்வதியும்.

உமது விலையற்ற இரத்தத்தால் அதைக் கிரயங்கொண்டு, கறை திரையற்ற கன்னிகையாக்க வந்த தெய்வ குமாரனாகிய மணவாளனே,

உமது சபையை ஆசீர்வதியும்.

உமக்குள் யூதனென்றும் கிரேக்கனென்றும், அடிமையென்றும் சுயாதீனனென்றும், ஆணென்றும் பெண்ணென்றும் உலகம் வரை யறுத்திருக்கும் பாகுபாடுகளில்லாததால், உம்மைத் துதிக்கிறோம்.

இயேசுநாதா, உமது சபையின் பிரிவினைகளை நீக்கியருளும்.

உலக மாய்கையி லகப்பட்டு, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளத் தெரியாதிருக்கும் பேதையருக்கு நவஜீவனாக விளங்கும் கிறிஸ்துவே,

இந்த நவஜீவனைப் பெற்றுக்கொள்ளுவதால் வரும் உன்னத ஐக்கியத்தை உமது சபைக்கு ஈந்தருளும்.

மூட பக்தியிலும் சடங்காச்சாரத்திலும் புறம்பான கைங்கிரியங் களிலும் கட்டுண்டு கிடப்பவருக்கு விடுதலைகொடுக்கும் சத்தியமே,

புராதன அனுஷ்டானங்களுக்கு உமது சபை அடிமைப்பட்டுப் போகாதபடி அதைக் காத்துக்கொள்ளும்.

எம் பரமபிதாவுடன் ஐக்கியப்பட எங்களை நடத்திச்செல்லும் மெய்வழியே,

உமது நாமத்தைத் தரித்திருக்கும் யாவரும் ஏகோபித்து உம்மைத் தொடர்ந்து செல்லக் கிருபை செய்யும். ஆமென்.

கல்விச்சாலை வைத்தியசாலை சுவிசேஷப் பிரபல்யம் முதலிய திருப்பணிவிடைகளில் பிரிந்து நிற்கும் சபைகள் ஒத்துழைக்கும் நற்காலம் பிறந்திருப்பதற்காக,

கிறிஸ்து பெருமானே, உம்மை மனமகிழ்ச்சியுடன் துதிக்கிறோம்.

பொதுஜன ஒழுக்கக்கேடும், யுத்தவெறியும், பொருளாசையும் ஜனசமுதாயத்தை நிலைகுலையச்செய்ய எழும்பிய அநேக சமயங்களில், சபையின் இரு பெரும் கக்ஷிகளாகிய ரோம சபையும் புரட்டஸ்டண்ட் சபையும் ஏககுரலாய் எச்சரித்துப் பேசியிருப்பதற்காக,

கிறிஸ்து பெருமானே, உம்மை மனமகிழ்ச்சியுடன் துதிக்கிறேம்.

கிறிஸ்து பெருமானைப் பற்றும் பக்தியும், அவருடைய பரம இராஜ்யத்தை உலகில் நிலைநாட்ட வேண்டுமென்ற தீராவாஞ்சையும் சபைகளுக்குள் அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்று,

தூயதேவ ஆவியானவரே, உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம்.

இவைகளே கிறிஸ்துமதத்தின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாயிருப்பவைகளென்றும், வேதசாஸ்திரக் கொள்கைகள் ஆராதனை ஒழுங்குகள் சபை ஆட்சிமுறைகள் முதலானவை உமது பக்தரைப் பிரித்து வைக்கும் போதிய காரணங்கள் என்று எண்ணுவது நியாயமல்லவென்றும் திருச்சபைத் தலைவர் யாவருக்கும் அறிவுறுத்த வேண்டுமென்று,

தூயதேவ ஆவியானவரே, உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம்.

இவ்வுலகின்கண் அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கும் உமது பிள்ளைகளாகிய நாங்கள் எங்கள் பிரிவினைகளை மறந்து, ஒருவரையொருவர் சிநேகித்துக் கனப்படுத்தி, ஒருவருக் கொருவர் துணையாகநின்று, நாங்கள் செல்லவேண்டிய பரமகானானை நோக்கிக் கைகோர்த்துச் செல்ல எங்கள் யாவருக்கும் கற்பிக்க வேண்டுமென்று,

தூயதேவ ஆவியானவரே, உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம்.

நாங்கள் எதிர்த்துத் தாக்கவேண்டிய உலகம் மாமிசம் பைசாசமாகிய முச்சத்துருக்களோடு ஒருமித்து சமர்புரிய எங்களை ஏவிப் போர் முனைக்கு நடத்த வேண்டுமென்று,

இரட்சண்யச் சேனையாகிய சபையின் தளகர்த்தனே, உம்மை மன்றடுகிறேம்.

இவ்விதமாக திருச்சபை ஆத்மீக ஐக்கியத்திலும் திரிகரண சுத்தத்திலும் வளர்ந்தோங்கி, உமது திருவசனமாகிய விண்ணமுதை யாவருக்கும் இலவசமாகக் கொடுக்கக்கூடிய நிலையை எய்துமட்டும் அதை வழிநடத்தி ஆசீர்வதிக்க வேண்டுமென்று,

அத்தியந்த பணிவாக உம்மைக் கெஞ்சிப் பஞ்சரிக்கின்றேம், கிறிஸ்தரசே. ஆமென்.

வாரம் 3

சனி **காலை**

தேவனைப் பாடி, அவருடைய நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுங்கள்.

மேக வாகனமேறி வருகிறவரை, யேகோவா என்னும் அவருடைய நாமத்தைச் சொல்லி ஏற்றித் துதியுங்கள்.

அவருக்கு முன்பாகக் களிகூருங்கள்.

தமது பரிசுத்த வாசஸ்தலத்திலிருக்கும் தேவன் அநாதைப் பிள்ளைகளின் தந்தையும், விதவைகளின் நீதிபதியுமாயிருக்கிறார்.

அவர் தனித்தவர்களைக் குடும்பங்களில் சேர்த்து, கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறார்.

தேவனே, நீர் உமது ஜனங்களுக்கு முன் வனாந்தர வெளியிற் சென்றபோது, பூமி அதிர்ந்தது; வானம் மன்னாவைப் பொழிந்தது.

அநுதினமும் நமதுபேரில் நன்மையைக் குவிப்பவருக்கு, நமது இரட்சிப்பின் தேவனுக்கு நமோ, நம! சங். 68[4,7,19].

யூதர், மகமதியருக்காக

ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாகிய ஜீவனுள்ளோரின் தேவனே,

உம்மைத் துதித்து மகிமைப்படுத்துகிறோம்.

இஸ்ரவேலரை உமது சொந்த ஜனமாகத் தெரிந்துகொண்டு, அவர்கள் மூலமாய் ஏக மெய்க்கடவுளாகிய உம்மை ஆத்மார்த்தமாகவும் உண்மையோடும் வழிபட உலகிற்கு அறிவுறுத்தச் சித்தங்கொண்ட தெய்வமே,

உம்மைத் துதித்து மகிமைப்படுத்துகிறோம்.

அவர்களுக்கு நீர் விதித்த கற்பனைகளுக்காகவும், போதித்த சத்திய உபதேசங்களுக்காகவும், அனுப்பிய தலைவர் தீர்க்கதரிசிகளுக்காகவும்,

உம்மைத் துதித்து மகிமைப்படுத்துகிறோம்.

உயர்விலும் தாழ்விலும் சுயாதீனத்திலும் அடிமைத்தனத்திலும் நீர் அவர்களைக் கைப்பிடித்து நடத்திய ஞான நடத்துதலுக்காக,

உம்மைத் துதித்து மகிமைப்படுத்துகிறோம்.

அவர்களுடைய அபூர்வ அநுபவங்களும், அவர்கள் காத்து வந்த சத்திய உபதேசமும், அவர்கள் குலத்திலுதித்த மேசியாவாகிய கிறிஸ்து பெருமான் மூலமாக மேதினியில் மனுமக்கள் அடைந்திருக்கும் தேர்ச்சியும் ஆகிய சிறந்த நன்மைகளுக்காக,

உம்மைத் துதித்து மகிமைப்படுத்துகிறேம், கர்த்தாவே. அல்லேலூயா, ஆமேன்.

திரும்பும் கர்த்தாவே; எதுவரைக்கும் கோபமாயிருப்பீர்?

உமது ஜனமாகிய இஸ்ரவேலை இரட்சிக்கத் துரிதமாய் வாரும்.

நீர் பூர்வகாலத்தில் சம்பாதித்த உமது சபையையும், நீர் மீட்டுக் கொண்ட உம் சுதந்தரமான ஜனத்தையும், நீர் கட்புலனுக்குத் தோன்ரு துறைந்த சீயோன் பர்வதத்தையும் நினைத்தருளும்.

நெடுங்காலமாகப் பாழாய்க் கிடக்கும் உமது பரிசுத்த ஸ்தலங்களில் உமது திருவடிகள் மறுபடியும் உலாவட்டும். சங். 74.

ஆமேன்.

சிதறப்பட்டிருக்கும் யூதருக்கு யாதொரு இம்சையும் இடைஞ்சலும் நேரிடாதிருக்க வேண்டுமென்றும்; அவர்களுக்குள் தோன்றியிருக்கும் தேசபக்தியால், தங்கள் ஆதிக் குடியேற்றமாகிய பலஸ்தீன தேசத்தில் அவர்களுக்கும் அரபியருக்கும் கலகங்கள் உண்டாகாதிருக்க வேண்டுமென்றும்,

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், யேகோவாவாகிய கர்த்தாவே.

யூதருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் மிஷனெரிகளையும், அவர்களை அனுப்பியிருக்கும் சங்கங்களையும் ஆசீர்வதித்து, அவர்கள் கரத்தின் கிரியைகளை உறுதிப்படுத்த வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், யேகோவாவாகிய கர்த்தாவே.

"நான் தாவீதின் குடும்பத்தாரின்மேலும், எருசலேம் குடிகளின் மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்த்து மனங்கசிந்து துக்கிப்பார்கள்," என்று வாக்களித்த தேவனே, இந்த வாக்கை உமது ஜனத்திற்குத் துரிதமாக நிறைவேற்ற வேண்டுமென்று, (சகரி. 12^{10}.)

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், யேகோவாவாகிய கர்த்தாவே.

விரும்பப்படத்தக்க ரூபமற்றவராகத் தோன்றின மேசியாவை அவமதித்துத் தள்ளிய யூதர், அவர் தங்களுடைய மீறுதல்களினிமித்தமும் உலகத்தின் அக்கிரமங்களினிமித்தமுமே தேவனுல் நொறுக்கப்

பட்டாரென்று உணர்ந்து, அவர் வருகையை எதிர் நோக்கியிருக்க அவர்களுக்குக் கிருபைசெய்ய வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், யேகோவாவாகிய கர்த்தாவே.

இயேசு பகவானைத் தம் நபிகளிலொருவராகவும், அல்லாவின் ஆவியாயிருப்பவரென்றும் கருதி, அவர் அன்னையாகிய மரியம்மாளையும் கண்ணியப்படுத்திவரும் மகமதியர், அவர் உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்க சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்தச் சித்தங் கொண்ட தெய்வ குமாரனும் இரட்சகருமென்று ஏற்றுக்கொள்ளும் காலத்தைக் கட்டளையிட வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், யேகோவாவாகிய கர்த்தாவே.

விக்கிரக ஆராதனையை நிராகரிப்பதிலும், சகோதர ஐக்கியத்தை நிலை நாட்டுவதிலும் மகமதியர் சிரத்தை எடுத்துக்கொள்ளுவதுபோல், உம்மையும் நீர் அனுப்பிய திருக்குமாரனுகிய கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவனென்று அங்கீகரித்துப் பிரசுரிக்கவும் அவர்களுக்குக் கற்பிக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், யேகோவாவாகிய கர்த்தாவே.
ஆமேன்.

பிரிந்திருக்கும் நண்பர் உறவினருக்காக

தேவனே, இத்தருணத்தில் எங்களைவிட்டுப் பிரிந்திருக்கும் இனஜனமித்திரர் அன்புக்குரியர் யாவரையும் உமக்கு முன்பாக நினைக்கிறேம். எங்கும் இருக்கும் ஈசனே, அவர்களைப் பாவசோதனையினின்றும் சடுதியாய் வரும் விபத்துக்களிலிருந்தும் காத்து இரட்சியும். அவர்களுடைய சோர்வில் இளைப்பாறுதலைக் கொடும். பிரிவாற்ருது வருந்தும் உள்ளங்களுக்கு நாங்கள் அவர்களை நேசித்து அவர்கள் வாழ்வைக் கோருகிறேமென்பதை நினைப்பூட்டும். சிநேகத்திற்கு மூலகாரணரும், மாந்தருள்ளங்களில் அன்பு சுரக்கச் செய்கிறவருமான கருணைவாரியே, அவர்களையும் எங்களையும் இன்றும் என்றும் உமது அன்பின் கரங்களால் தழுவி அரவணைத்துக்கொள்ளும். ஆமேன்.

வாரம் 3

சனி **மாலை**

யேகோவாவுக்கு நன்றி செலுத்துங்கள்.

அவர் திருநாமத்தைச் சொல்லி, அவரைக் கூப்பிடுங்கள்.

அவருடைய செய்கைகளை ஜனங்களுக்கு அறிவியுங்கள்.

அவரைப் பாடிப் போற்றுங்கள்; சங்கீதங்களைப் பாடி அவரைப் போற்றுங்கள்.

அவருடைய அற்புதச் செயல்களைப்பற்றிப் பேசுங்கள்.

அவருடைய பரிசுத்த நாமத்தைப்பற்றி மேன்மைபாராட்டுங்கள்.

யேகோவாவைத் தேடுகிறவர்களின் உள்ளங்கள் மகிழட்டும்.

யேகோவாவையும் அவருடைய வல்லமையையும் தேடுங்கள்.

அவர் சமுகத்தை எப்பொழுதும் தேடுங்கள். அல்லேலூயா. சங். 105^{1-4}.

யூதர், மகமதியருக்காக

கர்த்தாவே நீர் தெரிந்துகொண்டவர்களின் வாழ்வை நாங்கள் கண்டு, உமது ஜாதியின் மகிழ்ச்சியில் மகிழ்ந்து, உமது சுதந்தரத்தோடு மேன்மை பாராட்டும்படிக்கு, உமது ஜனத்திடம் நீர் பாராட்டிய தயவால் அவர்களையும் எங்களையும் நினைத்து உமது இரட்சிப்பை ஏந்திக்கொண்டு சந்திக்கவாரும். ஆமேன்.

ஆண்டவரே, எங்கள் பிதாக்களைப்போலவே நாங்களும் பாவஞ் செய்தோம்; அக்கிரமமாய் நடந்தோம்.

அவர்களைப்போல நாங்கள் தீமைகள் புரிந்தோம்.

நீர் எகிப்துதேசத்தில் செய்த அதிசயங்களையும், உமது கணக்கற்ற கிருபைகளையும் அவர்கள் உணராமலும் நினையாமலும் கலகம்பண்ணினார்கள்.

நன்றி மறப்பவர்களாகிய எங்களையும் அவர்களையும் பொறுத்தருளும், நல்ல தேவனே.

உமது ஆலோசனைக்குக் காத்திராமல், இச்சைக்கிடங்கொடுத்து வனாந்தரவெளியிலே அவர்கள் உமது உண்மையைச் சோதித்துப் பார்த்தார்கள். அவர்கள் விரும்பிய மாமிச போஜனத்தை அவர்களுக்குக் கொடுத்தீர், ஆனால் அவர்கள் ஆத்துமங்களையோ மெலியச் செய்தீர்.

நன்றி மறப்பவர்களாகிய எங்களையும் அவர்களையும் பொறுத்தருளும், நல்ல தேவனே.

அவர்கள் பாகாலை வணங்கி, தங்கள் பிள்ளைகளைக் கானான் தேசப் பேய்களுக்குப் பலியிட்டார்கள்; நாங்கள் மம்மோனாகிய உலகப்பொருளைப் பூஜித்து, சிற்றின்பத்திற்கு எங்கள் ஆத்துமவாழ்வைப் பலியிடுகிறோம்.

நன்றி மறப்பவர்களாகிய எங்களையும் அவர்களையும் பொறுத்தருளும், நல்ல தேவனே.

ஆதலால் உமது கோபம் அவர்களைச் சிட்சித்தது; அவர்கள் தம் சத்துருக்களின் கொடுங்கோலுக்கு ஆளானார்கள். அவர்கள் அக்கிரமமே அவர்களைச் சிறுமைப்படுத்திற்று. அவ்வாறே எங்கள் கெடு நினைவே எங்களைக் கேட்டுக்குள்ளாக்குகிறது.

நன்றி மறப்பவர்களாகிய எங்களையும் அவர்களையும் பொறுத்தருளும், நல்ல தேவனே.

நொறுங்குண்டதும் நறுங்குண்டதுமான இருதயத்தைப் புறக்கணியாத கருணை வள்ளலே, வெண்கலக் கதவுகளையும் இருப்புத் தாழ்ப்பாள்களையும் உடைத்துப்போடும். அந்தகாரத்திலும் மரண இருளிலுமிருந்து நாங்கள் விடுதலைபெற்று இரட்சிப்படையும்படி, மறு ஜனனத் தீர்த்தமாடி புனிதமுற வேண்டுமென்று, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் தேவனாகிய பக்தவத்சலனே, உம்மைக்கெஞ்சி மன்றாடுகிறோம். ஆமேன். சங். **106, 107.**

எல்லாம் வல்ல நித்தியரே, உமது திருச்சுதனைப் புறக்கணித்த நன்றி கேடராகிய யூதரையும் நீர் உமது கிருபைக்கு விலக்கிவைப்பதில்லை. அவர்களுக்காக நாங்கள் உம்மை நோக்கி மன்றாடும் மன்றாடலுக்குச் செவிசாய்த்தருளும். சத்தியப் பிரகாசமாகத் தோன்றிய கிறிஸ்து மகிபரை அவர்கள் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தங்களை ஈராயிரமாண்டுகளாய்க் கவர்ந்திருக்கும் துன்பமென்னும் காரிருளை விட்டுவிலக அவர்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று, இயேசு கிறிஸ்துவின் மூலமாகக் கெஞ்சி மன்றாடுகிறோம், பரம பிதாவே. ஆமேன்.

*கர்த்தாவே, மனிதர் யாவரும் சத்தியத்தை அறிந்துகொள்ளுவதால் விடுதலையடைய வேண்டுமென்பது உமது வாஞ்சை. உமது கிருபையின் சுவிசேஷம் பூமியின் எட்டுத் திக்குகளிலும் பிரசுரமாகவும், உமது சாம்ராஜ்யம் உலகில் ஸ்தாபிக்கப்பட வழியுண்டாகவும் திருச்சபை எடுத்துக்கொள்ளும் பிரயத்தனங்களைப் பலிதப்படுத்தும். நீர் யூதருக்கும் மகமதியருக்கும் மற்றெல்லா ஜாதியாருக்கும் செய்யத் தீர்மானித்திருக்கும் நன்மையைத் துரிதமாகச் செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். உமது புராதன ஜனத்தின் குருட்டாட்டத்தை நீக்கிவிடும். உமது சத்தியவேதத்தை அநேகமாக அங்கீகரித்து, கிறிஸ்து பெருமானைத் தம் நபிகளில் சிரேஷ்டராகக் கொண்டாடும் மகமதியருக்கு அவரைப் பற்றிய பூரண அறிவைக் கொடுத்தருளும்.

சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பதுபோல், மேதினி உம்மையும் நீர் அனுப்பிய குமர குருவாகிய இயேசு கிறிஸ்துவையும் அறியும் அறிவால் நிறைந்திருக்கும் நன்னாள் சீக்கிரம் உதிக்கவேண்டும். புறஜாதியாரைப் பிரகாசப்படுத்தும் ஒளியாகவும், உமது ஜனமாகிய இஸ்ரவேலருக்கு மகிமையாகவும் உதித்த கிறிஸ்தரசின் நாமத்தினிமித்தம் இந்த விண்ணப்பத்தை உமக்கு ஏறெடுக்கிறோம், தயவுள்ள தெய்வமே. ஆமென்.

வாரம் 4

ஞாயிறு **காலை**

அவருடைய நன்மைத் தன்மையினிமித்தமும், மனுப்புத்திரருக்கு அவர் செய்யும் அதிசயக் கிரியைகளினிமித்தமும் மாந்தர் யேகோவாவைத் துதிக்கமாட்டார்களோ?

கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்; அவர் கிருபை என்றும் நிலையான கிருபை.

ஸ்தோத்திரமென்னும் பலியைக் கர்த்தருக்குச் செலுத்துங்கள்.

அவருடைய கிரியைகளைக் களிப்போடு கூறுங்கள்.

அவர் அவாந்தர வெளியைத் தண்ணீர்த் தடாகமாகவும், வறண்ட நிலத்தை நீரூற்றுகளாகவும் மாற்றுகிறார்.

அவர் பிரபுக்களை இகழ்ச்சிக்கு ஆளாக்கி, பாதையில்லாத காடுகளில் அலையச் செய்கிறார்.

---

* Church Missionary Society's Prayer.

எளியவனையோ சிறுமையினின்று உயர்த்திக்காத்து, பெரிய குடும்பஸ்தன் ஆக்குகிருர்.

உத்தமர் இதைக் கண்டு மகிழ்வார்கள்; நியாயக்கேடரோ வாய் மூடி மௌனமாயிருப்பார்கள்.

கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்; அவர் கிருபை என்றும் நிலையான கிருபை. அல்லேலூயா. சங். 107.

வெற்றியடைந்த திருச்சபைக்காக

மெஞ்ஞான ஒளி பரிசுத்தமானதும், மிகவும் வியக்கத்தக்கதும், சம்சார சாகரத்தைத் தைரியமாகக் கடந்து சென்றவர்களுக்கு மகிமையைக் கொடுப்பதுமாயிருக்கிறது. மானிட வாழ்க்கையாகிய யுத்த களத்தில் திடமனதோடு சமர்புரிந்தோர் கிறிஸ்துவிடமிருந்து மங்கா ஜோதி தங்கும் நித்திய வீட்டைச் சுதந்தரித்து அங்கு என்றும் இன்புற்றுறைகின்ருர்கள்.

அல்லேலூயா, மெஞ்ஞான ஒளி பரிசுத்தமாயிருக்கிறது.

தூய மனத்தினரும், அருள் நிறைந்தவரும், அன்பரகத்தில் வீற்றிருப்பவருமான எல்லாம் வல்ல இறைவனிடம் நமது உள்ளங்களை உயர்த்துவோம்.

கர்த்தாவே, உம்மிடம் எங்கள் உள்ளங்களை உயர்த்துகிறேம்.

மன மொழி மெய் கொண்டு உமது சத்திய சுவிசேஷத்தையும் அளவற்ற அன்பையும் மாந்தருக்கு எடுத்துக்காட்டி, பின்பு உம் பாதாரவிந்தம் வந்திருக்கும் பக்தர் யாவருக்காகவும்,

உம்மைத் துதித்து, உமது பரிசுத்த நாமத்தை வாழ்த்துகிறேம், தெய்வமே.

ஆபிரகாம் ஈசாக்கு முதலான கோத்திரப் பிதாக்கள், மோசே சாமுவேல் முதலான தலைவர், தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர் ஆகிய உமது உத்தம தொண்டர் யாவருக்காகவும்,

உம்மைத் துதித்து, உமது பரிசுத்த நாமத்தை வாழ்த்துகிறேம், தெய்வமே.

கிறிஸ்துவின் நற்செய்தியை ஊக்கத்தோடு பறைசாற்றிய சுவிசேஷகருக்காகவும், உம்மை மறப்பதைப்பார்க்கிலும் தம்முயிரைத் துறப்பது நலமென்று கருதிய இரத்தச் சாக்ஷிகளுக்காகவும்,

உம்மைத் துதித்து, உமது பரிசுத்த நாமத்தை வாழ்த்துகிறேம், தெய்வமே.

இன்று நாங்கள் கனிவோடு ஞாபகப்படுத்திக்கொள்ளும் பக்தர் பரிசுத்த (பவுலு) க்காகவும், அவரைப்போல் பொய்யையும் அநீதியை யும் நிராகரிக்கத் தம் வாழ்நாளெல்லாம் ஊக்கங்குன்ருது முயன்ற யாவருக்காகவும்,

உம்மைத் துதித்து, உமது பரிசுத்த நாமத்தை வாழ்த்துகிறேம், தேய்வமே.

சுயாதீனம், நீதியான அரசாட்சி, இல்வாழ்க்கையின் தூய்மை முதலான நற்காரியங்களுக்காகப் பாடுபட்டவர்களுக்காகவும், தம் முயற் சியாலும் தியாகத்தாலும் மனிதருக்கு நன்மை செய்த யாவருக்காகவும், பிறரைக் காக்கத் தம் இன்னுயிரைக் கொடுத்த வீரருக்காகவும்,

உம்மைத் துதித்து, உமது பரிசுத்த நாமத்தை வாழ்த்துகிறேம், தேய்வமே.

எச்சமயமும் எல்லாவிடத்திலும் உண்மையைக் கடைப்பிடித் தொழுகிய உத்தமருக்காகவும், தரித்திரத்திலும் நேர்மையாய்ப் பிழைத் துத் தம் அயலாருக்கு இயன்ற உதவியைச் செய்தவர்களுக்காகவும்,

உம்மைத் துதித்து, உமது பரிசுத்த நாமத்தை வாழ்த்துகிறேம், தேய்வமே.

இப்பொழுது பரத்தில் உமக்குத் தொண்டுபுரியும் எங்கள் உறவி னர் நண்பருக்காகவும், அவர்களைக் கண்களால் காணக்கூடாதிருக்கும் இந்நிலையிலும் அவர்கள் சிநேகம் எங்களோடு இருக்கிறதென்ற நம்பிக் கைக்காகவும்,

உம்மைத் துதித்து, உமது பரிசுத்த நாமத்தை வாழ்த்துகிறேம், தேய்வமே.

அவர்கள் உமது திவ்விய சமுகத்திலிருப்பதை நாங்கள் அடிக்கடி நினைத்து அவர்கள் சென்ற நல்வழியிற் செல்லுங்கால், அவர்கள் எங்கே இருக்கின்ருர்களோ அங்கே இறுதியில் நாங்களும் வந்து சேர்ந்து, அவர்கள் அன்பையும் உமது எல்லையற்ற கிருபையையும் நுகர்வோமென்று எண்ணிப்பிழைக்க எங்களுக்கு அறிவுறுத்த வேண்டு மென்று,

உம்மைக் கெஞ்சி மன்றுடுகிறேம், தயவுள்ள தேய்வமே.

உலகில் தங்கியிருந்து சமர்புரியும் நாங்கள், பரிசுத்தவான்களின் ஐக்கியத்தை ருசித்து, உமது திவ்விய சமுகத்தின் சாந்தியைப் பெற்றுய் யும் எம் அன்புக்குரியாரோடு சேர்ந்து, உமக்கு ஸ்தோத்திரத்தையும், வல்லமையையும், மகிமையையும் இன்றும் என்றும் யுகாயுகமாய் உமக்குச் சாற்றுகின்ரேம், கர்த்தாவே. **ஆமென்.**

தொய்ந்துபோனவருக்குப் பலத்தையும், வெற்றியடைந்தவருக்கு இளைப்பாறுதலையும் கொடுக்கும் நல்ல தேவனே, உத்தமராய்ப் பிழைத்து உமது சமுகத்தின் இளைப்பாறுதலுக்குச் சென்றிருக்கும் யாவரையும் (விசேஷமாக...........யும்) இச்சமயத்தில் நினைவு கூருகின்றோம். அன்புள்ள விடத்தில் பிரிவு இல்லையென்றும், அவர்களும் நாங்களும் ஆத்மீகமாக இப்பொழுதும் ஒருமித்திருக்கிறோமென்றும் நாங்கள் விசுவாசிக்கவேண்டும். பரலோகத்திலிருக்கும் வெற்றியடைந்த சபையும், பூலோகத்தில் சமர்புரிந்துவரும் சபையும் ஒற்றுமைப்பட்டிருப்பதைத் தெளியக்காட்டும் அன்பின் வெளிச்சத்திற்கு எங்களை நடத்திச்செல்ல வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்க் கெஞ்சி மன்றாடுகிறோம், பரமபிதாவே. ஆமேன்.

பின்பு நான் பார்த்தபோது இதோ சீயோன் மலையில் ஆட்டுக்குட்டியானவரும், அவரோடுகூட அவர் பிதாவின் நாமத்தைத் தங்கள் நெற்றிகளில் வரைந்திருந்த இலக்ஷத்து நாற்பத்து நாலாயிரம் பேரும் நிற்கக்கண்டேன். இவர்கள் மானிட குழுவிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக் குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்களாம். வெளி. 14^{1-4}.

அல்லேலூயா!

வாரம் 4

ஞாயிறு **மாலை**

யேகோவாவைத் துதியுங்கள்.

பக்தர் கூட்டத்திலும் சபையிலும் கர்த்தரை என் முழு இருதயத்தோடும் துதிப்பேன்.

கர்த்தருடைய கிரியைகள் பெரியவை.

அவைகளைக் கொண்டாடும் யாவரும் அவற்றை மீண்டும் ஆராய்ந்து தேடிக்கொண்டிருக்கின்றார்கள்.

கர்த்தருடைய செயல் நேர்மையும் மகத்துவமுமானது.

கர்த்தருடைய நீதி எக்காலத்தும் நிலைத்திருப்பதாக இருக்கிறது.

கர்த்தர் இரக்கமும் மனஉருக்கமும் உள்ளவர்.

அவர் தமக்குப் பயந்தவர்களுக்கு ஆகாரம் அளிக்கிறவர்.

அவர் தமது ஜனங்களை மீட்டுத் தமது உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாயிருக்கக் கட்டளையிட்டார்.

கர்த்தருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது; அவர் புகழ்ச்சி நித்தியமானது. சங். 111.

வெற்றியடைந்த திருச்சபைக்காக

பரத்திலிருந் திறங்கி மேகவாகனராக பரமேறிய கிறிஸ்துவே, உமது பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டென்று நீர் சொன்ன உறுதிமொழிக்காக,

உம்மைத் துதித்து, உமது பரிசுத்த நாமத்தை வாழ்த்துகிறேம்.

பாவத்தையும் அதன் சம்பளமாகிய மரணத்தையும் சிலுவையில் மேற்கொண்ட வெற்றிவேந்தரே, உம்மைப்பற்றும் விசுவாசத்தில் உறுதியாயிருந்து, மரணத்தை ஜெயித்து நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொண்ட யாவருக்காகவும்,

உம்மைத் துதித்து, உமது பரிசுத்த நாமத்தை வாழ்த்துகிறேம்.

வெண்ணங்கி தரித்துச் சுடரொளியுள்ளோராய் தேவ சமுகத்தி லிருக்கும் பக்தர் கூட்டத்தைச் சேர்ந்த எங்கள் அன்புக்குரிய......... ....க்காக,

உம்மைத் துதித்து, உமது பரிசுத்த நாமத்தை வாழ்த்துகிறேம்.

திருச்சபையாகிய தொழுவத்தில் இல்லாத வேறு ஆடுகளும் எனக் குண்டென்று பகர்ந்த நல்ல மேய்ப்பரே, மத சபைப் பேதங்களைக் கடந்து உமது பிதாவின் சித்தத்தைத் தத்தம் உலக வாழ்க்கையில் நிறை வேற்றியதால் உம்மையும் பிதாவையும் என்றும் போற்ற அருகரான உத்தமர் யாவருக்காகவும்,

உம்மைத் துதித்து, உமது பரிசுத்த நாமத்தை வாழ்த்துகிறேம்.

உமது மெய்த்தொண்டர் உலகிற் சஞ்சரித்த நாட்களில், தம் நேர் மையாலும் பக்தி வைராக்கியத்தாலும் பரஸ்பர சிநேகத்தாலும் மாந்த ருக்குச் செய்த சிறிதும் பெரிதுமான சகல பொது நலங்களுக்காகவும்,

உம்மைத் துதித்து, உமது பரிசுத்த நாமத்தை வாழ்த்துகிறேம்.

மனுமக்களைத் துன்புறுத்தும் பிணி, அறிவீனம், பொய்மதக் கொள்கை, பிசாசின் பயம், அடிமை வியாபாரம், குடிவெறி முதலிய வற்றை ஒழிக்கத் தம் காலத்தையும் சுகத்தையும் பிராணனையுங்கூடக் கொடுத்த அன்பர் யாவருக்காகவும்,

உம்மைத் துதித்து, உமது பரிசுத்த நாமத்தை வாழ்த்துகிறேம்.
ஆமென்.

அவர்களுடைய முன்மாதிரியை நாங்கள் கவனித்து, எங்களை நீர் வைத்திருக்கும் இடத்திலும் நிலமையிலும் உமது திருவுளச் சித்தத்தை நிறைவேற்றத் துணை செய்ய வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம், தயவுள்ள தேவனே.

அவர்கள் அடைந்த வெற்றியை நினைத்து, எங்கள் நன்முயற்சிகளை யும் நீர் தயவாக ஏற்றுக்கொண்டு பலிதப்படுத்துவீர் என்று உறுதியாய் நம்ப எங்களுக்குக் கற்பிக்கவேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள தேவனே.

அவர்கள் பெற்று அநுபவிக்கும் உமது திவ்விய சமுகத்தின் நிலையான சாந்தியையும், இடையருப் பேரின்பத்தையுமே எங்கள் வாழ் வின் பிரதான நோக்கமாகக் கொண்டு பிழைக்க எங்களுக்கு அருள் புரிய வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள தேவனே. ஆமேன்.

இக பரம் இரண்டிலுமுள்ள திருச்சபையின் நாயகமாகிய கிறிஸ்து பெருமானே, எங்கள் பிதாக்களை நீர் கைப்பிடித்து நடத்தியவாறு எங் களையும் அநுதினம் உமது நித்திய வழியிலே நடத்தும். உலகத்தை மீட்பதற்கென்று நீர் பட்ட பாடுகளில் எமக்கும் ஓர் பங்கைக் கொடுத்து, அதன் மூலமாக உமது பாடுகளைப் பூரணப்படுத்த நீர் சித்தங்கொண்டது ஓர் இரகசியமே. ஆயினும் அதனுல் நீர் எங்களை எவ்வளவாக நேசித்து கண்ணியப்படுத்தக் காத்திருக்கிறீர் என்று உணருகிறோம். நீர் உமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாகும்படி, நாங்கள் உமது இராஜ்யத்தையும் அதன் நீதியையும் தேடுங்கால் நேரி டும் துன்பத்தைக் களிப்புடன் சகித்து உம்மை மகிமைப்படுத்தப் பல னளித்திடும் குருபரனே. ஆமேன்.

மாலை ஜெபம்

தேவனே, பாவிகளாகிய எங்கள்மேல் கிருபையாயிரும். இன்று எம் மனோவாக்கு காயத்தால் உமக்கு விரோதமாகச் செய்த குற்றங் களைத் தயவாய் மன்னியும். நாங்கள் சமாதானமாய்ப் படுத்து நித் திரை செய்வோம், ஏனெனில் கர்த்தாவே நீரே எங்களை க்ஷேமமாகக் காப்பவர். உமக்கு மகிமை என்றும் பெருகட்டும், பிதாவே. ஆமேன்.

வாரம் 4

திங்கள் — காலை

யேகோவாவைத் துதியுங்கள்.

அவருடைய ஊழியரே, அவரைத் துதியுங்கள்.

இன்று முதல் என்றென்றைக்கும் கர்த்தருடைய நாமம் புகழப் பெறட்டும்.

சூரியன் உதிக்கும் திசைதொடங்கி அது அஸ்தமிக்கும் திசை மட்டும் கர்த்தருடைய நாமம் துதிக்கப்பெறட்டும்.

உன்னதத்தில் வாசமாயிருக்கிறவரும், வானத்திலும் பூமியிலு முள்ள தம் சிருஷ்டிகளைக் கண்ணோக்கும்படி தம்மைத் தாழ்த்துகிற வருமாகிய நமது தேவனாகிய கர்த்தருக்கு நிகரானவர் யார்?

கர்த்தர் சகல ஜாதியினருக்கும் தலைவர்; அவர் மகிமை வான மண்டலங்களுக்கு மேலாக உயர்ந்திருக்கிறது. சங். 113^{1-6}.

சந்தோஷத்திற்காக

*ஆண்டவராகிய இயேசு சொன்னதைக் கேளுங்கள்:—

என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைகொண்டிருக்கவும், உங்கள் சந்தோஷம் நிறைவடையவும் நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேன். யோவா. 15^{11}.

நாங்கள் களிப்புடன் கர்த்தரைச் சேவித்து, எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருப்போம்.

தேவனே, நாங்கள் உமது குமாரனுக்குள் குடிகொண்டிருந்த சந் தோஷத்தையும், அவர் மாந்தருடைய சுகதுக்கங்களில் கலந்துகொண்ட தையும் நினைத்து மகிழ்ச்சியடைய வேண்டும்.

நாங்கள் களிப்புடன் கர்த்தரைச் சேவித்து, எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருப்போம்.

கர்த்தாவே, உம்மை பற்றும் பக்தி விசுவாசத்திலும், உமது அற்புத சிருஷ்டியில் அடங்கியிருக்கும் இரகசியங்களை ஆராயும் ஆராய்ச்சி யிலும் நாங்கள் மகிழ்ச்சியடைய வேண்டும்.

நாங்கள் களிப்புடன் கர்த்தரைச் சேவித்து, எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருப்போம்.

தெய்வமே, குழந்தைப்பருவம், வாலிபதசை, முதுமை, மறுமை ஆகிய ஆயுட் பகுதிகள் உமது காருண்ய பாராமரிப்பை எங்களுக்கு ரூபகாரப்படுத்தும் அன்பின் அடையாளங்களா யிருக்கின்றனவென்று அறிந்து நாங்கள் களிப்படைய வேண்டும்.

நாங்கள் களிப்புடன் கர்த்தரைச் சேவித்து, எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருப்போம்.

கருவுற்ற நாள்முதல் மரணபரியந்தம் எங்கள் பிராணனை தேவரீர் உமது உள்ளங்கையில் வைத்துக் காக்கிறீர் என்று நம்பி நாங்கள் தைரியமடைய வேண்டும்.

நாங்கள் களிப்புடன் கர்த்தரைச் சேவித்து, எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருப்போம்.

---

*Acts of Devotion

இந்த நல்ல நிர்ணயத்தை எங்களில் உறுதிப்படுத்தும் தேவனே. ஆமேன்.

பாலியப்பருவத்தின் உற்சாகங்களைக் குறித்து சந்தோஷப்படும் நாங்கள், அவற்றைப் பரிசுத்த கருமங்களைச் செய்வதற்கென்றே உபயோகிக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், தயவுள்ள தேவனே.

நடுவயதின் முதிர்ந்த அறிவையும் அநுபவத்தையும் குறித்து மகிழும் நாங்கள், அந்த அறிவு உமக்குப் பயப்படும் பயத்தில் அஸ்திபாரங் கொண்டதாகவும், அநுபவம் எங்களை உமது ஐக்கியத்துக்குள் கொண்டு வருவதாகவும் இருக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், தயவுள்ள தேவனே.

உத்தம தோழமையின் சகவாசம், நட்பின் அநுதாபம், திடசித்தமுடையோர் ஊட்டும் தைரியம் முதலியவற்றில் பன்முறை தேறுதலடைந்ததால், நாங்கள் நட்பின் சிறப்பை யாவருக்கும் விளக்கிக் காட்ட வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், தயவுள்ள தேவனே.

வேலையிற்பெறும் சித்தியின் இனிப்பையும், நற்கருமத்தை முடிப்பதால் வரும் திருப்தியையும் நாங்கள் ருசித்திருப்பதால், உமது பிள்ளைகள் செய்யும் எந்த வேலையையும் இழிவாகக் கருதாமலும், நன்மை செய்வதில் சோர்ந்துபோகாமலும் இருக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், தயவுள்ள தேவனே.

சித்திரம், இனியகானம், நல்ல நூல் ஆகியவை தரும் இன்பங்களை நுகர்ந்த நாங்கள், எங்கள் கண் செவி மனத்திற்கு உற்சாகமூட்டும் யாவும் உமது பரிசுத்த இலக்ஷணத்திற்குப் பொருந்தியனவாயிருக்க விரும்ப வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், தயவுள்ள தேவனே.

பலத்த உணர்ச்சிகள் எங்கள் உள்ளங்களில் மூட்டும் அனலிலும், அழுகைக்குப் பின்வரும் நகைப்பிலும் களிகொண்ட நாங்கள், எங்கள் உணர்ச்சிகளைப் பாவத்திற்கும், பிறரைப் புண்படுத்தக்கூடிய பேச்சு செய்கைகளுக்கும் கருவிகளாக்காதிருக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சி மன்றடுகிறேம், தயவுள்ள தேவனே. ஆமேன்.

ஜெபம்பண்ணுவோம்:—

நித்திய ஜீவனுக்கு ஊற்றும் மகிமையுமாயிருக்கும் உண்மைப் பொருளே, நீர் எங்களோடு இருக்கின்றீர் என்ற திடப்படுத்தும் நம்பிக்கையில் களிகூருகிறோம். நீர் எங்களுக்குத் தயவாய்க் கொடுக்கும் ஒவ்வொரு இலவச ஈவோடுகூட, உமது நித்திய சமாதானத்தையும் தந்து எங்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம், ஆனந்த மூர்த்தியாகிய பிதாவே.

ஆமேன், அல்லேலூயா, ஆமேன்.

வாரம் 4

திங்கள் மாலை

யேகோவா என் முறைபாட்டையும் விண்ணப்பத்தையும் கேட்டதினால் அவரிடம் அன்புகொண்டேன்.

தேவன் காருண்ய மிகுந்தவர்; அவர் நீதியுள்ளவர்.

நமது தேவன் மன உருக்கமுள்ளவர்.

அவர் கபடற்றவரைக் காக்கின்றார்.

என் ஆத்துமமே, கர்த்தர் உதாரத்துவமாய் உனக்கு நன்மை செய்ததால் நீ முன்போல இளைப்பாறு.

நான் இரக்ஷண்யத்தின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைச் சொல்லி அவரைக் கூப்பிடுவேன்.

கர்த்தாவே, நான் உண்மையாகவே உமது அடிமை.

நான் உமது அடிமையும், உமது அடிமைப் பெண்ணின் புத்திரனுமாயிருக்கிறேன்.

நீர் என் பாசங்களை அவிழ்த்தீர்.

நான் உமக்கு ஸ்தோத்திர பலியைச் செலுத்தி, உமது நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். அல்லேலூயா. சங். **116.**

சந்தோஷத்திற்காக

அப்போஸ்தலனாகிய பவுல்சொன்ன வார்த்தைகளைக் கேளுங்கள்:—

கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்களென்று மறுபடியும் சொல்லுகிறேன். பிலி. 4[4].

ஆதலால் கர்த்தர் நமக்குச் செய்த நன்மைகளை எண்ணி எப்பொழுதும் நன்றியுள்ளவர்களாய் உய்வோம்.

தேவனே, உமது கிருபைகளை நினைத்து, உம்மை மகிழ்ச்சியோடே ஆராதிக்கிறோம்.

கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்று நெகேமியா தீர்க்கர் உரைத்ததை நினைத்துக் கர்த்தரைத் துதியுங்கள்.

எங்கள் பெலனாகிய தேவனே, ஆர்ப்பரிப்புடன் உமது சந்நிதானம் வந்தோம்.

இயேசு மகிபர் சொன்ன வார்த்தைகளைக் கேளுங்கள்:—

நான் மறுபடியும் உங்களைச் சந்திப்பேன்; அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்படும். யோவா. 16[22].

கிறிஸ்து பெருமானே, உமது வருகைக்குக் காத்திருப்பதால் களிகூருவோம்.

உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப்போடமாட்டான் என்று அவர் மறுபடியும் சொன்னதைச் சிந்தியுங்கள். யோவா. 16[22].

கிறிஸ்து பெருமானே, மனிதருடைய பகையால் இம்மியளவு கூட குறையாத சந்தோஷம் உம்மிடமிருந்து வருவதால், உம்மைத் துதிக்கிறேம்.

யோவேல் தீர்க்க ருரைத்ததையும் கேளுங்கள்:—

சீயோன் குமாரரே, கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்; அவரே முன் மாரியையும் பின் மாரியையும் வருஷிக்கப் பண்ணுவார். யோவே. 2[22].

ஆதலால், மழை, பனி, காற்று சூரியனின் கதிரொளி, மதியின் நிலவு, மலர்களின் அழகு முதலியவற்றைக் கண்டு மகிழத்தக்க சிந்தையைப் பெற்றுக்கொள்ளுவோம்.

கர்த்தாவே, எங்கள் குழந்தைப் பருவத்தின் வியப்பையும் மங்காத களிப்பையும் எங்களுக்குத் தந்தருளும்.

உங்கள் தசமபாகங்களையும் காணிக்கைகளையும் தேவனுடைய வாசஸ்தலத்திற்குக் கொண்டுவந்து, உங்கள் கைகளின் பிரயாசத்தைத் தேவன் ஆசீர்வதித்ததை நினைத்து, நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் சந்தோஷப்படுங்கள். உபா. 12[7].

தேவனே, உமக்குக் காணிக்கை செலுத்துவது எங்களுக்குக் களிப்பாயிருக்கட்டும்.

சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள்.

தேவனே, எங்கள் அயலாரின் சந்தோஷம் எங்களுக்கு எரிச்சலேயல்ல சந்தோஷத்தையே தரட்டும்.

மனந்திரும்பும் ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் தேவதூதருக்குள் மிகுந்த சந்தோஷம் உண்டாகிறது.

நேச மேய்ப்பரே, எங்கள் சகோதரர் மனந்திரும்புவதைக் கண்டு, நாங்கள் உம் தூதரோடுகூட உம்மைப் போற்றி மகிழ எங்களுக்குக் கிருபை செய்யும். ஆமென்.

தேவனே பிழையுணர்ந்து துக்கிக்கும் உம் அடியாராகிய எங்களுக்கு இரக்ஷண்யத்தின் சந்தோஷத்தைத் திரும்பத் தந்தருளும்.

தேவனே, உற்சாகமான ஆவி எங்களைத் தாங்கும்படி செய்யும்.

கர்த்தருடைய பரிசுத்த நாமத்தைக் குறித்து மேன்மை பாராட்டுங்கள்; அவரைத் தேடுகிறவர்களின் இருதயம் மகிழட்டும். 1 கொரி. 16^{10}.

தேவனே, நாங்கள் மங்காக் களிப்புள்ளவர்களாய்ப் பிழைக்கும்படி உம்மைத் தேடுவோம்.

என் ஆத்துமமே, தேவனில் உன் சந்தோஷத்தைத் தேடு.

என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தைப் போற்றுவதில் மகிழ். ஆமென், ஆமென்.

தேவனே, உமக்குப் பயப்படும் உமது தொழும்பருக்கு என்றும் அழியாப் பேரின்பத்தைக் கொடுத்தருளும். அவர்கள் தங்கள் கிரியையாலும் வாழ்க்கைச் சிறப்பினாலும், துருப்பிடியாததும் புழு அரிக்கக் கூடாததுமான பொக்கிஷத்தைப் பரத்தில் சேர்த்துக்கொள்ளத்தக்க விவேகத்தை அவர்களுக்குத் தந்துதவ வேண்டுமென்று, கிறிஸ்து பெருமானை முன்னிட்டுப் பரிந்து மன்றாடுகிறோம், கர்த்தாவே. அவருக்கும் தேவரீருக்கும் புனித ஆத்துமனுக்கும் அநவரதமும் ஸ்தோத்திரம் பெருகட்டும். ஆமென்.

வாரம் 4

செவ்வாய் **காலை**

அல்லேலூயா! என் ஆத்துமமே, கர்த்தரைத் துதி.
நான் உயிரோடிருக்கும் மட்டும் கர்த்தரைத் துதிப்பேன்.

நான் ஒரு வஸ்துவாயிருக்கும் மட்டும்,
என் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

யாக்கோபின் தெய்வத்தைத் துணையாகக் கொண்டிருப்பவன் களிப்படைவான்.

தன் தெய்வமாகிய யேகோவாவின்மேல் நம்பிக்கை வைத்திருப்பவன் களிப்படைவான். சங். 146[1-5].

தெய்வமே, நான் செல்லவேண்டிய வழியைக் கண்டுகொள்ள எனக்குத் துணைபுரியும்; ஏனெனில் நான் என் ஆத்துமனை உம்மிடம் உயர்த்துகிறேன். சங். 143[8].

மனிதரை நம்புவதைப் பார்க்கிலும், கடவுளின் இணையடிகளைப் பற்றிக்கொள்வதே நலம்.

பிரபுக்களை நம்புவதைப் பார்க்கிலும், தெய்வத்தின் திருப் பாதங்களைப் பற்றிக்கொள்வதே நலம்.

உத்தமர் பிரவேசிக்கும் நீதியின் வாசல்களைத் திறவுங்கள்.

நான் அவைகளுக்குட் பிரவேசித்து, கர்த்தரைத் துதிப்பேன். சங். 118[1-3,8-9,19].

தெய்வசித்தத்திற்கு அமைந்தொழுக

"என்னை நோக்கிக் கர்த்தாவே, கர்த்தாவே என்று கூப்பிடும் அவனல்ல, பரலோகத்திலிருக்கும் என் பிதாவின் சித்தத்தைச் செய்யும் அவனே பரம இராஜ்யத்தில் பிரவேசிப்பான்," என்று இயேசு பகவான் பகர்ந்துள்ளார்.

கிறிஸ்தரசே, நாங்கள் உமது திவ்விய இராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி, தெய்வசித்தத்திற்கு அமைந் தொழுகக் கிருபை செய்யும்.

"என் பிதாவின் சித்தத்தைச் செய்கிறவர்களே என் தாயும் சகோதரரும் சகோதரிகளுமாயிருக்கிறார்கள்," என்று எம்பெருமான் உரைத்துள்ளார்.

நேச இயேசுவே, நாங்கள் உம் சகோதரரும் சகோதரிகளுமாக எண்ணப்படும் சிலாக்கியத்தை எங்களுக்குத் தாமாட்டீரோ?

நமது சரீரத்தைச் சுகமாகவும் பலமாகவும் காத்துக்கொள்ளவும், நமது ஆசை இச்சைகளை அடக்கியாளவும் வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

கர்த்தாவே, உமது சித்தம் எங்களில் நிறைவேற வேண்டும்.

நமது எண்ணங்கள் சத்தியமும், நமது தீர்ப்புகள் பாரபக்ஷமற்ற வையாகவும் இருக்கும் வண்ணம், நாம் நமது புத்தியைச் செலுத்த வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

கர்த்தாவே, உமது சித்தம் எங்களில் நிறைவேற வேண்டும்.

நாம் யோக்கியராயும், யதார்த்தவாதிகளாயும், பேச்சிலும் நடக்கை யிலும் நேர்மையுள்ளவர்களாயும் இருக்கவேண்டுமென்பது தேவ னுடைய சித்தமாயிருக்கிறது.

கர்த்தாவே, உமது சித்தம் எங்களில் நிறைவேற வேண்டும்.

நமக்குக் கடவுள் கொடுத்திருக்கும் எத்தொழிலையும் நாம் ஜாக்கிர தையாகச் செய்து, நீதியும் நன்மையு மானவைகளையே தேட வேண்டு மென்பது அவருடைய சித்தமாயிருக்கிறது.

கர்த்தாவே, உமது சித்தம் எங்களில் நிறைவேற வேண்டும்.

நாம் நம் அயலாரின் குறைகளையும் பலவீனங்களையும் பொறுத்துக் கொண்டு, யாவரோடும் சமாதானமாகப் பிழைக்க வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

கர்த்தாவே, உமது சித்தம் எங்களில் நிறைவேற வேண்டும்.

நமக்கென்றே சந்தோஷத்தையும் லாபத்தையும் தேடுவதைத் தவிர்த்து, நாம் பிறருக்கு நன்மை செய்கிறவர்களாய்ப் பிழைக்க வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

கர்த்தாவே, உமது சித்தம் எங்களில் நிறைவேற வேண்டும்.

உலகத்தின் துன்பத்தையும் பாவத்தையும் நீக்க இயன்றமட்டும் முழுபலத்தோடும் முயன்று, நாம் தீமையை நன்மையினால் வெல்ல வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

கர்த்தாவே, உமது சித்தம் எங்களில் நிறைவேற வேண்டும்.

நாம் புசித்தாலும் குடித்தாலும் மற்றெதைச் செய்தாலும் கிறிஸ்து வுக்கென்று செய்யவேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக் கிறது.

கர்த்தாவே, உமது சித்தம் எங்களில் நிறைவேற வேண்டும்.

கர்த்தாவே, உமது சித்தம் நிறைவேறட்டும்.

உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமி யிலேயும் செய்யப்படட்டும். ஆமென்.

ஜெபம்பண்ணுவோம்:—

*எங்கள் நல்ல தேவனே, உமது சித்தம் எங்கள் சித்தத்தைப் பார்க்கிலும், உமது பிரியம் எங்கள் பிரியத்தைப் பார்க்கிலும் எங்களுக்கு அருமையாயிருக்கும்படி, உம்மைப்பற்றும் நம்பிக்கையையும் உமது சமாதானத்தையும் சந்தோஷத்தையும் எங்களுக்குப் போதுமான அளவு கட்டளையிடும். நீர் எங்களுக்குக் கொடுப்பதெல்லாம் உமது இலவசமான ஈவுகளாயிருக்கின்றன. நீர் எங்களிடமிருந்து எடுத்துக்கொள்ளுவதெல்லாம் உமது கிருபையின் பூர்த்தியாயிருக்கின்றன. ஆதலால் நாங்கள் யாவற்றிற்காகவும், எந்த நிலைமையிலிருந்தாலும் உமக்கு நன்றிசெலுத்தவும், எப்பொழுதும் உம்மைத் துதிக்கவும், உம்மை அனல் குன்ருது நேசிக்கவும் எங்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று, எங்கள் நாதரும் உலக மீட்பருமாகிய கிறிஸ்து பெருமானை முன்னிட்டுக் கெஞ்சுகிறோம், பரமபிதாவே. ஆமென்.

வாரம் 4

செவ்வாய் மாலை

யேகோவா என் பலனும் கீதமுமாயிருக்கிறார்; அவர் என் இரக்ஷணியமுமானார்.

உத்தமரின் கூடாரங்களில் இரக்ஷண்யத்தின் கெம்பீர சத்தம் தொனிக்கிறது.

கர்த்தரின் வலதுகரம் உயர்ந்திருக்கிறது.

கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ் செய்யும்.

கர்த்தர் என்னைப் புண்படச் சிட்சித்தார்; என்றாலும் என்னை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கவில்லை.

நம்மைப் பிரகாசிக்கச்செய்யும் தேவன், யேகோவாவே.

நீர் என் தேவன்; நான் உம்மைத் துதிப்பேன்.

நீர் என் தேவன்; நான் உம்மை உயர்த்துவேன்.

இதோ யேகோவாவுக்கு நன்றியைச் செலுத்துங்கள்; அவர் நல்லவர், அவர் கிருபை என்றும் நிலையான கிருபை. சங். 118[14-29].

---

* Christina Rosetti

தேய்வசித்தத்திற்கு அமைந்தொழுக

நாட்கள் பொல்லாதவைகளாயிருப்பதால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல் கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள். எபே. 5[16,17].

கர்த்தாவே, உமது சித்தத்தை எங்களுக்குத் தெளிவாக அறிவியும்.

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதாலே மறுரூபமாகுங்கள். ரோம. 12[2].

பரிசுத்த ஆத்துமனே, எங்கள் மனத்தைப் புதிதாக்கி எங்களை மறுரூபப்படுத்தும்.

எங்கள் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறோம். சங். 40[8].

தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய எங்களுக்குப் போதித்தருளும். ஆமென்.

*நாங்கள் எங்களை நேசிப்பதுபோல் பிறரை நேசித்து, பிறர் எங்களுக்கு என்னசெய்ய விரும்புவோமோ அதையே பிறருக்குச் செய்யக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

பெற்றோரைக் கனப்படுத்தி, அவர்கள் முதுமையில் அவர்களைப் பராமரிக்கத்தக்க மனத்தை எங்களுக்குத் தர வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

கனப்படுத்தவேண்டியவர்களைக் கனப்படுத்தவும், அதிகாரிகள் குருக்கள் ஆசிரியருக்கு அமைந்து, அவர்கள் சொல்லும் புத்தியைக் கேட்டு நடக்கவும் தக்கதான இணக்கமும் தாழ்மையுமான சிந்தையை எங்களுக்குத் தர வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

எவரையும் புண்படப் பேசாமலும், எவருக்கும் தீங்குசெய்யாமலும் இருக்கும்படி எங்கள் நாவையும் அகங்காரத்தையும் அடக்கியாளும் சக்தியை எங்களுக்குத் தர வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

---

* Acts of Devotion

என்றும் எல்லா விஷயத்திலும் சத்தியத்தையும் நியாயத்தையும் கடைப்பிடித்தொழுக எங்களுக்குக் கற்பிக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

பகையும் குரோதமும் எங்கள் இருதயங்களில் குடிகொள்ளா திருக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

எங்கள் கரங்களைக் களவுக்கும், நாவைக் கபட வசனிப்புக்கும் புறங் கூறலுக்கும் விலக்கிக் காக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

எங்கள் உடலைப் பெருந்தீனி, குடிவெறி, வேசித்தனம் முதலிய பாவங்களுக்கு விலக்கிக் காக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

நாங்கள் சூதாட்டம் போட்டிப்பந்தயம் முதலானவற்றாலும், பிறர் பொருளை அபகரிப்பதாலும் வரக்கூடிய இழிவான ஆதாயத்தை நாடாதிருக்க எங்களுக்கு அறிவுறுத்த வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

நாங்கள் பிழைப்புக்கானவற்றை எங்கள் உழைப்பால் மட்டுமே தேடிக்கொள்ள எங்களுக்குப் போதிக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

நீர் எங்களுக்குக் கொடுத்திருக்கும் அலுவலை மனிதருக்குப் பயந் தல்ல, உம்மைப் பிரியப்படுத்தவே செய்யும்படி எங்களுக்குப் போதிக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

எல்லாவற்றிற்கும் மேலாக உமது இராஜ்யத்தையும் அதன் நீதி யையும் முதல் முதல் தேடத்தக்க உன்னத நோக்கத்தை எங்களுக்குத் தர வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

நமக்கும் நமது அன்புக்குரிய யாவருக்கும் தெய்வத் திருவுளச்சித் தத்தை ஆய்ந்தறிந்து அதைச் செய்வதால் விளையும் பரம சந்தோஷத் தைத் தேவன் இம்மையிலும் மறுமையிலும் ஈந்துதவ வேண்டும்

ஆமேன்.

வாரம் 4

புதன். **காலை**

இருந்தவரும் இருப்பவரும் வரப்போகிறவருமான கர்த்தராகிய தேவன் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்.

மகா உன்னதமான கர்த்தாவே, உமக்கு மகிமை பெருக வேண்டும்.

அறிவும் ஞானமும் நிறைந்த மெய்ப்பொருளே! உமது தீர்ப்புகள் அறிவுக்கெட்டாதனவாகவும், உமது வழிகள் கண்டுகொள்ளக் கூடா தனவாகவும் இருக்கின்றன.

மகா உன்னதமான கர்த்தாவே, உமக்கு மகிமை பெருகவேண்டும்.

சராசரமனைத்தும் எவரிலிருந்து, எவர் மூலமாக, எவருக்காகப் படைக்கப்பட்டனவோ அவருக்கு, குமரபெருமானாகிய கிறிஸ்துவுக்கு, என்றும் மகிமை பெருகவேண்டும். ரோம. 11^{33}.

மகா உன்னதமான கர்த்தாவே, உமக்கு மகிமை பெருக வேண்டும்.

நித்தியராய், சிரஞ்சீவியாய், சுயம்புவாய், அரூபியாயிருக்கும் ஏக தேவருக்கு, எம் வேந்தருக்குக் கனமும் மகிமையும் மேன்மையும் என்றும் பொங்குக. ஆமேன்.

போதுவான ஜெபங்கள்

சகல மனிதருக்காகவும் ஜெபங்களையும் விண்ணப்பங்களையும் மன்றாடல்களையும் உமக்கு ஏறெடுக்க வேண்டுமென்று கற்பித்த தேவனே,

எங்கள் பிரார்த்தனைகளுக்கு உமது செவியைச் சாய்த்தருளும்.

உமது ஊழியனும் எங்கள் அரசனுமாகிய எட்வர்ட் சக்கரவர்த்தியும், ஆட்சிசெய்யும் அதிகாரிகளும் உமது பரிசுத்த ஆவியால் கற்பிக்கப்பட்டு, முடிவில்லாத பரம இராஜ்யத்தின் பூரண நீதிப்பிரமாணங்களின்படி செங்கோலோச்சத்தக்கதாக அவர்களுக்கு உமது கிருபையைத் தர வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், நல்ல தேவனே.

உமது சித்தம் உலகில் நிறைவேறும்படி பிரயத்தனப்பட்டுவரும் மெய்த்தொண்டர் யாவருக்கும் சகோதர சிநேகத்தை நிலைநாட்டத் தக்க ஞானத்தையும் உண்மைத்தன்மையையும் நிரம்பத் தர வேண்டு மென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம், நல்ல தேவனே.

நூலாசிரியர், பத்திராதிபர், கவிவாணர், சிற்பாசாரிகள் முதலா ஞேர் ஒழுக்கத்தையும் நீதியையும் உறுதிப்படுத்தத்தக்க காரியங்களையே செய்ய அவர்களை ஆட்கொண்டு நடத்தியருள வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம், நல்ல தேவனே.

பிணியைத் தடுக்கவும் தீர்க்கவும், ஆரோக்கிய முறைகளை ஜனங் களுக்குக் கற்றுக்கொடுக்கவும் முயன்றுவரும் வைத்தியர் மருத்துவர் யாவரும் பரம பண்டிதராகிய இயேசுவைப்போல் பக்ஷானுதாபமுள்ள வர்களாய் இருக்க அவர்களுக்கு துணைசெய்ய வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம், நல்ல தேவனே.

விவசாயிகளும் வணிகரும் கைத்தொழிலாளரும் பொதுநலத் திற்கு இடைஞ்சலுண்டாக்கும் சுயநலங்களைத் தேடாதிருக்க அவர் களுக்கு அறிவுறுத்த வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம், நல்ல தேவனே.

பரிசுத்தம் அன்பு ஒழுக்கம் புகழால் எங்கள் வீடுகளை அலங்கரித்து, கனிவாலும் ஒருவரையொருவர் பேணும் கவலையாலும் அவைகளை இசைத்துக்கட்டி, பெற்றேரையும் பிள்ளைகளையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம், நல்ல தேவனே.

அறிவீனருக்கும், பாவ சோதனைக்குள் சிக்கிக்கொண்டோருக் கும், சிறைப்பட்ட கைதிகளுக்கும், புறக்கணிக்கப்பட்ட ஜனங்களுக் கும் உமது இரக்கத்தையும் ஆத்ம வாழ்வையும் கனிந்தருளவேண்டு மென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம், நல்ல தேவனே. ஆமேன்.

தயவுள்ள தேவனே, சரீரப்பிணியாலும் மனக்குழப்பத்தாலும் வருந்துமவர்களுக்கு இரங்கி அவர்களுக்கு ஆரோக்கியமும் சாந்தியும் அருளும்.

துன்பத்தைத் தாங்கக்கூடாது சோர்வுற்றிருப்போரை ஆற்றித் தேற்றும், கிறிஸ்துவே.

மரண இருளின் பள்ளத்தாக்கைக் கடந்து சென்றுகொண்டிருக்கும் உமது பிள்ளைகளுக்குப் பக்கத்துணையாயிரும், இயேசுவே.

அவர்கள் திரும்ப விழிக்கும்போது, உமது திவ்விய வதனத்தின் ஜோதியைக்கண்டு களிகொள்ள அவர்களுக்குக் கிருபை புரியும், பரம தந்தையே. ஆமேன்.

ஜெபம்பண்ணுவோம்:—

விசாலமான இந்நாட்களிலிருக்கும் சிலாக்கியத்தைப் பெற்ற நாங்கள், அற்ப புத்தியையும் சுயநலத்தையும் வெறுத்துத்தள்ளி, எங்களோடு உறவாடும் யாவருக்கும் சிறந்த தெய்வ பக்தியை ஊட்டத்தக்க தீரமும் ஊக்கமும் கொண்டவர்களாய்ப் பிழைக்க எங்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் மூலமாய் இரந்து மன்றாடுகிறோம், பராபரனே, ஆமேன்.

ஸ்தோத்திரத்திற்குப் பாத்திரரான இயேசுபரனே, உமது திவ்விய பிரசன்னத்தாலும் வல்லமையாலும் எங்களை முசிப்பாற்றும். அலைசடிப்படும் எங்கள் உள்ளங்களைச் சாந்தப்படுத்தும். உமது ஞான ஒளியால் நாங்கள் ஒளிபெற்றுய்யும்படி உமது திருவுளம் என்னவென்று எங்களுக்கு வெளிப்படுத்தும். உமது ஊழியராயிருக்க எங்களை அழைத்திருக்கும் நீரே எங்களை உமது சந்தோஷத்தையும் பலத்தையும் எம் அயலாருள்ளங்களுக்குப் பாய்ச்சக்கூடிய நல்ல வாய்க்கால்கள் ஆக்கிவிடும். உமது நாம மகிமைக்கென்றே இந்த மன்றாட்டைக் கேட்டிரங்கும், தெய்வமே. ஆமேன்.

நாங்கள் அவசரப்படாமலும் சோர்ந்துபோகாமலும் உமக்குத் தொண்டுபுரியும்படி, உமது தன்மையையும் அழகையும் எங்களுக்குக் காட்டி எங்களை ஆசீர்வதியும், கர்த்தாவே. ஆமேன்.

தேவனே, எங்கள் சுயலாபத்தையே தேவதாகிய அடிமைத்தனத்தினின்று எங்களை விடுதலையாக்கும். உமது சித்தத்தைச் செய்வதே எங்களுக்குப் போஜனமும் பானமுமாயிருக்கவேண்டும். ஆமேன், ஆமேன்.

வாரம் 4

புதன் **: மாலை**

பொதுவான ஜெபங்கள்

*வானலோகங்களிலுள்ள சகல ஆசீர்வாதங்களினாலும் கிறிஸ்துவுக்குள் நம்மை ஆசீர்வதிப்பவரை வாழ்த்துவோம்.

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் பிதாவுமானவரை வாழ்த்துவோம். அல்லேலூயா!

கிறிஸ்து பெருமான் கூறிய ஆசீர்வாதங்களைத் தியானிப்போம்:—

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்;

பரலோக இராஜ்யம் அவர்களுடையது.

துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்;

அவர்கள் ஆறுதல் அடைவார்கள்.

சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்;

அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்.

நீதியின்மேல் பசியும் தாகமும் கொண்டிருக்கிறவர்கள் பாக்கியவான்கள்;

அவர்கள் திருப்தி யடைவார்கள்.

இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்;

அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்;

அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.

சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்;

அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.

நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்;

பரலோக இராஜ்யம் அவர்களுடையது.

பாவ சோதனையை எதிர்த்து நிற்பவர்கள் பாக்கியவான்கள்;

அவர்கள் சோதனையை மேற்கொள்ளும்பொழுது ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்ளுவார்கள்.

---

*Acts of Devotion

கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்,

அவர்கள் தங்கள் வேலைகளை முடித்து இளைப்பாறுவார்கள். அல்லேலூயா!

நன்றி செலுத்துவோம்:—

உலகின் விந்தைக்காகவும், அதன் வனப்புக்காகவும், சாஸ்திரத் தேர்ச்சிக்காகவும், கானத்தின் இனிமைக்காகவும், சித்திரத்தின் அழகுக் காகவும், நூல்களில் குவிந்துகிடக்கும் ஞானக் களஞ்சியத்திற்காகவும்,

நமது கர்த்தராகிய தேவனைப் புகழுவோம்.

குடும்ப நேசத்திற்காகவும், குழந்தைகளின் நகைப்புக்காகவும், புருஷரின் பலத்திற்காகவும், ஸ்திரீகளின் வசீகரத்திற்காகவும், நட்பின் உறுதிக்காகவும், வீரரின் மகிமைக்காகவும், பக்தரின் குணசீலத்திற் காகவும், நற்செயலின் மாண்பிற்காகவும், இறந்துபோன நேசரின் அன்புக்காகவும், அவர்களை மறுபடியும் காண்போமென்ற நம்பிக்கைக் காகவும்,

நமது கர்த்தராகிய தேவனைப் புகழுவோம்.

உன்னத நோக்கங்கள் ஊட்டும் உற்சாகத்திற்காகவும், பரோபகாரச் சேவையின் சந்தோஷத்திற்காகவும், துன்பவேளையில் தெய்வ சமூகம் கொடுக்கும் ஆறுதலுக்காகவும், தோல்வியடைந்த வேளையில் தெய்வ வாக்குத்தத்தங்கள் தரும் தைரியத்திற்காகவும்,

நமது கர்த்தராகிய தேவனைப் புகழுவோம். அல்லேலூயா, ஆமென்.

ஜெபிப்போம்:—

வைத்தியர் தம் தொழிலைச் செம்மையாய்ச் செய்து பிணியாளிகளைப் பேணவும், நூலாசிரியர் ஜனங்களுக்குப் பரிசுத்த எண்ணங்களையும் சிறந்த நோக்கங்களையும் ஊட்டவும், குருக்களும் ஆசிரியரும் ஜனங்களைச் சான்றோராக்க முயலவும் வேண்டுமென்று நாங்கள் ஜெபிக்கும்பொழுது,

கிறிஸ்து பெருமானே, கிருபையாய் எங்கள் விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்தருளும்.

உயர்குலத்தில் பிறந்தோரும், பெரிய அந்தஸ்தைப் பெற்றுள்ளோரும் தம் சிலாக்கியத்திற்குப் பாத்திரராய்ப் பிழைக்கவும், அதைப் பொதுநலத்திற்கென்று உபயோகிக்கவும் வேண்டுமென்று நாங்கள் ஜெபிக்கும்போது,

கிறிஸ்து பெருமானே, கிருபையாய் எங்கள் விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்தருளும்.

புத்திக்கூர்மையும் திடமனதும் வலுத்த சித்தமும் பெற்றிருப்பவர்கள், அவ்வரங்களை உமது சித்தத்திற்கேற்க அபிவிர்த்தி செய்து, மாந்தருக்குப் பிரயோஜனமும் உம் திருநாமத்திற்கு மகிமையும் விளையுமாறு கையாள வேண்டுமென்று ஜெபிக்கும்போது,

கிறிஸ்து பெருமானே, கிருபையாய் எங்கள் விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்தருளும்.

செல்வவந்தர் தம் செல்வப் பெருக்கால் உம்மை மறந்து வறியரை இகழ்ந்து, அதனால் தம் ஆத்துமாக்களை இழந்துபோகாதிருக்க வேண்டுமென்று நாங்கள் ஜெபிக்கும்பொழுது,

கிறிஸ்து பெருமானே, கிருபையாய் எங்கள் விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்தருளும்.

துயருற்று நலியுமவர் எங்கள் அனுதாபத்தாலும் உமது பிரசன்னத்தாலும் தேற்றப்பட வேண்டுமென்று நாங்கள் ஜெபிக்கும்பொழுது,

கிறிஸ்து பெருமானே, கிருபையாய் எங்கள் விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்தருளும்.

சத்தியம் எது நியாயம் எதுவென்று அறிந்துகொள்ளக்கூடாமல் திகைப்போரை உமது அருட்பிரகாசத்தால் வழிநடத்த வேண்டுமென்று நாங்கள் ஜெபிக்கும்பொழுது,

கிறிஸ்து பெருமானே, கிருபையாய் எங்கள் விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்தருளும்.

பாவசோதனையில் பட்டுத் தவிப்பவர் பரீட்சிக்கப்பட்டாலும் பரிசுத்தராய் விளங்க வேண்டுமென்று ஜெபிக்கும்பொழுது,

கிறிஸ்து பெருமானே, கிருபையாய் எங்கள் விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்தருளும்.

தம் வாழ்க்கையில் பலன் காணுததால் சோர்வுற்ற மனத்தினரையும், கடினமாக உழைத்தும் சித்தியடையாமல் வருந்துவோரையும், துன்பத்தில் யாதொரு ஆதரவுமில்லாமல் தவிப்பவரையும், துணையற்ற அகதிகளையும், அவரவர் தேவைக்கேற்க உமது கிருபாகடாட்சத்தால் தாங்கி அரவணைக்க வேண்டுமென்று, மானிட உள்ளத்தின் பலவீனங்களை நன்குணர்ந்திருக்கும் வல்லதேவனே, உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம். **ஆமென்.**

சாந்தப் பிரபுவே, நீதியின்மேல் பசிதாகமுள்ளோரின் சிநேகிதரே, நன்மை செய்யவேண்டுமென்று விரும்பினாலும், அடிக்கடி பாவ உழையில் தவறிவிழும் பலவீனரை உமது சமுகத்தில் நிறுத்துகிறோம்.

அவர்கள் கனவுகளையும் நினைவுகளையும் தேவரீர் சுத்தப்படுத்தி, திட மனத்தையும் உறுதியான விசுவாசத்தையும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். தமக்கு நிலையான சுகத்தைக் கொடுப்பவை எவை என்று அறிந்து, அவற்றை உம்மிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளத்தக்க யூக மில்லாத யாவருக்காகவும் நீரே அடங்காப் பெருமூச்சுகளுடன் உமது பிதாவிடம் பரிந்து மன்றாட வேண்டுமென்று கெஞ்சிக் கேட்கிறோம், எம் கிறிஸ்தரசே. ஆமேன்.

என்னிடம் வரும் ஒருவனையும் நான் ஒருபோதும் புறக்கணியேன் என்று கிறிஸ்து உறுதி பகர்ந்திருக்கின்றார்.

அல்லேலூயா, இயேசு மகிபரே நான் உம்மிடம் வருகிறேன்.

கர்த்தாவே நான் உம்மையே நம்பியிருக்கிறேன்.

நான் ஒருபோழுதும் வெட்கப்படாதபடி செய்தருளும்.

ஆமேன்.

வாரம் 4

வியாழன் காலை

யேகோவாவின் பிரமாணத்தைக் கடைப்பிடித்தொழுகும் உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்.

அவருடைய நிபந்தனைகளைக் கைக்கொண்டு, அவரை முழு இருத யத்தோடும் தேடுகிறவர்கள் பாக்கியவான்கள்.

உமது கட்டளைகளை நாங்கள் கருத்தாய்க் கைக்கொள்ளும்படி தேவரீர் ஆக்ஞாபித்தீர்.

என் வழிகள் உமது பிரமாணங்களைக் கைக்கொள்ள என்னை நடத்துமானால், எத்தனை நலமாயிருக்கும்.

உமது நீதியான தீர்ப்புக்களை நான் கற்றுக்கொள்ளும்பொழுது, நேர் மையான இருதயமுள்ளவனாய் உம்மைத் துதிப்பேன்.

உமது பிரமாணங்களைக் கைக்கொள்ளுவேன், தேவனே என்னை அறவே கைவிட்டுவிடாதீர். சங். 119^{1-8}.

காலை ஜெபம்

*அறிவுக்கு எட்டாத ஆழ்ந்த சாந்தத்தின் உறைவிடமே, அன்பின் கடலே, இகபரநலங்களின் ஊற்றே, எங்கள் தெய்வமே, மாந்தருள்

*Syrian Liturgy

ளங்களில் பக்ஷத்தை ஊற்றுகிறவரும், பெற்றுக்கொள்ள விரும்புவோருக்கு சாந்தியை அளிப்பவரும் நீரே. உமது அன்பின் மதகுகளை எங்களுக்குத் திறந்துவிடும். உமது கிருபை யென்னும் நதிகளால் வறண்ட எங்கள் உள்ளங்களுக்கு நீர்ப்பாய்ச்சும். எங்களை அமரிக்கையின் புத்திரரும், சமாதானத்தின் சுதந்தரரும் ஆக்கிவிடும். உமக்குப் பயப்படும் பயத்தை எங்கள் உள்ளங்களில் விதைத்துவிடும். பலவீனராகிய எங்களை உமது பலத்தால் பலப்படுத்தும். எங்களை ஒருவரோடொருவரும், உம்மோடும் அன்பின் பாசத்தால் இணைத்துக் கட்டிவிடவேண்டுமென்று இயேசு கிறிஸ்துவின் மூலமாய் மன்றாடுகிறோம், நல்ல தேவனே. ஆமேன்.

தற்பிரதிஷ்டை

தேவனே, பலியை நீர் விரும்புகிறதில்லை; விரும்பினால் செலுத்துவேன். தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்.

தேவனே, நொறுங்குண்டதும், பிழையுணர்ந்து வருந்துகின்றதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர். சங். 51^{16-17}.

கர்த்தாவே, நாங்கள் எங்களுக்குச் சொந்தமானவர்களல்ல.

கிறிஸ்து பெருமானே, நாங்கள் உமது அன்பென்னும் திரண்ட செல்வத்தால் கிரயத்திற்கு வாங்கப்பட்ட அடிமைகள். கொரி. $6^{19,20}$.

சிருஷ்டி கர்த்தாவே, எங்கள் சரீரத்தின் ஒவ்வொரு அணுவும், மனத்தின் தீக்ஷண்யமும், உள்ளத்தின் உணர்வும், எங்கள் சுவாசமும் நாடியும்கூட நீர் எங்களுக்குக் கிருபையாய் அளித்த ஒப்பற்ற ஈவுகளாயிருக்கின்றன.

ஆதலால் உம்மைத் துதித்துப் போற்றுகிறோம், கர்த்தாவே.

காணவும், கேட்கவும், முகரவும், நுகரவும் புலன்களையும் பொறிகளையும் நாங்கள் பெற்றிருப்பதும் உமது பெரிதான கிருபையே.

ஆதலால் உம்மைத் துதித்துப் போற்றுகிறோம், கர்த்தாவே.

எங்கள் சரீரத்தையும் ஐம்புலன்களையும் உள்ளத்தையும் மனத்தையும் அழகும் நலமும் உண்மையும் மேன்மையுமான காரியங்களில் செலுத்தும்போது, நாங்கள் சுகமும் சந்தோஷமும் அடையவேண்டுமென்று நீர் வரையறுத்திருக்கிறீர்.

ஆதலால் உம்மைத் துதித்துப் போற்றுகிறோம், கர்த்தாவே.

அவற்றைப் பாவத்திலும் பழியிலும் சிற்றின்பத்திலும் செலுத்தும் போது, நாங்கள் பிணியும் துயரமும் அடைந்து வருந்தவேண்டுமென்றும் நீர் வரையறுத்திருக்கிறீர்.

ஆதலால் உம்மைத் துதித்துப் போற்றுகிறோம், கர்த்தாவே.

நாங்கள் உமது அருட்பிரசன்னத்தின் இளைப்பாறுதலைத் தேடி அடைந்துகொள்ளுமட்டும், எங்கள் ஆத்துமம் வேலைவாய்த் துரும்பு போல் இப்பிரபஞ்சத்தின் மாய்கையில் சிக்கி அல்லல் உறும் என்பதும் உமது தீர்மானமே.

ஆதலால் உம்மைத் துதித்துப் போற்றுகிறோம், கர்த்தாவே.

இந்த நித்திய பிரமாணங்களை நாங்கள் அறியாதவர்களாய், எங்கள் சரீரத்திற்குச் சுகமும் ஆத்துமனுக்குத் திருப்தியும் தரத்தக்க நன்மைகளைத் தேடாமலிருந்ததை நினைத்து,

மனங்குழைந்து துக்கிக்கிறேம், கருணைவள்ளலே.

எங்கள் அவயவங்களையும் அவற்றின் சத்துவங்களையும், காலத்தையும் பொருளையும் உமக்குச் சுகந்தவாசனையாகப் படைக்காமல், பொய் வஞ்சகம் பகை பொருமை காமம் முதலிய பேய்களுக்குப் படைத்து வந்ததை நினைத்து,

மனங்குழைந்து துக்கிக்கிறேம், கருணைவள்ளலே.

ஆனால் இப்பொழுது நாங்கள் எங்கள் சரீரம் பாவத்தால் கறைப் படாதபடி, மாமிச இச்சையை அடக்கி ஆட்கொள்ள விரும்புகிறோம்.

கர்த்தாவே எங்களுக்கு இரங்கி, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும்படி உமது கிருபையின் பலத்தைக் கொடுத்தருளும்.

தேவனே, எங்கள் கண்கள் அழகானவற்றை பார்க்கவும், செவிகள் சத்தியத்தையே கேட்கவும், நாவு உண்மையையே பேசவும் செய்வதால் உம்மைச் சேவிக்க விரும்புகிறோம்.

கர்த்தாவே எங்களுக்கு இரங்கி, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும்படி உமது கிருபையின் பலத்தைக் கொடுத்தருளும்.

புண்ணியம், புகழ், நற்கீர்த்தி, ஒழுக்கம், நேர்மை, கற்பு, இரக்கம், தாழ்மை, அன்பு முதலிய ஒளிமங்கா மணிகளால் எங்கள் உள்ளங்களை அலங்கரித்துக்கொண்டு உம்மைப் பூஜிக்க விரும்புகிறோம்.

கர்த்தாவே எங்களுக்கு இரங்கி, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும்படி உமது கிருபையின் பலத்தைக் கொடுத்தருளும்.

எங்கள் உடலின் பலத்தையும், உள்ளத்தின் கிளர்ச்சியையும், மனத்தின் தத்துவங்களேயும் மாந்தரின் சரீர சுகத்திற்கென்றும் ஆத்தும ஈடேற்றத்திற்கென்றும் உபயோகிப்பதின் மூலமாக உம்மைப் போற்ற விரும்புகிறோம்.

கர்த்தாவே எங்களுக்கு இரங்கி, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும்படி உமது கிருபையின் பலத்தைக் கொடுத்தருளும்.

எங்கள் காலத்தையும் பொருளேயும் உமது பிள்ளைகளாகிய தரித்திரரையும் தவறி விழுந்தவர்களேயும் தேடி இரட்சிப்பதற்கென்று செலவிடுவதால், அவற்றை உமக்கு அர்ப்பணம் பண்ண விரும்புகிறோம்.

கர்த்தாவே எங்களுக்கு இரங்கி, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும்படி உமது கிருபையின் பலத்தைக் கொடுத்தருளும்.
ஆமேன்.

சுத்த பரிசுத்த பரம்பொருளே, எங்கள் பாவங்களேயும், நாங்கள் இதன்முன் செய்த நல்ல தீர்மானங்களே முறித்ததையும் எண்ணுமல், இப்பொழுது நாங்கள் கொண்டிருக்கும் நல்ல எண்ணங்களேயும், அவற்றை எங்களுக்குப் புகட்டிய உமது திவ்விய சுதனின் அருள் நிறைந்த முகத்தையுமே பார்த்து, எங்கள்மீதிரங்கி எங்கள் தற்பிரதிஷ்டையை அங்கிகரிக்க வேண்டுமென்று உமது திருவடிகளுக்குத் தெண்டனிட்டு மன்ருடுகிறோம். **ஆமேன்.**

பாவமன்னிப்புக்காக

*கர்த்தாவே, நாங்கள் உமது கிருபையை நிரம்பப்பெற்றவர்களாய், உத்தமரின் சந்தோஷத்தில் கலந்துகொள்ளத்தக்கதாக, பாவமாகிய ஆத்தும மரணத்தினின்று எங்களேத் தற்காத்து இரட்சியும். எங்கள் பாவங்களேயும் பிழைகளேயும் பொறுத்துக்கொண்டு, உமது அருளாகிய ஜீவ அப்பத்தால் எங்கள் ஆத்துமனேப் போஷித்துப் பலப்படுத்தும். எமதாண்டவர் கிறிஸ்து இயேசுவினிமித்தம் எங்கள் ஜெபத்தைக் கேளும், தேவனே. ஆமேன்.

---

* Sarum Breviary

வாரம் 4

வியாழன் **மாலை**

யேஹோவாவே, உமது வசனம் என்றென்றைக்கும் வானலோகத்தில் ஸ்திரப்பட்டிருக்கிறது.

உமது உண்மை தலைமுறை தலைமுறையாக நிற்கிறது.

நீர் பூமியை உறுதிப்படுத்தினீர்; அது நிலைத்திருக்கிறது.

உமது உண்மையும், இவ்வுலகமும் உமது பிரமாணங்களின்படி இன்றும் நிலைத்திருக்கின்றன. ஏனெனில் சமஸ்தமும் உமது சேவகராம்.

உமது பிரமாணம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன்.

உமது கட்டளைகளை நான் ஒருபோதும் மறவேன்; ஏனெனில் அவைகளாலேதான் நீர் என்னை உயிர்ப்பித்தீர்.

தேவனே, நான் உம்முடையவன்; என்னை இரட்சியும்.

சங். 119^{89-94}.

மாலை ஜெபம்

நித்திய வெளிச்சத்தை உண்டாக்கிய தெய்வமே, உமக்காகக் காத்திருக்கும் அடியாராகிய எங்கள் வாழ்நாட்கள் என்றும் பிரகாசமாயிருக்கச் செய்யும். அதனால் எங்கள் உதடுகள் உம்மைத் துதிக்கவும், எங்கள் ஜீவன் உம்மை வாழ்த்தவும், எங்கள் சிந்தை உமது மகிமையைப் பாராட்டவும் எங்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று கிறிஸ்து இயேசுவினிமித்தம் கெஞ்சுகிறோம். ஆமேன்.

தற்பிரதிஷ்டை

சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாகச் சமர்ப்பிக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.

ரோம. 12^{1}.

உடலுக்கு உழைப்பையும் உணவையும் கொடுக்கவும், கண்களுக்கு ஒளியையும் நிறங்களையும் காட்டவும், காதுக்கு இனிமையையும் மனத்திற்கு உற்சாகத்தையும் தரவும், புத்திக்கு விசாரணையையும் அறிவையும் புகட்டவும் தக்கதாக உலகையும் எங்கள் புலன் பொறிகளையும் அற்புதமாய் இணைத்துவைத்திருக்கும் உமது சிறந்த ஞானத்தை எண்ணி,

தேவனே, உம்மைத் துதிக்கிறோம்.

வறியோருக்கும் பணக்காரருக்கும் ஒரே அளவாகவும், இலவசமாகவும் நீர் கொடுக்கும் இயற்கைப்பொருள்கள், சரீர ஆத்ம சக்திகள் ஆகிய நன்மைகளுக்காக,

தேவனே, உம்மைத் துதிக்கிறேம்.

இவைகளை ஞானமாய் உபயோகிப்பதால் நாங்கள் சரீர சுகத்தையும் ஆத்தும வளர்ச்சியையும் பெற்று, அழியாத சந்தோஷத்தோடு உம்மைப்பணிந்துகொள்ள வேண்டுமென்று நீர் வகுத்திருப்பதை நினைத்து,

தேவனே, உம்மைத் துதிக்கிறேம்.

உலகமோ ஜீவனே, மரணமோ நிகழ்காரியங்களோ, வருங்காரியங்களோ, எல்லாம் எங்களுடையவைகளும், நாங்கள் கிறிஸ்துவினுடையவர்களுமா யிருப்பதை எண்ணி, (1 கொரி. 3[22], [23].)

தேவனே, உம்மைத் துதிக்கிறேம்.

தேவனே, உமது இலவச ஈவுகளின் விலையை உணராமலும், எங்கள் சரீரங்களாலும் மனோசக்திகளினாலும் நாங்கள் உமக்கும் உமது பிள்ளைகளாகிய எம் அயலாருக்கும் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாமலும் இருந்ததாகிய குற்றத்தை,

தயவாக மன்னிக்க வேண்டுமென்று, உம்மைக் கெஞ்சுகிறேம்.

தேவனே, எங்கள் சரீரம் உமது பரிசுத்த ஆலயமும் கிறிஸ்துவின் அவயவமுமாய் இருக்கின்றது என்பதைச் சிறிதும் அறியாதவர்கள் போல் அதைக் கள்ளர்குகையும், இச்சையின் உறைவிடமும் ஆக்கிவிட்ட குற்றத்தை,

தயவாக மன்னிக்க வேண்டுமென்று, உம்மைக் கெஞ்சுகிறேம்.

தேவனே, எங்கள் முழு உள்ளத்தோடு உம்மையும் உமது சமுகத்திலிருக்கும் உன்னத ஆத்தும நன்மைகளையும் நாடாமல், அநித்திய உலக சுகங்களை நாங்கள் நாடியதாகிய குற்றத்தை,

தயவாக மன்னிக்க வேண்டுமென்று, உம்மைக் கெஞ்சுகிறேம்.

தேவனே, எங்கள் புத்தியால் இயற்கைப்பொருட்களின் அரிய இரகசியங்களை அறிந்துகொண்டோமென்றெண்ணி, அவிசுவாசத்திற்கும் மமதைக்கும் நாங்கள் இடங்கொடுத்ததை,

தயவாக மன்னிக்க வேண்டுமென்று, உம்மைக் கெஞ்சுகிறேம்.

தேவனே, எங்கள் ஆத்துமனை உமது சகவாசத்தால் அனுதினமும் போஷிப்பதற்குப் பதிலாக, உம்மை ஒருதரம்கூட நினைக்காமல் அநேக நாட்களை வீணாய்க் கழித்ததாகிய குற்றத்தை,

தயவாக மன்னிக்க வேண்டுமென்று, உம்மைக் கெஞ்சுகிறோம். ஆமேன்.

இரவுசென்றது, அருணோதயம் உதித்துவிட்டது, ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளாகிய களியாட்டு, வெறி, காமவிகாரம், சண்டை, பொறாமை முதலிய அசுத்தங்களைத் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்தவர்களாய்ப் பகலில் நடக்கிறவர்களைப்போல் சீராய் நடக்கக்கடவோம். ரோம. 13[12,13].

கர்த்தாவே, உமது வசனத்தை எங்கள் இதயங்களில் வரைந்து, அதன்படி நடக்க விரும்பும் எங்களுக்கு உமது கிருபையைக் கொடுத்தருளும்.

துற்இச்சைக்கு இடமாக உடலைப் பேணுமல், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள். ரோம. 13[14].

கர்த்தாவே, உமது வசனத்தை எங்கள் இதயங்களில் வரைந்து, அதன்படி நடக்க விரும்பும் எங்களுக்கு உமது கிருபையைக் கொடுத்தருளும்.

உங்கள் சரீரம் நீங்கள் கர்த்தரிடமிருந்து பெற்றதும் பரிசுத்த ஆவியானவர் தங்கியிருப்பதுமான ஆலயமென்றறிந்து, உங்கள் சரீரத்தால் தேவனை மகிமைப்படுத்துங்கள். 1 கொரி. 6[19].

கர்த்தாவே, உமது வசனத்தை எங்கள் இதயங்களில் வரைந்து, அதன்படி நடக்க விரும்பும் எங்களுக்கு உமது கிருபையைக் கொடுத்தருளும்.

நீங்கள் புசித்தாலும் குடித்தாலும் மற்றெதைச் செய்தாலும், எல்லாவற்றையும் கடவுளின் மகிமைக்கென்றே செய்யுங்கள். 1 கொரி. 10[31].

கர்த்தாவே, உமது வசனத்தை எங்கள் இதயங்களில் வரைந்து, அதன்படி நடக்க விரும்பும் எங்களுக்கு உமது கிருபையைக் கொடுத்தருளும்.

வாடிப்போகும் கிரீடத்திற்காகப் பந்தய ஓட்டக்காரன் தன் சரீர இச்சைகளை அடக்கி ஆட்கொள்ளுவதுபோல், வாடாத ஜீவகிரீடத்

தைப் பெறுவதற்கு நாம் நமது சரீரங்களை ஒடுக்கி ஆட்கொள்ளுவது அவசியமல்லவோ?

கர்த்தாவே, உமது வசனத்தை எங்கள் இதயங்களில் வரைந்து, அதன்படி நடக்க விரும்பும் எங்களுக்கு உமது கிருபையைக் கொடுத்தருளும்.

கர்த்தருக்கென்று உழைக்கும் உழைப்பு விழலாகாதென்று நீங்கள் அறிந்திருப்பதால், உறுதியான நிர்ணயமுள்ளவர்களும், அசைக்கப் படாதவர்களுமாயிருந்து, கர்த்தருடைய ஊழியத்தை என்றும் தள ராமற் செய்யுங்கள். 1 கொரி. 15^{58}.

கர்த்தாவே, உமது வசனத்தை எங்கள் இதயங்களில் வரைந்து, அதன்படி நடக்க விரும்பும் எங்களுக்கு உமது கிருபையைக் கொடுத்தருளும்.

ஜீவாதிபதியாகிய கடவுளைச் சேவிக்கும்படி, உயிரற்ற கிரியைக ளாகிய பாவங்களை உங்கள் மனச்சாட்சியிலிருந்து கழுவி அகற்றுங் கள். எபி. 9^{14}.

கர்த்தாவே, உமது வசனத்தை எங்கள் இதயங்களில் வரைந்து, அதன்படி நடக்க விரும்பும் எங்களுக்கு உமது கிருபையைக் கொடுத்தருளும். ஆமென்.

*தெய்வமே, நாங்கள் உமது மகிமைக்கேற்க உம்மைச் சேவிக்க வும், எவ்வளவு கொடுத்தோமென்று கணக்கிடாமல் கொடுக்கவும், காயங்களைக் கவனியாமல் சமர்புரியவும், இளைப்பாற விரும்பாமல் உழைக்கவும், உமது திருவுளச் சித்தத்தை நிறைவேற்றினோமென்ற சந்தோஷம் தவிர வேறு பிரதிபலனை விரும்பாமல் உமக்குத் தொண்டு புரியவும் எங்களுக்குக் கற்பிக்க வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய கிறிஸ்து பெருமானை முன்னிட்டு உம்மைக் கேட்கிறோம். ஆமென்.

வாரம் 4

வெள்ளி — காலை

கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வா என்று எனக்கு அவர்கள் சொன்னபோது சந்தோஷப்பட்டேன்.

ஓ எருசலேமே, உன் வாசல்களுக்குள் எங்கள் கால்கள் நிற்கலாயின.

---

*Ignatius Loyola

எருசலேம் இசைவிணைப்பான நகரமாய்க் கட்டப்பட்டிருக்கிறது.

தேவனுடைய ஜனத்தினர் அந்நகரத்திற்கு அவர் திருநாமத்தை ஸ்தோத்திரிக்கப் போவார்கள்.

ஏனெனில் அங்கே தாவீதின் வம்ச சிம்மாசனங்களாகிய நீதியின் சிம்மாசனங்கள் வைக்கப்பட்டிருக்கும்.

எருசலேமின் சமாதானத்திற்காக ஜெபிக்கக்கடவோம்; எருசலேமை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்கள்.

எருசலேமே, உன் அலங்கத்துக்குள் சமாதானமும், உன் அரண்மனைகளுக்குள் வாழ்வும் நிலைத்திருக்கட்டும்.

என் சிநேகிதர் நிமித்தமும் என் சகோதரர் நிமித்தமும் உனக்குள் சமாதானம் இருக்கவேண்டும் என்பேன்.

எங்கள் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்தினிமித்தம் உன் வாழ்வைத் தேடுவேன். சங். 122.

காலை ஜெபம்

இன்றைக்கிருப்பவர் நாளைக்கிருப்பர் என்று எண்ணத் திடமில்லாதிருக்கும் உலக வாழ்க்கையில், இன்றும் வருங்காலத்தும் எங்களுக்கு என்னென்ன நேரிடுமென்று அறியக்கூடாதவர்களாயிருக்கிறோம். கல்லினுள் தேரைக்கும், கருப்பையுள் முட்டைக்குள் இருக்கும் உயிருக்கும் உணவளித்துக் காக்கும் கருணாநிதியே, உமது பராமரிப்புக்கு எங்களையும், எங்கள் அன்புக்குரிய யாவரையும் பரிபூரணமாய் ஒப்புக்கொடுக்கிறோம். நிலையான நகரம் இங்கு எங்களுக்கில்லையென்பதை உணர்ந்தவர்களாய், எங்கள் ஆசை விருப்பங்களை உமக்குப் பிரியமான நற்கிரியைகளில் செலுத்த எங்களுக்கு அறிவைத் தாரும். தன்னயத்தினின்றும் இலௌகீக சிந்தையினின்றும், நாங்கள் உமது சமுகத்தின் நித்திய வாழ்வை அடையுமட்டும், எங்களை விலக்கி இரட்சிக்கவேண்டுமென்று, கிறிஸ்து பெருமானின் அவதார புண்ணியங்களினிமித்தம் கெஞ்சிக் கேட்கிறோம். அவருக்கும் பிதாவாகிய தேவரீருக்கும், பரிசுத்த ஆத்துமனுக்கும் புகழ்பெருகவேண்டும். ஆமென்.

கிறிஸ்துவின் வருகைக்காக

நித்திய தெய்வமாகிய கிறிஸ்துவே, மனுஷ சாயலாய் நீர் மறுபடியும் மாந்தரை நடுத்தீர்த்துச் செங்கோலோச்ச வருவோமென்று சொன்ன நல்ல விசேஷத்தை நினைத்து,

உம்மை நம்பிக்கையின் சந்தோஷத்தோடு போற்றுகிறோம்.

அப்பொழுது முழங்கால்கள் யாவும் உமக்கு முன்பாக முடங்கும் என்பதை நினைத்து,

உம்மை நம்பிக்கையின் சந்தோஷத்தோடு போற்றுகிறேம்.

அப்பொழுது உலகத்தின் இராஜ்யங்கள் யாவும் எம் கர்த்தராகிய உம்முடைய ஏக சத்திய இராஜ்யமாகும் என்பதை விசுவாசித்து,

உம்மை நம்பிக்கையின் சந்தோஷத்தோடு போற்றுகிறேம்.

அப்பொழுது உலகின்கண் அநியாயங்களும் கொடுமைகளும் ஒழிந்து, சந்தோஷமும் சமாதானமும் தழைத்தோங்கும் என்பதை நினைத்து,

உம்மை நம்பிக்கையின் சந்தோஷத்தோடு போற்றுகிறேம்.

உமது குமாரன் வரும்பொழுது நாங்கள் பாவநித்திரையில் அயர்ந்தவர்களாகவல்ல, விழிப்புள்ளவர்களாகவும் உம்மைத் துதிப்ப தில் உற்சாகமுள்ளவர்களாகவும் காணப்பட எங்களுக்குக் கிருபை செய்ய வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம், எங்கள் பரம பிதாவே.

மனித குமாரனுகத் தோன்றித் துன்பம் நிறைந்தவரும் பாடனு பவித்தவருமாய் மண்ணிலுறைந்த இயேசுவின் திருநாமத்தைப்பற்றிப் பிழைக்கும் நாங்களும், உமது பிள்ளைகள் யாவரும், அவருடைய அரசகோலத்தைக் கண்டு களிக்கக் கிருபை செய்ய வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம், எங்கள் பரம பிதாவே.

கிறிஸ்து பெருமானேடு நீடூழிகாலமாகப் பிழைத்திருந்து, அவ ருடைய சிறந்த சாம்ராஜ்யத்தில் பங்குபெறத்தக்கதாக, அவர் வரும் நாளில் எங்கள் மனத்துக்கும் ஆத்துமத்திற்கும் நவஜீவனைக் கொடுக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம், எங்கள் பரம பிதாவே.

வேலையாள் தன் எஜமானின் வருகைக்குக் காத்திருப்பதுபோல், நாங்களும் எங்கள் இராஜாவின் வருகைக்குக் காத்திருக்க எண்ணங் கொண்டிருக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம், எங்கள் பரம பிதாவே.

அதற்குத் தடையாயிருக்கும் பாவம், சிற்றின்ப நாட்டம், இலௌ கீக சிந்தையாகிய இடஞ்சல்களை எங்களிலிருந்து அகற்றிவிட வேண்டு மென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம், எங்கள் பரம பிதாவே.

கிறிஸ்தரசின் வருகைக்கு நாங்கள் வழியை ஆயத்தம்பண்ணும்படி, அனுதினமும் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்ல எங்களை ஏவியருள வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், எங்கள் பரம பிதாவே.

மரணத்தின் வாயிலாகவோ, உமது வருகையின் மூலமாகவோ பரம கொலுமண்டபத்திற்கு எங்களை நீர் அழைக்கும்பொழுது, நாங்கள் தூய மனத்தினராய் விளங்கவும், பொய்யா வாக்கினாலும் சுத்தமான கரங்களினாலும் உம்மை அஞ்சலித்துப் போற்றவும் எங்களுக்குக் கிருபைசெய்ய வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், எங்கள் பரம பிதாவே. ஆமென்.

*கிறிஸ்து வேந்தரே, நீர் உலகத்தை நீதியாய் நடுத்தீர்க்க வரும் நாளில், நீரே எங்கள் மகிமையின் கிரீடமாயிருக்கும்படி, இம்மையில் எங்களை நீதியென்னும் வெண் வஸ்திரத்தாலும், மறுமையில் உமது ஒப்பற்ற சுயாதீனத்தாலும் உடுத்தவேண்டுமென்று, பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் திரியேக தெய்வமாய் இருந்து அரசாளும் உமது இரக்கங்களினிமித்தம் மன்றாடுகிறோம். ஆமென்.

†தேவனே, அன்பென்னும் அக்கினியை எங்கள் உள்ளத்தில் ஏற்றி, உமக்கு விசனத்தை மூட்டும் சகல தீமைகளையும் சுட்டெரித்துவிடும். அதனால் எங்களை உமது பரம இராஜ்யத்தின் உத்தம பிரஜைகளாக்கிவிட வேண்டுமென்று, எம் இரட்சகர் இயேசு கிறிஸ்துவினிமித்தம் கெஞ்சிக் கேட்கிறோம். ஆமென்.

வாரம் 4

வெள்ளி — மாலை

யேகோவாவை நம்புகிறவர்கள் என்றும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதம்போலிருப்பார்கள்.

பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்குமாப்போல், இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தர் தமது ஜனத்தைச் சுற்றிலும் இருப்பார்.

---

* Mozarbic Liturgy   † Roman Breviary

கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதாவாகும்.

கர்த்தர் நகரத்தைக் காவாராகில், காவலாளர் விழித்திருப்பதும் விருதாவாகும்.

கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவனே பாக்கியவான்.

எப்பொழுது விடியுமென்று விடியற்காலத்திற்குக் காத்திருக்கும் சாமக்காவலரைப் பார்க்கிலும் அதிகமாய் என் ஆத்துமம் ஆண்டவருக்குக் காத்திருக்கிறது.

இஸ்ரவேலர் கர்த்தரையே நம்பிப் பிழைப்பார்களாக; ஏனெனில் அவரிடத்தில் கிருபை இருக்கிறது.

அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு. சங். **125, 127, 128–130.**

மாலை ஜெபம்

* தேவனே நாங்கள் விழித்திருக்கையில் எங்களைத் தீமையினின்று இரட்சியும். நாங்கள் தூங்குகையில் எங்கள் சரீரங்களைக் காத்துக்கொள்ளும். இதனால் நாங்கள் பகலெல்லாம் கிறிஸ்துபெருமானோடு ஜெபத்திலும் உழைப்பிலும் தரித்திருக்கவும், இரவில் சமாதானமாய் இளைப்பாறவும் எங்களுக்குக் கிருபை செய்யும். ஆமென்.

கிறிஸ்துவின் வருகைக்காக

மனுஷகுமாரனாகிய கிறிஸ்து மகிமையின் கிரீடம் தரித்தவராய் பரிசுத்த தூதர் புடைசூழ வரும்பொழுது, கண்கள் யாவும் அவரைக் காணுமென்றும், அவர் உலகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பாரென்றும் திருமறை கூறுவதற்காக, (மத். 25^{31}; வெளி. 1^{7}.)

பிதாவாகிய தெய்வமே, உம்மைத் துதிக்கிறோம்.

நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு, நான் இருக்கும் இடத்தில் நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடம் சேர்த்துக்கொள்ளுவேன் என்று உறுதி வாக்களித்த கிறிஸ்து மகிபரே, (யோவா. 14^{3}.)

உமக்கு அத்தியந்த பணிவுடன் நன்றி சொல்லுகிறோம்.

நித்தியானந்தனும், ஏகச்சக்ராதிபதியும், இராஜாதிராஜனும், கர்த்தாதிகர்த்தனும், சிரஞ்சீவியும், எவரும் அணுகக்கூடாத ஒளியில் வாசம்பண்ணும் பரஞ்சோதியும், ஏக மெய்வஸ்துவுமாகிய உமக்குக் கனமும் வல்லமையும் உண்டாகவேண்டும். தீமோ. 6^{14}.

ஆமென், அல்லேலூயா, ஆமென்.

* Acts of Devotion

இதோ வருகிறேனென்று சேனைகளின் கர்த்தர் உரைக்கின்றார்.
மல். **3**[1].

கர்த்தராகிய இயேசுவே வருக, வருக.

ஆனாலும் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யாவன்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யாவன்? மல். **3**[2].

கர்த்தாவே, உமக்காகக் காத்திருக்கும் ஒருவரும் வெட்கமடையாதபடி செய்யும். *சங்.* **25**[3].

கர்த்தாவே, உமது நீதியின் வழிகளில் நாங்கள் உமக்காகக் காத்திருப்போம்.

உமது நாமமும் உம்மை நினைக்கும் நினைவும் எங்கள் ஆத்தும வாஞ்சையா யிருக்கவேண்டும். *ஏசா.* **26**[8].

கர்த்தரின் வருகை சமீபமாயிருப்பதால், நாங்கள் குற்றஞ்சாட்டப் படாதபடிக்கு ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருக்க எங்களுக்குக் கற்பிக்க வேண்டுமென்று, (*ஏசா.* **5**[9].)

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம், தயவுள்ள கர்த்தாவே.

கிறிஸ்து வெளிப்படும் நாளில், அவர் இருக்கிற வண்ணமாகவே, அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்ற நம்பிக்கையை எங்களில் உறுதிப்படுத்த வேண்டுமென்று, (யோவா. **3**[2].)

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம், தயவுள்ள கர்த்தாவே.

எங்கள் ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்பொழுது, அவரோடு கூட நாங்களும் மகிமையில் வெளிப்படும்படிக்கு, விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரக ஆராதனை, பொருளாசை ஆகிய இவைகளை உண்டுபண்ணும் அவயவங்களை அழித்துப்போடத்தக்க மனேதிடனை எங்களுக்கு அருள வேண்டுமென்று, (கொலோ. **3**[4,5].)

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேம், தயவுள்ள கர்த்தாவே.
ஆமேன்.

மௌனமாகப் பின்வரும் ஜெபத்தைப் படிப்போம்:—

கிறிஸ்து பெருமான் பிரசன்னமாவதை விரும்பும் யாவருக்கும் வைக்கப்பட்டிருக்கும் நீதியின் கிரீடங்களிலொன்று எனக்காகவும் வைக்கப்பட்டிருக்கிறது என்று நம்புகிறேன். இந்த நம்பிக்கையோடு என் ஜீவிய ஓட்டத்தை முடிக்கும்படியாக, நான் பிழைத்திருக்கும் நாட்களில் நல்ல போராட்டத்தைப் போராடவும், விசுவாசத்தைக் காத்துக்கொள்ளவும் எனக்கு உமது பரிசுத்த ஆவியின் வல்லமையை அனுதினமும் அருளிச்செய்ய வேண்டுமென்று கெஞ்சுகிறேன், பரம பிதாவாகிய தெய்வமே. ஆமேன். *தீமோ.* **4**[7,8].

இதோ சீக்கிரமாய் வந்து, ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனை தெய்வாலயத்தில் ஓர் தூணாக்குவேன் என்றும், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை யென்றும் கிறிஸ்து சபைகளுக்குச் சொல்லுகிறார்.

அல்லேலூயா, கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

என் தேவனுடைய நாமத்தையும், பரலோகத்திலிருந்து இறங்கி வருகிற எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும், ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவன்மேல் எழுதுவேனென்று தூய தெய்வாத்துமனானவர் சபைகளுக்குச் சொல்லுகிறார். வெளி. $3^{11,12}$.

அல்லேலூயா! இருந்தவரும், இருக்கிறவரும், வரப்போகிறவருமான கிறிஸ்து பெருமானை, பிதாவோடும் பரிசுத்த ஆத்துமனோடும், இன்றும் என்றும் அர்ச்சிப்போம். ஆமென்.

வாரம் 4

சனி **காலை**

யேகோவாவைத் துதியுங்கள்.

யேகோவாவின் நாமத்தைத் துதியுங்கள்.

யேகோவாவின் ஊழியரே, அவரைத் துதியுங்கள்.

யேகோவாவின் வீட்டிலிருக்கிறவர்களே, நமது தேவனுடைய ஆலயப் பிராகாரங்களில் நிற்கிறவர்களே, கர்த்தரைத் துதியுங்கள்.

யேகோவா நல்லவர்; ஆதலால் அவரைத் துதியுங்கள்.

யேகோவாவைக் கீர்த்தனம்பண்ணுங்கள்; அவரைக் கீர்த்தனம் பண்ணுவது இன்பமானது.

வானத்திலும் பூமியிலும் சமுத்திரங்களிலும் எல்லா ஆழங்களிலும் தேவன் தமக்குப் பிரியமானதைச் செய்கிறார்.

யேகோவா பெரியவர் என்றும், நமது ஆண்டவர் யாவருக்கும் மேலானவர் என்றும் அறிவேன்.

கர்த்தாவே, உமது நாமம் என்றைக்கும் நிலைத்திருக்கிறது.

கர்த்தாவே, உமது பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறையாக விளங்கும்.

கர்த்தருக்குப் பயப்படும் நீங்கள் யாவரும் அவரை வாழ்த்துங்கள்.

சங். $135^{1-6,13-20}$.

*தினசரி ஜெபங்கள்

பூமி ஆகாயம் சமுத்திரமாகிய உமது சிருஷ்டிகளின் அழகுக்காக வும், உமது கரத்தின் எண்ணிறந்த கிரியைகளுக்காகவும், அவற்றில் தோன்றக்கிடக்கும் உமது அளவற்ற ஞானத்திற்காகவும்,

தெய்வமே, உம்மைப் போற்றி உமக்கு நன்றிசெலுத்து கிறேம்.

உலகவாழ்க்கையின் இன்பசுகங்களுக்காகவும், எங்கள் வீடுகளில் கிடைக்கும் சமாதானத்திற்காகவும், தேகசுகத்திற்காகவும், மனத்தின் தத்துவங்களுக்காகவும், உத்தம நண்பருக்காகவும், நேசிப்பதாலும் நேசிக்கப்படுவதாலும் உண்டாகும் சந்தோஷத்திற்காகவும்,

தெய்வமே, உம்மைப் போற்றி உமக்கு நன்றிசெலுத்து கிறேம்.

எங்கள் இரட்சகரின் மூலமாய் நீர் வெளிப்படுத்தியிருக்கும் உமது கருணைக்காகவும், எங்களுக்கு அளிக்கும் நவ ஜீவனுக்காகவும், உமது திருச்சபையின் மூலமாக நீர் உலகிற்குச் செய்த நன்மைகளுக்காகவும், பரிசுத்த சாக்கிரமெந்துகளின் மூலமாகக் கிடைக்கும் கிருபைக்காகவும், உண்டாகும் பரம ஐக்கியத்திற்காகவும்,

தெய்வமே, உம்மைப் போற்றி உமக்கு நன்றிசெலுத்து கிறேம்.

ஆண்டவரே, கிருபையாயிரும்.

கிறிஸ்துவே, கிருபையாயிரும்.

ஆண்டவரே, கிருபையாயிரும். ஆமென்.

பார்த்தவிடமெல்லாம் பரமே என்றுணரக்கூடாதபடி மனக்கண் களை மூடியிருக்கும் அவிசுவாசத்தினின்றும்; இரக்க உருக்கமற்ற உள்ளக் கடினத்தினின்றும்; மனோவாக்குக்கிரியையில் உண்மை யில்லா திருத்தலினின்றும்,

எங்களைத் தடுத்து மீட்டுக்கொள்ளும், நல்ல தேவனே.

சரீரசுகத்தைக் கெடுக்கும் எல்லா துற்பழக்கங்களினின்றும்; அநாவசியமான பயங்கள் விசாரங்களினின்றும்; அதைரியம், அவ நம்பிக்கை, அதிர்ப்தியினின்றும்,

எங்களைத் தடுத்து மீட்டுக்கொள்ளும், நல்ல தேவனே.

---

*Acts of Devotion

அயலாரிடம் அனுதாபங் கொள்ளாதிருத்தலினின்றும்; குறை கூறுதல், வர்மஞ் சாதித்தலினின்றும்; வீணும் அவதூறுமான பேச்சி னின்றும்; தேசபக்தியற்றவர்களாய்ப் பொதுநலங் கருதாதிருத்தலி னின்றும்,

எங்களைத் தடுத்து மீட்டுக்கொள்ளும், நல்ல தேவனே.

துன்பவேளையிலும், சோதிக்கப்படும் சமயத்திலும், சித்தியிலும், அபசித்தியிலும், உழைப்பிலும், ஓய்விலும், இரத்த புஷ்டியுள்ள பாலியப்பருவத்திலும், உடல் தளர்ந்துபோகும் முதுமையிலும், வாழ்க் கையையே கசப்பாக்கிவிடும் கொடிய விக்கினம் நேரிடும்பொழுதும், மரணவேளையிலும்,

எங்கள் பக்கத்துணையும் பாதுகாவலுமாயிரும், தயவுள்ள தெய்வமே.

எம் வேந்தருக்கும், அவரோடுகூட தேசபரிபாலனஞ்செய்யும் அதி காரிகள் யாவருக்கும் ஞானத்தையும் தைரியத்தையும் கொடுக்கவும், பிரஜாதிபத்திய மந்திராலோசனைச் சங்கங்களை வழிநடத்தவும் நீர் தயைகொள்ள வேண்டுமென்று,

உம்மை நோக்கிக் கெஞ்சுகிறோம், கர்த்தராகிய தேவனே.

தொழிற்சாலைகளில் வேலைசெய்பவர்களுக்கு நன்மைசெய்ய முயன் றுவரும் யாவருக்கும் விடாமுயற்சியையும், பசியாலும் வறுமையாலும் துன்புற்றிருக்கும் யாவருக்கும் நம்பிக்கையையும் கொடுக்க வேண்டு மென்று,

உம்மை நோக்கிக் கெஞ்சுகிறோம், கர்த்தராகிய தேவனே.

தாம் அருமையாய் நேசித்தவர்களை இழந்து துயரத்தில் மூழ்கியிருப் பவருக்கு ஆறுதலையும், விதவைகள் அநாதைகளுக்கு ஆதரவையும் அருளவேண்டுமென்று,

உம்மை நோக்கிக் கெஞ்சுகிறோம், கர்த்தராகிய தேவனே.

பிணியாளிகளைத் தாங்கவும், சொஸ்த புத்தியை இழந்தவர்களைக் காக்கவும், செவிடர் குருடர் முதலான அங்கக்குறைச்சலுள்ளவர்களுக் கும், சிறையிலிருப்பவர்களுக்கும் உமது தயவைக் காட்டவும் வேண்டு மென்று,

உம்மை நோக்கிக் கெஞ்சுகிறோம், கர்த்தராகிய தேவனே.

உமது அடியாராகிய எங்களுடைய பாவங்களை மன்னித்து, எங்க ளுக்கு சரீர சுகமும் ஆத்தும சாந்தியும் அளிக்க வேண்டுமென்று,

உம்மை நோக்கிக் கெஞ்சுகிறோம், கர்த்தராகிய தேவனே. ஆமென்.

நித்திய வெளிச்சத்தின் ஜோதிமயமாய் விளங்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, நமது உள்ளங்களை மறைக்கும் எல்லா அந்தகாரங்களுக்கும் நம்மை இன்றும் என்றும் விலக்கி மீட்பார். ஆமென்.

வாரம் 4

சனி

மாலை

கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர்; அவர் கிருபை என்றும் நிலையான கிருபை.

அவர் கிருபை என்றும் நிலையான கிருபை.

தேவாதி தேவனைத் துதியுங்கள்.

அவர் கிருபை என்றும் நிலையான கிருபை.

கர்த்தாதி கர்த்தனைத் துதியுங்கள்.

அவர் கிருபை என்றும் நிலையான கிருபை.

ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்பவரைத் துதியுங்கள்.

அவர் கிருபை என்றும் நிலையான கிருபை.

வான மண்டலங்களை ஞானமாய்ப் படைத்தவரைத் துதியுங்கள்.

அவர் கிருபை என்றும் நிலையான கிருபை.

தண்ணீருக்குமேல் பூமியைப் பரப்பினவரைத் துதியுங்கள்.

அவர் கிருபை என்றும் நிலையான கிருபை.

பெரிய சுடர்களை உண்டாக்கினவரைத் துதியுங்கள்.

அவர் கிருபை என்றும் நிலையான கிருபை.

பகலை ஆளச் சூரியனைப் படைத்தவரைத் துதியுங்கள்.

அவர் கிருபை என்றும் நிலையான கிருபை.

இரவை ஆளச் சந்திரனையும் நக்ஷத்திரங்களையும் படைத்தவரைத் துதியுங்கள்.

அவர் கிருபை என்றும் நிலையான கிருபை. சங். 136 1-9.

நம்மை ஆண்டவரை மீண்டவரைத் துதியுங்கள்.

அவர் கிருபை என்றும் நிலையான கிருபை.

கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர்; அவர் கிருபை என்றும் நிலையான கிருபை.

நவயுகம்

இதோ நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன்; முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதில்லை. ஏசா. 65^{17}.

புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளுவது நம் கடமையாம். ரோம. 6^5.

பழைமையான சொல்லின்படியல்ல, புதுமையான கருத்தின்படியே தேவனைச் சேவிக்கக்கடவோம். ரோம. 7^6.

திருச்சபைக்காக:—

ஒளிக்கும் உண்மைக்கும் ஊற்றாக இருக்கும் தேவனே, உம் திருக்குமாரனின் நித்திய நற்செய்தியை மனிதரின் பாரம்பரிய அபிப்பிராயங்களால் மட்டுப்படுத்தாமல், அது இந்த நவயுகத்திற்கேற்ற நற்செய்தியென்று யாவரும் மனமுவந்து ஏற்றுக்கொள்ளத் தக்கவிதமாய் அறிவிக்கும்படி, உமது சபைக்குப் புதிய காட்சியையும், ஞானத்தையும் பகுத்தறிவையும் கொடுக்கவேண்டுமென்று, மனுக்குலத்திற்குப் புத்துயிர் அருளவந்த கிறிஸ்துவின் மூலமாய் உம்மை மன்றாடிக் கேட்கிறோம். ஆமென்.

தேசங்களுக்காக:—

எங்கள் அரசே, தேவாதி தேவனே, சகல தேசங்களிலும், தன்னயம், போட்டி, பொறாமை, சமுசயம் முதலிய பழைய அரசியல் முறைகள் ஒழியவும், ஒற்றுமையும், அநுதாபமும் ஒத்துழைப்பும் ஏற்படவும் வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், பரமபிதாவே.

இதுவே உமது திருவுளச் சித்தமென்பதை தேசத்தலைவர் யாவருக்கும் நீர் உணர்த்தவேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், பரமபிதாவே.

யுத்தங்களாலும், யுத்த முயற்சிக்குச் செலவிடப்படும் பணநஷ்டத்தாலும் இடிந்து பாழாய்க் கிடக்கும் வீடுகளையும் நகரங்களையும் கட்டவேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், பரமபிதாவே.

சிசுக்கள் பெண்கள் வயோதிகரை அகோர வேதனைக்குள்ளாக்கிக் கொன்றுவிடப் பயின்றுவரும் சைனியங்களின் பேய்த்தனம் யாவருக்கும் பேய்த்தனமாகவே தோன்ற வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், பரமபிதாவே.

தற்கால யுத்த ஆயுதங்களாலும் விஷ வாயுக்களாலும் உலகத்தை நரகலோகத்தினும் பதின்மடங்கு பயங்கரமான இடமாக்கத் துணிந்து நிற்கும் யுத்தப் பிரியரை நீர் எழுந்து அடக்க வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், பரமபிதாவே.

இதனால் எங்கள் நாட்களில் சமாதானத்தைக் கட்டளையிட நீர் எங்களுக்காக யுத்தஞ்செய்ய வேண்டுமென்று,

உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், பரமபிதாவே.

இரங்கும், கர்த்தாவே: சமாதானத்தை விரும்பும் எங்களுக்காக யுத்தஞ் செய்வார் ஒருவருமில்லை. ஆமென்.

சகல ஜாதியினருக்காக:—

மனுமக்களின் ஏக தந்தையே, ஜாதிகள் பலவாயிருப்பினும், பரத்திலும் இகத்திலும் இருக்கும் மானிடக் குடும்பம் முழுவதும் கிறிஸ்து பிரானின் பிதாவாகிய உம்முடைய ஒரே நாமத்தைத் தரித்திருக்கிறது என்பதை நாங்கள் மறவாதிருத்தல் வேண்டும். ஒவ்வொரு ஜாதியும் தன் தன் நாகரிகத்தின் விசேஷ நலங்களை யாவருக்கும் பயன்படக் கொடுத்து ஒருமித்து வாழுவதால், உமது குமாரன் வரையறுத்த அன்பின் வழியிற் செல்லவேண்டுமென்று ஜெபிக்கிறோம். ஆமென்.

பிதாவடைவாய் எங்களைக் காத்து, எங்கள் துன்பங்களை இன்பங்களாக மாற்றி, எங்கள் தேவைக்கேற்ற நன்மைகளைப் பொழிந்து எங்களை வழிநடத்திவரும் தேவனே, உம்மைத் துதிக்கிறோம், வாழ்த்துகிறோம், உமது திருநாமத்தைப் பிரஸ்தாபிக்கிறோம்.

உள்ளன்புடன் உம்மைப் போற்றுகிறோம், கர்த்தாவே.

சிருஷ்டியின் வனப்புக்காகவும், மனிதர் கை வேலைகளில் காணப்படும் திறமைக்காகவும், உம்மை அப்பா பிதாவே என்றழைத்து எம் குறைகளை உமக்குத் தெரிவித்துக்கொள்ளும் சிலாக்கியத்திற்காகவும், எங்கள் ஜெபங்களை நீர் கேட்டருள்வதற்காகவும்,

உள்ளன்புடன் உம்மைப் போற்றுகிறோம், கர்த்தாவே.

திருச்சபையில் தோன்றியிருக்கும் புதிய ஆவிக்காகவும், வருங்காலங்களில் நீர் மாந்தருக்குக் கொடுக்கக் காத்திருக்கும் பாக்கியங்களுக்காகவும், எங்கள் நம்பிக்கையின் உறுதிக்காகவும், நீர் மகிமை

பொருந்தியவராக வருவதை நாங்கள் காண்போமென்ற உமது வாக்குக்காகவும்,

உள்ளன்புடன் உம்மைப் போற்றுகிறேம், கர்த்தாவே.

இவ்வநித்திய உலகத்தைக் கடந்து நித்திய நாடு சேர்ந்திருக்கும் பக்தருக்காகவும், அவர்கள் காட்டிய முன் மாதிரிக்காகவும், அவர்களைப் போல் நாங்களும் உமது புண்ணிய பூமியை வந்தடைவோம் என்ற நம்பிக்கைக்காகவும், அவர்களோடு நாங்கள் இப்பொழுது ஆத்மீகமாய்ச் சகவாசம் பண்ணக்கூடியவர்களா யிருப்பதற்காகவும்,

உள்ளன்புடன் உம்மைப் போற்றுகிறேம், கர்த்தாவே.

சூரியன் உதிக்கும் திசையிலிருந்து அது அஸ்தமிக்கும் திசைமட்டுமுள்ள சகல ஜனங்களும் உரத்த சத்தமாயும் சந்தோஷமான குரலோடும் உம்மைத் துதித்து,

உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்த்த தேவாட்டுக் குட்டியே, அனவரதமும் உமக்கு மகிமை உண்டாகட்டும் என்று எம்பெருமான் இயேசு கிறிஸ்துவைப் போற்றக்கடவர். ஆமென்.

அநுபந்தம் 1.

விசேஷ சம்பவங்களுக்கேற்ற ஜெபங்கள்

1. பிறப்பு

"இஸ்மவேல் உமக்கு முன்பாகப் பிழைப்பானாக" என்று ஆபிரகாம் தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணினான். ஆதி. 17[18]. என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விபடுங்கால் விளையும் சந்தோஷத்திலும் மிகுந்த சந்தோஷம் வேறு எனக்கு இல்லை. 3 யோவா. 4.

*மானிட வாழ்க்கையின் துவக்கம் இடை முடிவைக் கையில் ஏந்திக் கொண்டிருக்கும் ஆண்டவராகிய தேவனே, இத்தருணத்தில் நீர் எங்களுக்குக் கொடுத்திருக்கும் சிறந்த கொடைக்காக உம்மைப் போற்றுகிறோம். நவமாய் உதித்த ஜீவனுக்காகவும், பிரசவ வேதனையில் காக்கப்பட்ட ஜீவனுக்காகவும் உமக்கு நன்றி சொல்லுகிறோம். அன்பையும் உயிரையும் நீர் பிரியாச் சம்பந்தமாய் இணைத்திருப்பதால் எங்கள் வீட்டில் தோன்றியிருக்கும் புதிய ஜீவனோடு மிகுதியான அன்பையும் எங்களுக்கு ஈந்தருளும். இச்சிசுவின் பலவீனம் எங்கள்

*Bishop Carpentar

உள்ளங்களில் கரிசனையை எழுப்பட்டும். இவனைப் பூரண அன்போடு மட்டுமல்ல, விவேகத்தோடும் பேணி வளர்க்க எங்களுக்கு உதவி செய்யும். இவன் உமது பிள்ளையாகப் பிழைத்து, தன் காலத்தில் உமது திருவுளத்திற்கு மகிமை கொணர்பவனும் உலகுக்கு நன்மை செய்பவனுமாக விளங்க, இவனைச் சகல நல்வரங்களாலும் ஆசீர்வதிக்க வேண்டுமென்று, எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் மூலமாக வேண்டிக்கொள்ளுகிறோம், பரமபிதாவே. ஆமென்.

2. பிறந்த நாள்

*நித்தியபிதாவே, ஜீவராசிகளனைத்தையும் காக்கும் கருணாநிதியே, இன்று உமது பிள்ளை.........க்கு, அவன் ஆயுள் நாட்களில் ஒரு வருஷத்தை நீர் தயவாகக் கூட்டியிருப்பதற்காக உமக்கு அத்தியந்த பணிவுடன் நன்றி செலுத்துகிறோம். இவன் பிறந்தநாள்முதல் இந்த நாள்வரை இவனுக்கு நீர் பாராட்டிய சகல கிருபைகளுக்காகவும் உம்மைப்போற்றுகிறோம். வரும் நாட்களிலும் முடிவு பரியந்தமும் உமது தயவையும் பாதுகாவலையும் இவனுக்குக் கொடுத்து இவனை இரட்சியும். துன்பத்தில் ஆறுதலையும், சோதனையில் உதவியையும் இவனுக்குத் தந்து, பேயின் தந்திரங்களினின்று இவனைக் காப்பாற்றும். இவன் வாழ்நாட்கள் சமாதானமாகச் செல்லவும், மரிக்கும்போது உமது மெய்த்தொண்டருக்கென்று நீர் வைத்திருக்கும் நித்திய இளைப்பாறுதலை இவன் பெற்றுக்கொள்ளவும் தக்கதாக, இவன் என்றும் உமக்குக் கீழ்ப்படிந்து பிழைக்க இவனுக்குக் கிருபை அருள வேண்டுமென்று கிறிஸ்து பெருமானை முன்னிட்டு மன்றாடுகிறோம், தெய்வமே. ஆமென்.

3. பிள்ளையைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும்போது

† எல்லாம் வல்ல இறையே, சகல நன்மைகளையும் இலவசமாய்க் கொடுக்கும் காருண்யரே, உமது நாமத்தை முன்னிட்டு இப்பொழுது கல்வி கற்க பள்ளிக்கூடத்திற்குப் போகும் இச்சிறுவனை இரக்கமாய்க் கண்ணோக்கும். இவன் உமது நாமத்திற்குப் பெரும்புகழ் படைக்கவும், உமது சபைக்குத் தூணாய் விளங்கவும் தக்கதாக, உமது திருவசனங்களின் சத்தியத்தால் இவன் மனத்தை நிரப்பி, கபடமற்ற ஜீவியத்தால் இவன் உள்ளத்தை அலங்கரியும். இவன் தன் வாக்காலும் கிரியையாலும் உம்மை உண்மையாய்ச் சேவிக்க இவனை வழிநடத்த வேண்டுமென்று, இயேசு கிறிஸ்துவின் புண்ணியங்களை முன்னிட்டு உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தேவனே. ஆமென்.

---

* Rev. W. E. Scudamore † Gelasian Sacramentary

அல்லது

*எல்லாம் வல்ல தெய்வமாகிய கர்த்தாவே, இவ்வீட்டின் ஒதுக்கத்தைவிட்டுக் கல்விச்சாலைக்குச் செல்லும் எங்கள் பிள்ளையை உமது கிருபையால் ஆசீர்வதித்தருளும். அங்கு இவனுக்குக் கிடைக்கும் சிட்சை மிருதுவானதும், ஒழுக்கத்தைத் தருவதுமாயிருக் கட்டும். இவன் சம்பாதிக்கும் தோழர் இவனைத் தீயவழியிலல்ல, நல் வழியிலேயே நடத்தும் உத்தம தோழராய் இருக்கட்டும். இவனு டைய நினைவு வாக்கு செய்கை யாவிலும் உண்மையும் தூய்மையுமே விளங்குமாறு, இவனை எல்லா விஷயத்திலும் கைப்பிடித்து நடத்தும். இவன் நாளுக்கு நாள் மனுஷர் தயவையும் உமது கிருபையையும் பெறத்தக்க உத்தம பிள்ளையாய் வளருவதால், பெரியவனாகும் பொழுது உமக்கு மெய்த் தொண்டுபுரியத் தன்னை இப்பொழுதே ஆயத்தப்படுத்திக்கொள்ளும்படி இவனுக்கு உமது கிருபையைக் கொடுக்க வேண்டுமென்று, இயேசு பெருமானின் திருநாமத்தைச் சொல்லி கெஞ்சி மன்றாடுகிறோம் கர்த்தாவே. ஆமேன்.

ஆசீர்வாதம்

பிதாக்களாகிய ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு வழிபட்டு வணங்கிய தேவனும், நாம் பிறந்த நாள்முதல் இந்நாள் வரைக்கும் நம்மை ஆத ரித்து வரும் தேவனும், எல்லாத் தீமைக்கும் நம்மை நீங்கலாக்கி மீட்ட தூதனுமானவர் இந்தப் பிள்ளையை ஆசீர்வதிக்கக் கோருவோம். ஆமேன். ஆதி. 48:15,16.

3. பாலியப்பருவத்தை அடைந்த பிள்ளைக்காக

மகா அதிசயங்களைச் செய்கிற தேவனே, நடக்கவும் சக்தியற்ற பலவீனனாகப் பிறந்த எங்கள் பிள்ளை, முகம் பார்க்கவும் மழலை மொழி யவும் பின் படிப்படியாய் வளர்ந்துவரவும் பார்த்த பெற்றோரும் சகோதர சகோதரிகளும் மகிழ்ந்தோம். இப்பொழுது இவன் பாலி யப் பருவமடையச் செய்திருப்பது இவனுக்கு நீர் ஆதியில் அளித்த ஜீவ சக்தியே என்று உணருகிறோம்; உமது அளவற்ற ஞானத்தைப் பாராட்டுகிறோம். இவனும் எங்களோடு சேர்ந்து, உமது கிருபை யைப் போற்றி உமது ஞானத்தைச் சிந்திக்கட்டும்.

இவனுக்குள் முன் தோன்றாத சில எண்ணங்களும் ஆசைகளும் வந்திருப்பது உமது சித்தமென்பதை இவன் கிரகித்து, நீர் இவனுக் குப் புதியதாய் அளித்திருக்கும் தாலந்துகளைப் பயத்தோடும் நடுக்கத் தோடும் உத்தமும் பரிசுத்தமுமான விஷயங்களில் செலுத்த இவனுக்கு

*Rev. H. Stobart

நற்புத்தி புகட்டும். முன் இவன் சோம்பல், கோபம், எரிச்சல், பொய், திருடு முதலான தீயகாரியங்களைச் செய்யத் தூண்டப்பட்டிருந்ததுபோல், இனி இவைகளோடுகூட அசுத்த எண்ணங்களை எண்ணவும், காட்சிகளைப் பார்க்கவும், பேச்சுகளைக் கேட்கவும், தன் உள்ளத்தில் மாம்ச இச்சையைப் பேணவும் தூண்டப்படும்பொழுது, நெரிந்த நாணலை முறியாத கிருபா நிதியே, இவனுக்கு உமது விசேஷித்த பாதுகாவலைக் கொடும். இவன் உள்ளத்தைத் தீய ஆசை விருப்பங்கள் நிரப்பிவிடுமுன், உம்மை நேசிக்கும் நேசத்தால் அதை நிரப்பிவிடும். இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தெய்வமே, எங்கள் விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்தருளும். ஆமென்.

4. மணமக்களுக்காக

*திருச்சபையின் நாயகரென்றழைக்கப்படும் கிறிஸ்து பெருமானே, பரிசுத்த ஆத்துமனின் சக்தியால் புனித நவஜீவனை உம் தொண்டருக்குக் கொடுத்து அவர்களை உம்மோடு ஒற்றுமைப்படுத்திக் கொள்ளச் சித்தங்கொண்ட இயேசுவே, இன்று விவாக சம்பந்தத்தில் இணைக்கப்பட்ட உமது பிள்ளைகளிருவருக்கும் நீர் உமது ஜனத்தை நேசிக்கும் நேசத்தின் நிழலாயிருக்கும் நிலைவரமான ஆழ்ந்த அன்பைக் கொடும். அதனால் இவர்கள் துக்கத்தில் ஆறுதலும், சோர்வில் உற்சாகமும், வறுமையில் திருப்தியும், கலக்கத்தில் தைரியமும் பெற்றுக்கொள்ளவேண்டும். இவர்கள் தங்கள் வாழ்நாளில் நீர் தரும் ஆசீர்வாதங்களைப் பகிர்ந்து அநுபவித்து, மறுமையில் வானலோக விருந்தாகிய உமது பூரண அன்பால் திருப்தியடையுமட்டும் இவர்களைக் காத்து நடத்தவேண்டுமென்று, பிதாவோடும் பரிசுத்த ஆத்துமனோடும் இருந்து முடிவற்ற ஆட்சிசெய்யும் கர்த்தராகிய கிறிஸ்துவே, உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

அல்லது

†எங்கள் பிதாக்களின் ஆண்டவராகிய தேவனே, பிராணனையும் அன்பையும் அளிப்பவரே, காதல் என்னும் கயிற்றால் நீர் இணைத்திருக்கும் மணமக்களுக்கு உமது ஆசீர்வாதத்தை நிரம்பக் கொடும். உமது கரிசனையால் அவர்களை வளைந்துகொள்ளும். அவர்கள் வீட்டைக் கட்டும். அதை ஒளியாலும் அன்பாலும் நிரப்பும். பக்ஷாத்தாபமும் பரிசுத்தமும் உண்மையும் அங்கு தழைக்கவும்; ஒற்றுமையைக் கெடுக்கும் யாதொன்றும் அங்கு நுழையாதிருக்கவும் அருள்செய்யும். அங்கிருந்து பிறரைப் பராமரித்துச் சந்தோஷப்படுத்திச் சன்

* R. M. Benson † Bishop Carpenter

மார்க்கத்தில் செலுத்தத்தக்க இனிய எண்ணங்களும் கிரியைகளும் தோன்றட்டும். குடும்ப விஷயங்களை விவேகத்தோடு நடத்திக்கொள்ளத்தக்க ஞானத்தை அவர்களுக்குக் கொடும். நீர் அவர்கள் தகப்பனாக இருந்து அவர்களை நடத்தும். பரிசுத்த ஆத்துமனின் தேற்றரவை அவர்களுக்கு அருளும். அவர்களையும் அவர்கள் சுற்றத்தாரையும் ஆசீர்வதித்து, இறுதியில் நித்திய இராஜ்யத்தின் பிரஜைகளாக்கிக் கொள்ள வேண்டுமென்று, எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலமாகக் கெஞ்சிக் கேட்கிறோம், தேவனே. ஆமென்.

5. பிணியாளிக்காக

*ஆண்டவரே தேவரீர், எங்கள் குடும்பத்தில் வியாதிப்படுக்கையிலிருக்கும் உமது பிள்ளைக்காக உம்மை நோக்கிக் கூப்பிடுகிறோம். தேறுதலும் சுகமும் பலமும் உம்மிடமிருந்தே வருவனவாயிருப்பதால், விசுவாசத்தோடும் பூரண நம்பிக்கையோடும் இவனை உமது கிருபைக்கு ஒப்புக்கொடுக்கிறோம். தேவனே, வெடுவெடுப்பினின்றும், மனச்சோர்பினின்றும் இவனை விடுவியும். பலவீனத்தில் இவனைப் பலப்படுத்தும், வேதனையில் தாங்கும், அமைதியின்மையில் ஆற்றும். இவனுக்குச் செய்யப்படும் சிகிச்சையைப் பலிதப்படுத்தி, விரைவில் இவனுக்குச் சுகத்தைக்கொடும். ஆடுகளுக்காக உயிரைக்கொடுத்த நல்ல மேய்ப்பரே, இவன் பிழைத்தாலும் மரித்தாலும் உம்முடையவனாயிருக்கும்படி, நீர் மீட்டுக்கொண்ட இந்த ஆட்டுக்குட்டியை (ஆட்டை) உமது தோள்மேற் சுமந்துகொள்ளும். கருணைவள்ளலே, இவன்மேல் கிருபையாயிரும். இவனைக்குறித்து அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் எங்களுக்கு இரங்கும். கிறிஸ்துவே, இவனை அரவணைத்துத் தைரியப்படுத்தி ஆசீர்வதியும். ஆமென்.

6. துன்பத்தில் ஆறுதலுக்காக

†ஜீவியத்தின் போராட்டத்தால் களைப்புற்று, நாளின் விசாரங்களாகிய பாரத்தைச் சுமந்து தொய்ந்துபோன நாங்கள், இளைப்பாறுதலைத்தேடி உமது சன்னதிமுன் வந்தோம். தேவனே அலைசடிப்படும் எங்கள் உள்ளத்தை உமது நித்திய அமரிக்கையால் நிரப்பும். காலமென்னும் சொரிமணலினூடே நீர் ஒருவரே அநாதியாய் நிற்கும் கற்பாறையாயிருக்கிறீர். வறண்ட பாலைவனத்தில் நீரே வற்றாத நீரூற்றாயிருக்கிறீர். ஆதலால் எங்கள் ஜெபத்தைக் கேட்டு எங்கள் ஆத்துமனை ஜீவ தண்ணீரால் திருப்தியாக்கும், கிறிஸ்தரசே. ஆமென்.

---

* Rev. L. Tuttiett † Dr. Orchard

அல்லது

*துக்கம் நிறைந்தவரும் பாடனுபவித்தவருமாய் உலகில் தோன்றிய தெய்வகுமாரனே, துயருற்றுத்தவிக்கும் எங்கள்மேல் மனதுருகும். நீர் மனிதரால் அவமதித்துத் தள்ளப்பட்டீர்; பிசாசினுல் சோதிக்கப்பட்டீர்; சொந்த ஜனங்களால் புறக்கணிக்கப்பட்டீர்; நீர் இரட்சிக்க விரும்பிய உலகத்தால் வெறுக்கப்பட்டீர். உமது சீஷரிலொருவன் உம்மைக் காட்டிக்கொடுத்தான்; மற்றவர்கள் கைவிட்டார்கள். உமது சத்துருக்கள் உம்மை அநியாயமாகக் குற்றஞ்சாட்டிக் கன்னத்தில் அறைந்து துப்பி வாரால் அடித்துக் கள்ளரோடு கள்ளனுய்ச் சிலுவையிலடித்துத் தூக்கினுர்கள். கண்டவர்களெல்லாம் தலையைக் குலுக்கி, உதட்டைப் பிதுக்கி, உம்மைப் பரிகாசம் பண்ணினுர்கள். இத்தனை துன்பங்களையும் நீர் பொறுமையாய்ச் சகித்து, உமது பிதாவின் விருப்புக்குப் பணிந்துபோனீர்.

நீதியினிமித்தம் துன்பப்படும் யாவரையும் நீர் அடைந்த சிறந்த ஆத்ம வெற்றிக்கு நடத்திச் செல்லக் காத்திருக்கும் இயேசு பெருமானே, நாங்களும் எங்களுக்கு நேரிடும் சகல துன்பங்களையும் உம்மைப்போல் தாங்கிக்கொள்ள எங்களுக்குப் பலன் தாரும். எங்கள் பொறுமையையும் விசுவாசத்தின் உறுதியையும் பரிசோதித்துப் பலப்படுத்தக் கடவுள் இப்பொழுது அனுப்பியிருக்கும் துன்பத்தைச் சகிக்க எங்களுக்குப் போதிய கிருபையைக் கொடுக்கவேண்டுமென்று உமது பிதாவை நோக்கி எங்களுக்காக மன்ருடும். உமக்கே வல்லமையும் மகிமையும், கனமும் பெருகட்டும், கிறிஸ்தரசே. ஆமென்.

7. பிணியினின்று சுகமடைந்தவருக்காக

†எங்கள் தெய்வமே, வியாதியாயிருந்த............க்கு, பூரண சுகமளித்த உமது அளவற்ற கிருபைக்காக உம்மை வாழ்த்திப் போற்றுகிருேம். இவன் நோயுற்றுக் குறுகுகையில் எங்களைச் சிட்சிக்கும்படி உமது கரத்தை ஓங்கினீர். என்ருலும் உமது கரம் அரவணைக்கும் கரமாகவும் இருந்தது. உமது சிட்சையை நாங்கள் ஒருபோதும் மறக்கமாட்டோம். இதுமுதல் நாங்கள் முன்னிலும் அதிகத் தாழ்மையாகவும் பக்தியோடும் ஊக்கத்தோடும் எங்கள் இரட்சகரைச் சேவிக்க விரும்புகிருேம். பரிசுத்த ஆத்துமனே, நீர் எங்கள் உள்ளங்களில் செய்திருக்கும் நற்கிரியை ஸ்திரப்படுத்தும். எங்களை முழுவதும் சுத்தப்படுத்தி, எங்களோடு தங்கியிரும். உமது சகவாசத்தால் எங்களைத் தேற்றும். நாங்கள் என்றும் உமது மகிமைக்கென்றே பிழைக்க

* Bishop Thomas Wilson † Bishop Oxenden

எங்களுக்குத் துணைசெய்ய வேண்டுமென்று, எங்கள் நாதரும் மீட்பருமாகிய கிறிஸ்துவினிமித்தம் உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம், நல்ல தேவனே. ஆமேன்.

8. மனக்கவலை மாறினதற்காக

*மனிதர் நமக்கு விரோதமாய் எழும்பினபோது கர்த்தர்மட்டும் நமதுபக்ஷம் இருந்திராவிட்டால், துன்பம் நம்மைச் சூழ்ந்துகொண்ட பொழுது அவர் நம்மைக் காக்க எழுந்து வந்திராவிட்டால், நாம் உயிரோடே விழுங்கப்பட்டிருப்போம். வேடனுடைய கண்ணிக்குத் தப்பின குருவியைப்போல், நமது ஆத்துமம் தப்பிற்று. ஏனென்றால், வானத்தையும் பூமியையும் உண்டாக்கிய தேவனே நமது சகாயராயிருந்தார். ஆண்டவரே நாங்கள் உபத்திரவப்பட்டது நல்லதென்று உணருகிறோம். அதனால் உமது வார்த்தையைக் காத்து நடக்கக் கற்றுக்கொண்டோம். உமக்கே நன்றியையும் கனத்தையும் மகிமையையும் செலுத்துகின்றோம்.

தேவரீர், எங்களைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கும், நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் தக்கதாக எங்களை மகிழ்ச்சியாக்கும். கர்த்தாவே, உம்மை நோக்கி நீர் எங்கள் அடைக்கலம், எங்கள் கோட்டை, எங்கள் தேவன், நாங்கள் நம்பியிருக்கும் துருக்கம் என்று சொல்லி அபயமிடும் எங்களுக்கு, உன்னதமானவரின் மறைவில் ஒதுங்கி, சர்வ வல்லவருடைய நிழலில் தங்கும் பாக்கியத்தைத் தந்தருளும். ஆமேன்.

9. காரியசித்திக்காக

†தஞ்சமாகக்கொண்டோரைப் பலப்படுத்திக் காக்கும் தேவனே, இன்று புதிதாக உத்தியோகம் செய்யப்போகும் உமது பிள்ளையாகிய ....ஐ உமக்குக் கையளிக்கின்றோம். உமது அளவற்ற அன்புக்கும் ஞானத்திற்கும் நலமாகக் காணும் வழியில் இவனை நடத்தி ஆசீர்வதிக்கவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். இவன் உடலைப் பிணிக்கும், இவன் ஆத்துமத்தைப் பாவசோதனைக்கும் சாத்தானின் கண்ணிக்கும் விலக்கிக் காத்தருளும். இவன் செய்யும் வேலை நீர் கொடுத்த உத்தரவாதமென்றுணர்ந்து, மனிதரைப் பிரியப்படுத்தவல்ல, உம்மைச் சேவிக்க வேண்டுமென்றே அதை உண்மையோடும் ஜாக்கிரதையோடும் தன் முழுபலத்தோடும் செய்ய இவனுக்குக் கற்பியும். மேலதிகாரிகளின் தயவையும், வேலைக்கு வேண்டிய

---

* Psalms 124 ; 119 : 67-71 ; 90 : 15 ; 91 : 1-2 † Rev. E. Hawkins

அறிவையும் திறமையையும் இவனுக்குக் கட்டளையிட வேண்டுமென்று இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், தயவுள்ள தேவனே. ஆமேன்.

அல்லது

*தேவனே உமது கண்களில் எங்களுக்குத் தயை கிடைத்தது உண்மையென்றால், நாங்கள் உம்மைக் கண்டு போற்றும்படி உமது வழிகளை எங்களுக்குத் தெரியப்படுத்தும். உமது சமூகம் எங்களோடு செல்லாவிட்டால், நாங்கள் செய்ய எண்ணியிருக்கும் காரியத்தைச் செய்யாதிருக்கக் கட்டளையிடும். யேகோவாவே, எம்மை ஆளும் தெய்வமே, உமது அடியாருக்கு உமது மகத்துவத்தையும் பலத்த கரத்தையும் காண்பித்து, இன்றும் என்றும் எங்களை வழிநடத்தும். ஆமேன்.

அல்லது

பக்திகொண்டொழுகும் தொழும்பருக்கு எச்சமயத்திலும் கிருபையைப் பொழிபவரும், சேவிப்பவருக்கு எங்கும் சமீபமாயிருப்பவருமான தெய்வமே, உமது அடியாரின் கால்களை உமது சித்தத்திற்கிசைய நடத்தும். நீரே துணைவரும் வழிகாட்டியும் எனக்கொண்டு, நாங்கள் சத்தியநெறியில் தடுமாறுமற் செல்ல, கிறிஸ்துவின் புண்ணியங்களை நினைத்து, எங்களுக்குக் கிருபைசெய்ய வேண்டுமென்று கெஞ்சிக் கேட்கிறோம், பரம பிதாவே. ஆமேன்.

10. மிருகங்களிடம் பக்ஷம்கொள்ள

காட்டு மலர்களுக்கு அழகையும் நறுமணத்தையும் கொடுப்பவரும், பறவைகளையும் மிருகங்களையும் உணவளித்துக் காப்பவருமாகிய சிருஷ்டி கர்த்தாவே, ஒரு சிறு சிட்டுக்குருவியும் உமது சித்தமில்லாமல் சாவதில்லையென்பதை நாங்கள் மறவாதிருக்கக் கிருபைசெய்யும். உதவியற்ற ஜந்துக்களைச் சிறிதும் சிந்தனையின்றி நாங்கள் இம்சிக்காதபடி எங்களுக்கு நற்புத்தி புகட்டும். விசேஷமாக முறுமுறுப்பில்லாமல் தங்கள் உழைப்பினால் எங்களுக்குப் பற்பல வழியில் நன்மைசெய்துவரும் மிருகங்களை அவற்றின் சொந்தக்காரர் சரியாய்ப் போஷிக்கவும், அவற்றிற்குப் போதிய அளவு இளைப்பாறுதல் கொடுக்கவும் செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம். அவற்றின் சுகத்தையும் பலத்தையும் கண்டு மனிதர் சந்தோஷப்படவும், அவைகளால் அடையும் நன்மைக்காக யாவரும் உமக்கு நன்றிசெலுத்தவும் வேண்டும்.

---

* Exod. 33 : 14. Deut. 3 : 24

தேவரீர் பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறீர் என்பதை மிருக பலி செலுத்தும் ஜனங்களுக்குக் கற்பியும். குற்றமற்ற மிருகங்களைக் கொல்லுவதையல்ல, எங்கள் இருதயத்தில் குடிகொண்டிருக்கும் பொல்லாத இச்சைகளைக் கொல்லுவதையே நீர் விரும்புகிறீர் என்பதை நாங்கள் மறவாதிருக்கவேண்டும்.

கர்த்தாவே, உமது தாசன் ஏசாயா தீர்க்கதரிசனர் மூலமாக நீர் முன்னறிவித்த வான இராஜயம் துரிதமாய் வரவேண்டும். அப்பொழுது ஓநாயும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும்; சிங்கம் மாட்டைப் போல் வைக்கோல் தின்னும். உமது பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்கு செய்வதுமில்லை, கேடுண்டாக்குவதுமில்லையென்று நீர் சொன்ன வாக்கை நினைத்துச் சர்வ சிருஷ்டிக்கும் நன்மைசெய்யும் கர்த்தாவே. ஆமென்.

11. மாணம்

கர்த்தாவே, எங்கள் அன்புக்குரியோரும், எங்கள் எலும்பின் எலும்பும் மாமிசத்தின் மாமிசமுமான கண்மணிகளை மண்ணுக்கிரையாகக் கொடுக்கும்பொழுதெல்லாம், அவர்கள் ஆத்துமங்களை உமது அருட்கரத்தின் பராமரிப்புக்கு ஒப்புவிக்கிறோம் என்பதை உணருகிறோம். அவர்களோடுகூட எங்கள் கண்ணீர் கம்பலை யெல்லாம் உமக்குமுன் ஊற்றிவிடுகிறோம். அவர்கள் எங்களோடிருந்தபொழுது அவர்களுக்கு நாங்கள் செய்யவேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்யாமலிருந்ததை நினைத்து வருந்துகிறோம். இப்பொழுது அவர்கள் பால் பொங்கும் எங்கள் நேசம் எத்தகையதென்று நீர் அறிவீர். எங்கள் துக்கத்தையும் அன்பையும் நீரே அவர்களுக்குத் தெரியப்படுத்தும்.

நாங்கள் ஒருவர் குற்றத்தை ஒருவர் பொறுத்துக்கொள்ளுவது போல், எங்கள் குற்றத்தை நீர் பொறுத்தருளும். எங்கள் குடும்பத்தை இணைத்துக்கட்டும் அன்பு எப்பொழுதும் குன்றாதிருக்கட்டும். எங்களைப் பூரண இன்பவெளிக்குள்ளே துன்னவைகளும் சுடராய் விளங்கும் உமது திவ்விய பிரசன்னத்தால், இம்மையிலும் மறுமையிலும் எங்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம், தயை மிகுந்த எம் பரம பிதாவே. ஆமென்.

அல்லது

ஆண்டவரே, தேவாட்டுக்குட்டியாகிய இயேசு செல்லுமிடமெங்கும் வெண்ணிற அங்கி தரித்து அவரைப் பின்தொடர்ந்து சென்றுகொண்டிருக்கும் எங்கள் அருமருந்தன்ன குழந்தையைப்போல், நாங்கள் களங்கமற்ற மனத்தினராகி, அவரைப் பின்செல்ல எங்களுக்குக்

கிருபைசெய்யும். அவனை நீர் எங்களுக்குச் சிலகாலம் கொடுத்து எங்களைச் சந்தோஷப்படுத்தினீர். இப்பொழுது அவனை எங்களிட மிருந்து பிரித்துவிட்டீர். இப்படிச் செய்வது உமது திருவுளத்திற்கு நலமாகத் தோன்றிற்று. உமது நாமத்தை வாழ்த்துகிறோம். எங்கள் தேவனை என்றென்றும் வாழ்த்தித் துதிக்கிறோம். ஆமென்.

அல்லது

எல்லாம்வல்ல முழு முதற்பொருளே, மாந்தரைப் படைப்பவரும் காப்பவரும் அழிப்பவரும் நீரே. தேவரீர், உமது திருக்கரங்களில் ஜீவன் சுகம் சந்தோஷம் முதலிய நன்கொடைகளை ஏந்திக்கொண்டு எங்களைச் சந்திக்கவந்த நாட்கள் அநேகம். என்றாலும் நீர் எங்களை இன்று தரிசித்த விந்தையை என்னவென்று சொல்லுவோம்? பிதாவே, இன்று உமது கரம் மிகவும் பாரமாகத் தோன்றுகிறது; உமது காருண் யம் மங்கிப் போனதுபோலிருக்கிறது. நாங்கள் நேசித்துப் பாராட்டிய எங்கள்...............இன்று இங்கில்லை. இந்த வீட்டில் அவர் இருந்த இடம் வெறுமையாயிருக்கிறது. எங்கள் உள்ளங்களில் அவர் தங்கி யிருந்த மூலை புண்பட்டிருக்கிறது. சிந்தித்துப் பார்க்கையில் நாங்கள் நம்பிக்கையற்றவர்கள்போல் துக்கிப்பது நியாயமல்லவென்றும், எங்களை விட்டுப் பிரிந்துபோன............குறைவான எங்கள் அன்புக்குப் பதி லாக உமது அளவற்ற அன்பைப் பெற்றிருக்கிறாரென்றும் உணரு கிறோம்.

நாங்கள் அவர் சேர்ந்திருக்கும் உமது சமுகத்திற்கு வர வேண்டுமே யொழிய, அவர் எங்களிடம் வாரரென்றும், உமது சமுக மொன்றே எங்களுக்கு நிலையான சந்தோஷத்தையும் திருப்தியையும் தருமென்றும் உணருகிறோம். இவ்வுண்மைகளை எங்கள் மனம் அங்கீ கரிக்கின்றது. ஆனால் எங்கள் உள்ளமோ ஆறவில்லை. இதுவும் உமது ஞானமே; ஏனென்றால் அடித்த கரம் ஒன்றுதான் அணைக்கவும் கூடும். எங்களை அடித்த தேவரீர், புண்பட்ட எங்கள் உள்ளங்களை ஆற்றுமட்டும் உமது திருவடிகளைப் பற்றிக்கொண்டு விடமாட்டோம். தேவனே, எங்களை ஆற்றும்; எங்களைத் தேற்றும். மனிதர் சொல்லும் தேறுதல் வீண். எங்கள் தேவனே எங்கள் கண்ணீரைத் துடைத் துத் துயரத்தைத் தீர்த்தருளும். தாங்கக்கூடாத கொடிய பரீட்சை எங்களுக்கு வேண்டாம்.

நீர் படுத்திய காயம் சிறிது சிறிதாக ஆறிக்கொண்டு வரும்பொழுது, நாங்கள் முறுமுறுப்புக்கும் அவநம்பிக்கைக்கும் இடங்கொடுத்து, உம் மைத் துக்கப்படுத்தாதபடி எங்களை உமது பெரிதான இரக்க உருக் கத்தால், மெதுவாகத்தாங்கி நடத்தியருளும். இறுதியில் எங்கள் ....சேர்ந்திருக்கும் வானசேனையில் எங்களையும் சேர்த்துக்

கொள்ளவேண்டுமென்று, தன்பத்தின் கொடிய கசப்பை ருசித்த போதிலும், கீழ்ப்படிதலினல் வெற்றி சிறந்த எங்கள் குருநாதர் இயேசு பெருமானின் பாடுகளை முன்னிட்டு உம்மைக் கெஞ்சி மன்ருடுகிறேம், தயவுள்ள தேவனே. ஆமேன்.

அநுபந்தம் 2

ஆசீர்வாதங்கள்

கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக் கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக் கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர். ஆமேன். (எண். 6^{24-26}.)

தேவனே, பூமியில் உமது வழியும், எல்லா ஜாதியினருக்குள்ளும் உமது இரட்சண்யமும் விளங்கும்படி, தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்களை ஆசீர்வதித்து உமது முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப் பண்ணும். ஆமேன். (சங். 67^{1}.)

பரிசுத்த ஆவியின் பலத்தினல் எதிர்நோக்கும் நம்பிக்கை உங்களுக்குப் பெருகும்படி, அந்த நம்பிக்கையின் கடவுள் தாமே விசுவாசத்தினல் உண்டாகும் சகலவித சந்தோஷத்தினலும் சமாதானத்தினலும் உங்களை நிரப்பவேண்டும். ஆமேன். (ரோம. 15^{13}.)

எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் நமது இருதயங்களையும் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள், அவரையும் பிதாவையும் பற்றிய அறிவிலும் அன்பிலும் நிலைநாட்டிக் காக்கக்கடவது. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியுமான திரியேக கடவுளின் ஆசீர்வாதம் எப்பொழுதும் நம்மோடு இருக்கக்கடவது. ஆமேன். (பிலி. 4^{7}.)

சமாதானத்தின் தேவன் தாமே நம்மை முற்றிலும் பரிசுத்த மாக்குவார். நமது ஆவி ஆத்துமம் சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்பொழுது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படவேண்டும். ஆமேன். (தெச. 5^{23}.)

பிதா குமாரன் பரிசுத்த ஆவியுமான திரியேக சர்வ வல்லவருடைய ஆசீர்வாதம் நமதுபேரிலும், அவர் நாமத்தை முன்னிட்டு நாம் செய்யும் வேலையின் பேரிலும், அர்ச்சனையின் பேரிலும் அமரட்டும். நம்மை நடத்த ஞானவிளக்கையும், தாங்கத் தைரியத்தையும், இணக்க நேசத்தையும் இப்பொழுதும் எப்பொழுதும் கர்த்தர் நமக்குக் கட்டளையிடக்கடவர். ஆமேன்.

இப்பொழுதோ, கர்த்தருடைய ஆசீர்வாதம் பற்பல தேசத்தாரும் பாஷைக்காரருமான அவருடைய ஜனங்கள் யாவர்மேலும் அமர வேண்டும். கர்த்தர் தம்மை நாடும் யாவரையும் கிருபையுடன் சந்திக்கவேண்டும். கர்த்தர் துயருற்று வருந்தும் யாவரையும் தேற்ற வேண்டும். கர்த்தர் தம் வருகையின் நன்னாளைத் துரிதப்படுத்தி, நமக்கும் தம் மக்கள் யாவருக்கும் சமாதானம் கட்டளையிடவேண்டும். ஆமேன்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், பிதாவாகிய தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆத்துமனின் ஐக்கியமும், நம்மனைவரோடும்கூட இன்றும் என்றும் சதாகாலங்களிலுமிருக்க வேண்டும். ஆமேன்.

ஸ்தோத்திரங்கள்

இயேசு கிறிஸ்துவைப்பற்றிய பிரசங்கமாகிய சுவிசேஷத்தின்படியே உங்களை ஸ்திரப்படுத்த வல்லவரும், ஏக ஞானசொரூபியுமாகிய கடவுளுக்கு இயேசு கிறிஸ்துவின் மூலமாக என்றென்றைக்கும் மகிமை உண்டாகக்கடவது. ஆமேன். ரோம. $16^{26,27}$.

நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள் கிரியை நடப்பிக்கிற வல்லமையின்படி நமக்குச் செய்யவல்லவருக்கே, திருச்சபையில் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமை தலைமுறை தலைமுறைக்கும் யுகாயுகங்களாய்ப் பெருகட்டும். ஆமேன். எபே. $3^{20,21}$.

நித்தியரும் அழிவில்லாதவரும் அரூபனும் இராஜனுமாய், ஏக ஞான சொரூபியுமாயிருக்கிற தேவனுக்கு கனமும் மகிமையும் சதா காலங்களிலும் உண்டாயிருக்கட்டும். ஆமேன். தீமோ. 1^{17}.

நித்தியானந்தமுள்ள ஏகசக்ராதிபதியும், இராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய், சாகாஜீவியாய், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக் கூடாதவருமாயிருக்கிற தேவனுக்குக் கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருக்கட்டும். ஆமேன். தீமோ. 6^{16}.

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS 1936. B. 5678